# வெற்றியின் அறிமுகம்



க. பொ. இளம்வழுதி

முத்துப் பதிப்பகம்

வெற்றியின் அறிமுகம்

கவிச்சித்தர்

## க. பொ. இளம்வழுதி



## படைப்புகள்

| | |
|---|---|
| சிவப்பு நிலா | காவியம். (தமிழ்நாடு அரசின் 1983 ஆம் ஆண்டுக்கான பரிசு பெற்றது) |
| குறுநூறு | குறும் பாடல்கள். |
| சிவப்புச் சிந்தனைகள் | பாடல் தொகுதி. (1985 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் பரிசு பெற்றது) |
| வண்ணத்தமிழ் | சந்தப் பாடல் தொகுதி. |
| ஆண்டவன் அறுபது | கலைஞரின் சாதனைப் பாடல்கள். |
| வேர்கள் | விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாற்றுப் பாடல்கள் (1988 ஆம் ஆண்டுக்கான புதுவை அரசின் இலக்கிய விருது பெற்றது) |
| நிறங்கள் | வரலாற்று நிகழ்ச்சிக் கவிதைகள். |

வண்ண அச்சு : தமிழ்ஓசை அச்சகம்,
84, அபிபுல்லா சாலை, தி. நகர், சென்னை-600 017.

# வெற்றியின் அறிமுகம்

கவிச்சித்தர்
க. பொ. இளம்வழுதி

முத்துப் பதிப்பகம்
5, பார்த்தசாரதி லே-அவுட்
விழுப்புரம்-605 602.

- நூல் : வெற்றியின் அறிமுகம்
[ ஜவகர்லால் நேருவின் வரலாறு ]
- படைப்பாளி : க. பொ. இளம்வழுதி


- உரிமை : ஆசிரியருக்கே


- வெளியீடு : முத்துப் பதிப்பகம்
5, பார்த்தசாரதி லே-அவுட்
விழுப்புரம்.
டிசம்பர் 1989.

விலை : ரூ. 31-00

- பக்கங்கள்: 276
- அச்சுரு : 10 . புள்ளி
- தாள் : 10.5 கி.கி.

அச்சிட்டோர் :
தமிழோசை அச்சகம்,
84, அபிபுல்லா சாலை,
தியாகராயநகர்
சென்னை-600 017.

# பதிப்புரை

கவிச்சித்தர் க. பொ. இளம்வழுதி அவர்கள் எழுத்துலகுக்குப் புதியவரல்லர். அவருடைய மூன்று கவிதை நூல்கள் தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் புதுவை அரசின் பரிசுகளைப் பெற்றுள்ளன. உரைநடையில் இந்நூல் அவரது முதல் படைப்பு. இந்த நூலையும் நாங்களே வெளியிடும் வாய்ப்பைப் பெற்றமைக்காக மிகவும் மகிழ்கிறோம்

இந்தியாவின் விடுதலைக்காகவும், இந்த நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் அரும்பணி யாற்றிய ஜவகர்லால் நேருவுக்கு நன்றி பாராட்டும் வகையில் கவிச்சித்தர் 'வெற்றியின் அறிமுகத்தை' உருவாக்கியுள்ளார்கள். நேருவும் விடுதலைப் போராட்டமும் பிரித்துப் பார்க்க முடியாதவை. இரண்டறக் கலந்த இந்த வரலாற்று நூலில் நேருவையும் தெரிந்து கொள்கிறோம். விடுதலைப் போராட்டத்தையும் அறிந்துக் கொள்கிறோம்.

நூல் இளைஞர்களுக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காக விரிவாக அல்லாமலும் முக்கிய நிகழ்ச்சிகள் விட்டுப் போகாமலும் உருவாக்கப் பட்டுள்ளது. தமிழுலகம் இந்த நூலை வரவேற்று ஊக்கமளிக்குமென நம்புகின்றோம்.

நூலை வெளியிட இசைவளித்த கவிச்சித்தர் க. பொ. இளம்வழுதி அவர்கட்கும், நூலை உருவாக்கித் தந்த தமிழோசை அச்சகத்தார்—தொழிலாளர்கள் அனைவருக்கும் நன்றி,

அன்பன்,

**மு. இலட்சுமணன்**
முத்துப் பதிப்பகம்.

விழுப்புரம்
*10—12—1989*

# என்றும் நம் நன்றிக்குரியவர்கள்

| | | |
|---|---|---|
| சென்னை | : | கவிதைக் காவலர் தெசிணி<br>எம்.ஏ., பி காம்.(ஆனர்சு) பி. எல்.<br>( நிறுவன ஆசிரியர் : கவிதை )<br>இலக்கியப் புரவலர் உ. பலராமன்<br>தலைவர்: இளங்கோ இலக்கிய<br>மன்றம், சென்னை-21.<br>கவிஞர் செ. பார்த்தசாரதி பி.காம்., |
| விழுப்புரம் | : | இலக்கியப் புரவலர் மு. இலட்சுமணன்<br>( உரிமையாளர், முத்துப் பதிப்பகம்,<br>விழுப்புரம்). |
| கடலூர் | ; | மா. சுதர்சனம், மு. பாண்டுரங்கன்,<br>பொன். நடராசன்,<br>க. அமிர்தலிங்கம், பி. காம்.<br>(தலைவர், தமிழ்நாடு ஊ ர க<br>வளர்ச்சித் துறை அரசிதழ் பதிவு<br>பெற்ற அலுவலர்கள் சங்கம்)<br>ப. சக்கரவர்த்தி, பி. காம்.<br>செயலர், வணிக அவை, கடலூர்-2.<br>புலவர் இரா. அரங்கநாதன், பி.லிட்.<br>தலைமை ஆசிரியர்.<br>பெ. ஆனந்ததுரை. |
| நெல்லிக்குப்பம் | : | மு. தனராஜ் ( தெ. ஆ. மா. ஊ. வ.<br>பணியாளர்கள் சங்கம்) |
| புதுவை | : | கவிதைச் செல்வர். கல்லாடன், பி.ஏ.<br>(துணைத் தலைவர்,<br>புதுவைத் தமிழ்க் கவிஞர் மன்றம்.) |
| சேலியமேடு | : | புலவர் வ. கலியபெருமாள் எம். ஏ.<br>புலவர் கி. அரியரன், எம்.ஏ. பி.எல். |
| பத்திரக்கோட்டை | : | ஆ. கோ. சிங்காரவேல்,<br>(ஊராட்சி மன்றத் தலைவர்) |
| பண்ணுருட்டி.<br>புதுப் பாளையம் | : | வெ. தருமலிங்கம் |

மற்றும்

எனது இலக்கியப் பணிகளுக்கு என்றென்றும்
துணை நிற்கும் நண்பர்கள்
துணை நின்ற நூலாசிரியர்கள்.

# வாயில்

வழிகாட்டுவதே வரலாறு.

தனக்காக வாழ்பவர்கள் தண்ணீரில் கலந்து விடும் கண்ணீர் துளிகள்! மற்றவர்களுக்காக வாழ்பவர்களே மனிதருள் மாணிக்கங்கள்!

இந்திய மண்ணில் பிறந்த புத்தனால், உலகத்திற்கு பௌத்தம் கிடைத்தது.

இங்கே பிறந்த காந்தியால், உலகத்திற்குக் காயப் படுத்தாத போராட்டக் கருவி கிடைத்தது!

அலகாபாத்தில் பிறந்த ஜவகர்லால் நேருவால்......? உலகத்திற்கோர் அமைதி தூதுவர் கிடைத்தார்.

ஆசிய கண்டத்திற்கு ஐந்தொழுக்க அரசியல் இலக்கணம் கிடைத்தது.

மலர் ரோஜாவுக்கோ மகத்தான மனித இதயத்தின் மேலொரு இருக்கை கிடைத்தது.

குழந்தைகளுக்கோ அரசியல் களத்திலிருந்தே அன் பான 'மாமா' கிடைத்தார்.

இந்திய மக்களுக்கோ இழுக்குத்தேடாத, மனிதாபி மானம் மிக்க பிரதமர் கிடைத்தார்.

மழைக்காளானைப் போல் பிறந்து மறைவது வாழ்க்கை. வேரற்று வீழ்ந்தாலும் வீடுகளில் பொருளாகப் புழங்குகிறதே தேக்கு, அதுதான் வரலாறு.

ஆவி போனாலும், சாவியாகாததுதான் சரித்திரம்!

ஜவகர்லால் நேரு தேக்குமரம்! எழில்சேர் நூக்கமரம்.

இறப்பு என்பது இயற்கை!

தவிர்க்க முடியாதது, தப்பமுடியாதது!

மதி நலன்; மாண்புயர் பண்புகள்; உயர்ந்த நோக்கம், ஊருக்குழைத்த பெருமை இந்தக் கூட்டணியால் மட்டுமே சாவை வெற்றி கொள்ள முடியும்.

ஆம். இயற்கையே இந்தக் கூட்டணியிடம் தோற்றுப் போகிறது.

உணவாகிப் போகாமல் வித்துக்களாகும் மணிகளை போல் மனிதர்களிலுமுண்டு.

மனித வித்துக்களாம் மாமனிதர்கள், உடலை மண்ணுக்குக் கொடுத்து விட்டு, எண்ணமாக, எழுச்சியாக இலக்கியமாக கால காலங்களாக இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

மனித நேயம்; மக்களாட்சி மாண்பு, எழுத்தில் நிறுத்திய இலக்கிய வளம் இவற்றால் இன்றும் வாழ்பவர், இயற்கையைப் புறங்கண்ட ஜவகர்லால் நேரு!

பரம்பரையால் அல்லாமல் பணியால், படைப்பால், பண்பால் நம்மிடையே இன்றும், ஏன் என்றும் இருப்பவர் அவர்.

சீதையைக் கண்டு வர இராமனால் அனுப்பப் பட்டான் அனுமன். அங்கே அவன் சீதையைக் கண்டான் இல்லை. அவன் கண்ட காட்சியை அவனே விளக்குகிறான்.

"இற்பிறப் பென்ப தொன்றும்
இரும்பொறை, யென்ப தொன்றும்
கற்பெனப் படுவ தொன்றும்
களிநடம் புரியக் கண்டேன்" என்றான்.

—அப்படித்தான் ஜவகர்லால் நேருவைக் கூட, நமக்கு அடையாளங் காட்டத் தோன்றுகிறது.

நொறுங்காத கொள்கை!

பதுங்காத வீரம்!

ஒதுங்காத உழைப்பு!

ஒப்பனை இல்லா அன்பு!

நலிந்து போகாத நாணயம்! இவற்றைக் கூட்டிப் பார்த்தால் கிடைக்கும் உயிரோவியந்தான் ஜவகர்லால் நேரு! வேர் பிடித்து விழுதுவிட்ட இந்திய மக்களாட்சியின் மகத்தான சிற்பியான நேரு—மனித மேரு!

அந்த இலட்சிய வாதியின்; சரித்திர ஆசிரியனின், இந்தியாவின் முதல் பிரதமரின் வாழ்க்கைப்படிமங்களை, வரலாற்றுச் சுவடுகளை, போராட்டக்களங்களை, தன்னலத் துறவை, ஆக்கப் பணிகளை அடையாளங் காட்டுவதற்கே இந்தப் படைப்பு, இதன் மூலம் இன்றைய இளைஞர்களுக்கு எழுச்சியையும், எண்ணத்தூய்மை யையும் ஊட்ட முடியுமா? என்று சோதனை செய்து பார்ப்பதே படைப்பின் நோக்கம்!

படைப்பாளிகளின் எண்ணத்தைப் படிப்பாளிகள் தான் ஈடேற்ற வேண்டும்.

நதியைக் கடக்க படகால் முடியும். ஆனால் படகை இயக்க மனிதனால் தானே முடியும்?

வழிகாட்டிகள் வாசல் வரை வந்து போவதில்லை! பயணிகள் தான் பாதங்களைப் பயன் படுத்திப் பாதை யைக் கடக்க வேண்டும்! பார்த்து வழி நடக்க வேண்டும்!

இமயமலை உயரமானதுதான். அதற்காக கன்னியா குமரியிலிருந்து கொண்டே கண்ணுயர்த்திப் பார்த்து விட முடியுமா?

ஜவகர்லால் நேரு உலகறிந்த மாமனிதர். அவரது வாழ்க்கைப் பாதையில்தான் எத்தனை மேடு பள்ளங்கள்?

தென்றலோடு கைகுலுக்கி விட்டு பதவித் தேரேறி பவனி வந்தவரல்லர் அவர். ஏகாதிபத்தியப் புயலை எதிர்த்துக் கடந்து வந்தவர். வாழ்வின் வசந்த காலத்தில், அவர் பரங்கி எதிர்ப்புப் பாலையிலல்லவா பயணம் சென்று கொண்டிருந்தார்.

அரசியலை ஆதாயமுள்ள தொழிலாக்கிக் கொண்டு மாளிகை கட்டிக் கொண்டவரல்லர் அவர். தொழிலைத் துறந்து; நலனை மறந்து, சொத்துக்களை இழந்து விடுதலைக்காக உழைத்தவர்.

கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, அரசியல் வித்தை காட்டாதவர். விளம்பரத்திற்காகவும், வீம்புக்காகவும் குறுக்குச் சால் ஓட்டிக் காட்டாதவர்.

அந்த மனித மலையில் உலவிப் பார்க்க ஆர்வப் படுபவர்களுக்கு இந்தப் புத்தக விமானம் தன் கதவு களைத் திறந்து வைக்கிறது. ஏற்றிச் சென்று இமயத்தின் எழிலை, ஏற்றத்தை அறிமுகப் படுத்த ஆயத்தப்படுகிறது. வாருங்கள் அன்பர்களே!

எந்தத் திசையையும் பார்த்து என் எழுத்து நடை போடுவதில்லை. உண்மை, உழைப்பு, உயர், பண்பு இந்த முக்கோணத்தின் இணைப்புக் கோடுகளே என் படைப்புக்கள். "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணமில்லை" என்றால், நான் அண்ணாவின் பண்பு நலனில் பங்கு பெற்றவனாக மாட்டேன். தன்னலத் துறவையும், தளரா உழைப்பையும் நான் மதிக்கத் தவறி விட்டால் தந்தை பெரியாரை பின் தொடர்ந்தவன் என்று கூறிக் கொள்ளும் பெருமை எனக்கு அன்னியமாகி விடும்.

நேருவின் குறைகளை மட்டும் பொறுக்கி எடுத் தெழுதினால் என் முதுகில் சில ஆதரவான தட்டுக்கள் கூட விழலாம். முகத்தில் அழகைப்பார்க்காமல், பருக் களைப் பார்க்க நான் விரும்ப மாட்டேன். குறையில்லாத

மனிதர் யார்? ஒழுக்கக் கேட்டின் உச்சியில் நின்றவர்களே அண்மைக்காலமாக நமக்குத் தலைவர்களாகி விட்ட போது, ஜவகர்லால் அப்படியொன்றும் தகுதி குறைந்தவரல்லர்.

மாணிக்கங்களை மண்ணுருண்டைகளாகக் கருதும் சிலர், கூழாங்கற்களை கோமேதகமாகக் கூவிக் கூவி விற்பதைப் பார்த்தே நான் கவலைப்படுகிறேன். பாமரத் தனத்தைப் பயிரிட்டு, வாக்கு அறுவடை செய்யும் வேளாளர் எவரே ஆயினும் அவர்களுக்கு நானும், எனக்கு அவர்களும் வேண்டாதவர்களே!

உள்ளுணர்வை மறைக்காமல் வெளியிடும் துணிவுள்ளவனே கவிஞன், எழுத்தாளன். தவறான எண்ணங்களுக்குத் தலைவணங்கி, தன்னை இழந்து விடுபவனுக்குள்ள எழுத்தாற்றல், விலை மாதுக்குக் கிடைத்த உடலழகுக்கு நிகரானதே! என்னை அடையாளம் தெரிந்தவர்களுக்கு இந்த எனது முயற்சி வியப்பைக் கூட கொடுக்கலாம். நிறமாற்றமாகக்கூட அவர்கள் நினைக்கலாம். கொள்ளைக் குறிப்பெண்களாக (Code Number) வேட்டி சட்டையைக் காட்டித் திரியும் கூட்டத்திற்கு, நெஞ்சுள் நிறத்தை வைத்திருக்கும் என்னை எடை போடும் தகுதி இல்லை. எனவே எனது வினைகளுக்கும், வழித் தடங்களுக்கும் எவரிடமும் மனுப் போட்டு அனுமதி பெற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

ஜவகர்லாலின் வாழ்க்கைப் பாதை நான் நடக்க விரும்பியதாகவும், அவருடைய கொள்கைக் கோட்பாடுகள் எனக்கு நெருக்கமானதாகவும் இருந்தது. சிங்கத்தைச் சிங்கமாகவே நான் கண்டேன். அப்படியே மற்றவர்களும் பார்க்க வேண்டும் என்பதற்காகவே இந்த நூலைப் படைத்தேன்.

வியர்வை முத்தில் பிரதிபலிப்பதால், உச்சிச் சூரியன் சிறியதென்றெண்ணி விடமாட்டோம். இந்தச் சிறிய நூல், நேருவின் முழு உருவமல்ல, சிறியமுகம் மட்டுமே! உண்மையில் இந்நூல் ஒப்பனை இல்லாத ஓவியந்தான். வாங்கிப் படிக்கக் கூடிய அளவில் நூலைப் படைக்க விழைந்ததால், இந்தப்படைப்பை ஒரு அறிமுகமாகவே கருத வேண்டுகின்றேன்.

திருக்குறளுக்கு உரைகள் பல. நேருவைக் குறித்த நூல்களும் பல. அவற்றுள் இதுவும் ஒன்று. மனவளமும், எழுத்து வளமும் ஆளுக்காள் மாறு படும். இந்த நூலும் அதை மெய்ப்பிக்கும்.

கடலூர்—1
14-11-89

அன்புடன்
க. பொ. இளம்வழுதி.

# வாழையடி வாழை

**பா**ர்வையிலேயே பசுமை ஒட்டிக் கொண்டு வந்துவிடு மளவுக்கு இயற்கை எழில் கொஞ்சம் இந்திய மண் அது!

மங்கையரின் அழகைக் கண்டு மலர்களே மயங்கும் படியான செழுமை சிந்திக் கிடக்கும் பூமி அது!

கொட்டையெடுத்த பஞ்சுதனைக் குவித்து வைத் ததைப் போல் பனி படர்ந்த திட்டுகள்!

வீங்கிப் படுத்திருக்கும் வெள்ளைச் சுறாவைப் போன்ற பனி மேடுகள்!

ஏரிகள்! வாய்க்கால்கள்!! நீர் நடக்கும் நீள் பாதைகள். ஆம், படகுகளின் பாட்டி வீடு அது!

மலர்கள்! காய்கள்!! கனிகள்!!! பூமித் தாயே போதும் போதுமென்று அலுத்துக் கொள்ளுமளவுக்குப் பூத்துக் குலுங்கும் எழிலின் குடியிருப்பு அது.

ஆசியாவில் ஒரு ஐரோப்பாவாக, இந்தியாவில் ஒரு சுவிட்சர்லாந்தாக விளங்கும் காஷ்மீர் தான் ஜவகர் லாலின் முன்னோர்கள் வாழ்ந்த இடம். பிறந்த பூமி.

சிம்லாவில் விளையும் ஆப்பிள் சென்னைக்கு வரும் போது, காஷ்மீர் குடும்பம் டெல்லிக்கு வர முடியாதா? வரக் கூடாதா?

வந்தது: ஏன்? எப்படி?

டெல்லி அரியணையை அலங்கரித்தவர்களுள் அடையாளம் காட்டினால் அதிகமானவர்களுக்குத் தெரியக் கூடியவர் ஔரங்கசீப். மதநம்பிக்கை, ஒழுக்கம், கடுமையான கட்டுப்பாடுகளால் சரித்திரத்தில் இடம்

பிடித்தவர். படுக்கப் போகும் பரிதியின் வண்ணக்கோலம் போல் சிவப்பானது-சிறப்பானது அவர் ஆட்சி.

காவலனே ஆனாலும், காலத்திற்குக் கட்டுப்பட்டுத் தானே ஆக வேண்டும்? குர்ரான் நெறியைக் கொஞ்சமும் பிழைபடுத்தாத அந்தக் கோ, மறைந்தார். அவர் மட்டுமா? இல்லை-மொகல் பேரரசின் ஆதிக்கமும், ஆற்றலும் அவரோடு முடிவுக்கு வந்தன. அவருக்குப் பின் கட்டிலுக்கு வந்தவர்கள் தொட்டிலுக்குப் பாரமேற்றும் ஆற்றலாளர்களாகவே இருந்தனர். அவர்களின் ஆட்சியும், ஆற்றலும் உச்சி வெய்யிலின் நிழலைப் போல் அருகி வந்தன. அந்தப் பரம்பரையில் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவர்தான் பரூக் ஷியர். அவர் இயற்கையின் எழிலில் திளைக்க எண்ணி காஷ்மீர் வந்தார். அவருடைய வருகை வரலாற்று வரிகளாகி விட்டது தான் விந்தை!

இசையும், புலமையும் எவரையும் ஈர்க்கக் கூடியவை. இல்லையெனில் வடமொழியிலும், பாரசீக மொழியிலும் புலமை பெற்றிருந்த ராஜ்கால் அவர்களை பரூக் ஷியர் டெல்லிக்கு அழைத்திருப்பாரா?

> ''கல்லாரே ஆயினும் கற்றாரைச் சார்ந்தொழுகின்
> நல்லறிவு நாளும் தலைப்படுவர்;-தொல் சிறப்பின்
> ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு
> தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு''

—என்னும் நாலடியாரின் நயமிகு கருத்தை அறிந்தவர் போலும் அம்மன்னர்.

கி.பி.1716...

நேரு குடும்பத்தைக் காஷ்மீரிலிருந்து டெல்லிக்கு அழைத்து வந்த ஆண்டுதான் அது!

அப்பொழுது எண்ணிப் பார்த்திருப்பாரா ராஜ்கால்...? தனது வழித்தோன்றல்கள்; இந்த டெல்லி மாநகரிலிருந்து கொண்டு, உலகத்தின் இரண்டாவது பெரிய நாட்டை ஆளப்போகிறார்கள் என்று! திட்டமிடாமல் செய்பவர் களையும் வெற்றி தேடி வருவதுண்டு.

புலமையைப் போற்றி அழைத்து வந்த மன்னர், ராஜ் காலுக்கு ஒரு ஆடையைப் போர்த்தி அனுப்பி வைக்காமல், நிலமானியமும் (ஜாகிர்), கரையோர வீடொன்றையும் வழங்கி, புலவர் மீண்டும் காஷ்மீர் செல்லாமல் பார்த்துக் கொண்டார். அரசரின் அன்பான அரவணைப்பை அறுத்துக் கொண்டோட அவரென்ன முரட்டுக்காளையா? மன்னர் வழங்கிய வீட்டில் குடியேறி, மகத்தான எதிர் காலத்திற்கு வித்தூன்றினார் ராஜ்கால்.

'நஹார்' என்ற சொல்லுக்குக் கால்வாய் என்று பொருள். ராஜ்கால் கால்வாய் கரையோர வீட்டில் வாழ்ந்து வந்ததால் காரணப் பெயராகக் கால்வாய் வீட்டுக் காரரென அவர் அழைக்கப்பட்டார். கால்வாய் என்ற பொருள்தரும் 'நஹார்' திரிந்து நெஹ்ரு என்றாயிற்று. காலப்போக்கில் நெஹ்ருவின் குறில் நெடிலாகி, ஒற்றை ஒதுக்கிவிட்டு நேரு என்று திரிந்து வந்தது. இடவாகு பெயர் இயற் பெயரைப் புறந்தள்ளிக் குடும்பப் பெய ராகவே முடிசூடிக் கொண்டுவிட்டது.

ஜவகர்லாலின் முப்பாட்டனார் திரு **இலட்சுமி நாராயண நேரு**. இவர் டெல்லி மன்னரின் வணிக நிறு வனத்திற்கு முதல் வழக்கறிஞரானவர். இவருடைய பிள்ளைதான் மோதிலாலின் தந்தை **கங்காதர நேரு**. இவர், முதல் இந்திய விடுதலைப் போராட்ட காலத்திற்கு முன் காவல் துறையில் கொத்தவாலாகப் பணியாற்றியவர்.

*கி.பி.1857...*

இந்திய சரித்திரத்தில் இரத்த வரிகளைக் கொண்ட வரலாற்றை எழுதிய ஆண்டு. இந்திய விடுதலைப்

போராட்ட வரலாற்றில் எளிதில் புரட்டி விட்டுப் போக முடியாத கனமான பக்கங்களைக் கொடுத்ததுதான் 1857 ஆம் ஆண்டு. 'சிப்பாய்க் கலக'மென்று வெள்ளையர் களாலும், முதல் சுதந்திரப் போராட்டமென்று இந்திய வரலாற்றாசிரியர்களாலும் குறிக்கப்படும் நிகழ்ச்சிகள் நடந்த கால கட்டம்.

வெள்ளையர்கள் இந்தியப் படை வீரர்களிடம் துப்பாக்கிகளைக் கொடுத்து நம் நாட்டவரையே சுட்டுக் கொல்ல ஆணையிட்டு அதிகாரம் செய்து வந்தார்களே அவர்களுக்கெதிராகவே அந்தத் துப்பாக்கிகள் திரும்பிய ஆண்டுதான் அது. இந்த படைப் புரட்சிக்குப் பின், நேரு வின் குடும்பத்திற்கும், ஆளும் வர்க்கத்திற்கு மிடையே இருந்து வந்த தொடர்புப் பாலம் தகர்ந்து போயிற்று. அதுமட்டுமல்ல, அந்தக் குடும்பம் பாதிப்புக்கும் ஆளா யிற்று. முடிவாக ஈட்டிய செல்வங்களையெல்லாம் இழந்து இடம் பெயரவேண்டிய இன்னலுக்கும் ஆளாயிற்று.

டெல்லி வழியனுப்ப, ஆக்ரா வரவேற்றது. நேரு குடும்பம் ஆக்ராவில் வாழ்க்கையைத் தொடங்கியது, ஆக்ரா அந்தக் குடும்பத்திற்கு பேரிழப்பையும், பெருத்த ஆதாயத்தையும் ஏற்படுத்தியது. மிக முக்கியமான இறப்பும், பிறப்பும் இந்த நகரத்தில் குடியேறிய பிறகு நடைபெற்றது. 1861 ஆம் ஆண்டு, கங்காதர நேருவின் ஆவியைப் பறித்துக் கொண்டு இழப்பீடாக மோதிலால் நேருவைக் கொடுத்தது. நேருவின் தந்தை மோதிலால் 1861 ஆம் ஆண்டு, மே மாதம் ஆறாம் நாள் பிறந்தார். விடுதலைப் போராட்டத்தின் விடிவெள்ளி தோன்றியது.

'கீதாஞ்சலி' என்னும் கவிதை நூலுக்காக உலகப் புகழ்பெற்ற நோபல் பரிசை ஈட்டி வந்த வங்கக் கவிஞர் பிறந்ததும் இதே மே ஆறாம் நாள் தான். அரசியலுக்கு மோதிலால் நேரு. இலக்கியத்திற்கு இரவீந்திரநாத் தாகூர். காந்தியடிகளாலேயே குருதேவராக ஏற்றிப் போற்றப்

பட்ட அந்த இலக்கிய வேந்தர் பிறந்த நல்ல நாளும், தன்னலத்துறவி மோதிலால் நேரு பிறந்த நாளும் ஒன்றாக அமைந்தது எத்தனை பொருத்தம்! மோதிலால் தந்தையில்லாத பிள்ளையாக, தமையனாரின் பாதுகாப்பில் வளர்ந்தார். மூத்த அண்ணன் பன்சிதர் நேரு. இவர் நீதித்துறையில் பணியாற்றியதால் அடிக்கடி இட மாறுதலுக்கு ஆளாக நேர்ந்தது. இதன் காரணமாக மோதிலாலுக்கு மூத்த தமையனாரின் அரவணைப்பு கிடைக்க இயலாமற் போயிற்று. இளைய தமையனார் நந்தலால் நேரு. இவர் இரஜபுதன கேத்ரி சமஸ்தானத்தின் திவானாகப் பத்தாண்டு காலம் பணியாற்றிவர். அதன் பின் சட்டக் கல்லூரியில் பயின்று ஆக்ராவில் வழக்கறிஞராகத் தொழில் நடத்தியவர். உயர் நீதி மன்ற வழக்கறிஞராக உயர்ந்ததால் ஆக்ராவைவிட்டு அலகாபாத்துக்குக் குடி பெயர வேண்டியதாயிற்று.

அலகாபாத் அப்படியொன்றும் இன்றைய அரசியல் வாதிகளைப் போல் நம்பி வந்தவரை கைவிட்டுவிடவில்லை. உயர்நீதி மன்ற வழக்கறிஞராகத் தொழில் துவங்கிய நந்தலால் நேருவை பொருளும், புகழும் தேடி வந்தன. ஈடுபட்ட தொழிலில் நேர்மையும் ஈடுபாடுமிருந்தால் ஆக்கம் போட்டி போட்டுக் கொண்டு தேடத்தான் செய்யும். வழக்கறிஞர் தொழிலில் நந்தலால் போட்ட மூல தனம் முனைப்பு, பொறுப்பு, உழைப்பு. இயற்கை தந்த அறிவாற்றல் துணை நின்றதால் சிறப்பெல்லாம் வழி கேட்டுக் கொண்டு வந்து சேர்ந்தன.

"தந்தையொடு கல்வி போம்" என்பது பழமொழி! இந்தப் பழமொழியைப் பதுங்கி யோடச் செய்தவர் நந்தலால் நேரு. தந்தையை இழந்த தனயனான மோதிலாலுக்கு எந்தக் குறையும் இருக்கக் கூடாதென எண்ணிச் செயல்பட்டார். தம்பி மோதிலாலின் கல்விக்காக ஆன உதவி அத்தனையும் செய்தார். தொடக்கத்தில்

அரபையும், பாரசீகத்தையும் ஆர்வத்தோடு கற்றார் மோதிலால். பதின்மூன்றாம் அகவை தொட்டு ஆங்கிலம் கற்கலானார்.

"பள்ளிப் படிப்பு, புள்ளிக்குதவாது" என்னும் பழமொழியைக் கருதியோ என்னவோ மோதிலால் படிப்பில் முனைப்பின்றி செயல்பட்டார். மாறாக விளையாட்டிலும், குறும்புத்தனத்திலும் ஓங்கி நின்றார். குறிப்பாக சில மாணவர்களைப் பற்றிக் கொண்டு ஆட்டிப் படைக்கும் அத்தனை குறைகளும் இவரை எளிதாகத் தன்வயப் படுத்திக் கொண்டன.

"யானை படுத்தால், குதிரை மட்டம்'' என்பார்கள். மோதிலால் படிப்பில் ஆர்வமில்லாதவராக இருந்தாலும், அவருடைய இயற்கையான அறிவு வளத்தால் அவர் சராசரி மாணவராக விளங்கத்தவற வில்லை. கல்லூரி வாழ்க்கையில் அவர் ஆங்கிலேயர்களைப் போல் உடுப்பதையும், நடப்பதையும் விரும்பினார். ஆங்கிலப் பாடத்திலும் தனிச்சிறப்போடு விளங்கினார். மொத்தத்தில் மோதிலால் ஆங்கிலேயர்களின் நண்பனாக, ஆங்கிலேயர்களின் நாகரிகத்தை நயப்பவராக விளங்கினார். இதனால் ஆங்கிலேய பேராசிரியர்களின் தனிக்கவனிப்புக்கும், அன்புக்கும் இலக்கானார். அவர்களுடைய தொடர்பால் மோதிலால் நேரு பல நெருக்கடிகளிலிருந்து மீள முடிந்தது. மூயிர் மத்திய கல்லூரி முதல்வராக இருந்த பேராசிரியர் ஹாரிசன், மோதிலாலின் அன்புக்கு அகப்பட்ட ஆங்கிலப் பேராசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்.

"பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று'' என்றாற்போல் கல்லூரித் தேர்வுகளில் மோதிலால் வெற்றி பெற்று வந்தார். இளங்கலைத் தேர்வில் முதல் தேர்வை எழுதிய போதும், தான் தேர்வு பெறமாட்

டோமோ என்ற ஐயம் உந்த தன்னம்பிக்கை இழந்தவ ராக தொடர்ந்து தேர்வை எழுதாமல் விட்டொதுங்கி, தாஜ்மகாலைச் சுற்றப் போய் விட்டார்.

''ஞானமுடையவன் கூடத் தன் இயற்கைக்குத் தக்க படியே நடக்கிறான். உயிர்கள் இயற்கைப்படி நடக் கின்றன. அடக்குதல் பயன்படாது'' என்பது கீதைக் கருத்து. அறிவுத் திறமுடைய மோதிலால் கல்வியில் நாட்டங் குறைந்து பிற செயல்களில் ஆர்வம் காட்டியது கீதை உரையின் மெய்ப்பு போலும்.

கல்லூரிப் படிப்பில் தாமரை இலைத் தண்ணீராக இருந்தாலும், ஏதேனும் ஒரு தொழிலில் முனைப்புக் காட்டி முன்னுக்கு வர வேண்டுமென்ற மன உந்துதல் இருந்தது மோதிலாலுக்கு. தீவிரமாக சிந்தித்தார். என்ன தொழில் செய்வது?

அந்தக்காலத்தில் படித்தவர்களுக்கு நல்ல வருவாய் தந்த தொழில் வழக்கறிஞர் தொழில் தான். தன் தமைய னார் அந்தத் தொழிலில் சிறந்து விளங்கியது, தம்பிக்கு அதே தொழிலில் ஆர்வத்தை ஏற்படுத்தியது. தந்தை தொழிலையோ, தமையன் தொழிலையோ தொடர்ந்து ஏற்றுச் செய்வது தான் வழி வழியாக வரும் மரபு. இளை யோருக்கு இது இயல்பானது, ஏற்பானது. வழிகாட்டு தலுக்கு வழி இருப்பதே இதற்குக் காரணம்.

மோதிலால் நேரு உயர்நீதி மன்ற வழக்கறிஞர் தேர்வை எழுதி முதல் மாணவராகத் தேர்வு பெற்றார். அதற்காகத் தங்கப் பதக்கமும் பெற்றார்.

திணிக்கப்படாமல், தானே தேர்ந்தெடுத்து ஈடுபடும் பணியில் உழைப்பவர் சிறக்க முடியும். வெற்றி பெற்று விண்முட்டும் புகழைப் பெறமுடியும். இதனை மோதிலால் நேரு தான் சட்டக் கல்வியில் பெற்ற வெற்றி மூலம் நிரூபித்துக் காட்டி விட்டார். அவர் பெற்ற பரிசும்,

பாராட்டும் அவரைச் சட்டத்தோடு ஒன்றிப் போகச் செய்தது. தொழிலில் தீவிரம் காட்டிய அதே நேரத்தில், தான் இளமையிலிருந்தே ஈடுபாடு காட்டிய விளையாட்டையும் விட்டு விடவில்லை.. குறிப்பாக மற்போரில் அவருக்கு அதிக ஈடுபாடிருந்தது.

கான்பூரில் மூன்றாண்டுக் காலம் தொழிற் பயிற்சி ஆம். ஏட்டுப் படிப்பு வேறு, பட்டறியும் பயிற்சி வேறு தானே? கான்பூரில் வழக்கறிஞர் பயிற்சியை முடித்துக் கொண்டு *1886*-ல் மோதிலால் அலகாபாத் உயர்நீதிமன்ற வழக்கறிஞராகத் தொழில் துவக்க வந்து சேர்ந்தார்.

> "ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும், அசைவிலா
> ஊக்க முடையா னுழை" — என்பது வள்ளுவம்.

கதிரவன்கூட காலை ஆறுமணிக்கே தினமும் எழுவதில்லை. பருவத்திற்கேற்றபடி வினாடி கால ஏற்றத் தாழ்வுகள் உண்டு. ஆனால் மோதிலாலோ திட்டமிட்ட தன் தொழிற்கடமையில் பகலவனுக்கே பாடப்புத்தகமாகி விட்டார்.

மோதிலாலுக்கு வழக்கறிஞர் தொழிலில் வெற்றிக் கனி, புகழ்க் காற்றில் காம்பறுந்து கைகளில் வந்து விழுந்தது. முன்னேற்றம், மணிப்பொறியின் வினாடி முள்ளைப் போல் வேகமாக ஏறிக் கொண்டிருந்தது. இந்த முன்னேற்ற வேகத்தில் ஒரு முடிச்சாக, சாலைத் தடையைப் போல் மோதிலாலுக்கு ஒரு சோகத் தடை குறுக்கிட்டது.

பாரதி பாடினானே "நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய்" என்று, அவ்வாறு தமையனாய், நண்பனாய், தந்தையாய் பாசத்தையும் நேசத்தையும் தன்பால் பயிரிட்டு வளர்த்த நந்தலால் நேரு, விழி விளக்கை அணைத்துக் கொண்டார். பூத்துக் குலுங்கிய மரம், காலப் புயலில் பொத்தென்று சாய்ந்ததென, நந்தலால் இதய இயக்கத்தை எண்ணெய் இல்லா விளக்காக்கி விட்டார்.

உயிரோவியம், சுவரோவியமாயிற்று. ஒரு முதல்தரக் காவியம் முற்றுப் பெறாமலேயே அச்சேற்றப்பட்டது.

"நேற்றிருந்தார் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ்வுலகம்'' என்ற கருத்தை வலியுறுத்திக் கூறாமல் கூறிவிட்டார் நந்தலால் நேரு.

''ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?" வரமாட்டார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்துதானிருக்கிறது. ஆனால் இழப்பு ஏற்படும் போது அறிவு அடங்கிப் போக, அன்பல்லவோ ஆட்சிக்கு வந்து விடுகிறது? ''அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்?''

மோதிலால் நேரு சோகத்தால் சூழப்பட்டார். வேதனைக்கு வேண்டியவரானார். மனக்காயங்களுக்கு மருந்தே காலந்தான். கடமையில் தோய்ந்து, துயரங்களுக்குத் தூரத்து உறவாகிப் போனார் அவர்.

தமையனார் தோள்களிலிருந்து சரிந்து விழுந்த குடும்பப் பொறுப்பைத் தன் தோள்களில் தூக்கிவைத்துக் கொண்டார் மோதிலால் நேரு. அத்துடன் தொழில்சாரா தொடர்புகளுக்கும் விடை கொடுத்து விட்டார்.

வேட்டைப்புலி வேடிக்கை பார்க்காது. கோட்டைச் சுவர் வறட்டிக்குத் தொட்டிலாகாது. மோதிலால் தொழிலை தோழனாக்கிக் கொண்டார். தன்னோடு தொடர்புபடுத்திக் கொள்ள வேறு எதையுமே அவர் அனுமதிக்கவில்லை. வழக்குகள் வந்து குவிந்தன. வருமானம் பெருகியது. நீதிமன்ற வட்டாரத்தில் நிகரற்றவராக விளங்கினார். இவரது வெற்றியைக் கண்டு மலைத்துப் போனவர்கள், இவரிடம் மந்திரசக்தி இருப்பதாகவே நம்பினார்கள். உண்மையில் அவர் பெற்ற வெற்றிக்கு அடித்தளமே உழைப்பும், பொறுப்பும் தான். அவரே குறிப்பிட்டார், ''எனது வெற்றிக்குக் காரணம் மந்திரமோ,

மாயமோ அல்ல. எனக்குத் தேவை பணம். அதற்காக நான் உழைத்தேன். அதைப் பெற்றேன்''

> "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்''

என்னும் வள்ளுவர் வாக்குப்படி மோதிலாலுக்கு வசதிகள் வரிசையில் வந்து நின்றன.

தொடக்கத்தில் இவர் அலகாபாத்தின் மிகப் பழைய நகர்க் கூறான மிர்கானியில் குடியேறினார். இங்கு வாழ்ந்த போதுதான் 1889–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பதினான்காம் நாள் ஜவஹர்லால் பிறந்தார். பொருள் வரவு பெருகியதும் மோதிலால் தன் குடியிருப்பை ஆங்கிலேயர்கள் அதிகமாக வாழ்ந்த 'சிவில்லைன்ஸ்' (civil lines) என்ற பகுதிக்கு மாற்றினார். ஜவஹர் பிறந்து பத்தாண்டு காலத்துக்குப் பின்னரே, மோதிலாலுக்கு ஆனந்த பவனம் வாழிடமாயிற்று.

பெயருக்கேற்ற இடம் அது. பரந்த புல்தரை! நீச்சல் குளம். அதில் அலங்கார மின் விளக்குகள். அலகாபாத் நகருக்கே அந்த மாளிகை ஒரு அணி – புதுமை! ஏழை எளியவர்களுக்கோ அது ஒரு அதிசய உலகம்! பணக்காரப் பறவைகளுக்கோ, அந்த நீச்சல் குளம் ஓர் சரணாலயம். அந்தக் குளத்தில் நீந்தியாடவே வசதி படைத்தவர்கள் வந்து போனார்கள்.

ஆனந்த பவனத்தின் அழகு குன்றாமல், குலையாமல் பராமரிப்பதற்காகவே மோதிலால் அந்த மாளிகையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட வேலையாட்களை வைத்திருந்தார். மோதிலாலின் செல்வச் செழிப்புக்கும், ஈட்டிய பொருளைப்பூட்டி வைத்துக் காக்கும் பூதமாகாப் பெருமைக்கும், அவர் மாளிகை வேலையாட்களின் எண்ணிக்கையே சரியான வெளிப்பாடுதான்.

மோதிலாலுக்கு ஆங்கில மோகமும், ஏன் ஆங்கிலேயர் மோகமே கூட உண்டு. அவர்களது உடையும், நடையும், தொடர்பும் அவருக்கு மிகவும் பிடித்தமானவை. தான் வாழ்ந்த பகுதிக்கேற்ப அவரிடம் ஆங்கில நாகரிகத்தின் சாயல் சற்றுக் கூடுதலாகவே படிந்திருந்தது.

பேராயக் கட்சி அரும்பி வந்த காலம் அது. அப்போதைக்கு அது மக்கள் இயக்கமாக மாறவில்லை. படித்தவர்களும், வசதியானவர்களும் சேர்ந்து பேசும், கூடிச் சிந்திக்கும் ஓர் அமைப்பாகத்தான் அன்று அது விளங்கியது. அப்படிப்பட்ட இயக்கத்தில் கூட தொடக்க காலத்தில் மோதிலால் அக்கறை காட்டவில்லை. தொழிலில் தான் பெற்ற வெற்றியை, அந்த இயக்கத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அரசியலில் பெறவில்லை என்பது அவர் கணிப்பு.

காலப் போக்கில் பேராயக் கட்சி, மோதிலாலை தன்னைத் திரும்பிப் பார்க்கச் செய்ய முடிந்ததேயன்றி ஈர்த்து இணைத்துக் கொள்ள அதனால் இயலவில்லை. அரசியல் ஈடுபாடு எங்கே தன் தொழிலைப் பாதித்து விடுமோ என்ற அச்சம் அவரைப் பேராயத்தில் இணைவதைத் தடுத்து வந்தது. ஆனால் இந்த விசுவாமித்திரரை பேராய மேனகை அசைத்துக் காட்டி விட்டது.

படிப்பாளிகளை, அதிலும் ஆங்கிலக் கல்வி பயின்றவர்களைப் பிடித்துக் கொண்டுதான் அந்த நாள் பேராயம் நடை பயின்றது. அது நடை பயின்ற பாங்கு மோதிலாலைத் தன் மோகனத்தால் கொஞ்சம் சொக்க வைத்தது. பேராயக் கட்சிக் (காங்கிரஸ்) கூட்டங்கள் ஒன்றிரண்டுக்கு அவர் சென்று வந்தார். ஆனால் அவ்வியக்கம் அவரை ஆட்கொண்டுவிட அனுமதிக்கவில்லை. அந்த நாள், மோதிலாலுக்கு அரசியல் அறிமுகம் ஏற்பட்ட ஆரம்ப காலந்தான்.

# எழுத்தறிவித்தவன் ... ?

''ஒருகாலும் நீங்கா உயர்கல்வி இன்றேல்
இருகால் விலங்கே இவண்'' என்று பேசுகிறது அரும் பொருளமுதம். கல்வியின் இன்றியமை யாமையைக் கற்றவர்கள் உணர்த்தியிருக்கின்றார்கள். கற்கத் தவறியவர்களும் கழிவிரக்கங் காட்டி உணர்ந்திருக்கிறார்கள். பெற்றோர் கடமைகளில் முதன்மையானதும், முக்கியமானதும் கல்வி புகட்டுவதே யாகும்.

செல்வந்தர் பிள்ளையாகப் பிறப்பதே ஒரு பேறு! அதிலும், ஒரே பிள்ளையாக, செல்லப் பிள்ளையாக இருந்து விட்டால் அதுவே பெரும் பேறு! அந்தப் பெறற்கரிய பேறு பெற்றவர் ஜவகர்லால். கொய்யாதோட்டத்தில் குடிவைக்கப்பட்ட அணில் அவர். படிப்புக்குக் கூட வெளியே அனுப்பப் படாமல் வீட்டிலேயே; அன்னையின் அரவணைப்பில், இளவரசனைப் போலிருந்தவர் அவர்.

பள்ளிப் பிள்ளைகளோடு துள்ளி விளையாடுவதில் உள்ள இன்பமே தனிதான். அந்த இனிய வாய்ப்பு இளம் ஜவகர்லாலுக்குக் கிடைக்காமலே போய் விட்டது. தங்கைகள் விஜய லட்சுமியும், கிருஷ்ணாவும் ஜவகர் பிறந்து, நீண்ட இடை வெளிக்குப் பின் பிறந்தவர்கள். அதனால் குழந்தைத்தன குறும்புகளைத் தன் உடன் பிறப்புக்களோடு பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பை ஜவகர் பெற முடியாமற் போயிற்று. தனது பெரியப்பாப் பிள்ளைகளோடும் வீட்டுக்கு வரும் பெரிய இடத்துப் பிள்ளைகளோடுந்தான் அவர் பழக நேர்ந்தது, விளையாட முடிந்தது.

''ஓடி விளையாடு பாப்பா...நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!

கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா!..." என்றானே பாட்டுக்கொரு புலவன் பாரதி, அப்படிக் கூடி விளை யாடும் வாய்ப்பு ஜவகர்லாலுக்கு ஆண்டுக்கோர் முறை தான் கிடைத்தது. ஆம், ஜவகர் தனது பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போது தான், அவர் ஏராளமான சிறுவர்களோடு விளையாடும் வாய்ப்பு கிட்டியது. அதனால்தான் அவர் பிறந்த நாள் கொண்டாட்டத்தை அடிக்கடி நடத்த வேண்டுமெனப் பெற்றோரிடம் அடம் பிடித்தார். பிறந்த நாள் கொண்டாட்டம் என்பது ஆண்டுக்கோர் முறைதான் நிகழக்கூடிய தென்பதை அறியாத பருவமது.

ஜவகர்லால் தன் அன்னையாரிடத்தில் அளவுகடந்த பற்றும் பாசமும் வைத்திருந்தார். காஷ்மீரத்து அழகை யெல்லாம் தன் தாயார் தன் முகத்திலேயே திரட்டி வந்து விட்டதாக அவர் கருதினார். அன்னையின் அழகை அவர் பெருமையோடு பார்த்துப் பூரித்தார். தந்தையிட மும் அவருக்கு பெருமதிப்புண்டு, பற்றுண்டு, பாசமுண்டு, ஆனாலும் அவரிடம் ஜவகர் அதிகம் ஒட்டிக் கொண்ட தில்லை. என்ன இருந்தாலும் இளமையில் தாயிடமுள்ள பற்று, வேறு எவரிடமும் பிள்ளைகளுக்கு இருப்பதில்லை.

ஜவகர்லால் தன் அன்னைக்கு அடுத்ததாக கணக்கர் திரு. முன்ஷி முபாரக் அலியிடந்தான் நெருக்கமாக இருந் தார். தாயாரிடமும், பெரிய அன்னையிடமும் இதிகாசங் களைக் கேட்டறிந்தார். முபாரக் அலி அவருக்கு அரபுக் கதைகளையும், 1857 ஆம் ஆண்டில் நடைபெற்ற இராணு வப்புரட்சியைப் பற்றியும் சுவையாகச் சொன்னார். இவர் ஜவகர்லாலின் அன்புத் தோழனாகவும், அறிவுக் கண் திறந்த முதல் ஆசானாகவும் விளங்கினார். ஜவகர்லாலின் இளம் மனதில் ஒழுக்கத்தையும், உயர்ந்த எண்ணங் களையும், நல்ல சிந்தனை யாற்றலையும் உருவாக்கிய

வர்கள் தாய் சொரூபராணியும், கணக்கர் முன்ஷி முபாரக் அலியுந்தான்.

ஜவர்லாலுக்குப் பதினொரு வயதான போது அன்னி பெசன்ட் அம்மையார் ஒரு ஆசானை அறிமுகப்படுத்தி னார். ஐரிஷ்காரரான திரு பர்டினாண்டு டீ புரூக்ஸ் அவர்கள் ஜவகரின் ஆசானானார். இந்தி மற்றும் சமசு கிருதத்திற்காக மற்றொரு ஆசானும் நியமிக்கப்பட்டார். ஆனால் இந்தி ஆசிரியரால் ஜவகரிடம் எவ்விதப்பிடிப் பையும் ஏற்படுத்த முடியவில்லை. ஆனால் பெர்டினாண்டு புரூக்சிடம் ஜவகர் நெருக்கமாகி விட்டார். அவரது பயிற்று முறையும், அவர் பழகிய விதமும் ஜவகர்லாலுக்கு அவரிடம் நேயமும்—ஆர்வமும் ஏற்படக் காரணமாயின.

சிறுவர்களை ஆசிரியர்கள் தங்கள் நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு ஆசிரியர்களின் பொறுமை யும் பழகுவதில் ஒரு இதமும், பேச்சில் இனிமையும் கனிவும் துணை நிற்கும். நல்ல அடிப்படைக் கல்வியை, அறிவியல் கல்வியைக் கொடுத்தார் புரூஸ். நூல்களைப் படிக்கும் நல்ல பழக்கத்தை இவரிடமிருந்து ஜவகர்லால் கற்றுக்கொண்டார். புரூக்சிடம் ஜவகர் பயின்ற மூன்றாண்டு காலந்தான் அவரின் மிகச்சிறந்த எதிர்காலத் திற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்ததென்றால் அது புனைவுரையாகாது. ஜவகரின் வாழ்க்கை வரலாற்றின் வெற்றி வரிகளாகத் திகழ்பவராக புரூக்ஸ் ஆனார். அவர் தந்த பயிற்சியும், அவர் உருவாக்கிய பழக்க வழக்கங்களுந்தான் ஜவகர்லாலுக்குச் சரியான வழி காட்டிகளாக விளங்கின.

ஜவகர்லாலின் கல்வி வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மைல் கல்லாகிவிட்ட ஆண்டு 1905. முல்லைக்கு மண மேற்றும் முயற்சியில் பெற்றோரை ஈடுபடச் செய்த ஆண்டுதான் அது. வீட்டுக் கல்வி முறைக்கு விடை கொடுத்து விட்டு, பள்ளிக் கல்விக்குப் பயணப்படுத்திய

ஆண்டுதான் அது. ஜவகர்லால் இங்கிலாந்திலுள்ள ஹாரோ பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

"திரைகடலோடியும் திரவியந்தேடு" என்பது பழமொழி. தந்தை மோதிலாலோ சொந்த நாட்டிலேயே திரவியத்தைத் திரட்டியவர். தனயன் ஜவகர்லாலை கல்விச் செல்வம் திரட்டிவர கடல் கடக்கச் செய்தார். ஜவகர் சேர்க்கப்பட்ட ஹாரோ பள்ளியின் வேறு இல்லங்களில் நான்கைந்து இந்திய மாணவர்கள் அதாவது மன்னர் வீட்டுப் பிள்ளைகள் தங்கிப் படித்தனர். ஆனால் அவர்களோடு பழகும் வாய்ப்பு அரிதாக இருந்தது ஜவகருக்கு.

ஜவகர்லால் ஹாரோவில் படித்த காலத்தில் தலைமை ஆசிரியர் திரு. ரெவரண்ட் ஜோசப் வுட் இல்லத்தில் தங்கியிருந்தார். அதே இல்லத்தில்,அவரைவிட மூத்தவரான பரோடா மன்னர் மகன் பட்டோடியும் தங்கியிருந்தார். அவர் தனது அறையைக் காலி செய்து கொண்டு வெளியேறியவுடன் அந்த அறையைப் பெற ஜவகர் விரும்பினார். ஆனால் அந்த அறை ஜவகருக்குக் கொடுக்கப்படாமல், கபூர்தலா மன்னர் மகன் பரமசித் சிங் என்பவருக்குக் கொடுக்கப்பட்டுவிட்டது. இந்த நிகழ்ச்சி மோதிலாலின் மனதில் ஆழமான வடுவை ஏற்படுத்தி விட்டது. அவர் கூறினார் ' கெய்க் வாட்டின் அறை உனக்குக் கொடுக்கப் படாதது உன் குற்றமல்ல. உண்மையில் அது என் குற்றமே! உனது தந்தை கபூர்தலா மன்னரைவிடப் பெரியவராக இருந்திருந்தால், ஒரு வேளை வேறுவிதமாக நீ நடத்தப் பட்டிருக்கலாம். [அந்த அறை உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் என்பதே உட்பொருள்.]

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளும், எண்ணங்களும் இன்றும் நாட்டில் நிலவுவதை நாமறிவோம். பணமும் பதவியும் ஏழை, எளியவர்களின் எத்தனையோவாய்ப்புக் களைப்பறித்துக்கொள்ளும்போது மோதிலாலின் உணர்வு

களை அவர்களும் வெளிப்படுத்தத்தான் செய்கிறார்கள். இல்லாதவர்களின் இதயத்தில் இரணங்களை ஏற்படுத்து வது தானே செல்வந்தர்களின் சிறப்பு. நெறி பிறழ்வதை நிலாச் சோறாக நினைப்பவர்கள் அன்று மட்டுமல்ல, இன்றும் அதிகமாகவே உண்டு.

வீட்டில் புருக்ஸ் ஊற்றிய கல்வி நெய், ஹாரோவில் ஜவகரை சுடர்விட்டொளிரச்செய்தது. பள்ளியில் மற்ற மாணவர்களை விட அவர் பொது அறிவில் திறமை யானவராக விளங்கினார். செய்தித்தாள்களையும், நூல் களையும் மிகுதியாகப் படித்துத் தன் பொது அறிவை பெருக்கிக் கொண்டார். "நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்ற முதுமொழியை அவர் நேரடியாகக் கற்றிரா விட்டாலும், [Knowledge is Power] "அறிவு வல்லமை உள்ளது" என்னும் பேக்கனின் மொழியைப் படித்திருப்பார் போலும். அந்த உயர்ந்த கருத்தை நெஞ்சில் நிறுத்தியிருந்ததால்தான் அவரால் சிறந்த மாணவராகத் தகுதிப் பட்டியலில் தனியிடம் பெற முடிந்தது.

ஆதி நாளிலேயே ஜவகருக்கு அரசியலில் ஆர்வம் வேர் பிடித்திருந்தது. "விளையும் பயிர் முளையில்" என் பார்களே அந்தக்கருத்துக் குருத்துவிட்ட நிகழ்வொன்றை குறிப்பிட்டால் அவரது அறிவாற்றல் விளங்கும். 1905–ஆம் ஆண்டிறுதியில் இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி வெற்றி பெற்று கேம்பல் பானர்மேன் தலைமையில் ஆட்சி அமைத்தது. இது குறித்து வகுப்பில் ஆசிரியர் வினா தொடுத்தபோது, ஜவகர் ஒருவரால் மட்டுமே விளக்கமான பதில் தரமுடிந்த தென்றால்- அவரது அரசியல் ஆர்வத்தையும், பொது அறிவுத் திறனையும் நன்கு புரிந்து கொள்ளலாம்.

ஹாரோவிலிருந்தாலும், இந்தியாவின் அரசியல் நிலை மையையும், நிகழ்வுகளையும் நாளேடுகளின் வாயிலாக

ஜவகர் உன்னிப்பாகக் கவனித்து வந்தார். அன்னியர்கள் இந்திய மக்களை நடத்திய விதமும், தலைவர்களை தண்டித்த முறையும் நேருவின் உள்மனதில் உறுத்தலை யும் நெஞ்சில் ஆவேசக் கனலையும் கிளறின. எனினும் அவர் கடமைப் பொறுப்புணர்ந்த மாணவராகவே விளங் கினார். அவரது கடமையுணர்ந்த கல்விக்கும், ஒழுக்கத் திற்கும் என பள்ளியில் அவருக்கு கரிபால்டியின் வாழ்க்கை வரலாற்றின் ஒரு தொகுதி பரிசாக வழங்கப் பட்டது. அந்த நூலைப் படித்து அதன்பால் மனதைப்பறி கொடுத்த ஜவகர் மற்ற இரு தொகுதிகளையும் வாங்கிப் படித்து, கரிபால்டியின் அரிய பணிகளையும் பண்பு நலன்களையும், புரட்சிப் போராட்டத்தையும் அறிந்து தெளிந்தார். கரிபால்டியின் வரலாற்று நூல், ஜவகரின் அரசியல் ஆர்வத்திற்கு ஊக்கமளிப்பதாகவும், உந்து சக்தியாகவும் அமைந்தது.

இத்தாலியின் விடுதலைக்காகப் போரிட்ட கரிபால்டி யைப் போல், இந்திய விடுதலைக்குப் போரிடுவது போன்ற நினைவோட்டத்தில் திளைத்தார் நேரு. தனது சிந்தனை வளர்ச்சிக்கு இனி ஹாரோ பள்ளி உகந்ததல்ல என்ற முடிவுக்கு வந்த ஜவகர் தனது பதினேழாம் வயதில் கேம்பிரிட்ஜ் டிரினிட்டி கல்லூரியில் சேர்ந்தார். கல்லூரி வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பலதுறை அறிஞர் களோடும் பழகினார். தான் விஞ்ஞானப் பாட மாணவ ராக இருந்த போதிலும், பழகுபவர்களிடம் ஈடுகொடுத்து உரையாடத், தன்னைத் தகுதி படுத்திக் கொள்ள வேண்டுமென்ற உந்துதலால் அரசியல், இலக்கிய, பொருளாதார நூல்களையும் ஆர்வத்தோடு கற்கலானார்.

தயார்படுத்திக் கொள்வதும், தகுதிப் படுத்திக் கொள்வதும் வளர விரும்புபவர்களுக்கு இருக்க வேண் டிய அடிப்படை எண்ண வளமாகும். இந்த எண்ண வளத்தால்தான் ஜவகரால் சரியான திசையில் அடி

யெடுத்து, வைத்து, சான்றோர் தம் துணைகொண்டு முன்னேற முடிந்தது.

''அல்லலுறும் இவ்வுலகாம் ஆரணியத்து ஓரிரண்டே
நல்ல கனிகளுள நாடுமினோ—சொல்லினொன்று
நூலாகும் மற்றொன்றோ நுண்ணறிவு சீலமிக்க
மேலோர்நட் பாகுமிது மெய்''

என்ற தரும தீபிகை கருத்து நேரு வாழ்வில் நிரூபண மாயிற்று.

கல்லூரி வாழ்க்கை என்பது படிப்பு, பேச்சு, விளையாட்டு, பொழுது போக்கு என்ற வட்டத்துக்குள் சுழன்று கொண்டிருப்பது. ஆனால் அரசியல், புரட்சி மனங்களுக்குள் மட்டில் புகுந்து கொள்வதுண்டு. நேருவுக்குள் துளிர் விட்ட அரசியல் ஆர்வம், மெரிடித் டவுன் செண்டு என்பார் எழுதிய 'ஆசியாவும் ஐரோப்பாவும்' என்ற நூல் மூலம் தழைத்தது.

இந்திய அரசியலில் திலகரின் ஆற்றல்மிக்க, ஆவேசமான சொல்லும், செயலும் இந்தியாவில் வாழ்ந்தவர்களை மட்டுமின்றி, கடல் கடந்து கல்வி பயின்ற மாணவர்களையும் வீறு கொண்டெழச் செய்தது. துடிப்பான நெஞ்சங்களை அந்த ஆற்றலாளரின் பேச்சும் செயலும் புயலாகத் தாக்கியது. அந்தப் புரட்சிப் புயலில் நேருவும் சிக்கத் தவற வில்லை.

ஜவகர்லாலுக்கு எண்ண எழுச்சி இருந்தது. பொருள் புரிந்தவராக இருந்தார். கருத்துக் கனமிருந்தது. இத்தனையும் இருந்தும் அவர் மேடைக் கூச்சத்தால் விவாத அரங்குகளில் பங்கு பெறவில்லை. ஆனால் கல்லூரி விவாத அரங்குக்கு அவர் செல்லாத நிகழ்ச்சியே இல்லை. நோக்கராக இருந்து அவர் வாதங்களைக் கூர்ந்து கவனித்து வரத் தவறவில்லை.

கல்லூரி விவாத சங்கத்தில், ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் ஒவ்வொருவரும் விவாதத்தில் பங்கு பற்றி

யாக வேண்டும். அவ்வாறு பங்கேற்காதவர்களுக்குத் தண்டம் விதிக்கப்படும். ஜவகர்லால் இதற்காகப் பல முறை தண்டம் செலுத்தியுள்ளாரென்றால் நம்மால் நம்ப முடியாதுதான். உண்மைகளே சில காலகட்டத்தில் நம்ப முடியாததாகத்தான் அமைந்து விடுகிறது.

ஜவகரோடு கல்லூரியில் பயின்ற மாணவர்கள், இந்திய அரசியலைப் பற்றி மஜ்லிஸ் சங்கத்தில் கனல் பறக்கப் பேசியதுண்டு. வாதிட்டதுண்டு, ஏன் இந்தியாவில் வெள்ளையர்களுக்கெதிராக நடைபெற்ற வன் செயல்களை ஆதரித்தது கூட உண்டு. ஆனால் அந்த ஆவேச உரையாளர்களெல்லாம் படிப்பு முடிந்தவுடன் அதே வெள்ளையராட்சியில் நீதிபதிகளாகவும், உயர் நிர்வாக அலுவலர்களாகவும் (ICS officers) வழக்கறிஞர்களாகவும் பொறுப்பேற்று, தாங்கள் கடிந்துரைத்த அந்த வெள்ளையராட்சிக்கு முட்டுக் கொடுப்பவர்களாக மாறினார்கள். ஒருவர் கூட விடுதலைப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வில்லை. இப்படிப்பட்டவர்களைப் பார்த்துத்தானோ என்னவோ;—

கூட்டத்தில் கூடி நின்று

கூவிப் பிதற்ற லன்றி

நாட்டத்திற் கொள்ளா ரடி—கிளியே

நாளில் மறப் பாரடி"—என்று பாடினான் பாரதி! நடிப்புச் சுதேசிகளென்று அடையாளம் காட்டினானே தமிழ்ப் புலவன், அவர்கள் நேருவோடு வெளி நாட்டில் படித்தவர்கள். இவர்களது செயலைப் பார்த்து நேருவே இரக்கப்பட்டார்

இந்திய அரசியலில் மோதிலால் மெல்ல, மெல்ல அடியெடுத்து வைத்தார். அந்தக் காலகட்டத்தில் திலகரின் தீவிரவாதக் குழுவும், கோகலேயின் மிதவாதப் பிரிவும் இரு துருவங்களாகப் பிரிந்து நின்று பேராயத்தில் மோதிக்

கொண்டிருந்தன. மித வாதக் குழுவில் சேர்ந்த மோதி லால், அவர்களுக்காக தீவிர வாதிகளை மிகக் கடுமை யாகத் தாக்கிப் பேசிவந்தார். ஆனால் ஜவகரோ திலகரின் ஆதரவாளரானார். இளைஞர்களின் இயல்புக்கு ஜவகர் மட்டில் எப்படி விதி விலக்காக முடியும்?

ஜவகர்லால் தீவிரமானவராக மட்டுமில்லை தீமை கண்டு பொங்குபவராகவும், குறையை எவரிடம் கண்டாலும் கண்டிப்பவராகவும் விளங்கினார்.

ஒரு சமயம் தனது தந்தையார் எழுதிய கட்டுரையைப் படித்த ஜவகர்லால் உணர்ச்சி வயப்பட்டு "உங்கள் அரசியல் செயல்களைப் போல் வெள்ளையராட்சிக்கு உவப்பைத் தரவல்லதாக வேறொன்றிருக்க முடியா" தென எழுதியனுப்பி விட்டார். தன் மகனே தனது அரசியல் வினைகளைக் கேலி செய்தது போலிருந்தது மோதிலாலுக்கு. தன் மகன் தகப்பன் சாமியானதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வெகுண் டார். உடனே ஜவகர்லாலை இந்தியாவுக்குத் திரும்ப அழைத்துக் கொண்டு விட வேண்டுமென்ற முடிவுக்குக் கூட வந்துவிட்டார். நல்ல வேளையாக முடிவைச் செயற் படுத்தாததால், படிப்பை முடித்துக் கொண்டே தாயகம் திரும்பினார் ஜவகர்.

1910-ஆம் ஆண்டில் ஜவகரின் கல்லூரிப் படிப்பு முடிந்து பட்டம் பெற்றார். அடுத்து என்ன செய்வதென்ற வினா எழுந்தது. எல்லாரையும் போல இந்திய குடிமுறைப் பணிக்காகப் (I.C.S) படிப்பதா? என்று குழம்பினார். இந்தப் படிப்புக்காக மேலும் நான்காண்டு காலம் இங்கிலாந்திலேயே தங்குவதைத் தன் பெற்றோர்களால் ஏற்க முடியாதென்ற நிலைமையையும் அவர் எண்ணிப் பார்த்தார். பலமான மன போராட்டத்திற்குப் பிறகு சட்டக் கல்வியைத் தேர்ந்தெடுப்பதென்ற முடிவுக்கு வந் தார். இதற்கு மாற்றாக அவருக்கு வேறெதுவும் புலப்பட வில்லை.

பட்டப் படிப்பு முடிந்ததும் ஜவகர்லால் சில நண்பர் களோடு அயர்லாந்துக்குச் சுற்றுலா சென்றார். அங்கே ஒரு நாள் மலை வெளியில் சுற்றிப் பார்த்து விட்டு. உணவு விடுதிக்கு மீண்டார்கள். ஜவகருக்குக் குளிக்க வேண்டும் போலிருந்தது. உணவு விடுதிலோ அதற்கான வசதி இல்லை. குளித்தே ஆக வேண்டும் போலிருந்த தால், அருகில் ஒரு ஓடை இருப்பதைக் கேட்டறிந்து கொண்டு ஒரு நண்பரோடு ஓடையை நோக்கி நடந்தார் ஜவகர்.

தெளிவான, வேகமான நீரோடையைக் கண்டார் நேரு. ஓடை அப்படியொன்றும் ஆழமானதாகத் தெரிய வில்லை அவருக்கு. ஆடைகளைக் களைந்துவிட்டு, ஓடையில் காலை வைத்தார். மறு நொடி அவர் வழுக்கி விழுந்து விட்டார். மார்கழி மாதத்தில் நம்மூர் தண்ணீரே நமக்குத் தொட்டுப் பார்க்க முடியாததாக இருக்கும் ஆனால் ஜவகர் ஆழம் தெரியாமல் காலை வைத்த அந்த ஓடையோ ஆயிரம் மார்கழியில் தோய்ந்து வந்தாற்போல் அவ்வளவு சிலுசிலுப்பாக இருந்தது. பனிக்கட்டி மேல் படுக்க வைத்தாற் போலிருந்தது. உடல் விறைத்துக் கொண்டது. கால்களை ஊன்ற முடியவில்லை. தண்ணீரின் வேகம் ஜவகர்லாலை உருட்டித் தள்ளிச் சென்று கொண்டிருந்தது இன்னும் சில மணித்துளிகள் இந்தப் போராட்டம் நீடித்திருக்குமானால், ஒரு அரசியல் நாகரிக மறிந்தவரை, போராட்டத் தளபதியை, பிரதமரை இந்தியா அன்றே இழந்திருக்கும். சில அடி தூரத்தில் தான் அந்த ஓடையின் நீர் வீழ்ச்சி இருந்தது. இதைப் பற்றிக்கூட அவர்கள் குளிக்க வரும் முன் அறிந் திருக்க வில்லை. நல்லவேளையாக, கூட வந்த நண்பன் ஜவகரின் காலைப் பிடித்திழுத்துக் கரையில் போட்டான். நேரு பிழைத்தார்.

அந்தத் துணிவுமிக்கத் தோழனுக்கு நன்றி. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இங்கிலாந்து திரும்பிய ஜவகர் இரண்

டாண்டு சட்டக் கல்வியை முடித்துக் கொண்டு **1912**-ஆம் ஆண்டு வழக்கறிஞராகத் தாயகம் திரும்பிடும் நாள் நெருங்கியது.

ஜவகர்லாலின் மாணவப் பருவம் முடிந்து அரசியல் அத்தியாயம் தொடங்க வழிவிட்டது. வாழ்க்கையின் இனிய காலம் கடந்த காலமாகிவிட்டது. சிறுவனாக, மாணவனாகக் கரை கடந்தவர், கருப்பு அங்கியின் காதலனாகத் தாயகம் மீண்டார். நாட்டு நலனில் அக்கறையும், இலட்சிய தாகமும் அவருள் கனன்று கொண்டிருந்தது.

"கைப் பொருள் கொடுத்தும் கற்றல்!
கற்ற பின் கண்ணும் ஆகும்!
மெய்ப் பொருள் விளைக்கும் நெஞ்சின்
மெலிவிற் கோர் துணையு மாகும்!
பொய்ப் பொருள் பிறகள்; பொன்னாம்
புகழுமாம் துணைவி ஆகும்
இப்பொருள் எய்தி நின்றீர்
இரங்குவ தென்னை என்றான்"

என்று சீவகசிந்தாமணி குறிப்பிடும் 'இப்பொருள்' எய்தி வந்தார் ஜவகர்.

# அரசியல் களம்

அரசியல்!

இன்று இது அடக்கமில்லாதவர்களுக்கு ஆர்ப்பாட்ட அலங்கார மேடைகளை உருவாக்கித் தரும் அலாவுதீன் அற்புத விளக்கு!

உழுத நேரத்தில் உறங்கிக் கிடந்தவர்களை, அறுவடைக் காலத்தில் அளந்து போக அனுமதிப்பது.

வாய்மை கெட்டவர்களையும், வம்பளப்புக்காரர் களையும் வரவேற்கும் வசந்த மண்டபம். விவேக மற்றவர் களின் வீராப்புப் பேச்சும், தன்னல வேட்டைக்காரர் களின் தடபுடல் கூச்சலும் ஓயாதொலிக்கும் அடர்காடு! மமதை என்னும் கொடிய புதர் மண்டிய மயானம்! அரி தாக அங்கொருவர், இங்கொருவர் என்று மக்களையும், நாட்டையும் நினைப்பவர் மூலை முடுக்குகளில் ஒதுங்கி நிற்குமிடந்தான் இன்றைய அரசியல் களம்!

வாக்குப் பிச்சையால் வந்ததிந்த வாழ்வென்பதை மறந்து; பட்டம், பணம், பதவி என்ற இரவல் அணியில் பெருமை பாராட்டும் பேதைகளின் உலா வீதியாகி விட்டது இன்றைய அரசியல்!

வைர வீதியில், கண்ணாடித் துண்டுகள் ஊர்வலம் போவதை ஆர்வத்தோடு பார்க்கச் செய்யும் அதிசய மன நிலையை உருவாக்கி விட்ட அரசியல் மதம் ஒரு புதுமை!

அன்று...!

தூயவர்கள் தேர்ந்தெடுத்த தொண்டுக்களம்! சொந்த நலனென்ற சொல்லையே| நாடு கடத்தி விட்டு, பொது நலன் என்ற சொற்றொடர் முடி சூட்டிக் கொண்ட காலம்.

வாய்மைக்கே வரவேற்பு அங்கே! நேர்மையை நெஞ்ச நிழலில் இளைப்பாற வைத்திருந்தோர் சேர்ந் திருந்த இடம்!

கொள்கைக்காகவே உடல், பொருள், ஆவி என்ற கோட்பாட்டோடு ஒன்று திரண்ட இடம். மண்டை பிளக்கப்பட்ட போதும் மாறாத மனத்திண்மையாளர் களை மட்டுமே பார்க்க முடிந்த இடம்!

இன்று போராட்டம், நாளைக்குப் பதவி வேட்டை எனத் திட்டமிட்டவர்களின் திருப்பாதம் படாத இடந் தான் அன்றைய அரசியல் அரங்கம்,

அங்கச் சேதம், குருதிக் குளியல், அடி, உதை, சிறை வாசமென்பதோடு, செல்வ இழப்புக்கும் தங்களைத் தயார் படுத்திக் கொண்டவர்கள் சேர்ந்த போராட்டப் பள்ளி அது.

மெல்ல நகர்ந்து, வேக ஊர்ந்து. விண்ணில் தாவிப் பறக்கும் விமானமாக, பேராயக் கட்சி பிறந்து வளர்ந்த இடம் அரசியல் களம்.

பேராயக்கட்சி விண்ணேற முயன்ற காலகட்டத்தில் தான் நேரு அரசியல் அரங்கத்தை எட்டிப் பார்த்தார்; அடியெடுத்து வைத்தார்.

நிற்கவும் முடியாமல், நடக்கவும் முடியாமல் தரையில் தவழும் குழந்தையாக இருந்த பேராயம் 1912ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பாங்கிப்பூரில் நடத்திய கூட்டத்திற்கு முதன்முதலாக ஜவகர்லால், பிரதிநிதியாகப் பேராயத்தில் பங்கேற்றார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர் கள், அதன் செயல்பாடுகள் இவற்றைக் கூர்ந்து கவனித்த ஜவகருக்கு அது ஒரு அரசியல் இயக்கமாகவே தெரியவில்லை. இளைஞர்களையும், அரசியல் ஆர்வலர் களையும் ஈர்க்கக்கூடிய இலட்சிய இயக்கமாகப் பேராயம் உருவாகி இருக்கவில்லை. பேராயத்தை ஒரு சமூகத் தொண்டியக்கமாகத் தான் ஜவகர்லாலால் அதனைக் கருத முடிந்தது. ஈரக்காற்றுப்பட்ட அப்பள மாகத்தான் அன்றைய பேராயத்தை அவர் கருதினார். அன்று கோகலேயின் உரைதான் எழுச்சி உரையாக,

உணர்ச்சியூட்டக் கூடிய உரையாக இருந்தது. அவருடைய பேச்சுதான் ஜவகர்லாலுக்கு மனநிறைவையும் தந்தது.

ஜவகர்லால் நேருவுக்கு வழக்கறிஞர் தொழில் ஓரளவு பிடித்திருந்தாலும், அதே கதியாக அவரால் இருக்க முடியவில்லை. வழக்கு மன்றம், வழக்கறிஞர் சங்கம், பொழுது போக்குக் கூடம் இவற்றிலெல்லாம் பார்த்த முகத்தையே பார்த்துப் பார்த்து அலுத்துப் போனார் அவர். ஏழாண்டு காலம் இங்கிலாந்திலேயே வாழ்ந்து, மேலை நாட்டு நாகரிகத்தில் வளர்ந்திருந்த ஜவகருக்கு இந்தியச் சூழலும் செயல்பாடுகளும் பிடிபடவில்லை. அரசியல் களமும் அவரது யானைப் பசிக்கு சோளப் பொரியாகத் தானிருந்தன. நீதிக்குப் போராடத் துடிக்கும் நெஞ்சம் நிலா வெளிச்சப் பாரி விளையாட்டில் திளைத்துக் களிப்பதில்லை. சருகுகளை எரிக்க நிலக்கரியா தேவை?

ஜவகர்லாலின் துடிப்பும், தொண்டார்வமும் தொலை நோக்கும் அவரைத் தென்னாப்பிரிக்க இந்தியரையும், பிஜித் தீவு இந்தியர் நிலைமைகளையும் உற்றுப் பார்க்க வைத்தன. தென்னாப்பிரிக்க நிறவெறி அரசு, இந்தியர்களுக்கிழைத்த கொடுமை கேட்டு அவர் நெஞ்சம் குமுறினார். பிஜித் தீவில் இந்தியர்கள் ஒப்பந்தக் கூலிகளாக, கொடுமைப் படுத்தப்பட்டதைக் கேட்டுக் கொதித்தார். மனித நேயத்தோடு, அறப் பகைவர்களை அவர் சாடினார். நீதிக்காகக் குரல் கொடுத்தார். பாதிக்கப்பட்டவர்பால் பரிவோடு நேசக்கரம் நீட்டினார்.

கோகலே அவர்களின் இந்திய ஊழியர் சங்கம், ஜவகரின் வினை வேகத்திற்கு ஏற்றதாக இல்லை. அந்தச் சங்க உறுப்பினர் திரு சீனிவாச சாஸ்திரியின் பேச்சும், போக்கும் அவருக்குப் பிடிக்கவில்லை. மாணவர்களை ஆள்காட்டிகளாக இருக்கும்படி அவர் கல்லூரியில் பேசிய பேச்சை அவர் மிகக் கடுங் குறையாகக் கருதி

னார். பிற்காலத்தில் அன்னி பெசன்ட் அம்மையார் சிறைப் பட்ட போதும் திரு சீனிவாச சாஸ்திரியார் அமைதி காத் தார். நல்லவர்களெல்லாம் அரசுக்கு எதிர்ப்புத் தெரி விக்கும் போது, இவர் காத்த அமைதி, அவர் சார்ந்திருந்த இந்திய ஊழியர் சங்கத்தின் மீதே ஜவகருக்கு நம்பிக்கை இழப்புக்குக் காரணமாயிற்று.

இந்தச் சூழ்நிலையில்தான் முதல் உலகப் போர் மூண்டது. ஆங்கிலேயருக்கு எதிராக ஜெர்மானியர் வெற்றி வாகை சூடி வந்தனர். இந்தியருக்கெதிராக ஆங்கி லேயர்கள் இழைத்த கொடுமைகளினாலும், அடக்கு முறைகளினாலும் அவர்கள்பால் வெறுப்புற்றிருந்த இந்தியர்கள், ஜெர்மானியரின் வெற்றிச் செய்தி கேட்டு மகிழ்ந்தனர். வேண்டாதவர்களின் தோல்வியைக் கண்டு மகிழ்வதுதானே உலக இயல்பு!

உலகப் போரில் இந்தியரின் ஒத்துழைப்பு பிரிட்ட னுக்குத் தேவைப்பட்டது. எனவே இணக்கமான சூழ் நிலையை உருவாக்கும் நோக்கத்தோடு சிறை வைக்கப் பட்டிருந்த லோகமான்ய திலகர் விடுதலை செய்யப்பட் டார். கொடுமை கண்டஞ்சிக் கொள்கையை விட்டுக் கொடுக்காத கோளரியாம் திலகர் சிறையிலிருந்து வெளி வந்ததும் தன்னாட்சிச் சங்கமென்ற (Home Rule) ஓரமைப்பை ஏற்படுத்தினார். அதேபோல் அன்னி பெசன்ட் அம்மையாரும் ஒரு சங்கத்தைத் துவக்கினார். ஜவகர்லால் இரண்டு அமைப்புக்களிலும் அங்கம் வகித் தார்.

மிதவாதிகள் போருக்கு ஆள் திரட்ட ஆயத்தப்பட் டனர். ஜவகர்லால் கூட படையில் சேர முடிவு செய்தார். ஆனால் அந்த நேரத்தில் அன்னிபெசன்ட் அம்மையார் சிறை வைக்கப்பட்டதால் சினமுற்ற நேரு படையில் சேரும் எண்ணத்தைக் கைவிட்டு விட்டார். மேலும் ஒரு படி முன்னேறி படை திரட்டும் குழுவினரைச் சந்தித்து,

அந்த முயற்சியைக் கைவிடும்படி செய்தார். அன்னி பெசன்ட் அம்மையார் சிறை வைக்கப்பட்டதால் கொதிப் படைந்த மிதவாதிகளும் தன்னாட்சிச் சங்கத்தில் சேரத் துவங்கினார்கள். அவ்வாறு சேர்ந்தவர்களுள் மோதிலால் நேருவும் ஒருவர்.

உணர்ச்சியால் உந்தப்பட்டு சங்கத்தில் சேர்ந்த பலர் பின்னாளில் ஒருவர் பின் ஒருவராக விலகி விட்டனர். ஆனால் மோதிலால் நேரு மட்டில் விதிவிலக்காக, பற்று விடாமல் சங்கத்திலேயே நீடித்தார். அது மட்டுமல்ல, அவர் அலகாபாத் கிளையின் தலைவராகவும் பொறுப் பேற்றுச் செயல்பட்டார்.

''பெரிதாக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு
பிழைப்பதற்கே அரசியலைத் தொழிலாய்க்
கொள்வர்''

என்று கவிஞர் க. காத்தப்பன் அடையாளம் காட்டிடும் அரசியலவாதிகள் அகன்றொதுங்க மோதிலால் இயக்கத் தில் நீடித்தார்.

# புகழோடு தோன்றினார்

உலகில் அதிக நூலறிவு பெற்றவர்களில், ஜவகர்லால் நேருவும் ஒருவர். நுண்ணறிவும் நூலறிவும் பெற்றிருந்த தோடு, அரசியலியக்க நடவடிக்கைகளை தந்தையின் அருகிலிருந்து கவனித்த பட்டறிவும் பெற்றவர். தனது தந்தையின் அன்றாட அலுவல்களைப் பார்த்தால் அதுவே அரசியல் பாடமாகும் என்பதை அறிந்திருந்தார். எல்லா வசதிகளும், வாய்ப்புமிருந்தாலும் மேடை அச்சம் மட்டில் அவரை விட்டுப் போகவில்லை.

''சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்''

என்றாற் போல் பேச்சுக்கலை என்பது பழக்கத்தால் வரப்பெற்று, அறிவாற்றலால் பொலிவு பெறுவது. சிந்தனைத் தெளிவும், செயல் வேகமும் இருந்தபோதும் மேடை ஏறி அறியாத ஜவகர் முதன் முதலாக 1915-ஆம் ஆண்டுதான் மேடை ஏறினார். இந்த அரிய வாய்ப்பை அன்றாண்ட வெள்ளையராட்சிதான் ஏற்படுத்திக் கொடுத்தது. ஆட்சி, பத்திரிகைகளுக்கெதிராகக் கொண்டு வந்த சட்டத்தை எதிர்ப்பதற்காக அலகாபாத்தில் கூட்டிய கூட்டத்தில் தான் நேரு முதன் முதலாகப் பேசினார். ஜவகரின் ஆங்கில உரையைக் கேட்ட டாக்டர் தேஜ்பகதூர் சாப்ரு அவரைக் கட்டித்தழுவிக்கொண்டார். மேடைப் பேச்சுக்கு ஒருவர் கிடைத்து விட்டாரே என்ற மகிழ்ச்சிதான் சாப்ருவை அவ்வாறு கட்டித் தழுவச் செய்தது.

அரசியல் இயக்கத்திற்குப் போராட்டம் எவ்வளவு முக்கியமோ, அப்படியே மேடைப் பேச்சும் இன்றியமையாததாகும். அரசியலின் ஆற்றல்மிகு ஆயுதமே பேச்சுதானே? எழுதத் தெரிந்தவர்களெல்லாம்

எழுத்தாளர். பேசத் தெரிந்தவர்களெல்லாம் பேச்சாளர் என்று இன்றிருப்பது போல் அன்றைய நிலை இல்லை.

"தோன்றின் புகழொடு தோன்றுக! அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."

என்ற வள்ளுவர் கருத்தை மதித்து, தகுதி பெறாதவர்கள் மேடையில் தோன்ற அஞ்சிய காலம் அது. எனவேதான் புதிய வரவின் வாக்கு வன்மையை அறிந்தவுடன் டாக்டர் தேஜ்பகதூர் மகிழ்ந்து வரவேற்றார். "சொற்களைச் சேர்த்து இனிதாகச் சொல்வாரைப் பெற்றாராகில் உலகத்தார் தாமே விரைந்து செய்யும் தொழில் யாது என்று கேட்பர்" என்னும் பரிப்பெருமாள் உரை மூலம் பேச்சின் ஆற்றலை நம்மால் சரியாக எடை போட முடிகிறது. சொல்வல்ல நேரு பேராயத்திற்குக் கிடைத்த அரிய சொத்தாகும்.

ஜவகர்லால் நேருவின் வாழ்க்கையில் மறக்க முடியாத இரண்டு நிகழ்ச்சிகள் **1916**-ல் நிகழ்ந்தன. முதல் நிகழ்ச்சி, காஷ்மீரத்துப் பெண் கமலாவைத் தமது இருபத்தேழாவது வயதில் மணம் புரிந்தது. அப்போது கமலாவுக்கு வயது பதினேழுதான். அடுத்தது இலட்சுமணபுரி பேராய மாநாட்டில் காந்தியடிகளை முதன் முதலாகச் சந்தித்ததாகும். அந்த மாநாட்டிற்கு எளிய தோற்றத்தோடும், அடக்கத்தோடும் வந்த காந்தியடிகளை எவரும் கண்டு கொள்ளவில்லை. அண்ணலின் பண்பாட்டு மெருகையும், மன வலிவையும் துல்லியமாக அடையாளம் கண்டு வரவேற்றவர் மோதிலால் நேருதான்.

பேராயக்கட்சியின் தன்னலத் துறவு மற்றும் போராட்ட வரலாற்றைப் போலவே, அதன் குழுச்சண்டையும் மகத்தான வரலாற்றின் மறுபக்கமாக விளங்குகிறது. தீவிரவாதிகளும் சரி, மிதவாதிகளும் சரி இரு அணியினருமே ஒரே நோக்கத்திற்காக உழைத்தவர்கள்தான்.

ஆனால் இயக்கத்தில் அவர்கள் வறட்சியில் வாய்பிளந்த நஞ்சைக் கரம்பு நிலமாக பிளவு பட்டிருந்தார்கள். மிதவாதக் குழுவிலிருந்து மோதிலால் நேரு மெல்லமெல்ல விலகி வந்து கொண்டிருந்தார். அந்த அணியின் பிடியிலிருந்து விடுபட்டு வருவது அவ்வளவு எளிதாக இல்லை. நீண்ட நாள் தொடர்பும், பழக்கங்களும் அவரைத் திடீர் தீவிரவாதியாக மாற்ற, மாற இடந்தர வில்லை.

பேராயத்தின் போராட்ட வெற்றிக்கு இந்து-முசுலிம் ஒற்றுமை இன்றியமையாததென மோதிலால் கருதினார். இந்து-முசுலிம் இணக்கத்திற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்து, நிறைவேற்றி விட்டால், ஆக்கம் காணாத மித வாதிகளின் கட்டிலிருந்து விடுபட்டு, எழுச்சி எண்ணங் கொண்ட இளைஞர்களோடு இணைந்து போராட அவர் ஆயத்தமாகவே இருந்தார். மோதிலாலின் விருப்பம் நிறைவேறாமற் போகவில்லை. அவரது இல்லத்திலேயே 'காங்கிரஸ்-லீகு' கூட்டுத் திட்டம் வகுக்கப்பட்டது. அத் திட்டமே பின்னர் இலட்சுமணபுரி பேராய மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1907-ஆம் ஆண்டு சூரத் மாநாட்டில் ஏற்பட்ட இடைவெளி ஒன்பதாண்டுகளுக்குப் பின் 1916-ல் மறைந்தது. இலட்சுமணபுரி மாநாட்டில் பேராயம் ஒன்றுபட்டது.

பேரியக்கங்களில் பிளவு ஏற்படுவதும், பின்னர் இணக்கம் காண்பதும் புதுமையானதல்ல. நழுவுவதும் தழுவுவதும் அரசியல் இயக்கங்களில் எப்போதும் இருந்து வருகிறது. அங்கே எதுவுமே நிரந்தரமல்ல.

இயக்கத்தில் ஏற்பட்ட ஒன்றுபட்ட சக்தியைத் திரட்டி அடக்கு முறை அரசை தீவிரமாக எதிர்த்துப் போராடுவதென 1917-ல் கல்கத்தாவில் அன்னிபெசண்ட் அம்மையார் தலைமையில் கூடிய பேராய மாநாடு முடிவு செய்தது. இந்த மாநாட்டில்தான், தன்னாட்சிச் சங்கம்

பயன்படுத்தி வந்த மூவண்ணக் கொடியை. பேராயம் தனது கொடியாக ஏற்றுக்கொண்டது. சிறிது காலத்திற்குப் பின் கொடியில் இராட்டைச்சின்னம் சேர்க்கப்பட்டது.

பேராயத்தின் போராட்ட முடிவு அரசைச் சிந்திக்க வைக்கத் தவறவில்லை, ஆட்சி, தனது நோக்கத்தையும் செயல் திட்டங்களையும் வெளியிட்டது. பொது நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு அதிகப் பங்களிப்பை அது பிரகடனப் படுத்தியது. அது மட்டுமல்ல. பின்னர் அறிவிக்கப்பட்ட அரசியல் சட்டத்தின் வழிகாட்டியான மாண்டேகு–செம்ஸ்போர்டு அறிக்கையையும் தயாரிக்கச் செய்து *1918* – ஆம் ஆண்டு ஜுன் திங்களில் வெளியிட்டது.

அரசு அறிவித்த சீர்த்திருத்த அறிவிப்பின்படி, மத்தியில் இரண்டடுக்கு சட்டசபை அமைப்பும், மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறையும் செயலுக்கு வரும் என்றது. மாகாண அரசுக்களிக்கத் தீர்மானிக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு ஏற்கக் கூடியதாக இல்லை. மிதவாதிகள் அரசின் திட்டத்தை ஏற்கத் தயாரானார்கள். ஆனால் ஹாசன் இமாம் தலைமையில் *1918* ஆகஸ்டு *19*-ஆம் நாள் பம்பாயில் நடைபெற்ற மாநாடு மாண்டேகு – செம்ஸ் போர்டு திட்டத்தை ஏற்கக் கூடாதென அறிவித்தது. இந்தத் திட்டத்தை ஏற்பது–எதிர்ப்பது என்று இரண்டு பட்டது பேராயம். மிகப்பெரிய இயக்கத்தில் கருத்து வேறுபாடு ஏற்படுவது தவிர்க்க முடியாததுதான். பேராயத்தில் அது கொள்கை மோதலாக அரும்பி, குழப்ப மோதலாகவும் மலர்ந்ததுண்டு.

உயர்ந்த இலட்சியத்திற்காகத் தங்களை ஆட்படுத்திக் கொண்டவர்களை, அகப்புறத் தாக்குதல்கள் பாதித்து விடுவதில்லை. மனத்தளர்ச்சியும் அச்ச உணர்ச்சியும் அவர்களைத் தீண்டினாலும் தீமை பயப்பதில்லை. பாத்திரத்தில் தேள் கொட்டினால் துளை ஏற்படுமென்

பார்கள். ஆனால் பாறையில் தேள் கொட்டி பிளவு கண்டதுண்டா? இன்பதுன்பங்களுக்கும் ஆசாபாசங்களுக்கும் விடைகொடுத்து வெளியேற்றிவிட்டு கொள்கைக் கோட்பாடுகளையும் இலட்சியங்களையும் மட்டுமே அடைகாக்கும் கொள்கைக் குன்றங்களை அடக்குமுறைகளோ பட்டம் பதவிகளோ ஊடுருவி ஒன்றும் செய்ய முடிவதில்லை. ஒன்றும் செய்ய முடிவதில்லை என்பதை அடிப்படை மாற்றம் செய்ய முடியாதென்றே பொருள் கொள்ள வேண்டும்.

உலக விடுதலைப் போராட்ட வரலாற்றில் எண்ணற்ற மான மறவர்கள், இலட்சிய வேங்கைகள் சின்னா பின்னப் படுத்தப் பட்டிருக்கின்றனர். தூக்குக் கயிறுக்கும், துப்பாக்கிக் குண்டுகளுக்கும் ஆவியைக் கொடுத்திருக்கின்றனர். ஆனால் கொள்கையைக் கொடுத்திடவில்லை. இலட்சியப் பாதையை விட்டு இறங்கி ஓடிவிடவில்லை. அதனால் தான் அவர்கள் இறந்தும் இருக்கிறார்கள். அவர்களது மூச்சு நின்றுபோனாலும் அவர்களைப் பற்றிய பேச்சு நடைபெறுகிறது. அவர்களது வாழ்க்கையும், வாயுரையும் பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்களுக்கு வழிகாட்டுகின்றன. போராட்ட ஆர்வலர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் அரிய சக்தியாக, தூண்டு கோலாக விளங்குகின்றன.

ஜவகர்லால் நேருவுக்கு நீதிக்குப் புறம்பான நிகழ்ச்சிகளைக் கண்டும், கேட்டும் வாளாவிருக்க முடியாது. கொதித்தெழும் குணம் அவருக்கு. தனது தாயகத்தில் மட்டுமல்லாமல் உலகின் எந்த மூலையில் மக்கள் துன்புறுத்தப்பட்டாலும், போராட்டமும், போராடும் வீரர்களும் ஒடுக்கப்பட்டாலும் அவர் துடித்துப் போவார். அவர்களது வெற்றி தோல்விகள் அவருள் விளைவை ஏற்படுத்தும்.

*1916*–ல் அயர்லாந்து நாட்டின் விடுதலை விரும்பி, போராட்ட வீரர் **ரோஜர் கேஸ்மண்ட்** தூக்கிலேற்றப் பட்ட போது நிகழ்த்திய வீர உரை, போராட்டச்சிந்தனை யாளர் நேருவின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று விட்டது.

"ஆட்சியெனும் போர்வையில், ஆணவத்துச் சட்டத்தால்
மாட்சியிலாத் தீர்ப்பளித்து மண்ணுக் குரியவரை
நாடு கடத்துவதும், நல்லுயிரைப் போக்குவதும்
பீடுகெட வெஞ்சிறையுள் பேதுறவே வாட்டுவதும்
எங்கள் இளையோரின் எண்ணம் பழுதாக்க
உங்கள் கருஞ்சட்டம், ஒண்ட வந்த நும் கூட்டம்
ஆடு, மாடு கோழியென ஆக்கிக் களிக்கையிலே
கோடுயர்ந்த நாட்டார் கொதித்தெழுந் தொன்னலரைக்
கொன்று பழி தீர்த்தல், கொடுமையல என்பேன் நான் !
நன்றல்ல செய்வாரை நின்றெதிர்த்தல் நேர் செயலே !

( —கவிச்சித்தரின் வேர்கள் )

என்று மதன்லால் திங்ரே தூக்கு மேடையில் முழுங்கி யதைப் போன்ற ரோஜர் கேஸ்மண்டுவின் உரை ஜவகர் லால் நேருவை ஆட்கொண்டுவிட்டது.

வலிமை மிக்க படை பலங் கொண்ட ஆட்சியாலும் போராட்ட உணர்வைக் கொன்றுவிட முடியாதென்பதை மதன்லால் திங்ரே, ரோஜர் கேஸ்மண்ட் உரைகள் அன்றே ஆங்கிலேயர்களுக்கு உணர்த்தி விட்டன.

# நெருப்புச் சட்டத்தின் பிறப்பு

இந்திய அரசியல் களத்தில் விடிவெள்ளியாக விளங்கிய ஜவகர்லாலை, அவர் கற்ற நூல்களும் அவர் பெற்ற பயிற்சியும் வடிவமைத்தன. உணர்வுகளுக்குத் தீனி போட்டு, உள்ளத்தில், உழைப்பார்வத்தை வளர்த்துக் கொண்டிருந்த அவர், செயலுக்கான காலத்தையும் களத்தையும் எதிர் நோக்கிக் காத்திருந்தார்.

உலக அமைதியைக் கூறு போட்டுக் கூவிக் கூவி விற்ற முதலாம் உலகப்போர் மடிந்தது. ஆக்க சக்திகளை அழிவுத் திசைக்கு விரட்டிச் சென்ற ஆதிக்க வெறிப் படலம் முடிவுக்கு வந்தது. தொழிலகங்களின் சங்குகள் முழங்கின. போர் மேகம் சூழ்ந்திருந்த வானில், ஆலைகளின் அழுக்குப் புகை புதிய பொருள் விளக்கத்தோடு காற்றில் கலந்தது. வயல்களில் கூட உழவுக் காளைகள் கொஞ்சம் ஊக்கம் பெற்று நடையைத் தூக்கிப் போட்டன. ஆனால்...

என்ன ஏமாற்றம்! ஏழைகள் வாழ்வில் ஏற்றமில்லை. உயர்ந்தது முதலாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு இனம் தான். ஏற்றமெலாம் ஒரு சில முதலாளிகளுக்கும் ஆட்சியாளர்களின் ஆதரவாளர்களுக்குமே என்ற நிலை ஏற்பட்டுவிட்டது, உழைப்புச் சுரண்டல் ஊக்கம் பெற்றது. எளிய பிரிவினர் ஏழ்மை மணத்தையே நுகர்ந்து கொண்டிருந்தனர். ஆளும் வர்க்கத்தின் அடாத செயல்களும், அவர்கள் ஆதரவு பெற்ற முதலாளிகளின் சுரண்டலும் அடித்தள மக்களின் பொறுமையைச் சூடேற்றிக் கொண்டிருந்தது. போர்க்காலத்தில் சற்றுத் தளர்ந்திருந்த போராட்ட உணர்வு, அதன் பின்விளைவுகளாலும், ஏமாற்றத்தின் விளைவாலும் முறுக்கேறியது.

பிரிட்டனும், நேச நாடுகளும் துருக்கியைப் பங்கு போட்டதால், இந்திய முசுலிம்கள் கிளர்ந்தெழுந்தனர்.

ஆங்கில ஆட்சிக் கெதிராக அவர்கள் ஆவேசமாகத் திரண்டனர். கிலாபத் இயக்கமென்ற போராட்டக் குழு காங்கிரசோடு ஒத்துழைத்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்கெதிராகத் தாங்களும் போராட முன் வந்தனர். இப்படி நாட்டின் ஒவ்வொரு பிரிவினரும், ஒவ்வொரு வகையில் பாதிக்கப்பட்டிருந்ததால், ஆட்சிக் கெதிராகத் தங்கள் எதிர்ப்பையும், எண்ணத்தையும் வெளிப்படுத்த ஆயத்தமாக இருந்தனர்.

போருக்குப் பின்னே அமைதி வந்துவிடும் என்றிருந்த வெள்ளையர்களுக்கு, பெரியதொரு எதிர்ப்பு மேகம் திரள்வது தெரிந்தது. எனவே வரும் முன் காக்க வேண்டுமென்ற திட்டத்தோடு முன்னேற்பாடுகளில் முனைந்தனர். மக்களை அச்சுறுத்தவும், அடக்கியாளவும் சட்டங்களை உருவாக்கிட முனைந்தனர். இதற்காக ஒருஅடக்குமுறைச் சட்டத்தையே உருவாக்கிட நடவடிக்கை மேற்கொண்டனர். அரசியல் களம் சுறுசுறுப்படைவதைக் கண்ட ஆட்சி, காலந் தாழ்த்தாமல் கடமையாற்றியது. நிலைமையைக் கடுமையாகக் கையாள வசதியாக, அதிகாரங்களை வழங்கும் சட்டதிட்டங்களை உருவாக்கிட முடிவு செய்தது.

1917 ஆம் ஆண்டு சர் சிட்னி ரௌலட் தலைமையில் திரு குமாரசாமி சாஸ்திரி, மற்றும் திரு புரவாஷ் சந்திர மித்திரர் என்ற இரு இந்தியர்கள் உறுப்பினர்களாகக் கொண்ட குழு ஒன்று ஆங்கில அரசால் நியமிக்கப்பட்டது. இந்தக் குழு தன் அறிக்கையை 1919 ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியிட்டது. இந்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு உருவாக்கப் பட்டது தான் ரௌலட் சட்டம். இந்தியர்களுக்கு எடுத்துரைக்க முடியாத இன்னல்களையும் விடுதலைப் போருக்கு வேகத்தையும் கொணர்ந்த கொடிய சட்டம் இது.

ரௌலட் சட்டத்தின் கடுமையையும், இந்தியருக் கெதிராக இந்தச் சட்டம் எவ்வாறெல்லாம் செயற்படுத்தப் படுமென்பதையும் உணர்ந்த நம்மவர்கள், இச்சட்டத்தை முனைந்தும் இணைந்தும் எதிர்த்தனர். அண்ணல் காந்தி யடிகளே இந்தச் சட்டத்தைப் பற்றிக் கூறும் போது "ஆட்சியாளர்களின் அடி மனத்தில் தோன்றியுள்ள நோய்க் குறியே இந்தச் சட்டம்'' என்றார்.

புதிய சட்டத்தின் உட்பிரிவுகள் இந்திய மக்களை அறவழிப் போராட்டச் சிந்தனையாளர்களையும் கூட மிகக் கடுமையாகப் பாதிக்கக் கூடியதென்பதை காந்தியடி களைப் போலவே பலரும் கருதினர். எனவே இந்தச் சட்டத்தை எதிர்த்தே ஆக வேண்டுமென காந்தியடி களிடம் பலரும் முறையிட்டனர். தலைவர்களுள் சங்கர் லால் பாங்கரும், உமார் சோபானியும், காந்தியடிகளோடு கலந்து பேசினர். அண்ணலும் தனது தளபதி சர்தார் வல்லபாய் பட்டேலோடும் பேசினார். முடிவில் ஒரு அறிக்கை தயாரிக்கப் பட்டது. அண்ணல் காந்தியடி களின் அறப் போராட்டத்தை அரங்கேற்றம் செய்த பெருமையை ரௌலட் சட்டம் பெற்றது. இதற்காகக் காந்தியடிகள் அறப் போராட்ட அவை ஒன்றைத் தனது ஆசிரமத்திலேயே நிறுவிக் கொண்டார். அதன் தலைமைப் பொறுப்பையும் தானே ஏற்றுக் கொண்டார்.

போராட்டத்தைத் துவங்க முடிவு செய்தாகி விட்டது. அண்ணலின் புதிய போர்த் திட்டத்திற்கு ஆதரவு தர மக்கள் ஆயத்தமாகவே இருந்தனர். எனினும் பாமரத் தனமாக எவரும் போராட்டத்தில் பங்கேற்கக் கூடா தென்பது காந்தியடிகளின் எண்ணம். போராட்டத்தின் தன்மை, நோக்கம் விளைவு எல்லாமே அதில் ஈடுபடுபவர்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். மக்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களைக் களத்திற்கு இழுத்து வந்து விடக் கூடாது

எனவே போராட்டத்தில் பங்கேற்பவர்களிடம் உறுதி மொழியைப் பெற விழைந்தார். அதில் அவர்களுடைய ஒப்பத்தையும் பெற்றார்.

உறுதி மொழி தான் என்ன?

''1919-ஆம் ஆண்டு குற்றவியல் சட்டத்திருத்தம், நீதிக்குப் புறம்பானது. விடுதலை வேட்கையையும், சமூகப் பாதுகாப்புக்கான தனி மனிதரின் அடிப்படை உரிமைகளையும், பாதிப்பதாக இச்சட்டத்திருத்தமிருப்பதாக நாங்கள் உளமாரக்கருதுகிறோம். இத்திருத்தத்தைச் சட்ட வடிவமாக்கினால், அதனைத் திரும்பப் பெறும் வரை நாங்கள் அமைதி வழியில் மீற உறுதி எடுத்துக் கொள்கிறோம். இந்தப் போராட்டத்தில் உண்மைக்கு ஊறு ஏற்படாமலும், உயிருக்கும்; உடலுக்கும், உடமைக்கும் வன் முறையால் பாதிப்பு ஏற்படாமலும் நடந்து கொள்வோமென்று உறுதி கூறுகிறோம்.'' இந்த இந்த உறுதி மொழியை வெளியிட்டு நாடெங்கிலும் சட்டத் திருத்தத்தைக் கண்டித்துத் துண்டறிக்கைகளை வெளியிட்டும், பொதுக் கூட்டங்களை நடத்தியும் மக்களைத் தயார் படுத்தச் செய்தார் அண்ணல். இருவார காலத்தில் இந்த உறுதி மொழியில் பன்னிரண்டாயிரம் தொண்டர்கள் உளமொப்பிக் கையெழுத்திட்டார்கள்.

காந்தியடிகளின் இந்த அறிவிப்பு தினவெடுத்த ஜவகர்லாலின் போராட்ட உணர்வுக்குத் தீனி போடுவதாக அமைந்தது. இந்தப் போராட்டத்தில் பங்கேற்பதால் ஏற்படக் கூடிய பின் விளைவுகளை அவர் சிந்தித்துப் பார்க்கத் தவறவில்லை. சிறை வாழ்க்கையைத் தாங்கக் கூடிய ஆற்றல் உண்டா? என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் முடிவுக்கு வரவேண்டுமென்ற மன நிலையில் அவர் இல்லை. ஆனால் மோதிலால் நேருவுக்கோ காந்தியடிகளின் இந்தப் போராட்டத்தில் ஆர்வம் ஏற்படவில்லை.

சிறை வாழ்வென்பது அன்றைய அரசியல்வாதிகளுக்கு அனுபவமில்லாத ஒன்று. காந்தியடிகளின் வருகைக்குப் பிறகே சிறை வாழ்வும், அமைதி வழிப் போராட்டத்தில் உடல், பொருள், ஆவியை இழக்கத் துணிந்த தன்னல மறுப்பு மனப்பாங்கும் வளர்ந்தது. மோதிலாலுக்குத் தன் மகன் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறை செல்வதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க விருப்பமில்லை. ஜ வ க ர் ல ா லு க் கு ச் சிறைக் கொடுமையைத் தாங்கும் மனவலி இருந்தாலும், வாழ்ந்த முறை, வளர்த்த முறைகளை ஒப்பிட்டுப் பார்த்த மோதிலால் வேதனைப் பட்டார். சிறையுள் வெற்றுத் தரையில் உறங்க நேரிடுமென்று கேள்விப்பட்டுக் கற்பனை செய்து பார்த்தார். பிடிபடவில்லை. எனவே தானே அந்த அனுபவத்தை நேரடியாகப் பெற்று உணர, வெற்றுத் தரையில் படுத்துப் பார்த்தார் என்றால், அவர் தன் மகன் மீது வைத்திருந்த பாசத்தின் ஆழத்தையும், வசதியாக வாழ்ந்த மேம்பாட்டையும் உய்த்துணரலாம்.

தனது மகன் சிறிதளவு இன்னல் படுவதைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாத தந்தை மோதிலால் போராட்டமே பொருளற்றதென எண்ணவும் தலைப் பட்டார். சிறை செல்வதால் அந்நிய ஆட்சியை வழிக்குக் கொண்டு வந்து விட முடியுமா? என்றெல்லாம் வினா எழுப்பியது. போராட்டத்தில் பங்கேற்றே ஆகவேண்டு மென்ற ஜவகர்லாலின் தீவிரத்திற்கும், அதன் விளைவுகளை எண்ணிப் பார்த்த தந்தையின் பாசத்திற்கு மிடையே அந்தரங்கப் போராட்டமே நடைபெற்றது. இந்தப் போராட்டத்திற்கு ஒரு முடிவு காண விழைந்தார் மோதிலால். வழி...?

பலத்த மனப் போராட்டம், சிந்தனைக்குப் பிறகு மோதிலாலுக்கு ஒரு வழி புலப்பட்டது. மூலவரிடமே முறையிட்டு முடிவு காண்பதே அந்த வழி. அண்ணல் காந்தியடிகளைத் தன் இல்லத்திற்கே அழைத்து தனது

உள்ள உணர்வுகளை- எண்ணங்களை பிரதிபலித்தார். இதன் விளைவாகக் காந்தியடிகள் ஜவகர்லாலை அழைத்து, தந்தையின் மனம் வருந்தும் படியான செயலில் ஈடுபடவேண்டாமெனத் தெரிவித்து விட்டார்.

போராட்டத்தில் பங்கேற்க வேண்டாமென காந்தியடிகள் இட்ட கட்டளை ஜவகர்லாலுக்கு ஏற்பில்லை. காத்திருந்த பின் கிடைத்த வாய்ப்பைக் கை நழுவ விடுவதா? என்றவர் எண்ணினார். ஆனால் அரசியல் சூழலில் எதிர்பாராத திசைத்திருப்பங்கள் ஏற்பட்டன. போராட்ட நேரடி நடவடிக்கை நிறுத்தி வைக்கப் பட்டது. இந்த நடவடிக்கை, தந்தை- மகன் இருவரிடையே நடைபெற்ற மனப் போராட்டத்தை- கருத்து வேறுபாட்டை வெற்றி தோல்வியின்றி முடித்து வைக்க உதவியது.

போராட்டத்திற்குக் குறிப்பிட்டிருந்த நாளான ஏப்ரல் ஆறாம் நாளன்று, நாடெங்கிலும் கடையடைப்பும், ஊர்வலங்களும் நடைபெற்றன. மன்னராட்சியானாலும் சரி, மக்களாட்சியானாலும் சரி, அவை போராட்டங்களை மட்டில் பொறுத்துக் கொண்டதே இல்லை. மக்கள் எழுச்சியை மலரவிடக் கூடாதென்பதில் ஆட்சியாளர்கள் எப்போதுமே விழிப்பாகவே இருந்து வந்துள்ளனர். ரௌலட் சட்டத்திற்கெதிராக டில்லியிலும், பஞ்சாபில் அமிர்தசரசிலும் கூடிய மக்கள் மீது ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறை படு பயங்கரமாக விளையாடியது. காவலர் களும், பட்டாளத்தார்களும் மக்களைத் துப்பாக்கிக் குண்டுகளால் துளைத்தனர். குண்டாந்தடிகளால் ஊனப் படுத்தினார்கள்.

இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் இரத்தக் கறை படிந்த பக்கமாக விளங்கும் ஜாலியன் வாலாபாக் படு கொலையை ஜெனரல் டயர் என்பவன் அமிர்தசரசில் கொடூரமான முறையில் செய்து முடித்தான். நான்கு

பக்கமும் சுவர் கொண்ட உள்ளரங்கில் கூடியிருந்த இருபத்தைந்தாயிரம் மக்கள் மீது, நுழைவு வாயிலில் பட்டாளத்தையும், பீரங்கியையும் நிறுத்திக் கொண்டு, குண்டுமாரி பொழியச் செய்தான் அக்கொடியவன்.

பத்தே மணித்துளிகளில், ஆயிரத்து அறுநூற்றைம்பது குண்டுகள் அமைதியாகக் கூடியிருந்த அப்பாவி மக்களின் உடலுக்குள் ஒண்டிக் கொள்ள துப்பாக்கி களிலிருந்து வெளிப்பட்டன. கூண்டிலடைப்பட்ட பச்சைக்கிளிகள் பூனையின் வரவு கண்டு அலை மோதுவது போல், குண்டு மாரிக்கிடையே உயிர் பிழைக்கச் சிதறி ஓடினார்கள். மிதிபட்டார்கள். குண்டடி யிலிருந்து தப்பக்கிணற்றுள் குதித்தார்கள். மிதிபட்டும், கிணற்றுள் மூச்சுத் திணறியும் உயிர்விட்டோர் பலர். சுடுவதற்கினி குண்டுகள் இல்லை என்ற நிலைவரை சுட்டுத் தீர்த்தனர் பட்டாளத்தார்.

அரசு அறிக்கைகள் மலையை மிளகாக்கின. குண்டு மணியைக் கோடெனக் கூறின. அப்படி விண்ணை மண்ணாகவும், மண்ணை விண்ணாகவும் புரட்டிக் காட்டும் சக்தி பெற்ற அரசு அறிக்கையின்படி, டயரால் ஜாலியன் வாலாபாக் அரங்கில் மாண்டோர் எண்ணிக்கை முன்னூற்றெழுபத்தொன்பது. விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளித்த பாஞ்சாலத்தின் அன்றைய தலைமைச் செயலர் திரு தாம்சன் என்பவர் மாண்டோர் எண்ணிக்கையை மிளகைவிடச் சிறிதாக்கும் முயற்சியாக இருநூற்று தொண்ணூற்றொன்று என்று கூறினார். மாறாக சேவாசமிதி இறந்தோர் எண்ணிக்கை ஐந்நூறு என்றது. அரசு அறிவித்தபடி காயம் பட்டோர் எண்ணிக்கை ஆயிரத்து நூற்று முப்பத்தேழு.

இக்கொடுஞ் செயலைக் கூடிப் பேசி திட்டமிட்டு டயர் மூலம் செயற்படுத்திட ஊக்கமளித்தவர் பாஞ்சையின் துணை நிலை ஆளுநராக இருந்த ஓட்லியர். கொடியவர்

பட்டியல் இவர்களோடு முடிந்து விடவில்லை. நீண்டது. கர்னல் ஜான்சன்; போஸ்வொர்த் சுமித்; கர்னல் ஓபிரியன், மேஜர் கார்பி, காப்டன் டோலிட்டன் ஆகியோர் குஜரன் வாலா, காசூர் ஷேக்குபூரா, லாகூர் ஆகிய நகரங்களில் அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டுக் கொடுமை விழாவின் கொடியேற்றத்தை நடத்தினர். ஜாலியன் வாலா பாக் கொடுமைக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த சர் ஒட்லியரை பகத்சிங்கின் தோழர்களில் ஒருவரான உத்தம்சிங், ஆண்டுக் கணக்கில் காத்திருந்து, வெள்ளையன் பிறந்த மண்ணிலேயே இலண்டனில் 1931-ஆம் ஆண்டு சுட்டுக் கொன்று தாயகத்துக்குத் தன் கடமையைச் செய்து முடித்தார்.

இதயமுள்ள மனிதர்கள் எல்லாருடைய இரக்கத்திற்கும், கண்டனத்திற்கும் இலக்கான ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ச்சிகளின் உண்மைகளை வெளிக் கொணர்ந்து உலகுக்களிக்க வேண்டி, பேராயம் முயற்சி மேற்கொண்டது. இதற்காகப் பேராயம் ஒரு விசாரணைக் குழுவை அமைத்தது. அதன் தலைவராக திரு மோதிலால் நேரு நியமிக்கப் பட்டார். அமிர்தசரஸ் பேராயத்தின் பொறுப்பாளர் தேசபந்து தாஸ் மோதிலாலின் பணிக்கு உறுதுணையானார். துயர் துடைப்புப் பணிக்குப் பண்டித மதன் மோகன் மாளவியாவும், சுவாமி சிரதானந்தாவும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். தாசுக்கு உதவியாக ஜவகர்லால் நேரு அமிர்தசரசுக்கு அனுப்பப்பட்டார். தேசபந்துவோடு இணைந்து ஜவகர்லால் ஜாலியன் வாலாபாக் படுகொலை தொடர்பான ஆதாரங்களைத் திரட்டித் தந்தார். இருவரும் தங்கள் பணியைப் பொறுப்போடும், சிறப்போடும் செய்து முடித்தார்கள். இந்தப் படுகொலை தொடர்பாகப் பின்னர் காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில் அடங்கியிருந்த ஆதாரங்களெல்லாம் தேசபந்துவும், ஜவகர்லாலும் திரட்டித் தந்தவைகளே !

பஞ்சாப் படுகொலை இந்திய மக்களிடையே மனக் கிளர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு மோதிலால் கூட மிதவாதிகளின் கட்டிலிருந்து அறவே தன்னைவிடுவித்துக் கொண்டார். அப்போது அலகாபாத்திலிருந்து மோதிலாலின் பழைய கூட்டாளி கள் நடத்திவந்த (Leader) 'தலைவன்' என்ற நாளிதழுக் கெதிராக (Independant) 'சுதந்திரம்' என்ற புதிய நாளி தழைத் துவக்கினார். இந்த நாளிதழின் நிர்வாகிகளில் ஒரு வராக ஜவகர்லால் இருந்தார். 1919–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட 'சுதந்திரம்' நாளேடு தத்தித் தவழ்ந்து விழுந்து எழுந்து நான்காண்டுகாலம் நடை போட்ட பின் 1923–ஆம் ஆண்டு முடங்கிப் போயிற்று.

ஏடு நடத்துவதை இனிப்பு சாப்பிடுவது போல் இனிமையானதென எண்ணிப் பலர் ஏமாந்து போகின் றனர். அரை வேக்காட்டுப் பாகற்காயை அப்படியே சாப் பிடுவதைப் போல் கசப்பானது அது. தீவிரத்தோடு தின்று தீர்த்தால் கூட நாவில் படிந்த கசப்பு மாறுவதற்கு நாளா கும். ஜவகர்லாலுக்கு பாகலைச் சாப்பிட்ட அனுபவம் ஏற் பட்டது. இனித் தன் வாழ்நாளில் ஏடு நடத்தும் பொறுப்பை ஏற்கவே கூடாதென்ற முடிவுக்கே அவர் வந் தார். ஆனால் இந்த முடிவை அவர் பற்றி நின்றாரா? இல்லையே!

கவியரசர் கண்ணதாசன் நடத்திவந்த இலக்கிய ஏடான 'தென்றல்' நின்று போனது. ஏடு நின்று போனது அவருக்கு இதயமே நின்று போனது போலாயிற்று. தனது மன வேதனையை அவர் 'கண்மணித் தென்றல்' என்ற பாடல் மூலம் வெளிப்படுத்த தவறவில்லை. "......

தூயமணித் தென்றலினை,
உள்ளே கிடத்தி உயிர் போலக் காத்திருந்தேன்
காத்திருந்த தென்றல் காற்றென்றே போனதம்மா!
கல்லாதார் வாயிற் காகிதமாய் ஆனதம்மா!"

என்று தன்னிரக்கத்தோடு பாடினார். ஆனால் நேருவோ 'சட்டி சுட்டதடா, கை விட்டதடா'' என்று பாரத்தை இறக்கி வைத்தது போன்ற மன அமைதி பெற்றார்.

# புதிய வெளிச்சம்

ஜவகரின் இல்லற வாழ்க்கை ஒரு குறுங்காவியம். யாப்பில் அது குறள். பூவில் அது முல்லை. பொலிவில் அந்திவானம். அது மன நிறைவான வாழ்க்கை. ஆனால் கால அளவில் குறைவான வாழ்க்கை! பண்பாலும், பழகும் பாங்காலும், அறிவார்ந்த நடத்தையாலும் கமலா, கணவர் ஜவகர்லாலுக்கு நல்ல வாழ்க்கைத் துணையாகத் திகழ்ந்தார். இரண்டாண்டு காலம் இல்லறப் பயணம் இதமாக, இன்பமாக ஓடியது. இரண்டாண்டுகள் கடந்ததும் கமலா உடல் நலங் குன்றினார். ஜவகர்லாலின் தாயார் நலனும் பாதிக்கப்பட்டது. மருத்துவரின் அறிவுரைப்படி ஜவகர்லால் தாயாரையும், மனைவியையும் அழைத்துக் கொண்டு முசௌரிக்குச் சென்றார். அங்கே வசதி மிக்க சவாய் விடுதியில் தங்கினார்கள்.

வானவில்லை, வேடன் வில்லாக நினைத்தது அரசு. பிரிட்டனோடு பேச்சு வார்த்தைக்காக இந்தியா வந்திருந்த ஆப்கானிஸ்தான் அரசியல் தூதுக் குழுவினர் சவாய் விடுதியில் அரசால் தங்க வைக்கப் பட்டிருந்தனர். அதே விடுதியில் தங்கியிருந்த ஜவகர்லால் அந்தத் தூதுக் குழுவினரைச் சந்தித்து விட்டால் அவர்களது தற்போதைய நிலையில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டு, அது பிரிட்டனின் நலனுக்கெதிராக மாறிவிடுமோ என்ற அச்சத்தால் உந்தப் பட்டவர்களானார்கள் ஆட்சியாளர்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேருவிடம் அவர் ஆப்கன் தூதுக் குழுவினரைச் சந்திப்பதில்லை என்று உறுதி மொழி கோரினர். நேருவுக்கு ஆப்கன் தூதுக் குழு அங்கே தங்கியிருக்கும் செய்தியே தெரியாது.

அவர்களுக்கும் நேரு அங்கே தங்கியிருப்பது தெரியாது. ஆயினும் அரசு தனக்குக் கட்டுப்பாடு விதிப்பதை ஜவகர்லாலால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தூதுக் குழுவைச் சந்திக்கும் எண்ணம் தனக்கில்லை என்றாலும் அரசின் கோரிக்கைப்படி உறுதிமொழி தர நேரு மறுத்து விட்டார். இதனால் வெகுண்ட அரசு, டேராடூனை விட்டு இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் ஜவகரை வெளியேறக் கட்டளையிட்டது.

அரசின் கட்டளையை மீறுவது அப்போதைக்குச் சரியான நடவடிக்கையல்ல என்பதை உணர்ந்த ஜவகர் லால், டேராடூன் மாவட்டத்தை விட்டு வெளியேறத் தயா ரானார். ஆனால் நோய் வாய்ப்பட்ட தாய், மனைவியை விட்டுச் செல்ல அவருக்கு மனம் வரவில்லை. தந்தை மோதிலால் நேருவும் ஒரு முக்கியமான வழக்கை நடத்திக் கொண்டிருந்தார். வேறு வழியின்றி இருவரையும் உதவி யாளர்களின் பாதுகாப்பில் விட்டு, ஜவகர்லால் அலகா பாத் வந்து இரு வாரங்கள் தங்கினார். அப்போது தான் முதன் முதலாக கிராமத்து விவசாயப் பெருங்குடி மக்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. கிசான் இயக்கத்தைச் சார்ந்த இரு நூறு விவசாயிகள் பிரதாப் நகர் மாவட்டத்திலிருந்து பாபா இராமச்சந்திரா தலைமை யில் வந்திருந்தனர்.

அரசிடம் தங்கள் குறைகளை முறையிட அலகாபாத் யமுனை நதிக்கரையில் தங்கியிருந்த ஏழை விவசாயி களை நேரு தனது நண்பர்கள் சிலரோடு சென்று சந்தித் தார். விவசாயிகள் தாங்கள் தாலுக்காதாரர்களால் எப்படியெல்லாம் சுரண்டப்படுகிறார்கள், கொடுமையாக நடத்தப்படுகிறார்கள் என்பதை ஜவகர்லாலிடம் விளக்க மாகக் கூறினார்கள். தங்களது அவல நிலைமையை மாற்ற ஜவகர்லாலின் உதவியையும் கோரினார்கள். விவசாயப் பாட்டாளிகளின் வேதனைமிக்க அவலக்

கதைதனைக் கேட்ட ஜவகர், தான் பின்னொரு நாளில் அவர்களைக் கிராமத்தில் வந்து சந்திப்பதாகக் கூறினார்.

ஜவகர்லால் விவசாயிகளிடம் கூறியபடி நண்பர்களோடு சென்று அவர்களைக் கிராமத்திலேயே சந்தித்தார். இந்திய நாட்டின் இதயத் துடிப்பை, உண்மை நிலையை முதன் முதலாக அயோத்தியில் தான் அவர் கண்டார். நாட்டின் முதுகெலும்பான மக்கள், அந்த விவசாயத் தொழிலாளிகள் சில பெரு நிலக்கிழார்களால் சுரண்டப்பட்டு, இரக்கமற்ற கோரப் பிடியில் சிக்கிச் சின்னா பின்னப் பட்டுச் சீரழிகிறார்கள் என்பதை நேரடியாகக் கண்டார். கடுமையாக உழைத்தும்; உண்ண உணவும், உடுக்க உடையுமின்றி கால்நடைகளை விட மோசமாக அவர்கள் நடத்தப்படுவதைக் கண்டார்.

நகரங்களில் எல்லா வசதிகளோடும் வாழ்ந்து கொண்டு, மேடைப் பேச்சையே பெருந்தொண்டெனக் கருதியிருந்த தன்னையும், தன்னைப் போன்ற வெற்றுப் பேச்சாளிகளின் அறியாமையையும் எண்ணி நாணங் கொண்டார். உலகூட்டும் ஒரு சமுதாயம், உழைப்பதற்கஞ்சாத அந்த விவசாயிகள் எப்படியெல்லாம் வஞ்சிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்த்தார். வெள்ளையர்களிடமிருந்து இந்தியாவை விடுவிப்பதற்கு முன் நம் நாட்டுக் கொள்ளையர்களிடமிருந்து உழவர்களைக் காக்க வேண்டிய அவசரத்தையும், அவசியத்தையும் உணர்ந்தார்.

விவசாயிகளிடம் ஜவகர்லாலுக்கு அனுதாபமும், அக்கறையும் ஏற்பட்டது. அவர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமென்ற ஆர்வமிருந்தது. அவர்களோடு அவர் நெருங்கிப் பழகினார். கிராம மக்களிடையே அவர் பேசினார். கிராம மக்கள் ஜவகர்லாலின் பேச்சைக் கேட்கப் பெருந்திரளாகக் கூடினார்கள். தங்களுக்குற்ற

ஒரு துணைவர் கிடைத்து விட்டதாக அவர்கள் நம்பினார்கள். அவர்களின் எதிர்பார்ப்புக்குத் தான் ஏதேனும் செய்தே ஆகவேண்டுமென்ற மனக் கிளர்ச்சியும், பொறுப்புணர்ச்சியும் ஜவகர்லாலுக்கு ஏற்பட்டது.

குளிர்மிகுந்த நாட்டில் வாழ்ந்து, வசதியான குடும்பச் சூழலில் வளர்ந்த ஜவகர்லால், கடும் வெய்யிலென்றும் பாராமல் கிராமம் கிராமமாகச் சென்று, குடியானவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார். வாழ்க்கை முறைகளைப் பார்த்தார். அவர்களுடன் ஆறுதலாகப் பேசினார். மக்களோடு நேரடியாகப் பழகி-பேசியதன் மூலம் அவர் மேடைக் கூச்சத்தை விரட்டியடித்தார். மக்களுக்கும் நேருவிடம் நம்பிக்கை ஏற்பட்டது. பாசம் மலர்ந்தது. ஜவகர்லால் ஏழைகளின் எண்ணத்திலும், இதயத்திலும் இடம் பிடித்துக் கொண்டார்.

ஜவகர்லாலின் பேச்சைக் கேட்ட மக்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்பட்டது. போராட்ட உணர்வுகூட தலை தூக்கிற்று. "அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்பதற்கொப்ப, விவசாயிகளிடம் ஏற்பட்ட போராட்ட மனப்போக்கை அறிந்த அரசு, குடிவாரச் சட்டத்தை இயற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாயிற்று.

கிராமப்புறத்து மக்களிடம் மண்டிக் கிடந்த அச்ச இருள், ஜவகர்லாலின் பேச்சாலும், தொடர்பாலும் சற்றே விலகியது. போராட வேண்டுமென்ற துடிப்பும், துணிவும் குடியானவர்களுக்கு ஏற்பட்டது. ஒருசமயம் பிரதாப்-காரில் போராடிய விவசாயிகளையும், அவர்களது தலைவர்களையும் கைது செய்து விசாரணை செய்து சிறையிலடைக்க அரசு நடவடிக்கை எடுத்தது. ஆனால் துடித்தெழுந்த குடியானவர்கள் தங்கள் ஒன்றுபட்ட முற்றுகைப் போராட்டத்தால் அரசை அச்சுறுத்தினர். திரண்டெழுந்த மக்கள் சக்தியைக் கண்டஞ்சிய அரசு தலைவர்களை விடுதலை செய்து விட்டது. ஆனால்

பட்டறிவு காரணமாக ஏற்பாடுகளை எச்சரிக்கையாகச் செய்து கொண்டிருந்த அரசு, அடுத்தமுறை குடியான வர்கள் மேற்கொண்ட முற்றுகைப் போராட்டத்தை முறி யடித்து, அவர்கள் இயக்கத்தின் வலுவைக் குறைத்தும் விட்டது.

ரே பரேலியில் பெருநிலக் கிழார்களின் கொடுமை தாளாத விவசாயிகள், மிதிபட்ட புழுவாகக் கொட்டத் தொடங்கினார்கள். அடிமைத் தனத்தையும், அச்சத்தை யும் தங்கள் மனதிலிருந்து முதல் வேலையாக அகற்றி னார்கள். பழிவாங்க வேண்டுமென்ற ஆவேசம் ஏற் பட்டது. பெருநிலக்கிழார்களுக்கெதிராகக் கிளர்ந்தெழுந் தார்கள். ஆக்கப் பணிகளை மட்டுமே செய்து பழக்கப் பட்ட குடியானவர்கள், முதன்முதலாக அழிக்கப் புறப் பட்டனர். சட்டத்தின் காவலர்கள் எப்பொழுதுமே பணம் படைத்தவர்கள் பக்கந்தானே நிற்பார்கள். பெரு நிலக்கிழார்களையும், அவர்களது உடமைகளையும் காக்க, காவல்கைகளில் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு வந்தது. நேரு மக்களை அமைதிப்படுத்த விரைந்தார். ஆட்சியோ அவரால் கலவரம் தூண்டிவிடப்பட்டு வலுத்து விடுமோ என்றஞ்சியது. எனவே உடனடியாக ரே பரேலியை விட்டு வெளியேறும்படி ஜவகருக்கு ஆணை யிட்டது. ஆனால் ஆற்றல் மிக்க விவசாயப் பெருங்குடி மக்களின் ஆவேசம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் இரு தரப்புக்கும் ஏற்படக் கூடிய அழிவின் அளவை அவர் எண்ணிப் பார்த்தார். ஆட்சியாளர்களின் ஆணையை அலட்சியப்படுத்திவிட்டு, வெகுண்டெழுந்த விவசாயி களை அமைதிப்படுத்தினார். துப்பாக்கிக் குண்டுகளா லேயே அடக்க முடியாத கலவரத்தை நேரு தலையிட்டு கட்டுக்குள் கொண்டு வந்தார். மக்கள் அவர்மீது வைத் திருந்த நல்லெண்ணமும், நம்பிக்கையுமே அவர் சொல் லுக்கு அவர்களை கட்டுப்பட வைத்தது.

பொதுப் பணிக்கு வருபவர் எவராயினும், அவர்கள் மக்கள் நம்பிக்கையைப் பெற்றாக வேண்டும். நம்பிக்கையை பெறும் வகையில் அவர்களுடைய சொல்லும் செயலும் அமையவேண்டும். காந்தியடிகளின் வெற்றிப் படிகளில் இதுவும் ஒன்று. காந்தியடிகளின் சீடர் ஜவகர் லாலுக்கு இந்த வெற்றியின் ரகசியம் தெரியாமற் போகுமா? நவகாளியில் காந்தியடிகள் பெற்ற வெற்றியை, ஜவகர்லால் ரே பரேலியில் பெற்றார்.

# அரசியலில் சமயம்

மோதிலால் நேருவும், ஜவகர்லால் நேருவும் ஆங்கிலேயர்களோடு பழகி முற்போக்குச் சிந்தனையோடு வளர்ந்தவர்கள். வாழ்ந்தவர்கள். அதனால் காந்தியடிகளின் வழிகாட்டு நெறியும், செயல்பாடுகளும் அவர்களுக்கு நெருடலாக இருந்தன. குறிப்பாக, மோதிலால் நேருவும், ஜவகர்லால் நேருவும் விட்டுக் கொடுக்கும் தன்மையிலேயே அண்ணலின் வழியைப் பின்பற்ற வேண்டியிருந்தது.

மோதிலால் நேருவும், ஜவகர்லால் நேருவும் அறிவியல் கண்ணோட்டம் மிக்கவர்கள். அறிவியல் வழி ஆக்கத்தில் ஆர்வம் கொண்டவர்கள். அவர்களிருவருக்குமே சமயப்பற்றுக் கிடையாது. இந்த வகையில் காந்தியடிகளிடமிருந்து இருவருமே அடிப்படையில் மாறுபட்டவர்களாக விளங்கினர்.

ஜவகர்லால் இளமைத் துடிப்போடு இயங்கினார். வேகம்–வேகம், வேகந்தான். எண்ணம், செயல், சிந்தனை எதிலும் வேகம். எனவே எதற்காகவும் காத்திருக்கும் பொறுமை இல்லாதவராக அவர் விளங்கினார். ஒவ்வொரு முயற்சிக்கும் உடனடி பலனை எதிர்பார்த்தார். ஆனால் காந்தியடிகளோ பண்பட்ட மனத்தோடு, பதட்டப் படாமல் செயல்பட்டார். பலனை அறுவடை செய்ய அவர் அவசரப்பட்டதில்லை.

விரைவான, விரிவான வளர்ச்சிக்கு பெருந் தொழில்களே உகந்தது, ஊக்கப்படுத்த வேண்டியதென ஜவகர்லால் நினைத்தார். ஆனால் காந்தியடிகளோ, கிராம மக்களுக்கும், எளிய பிரிவினருக்கும், ஏற்றதென குடிசைத் தொழில்களுக்கு முதன்மையளித்தார். கைராட்டையும் கைத்தறி நெசவும் இந்தியரின் பொருளாதாரத் தேவைக்

கும், உயர்வுக்கும் தீர்வாகாதென்பது ஜவகர்லாலின் கருத்து. ஏன்...? காந்தியடிகளின் குருதேவர் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் கூட அண்ணலின் கதர் பொருளாதாரக் கொள்கையை "எச்சில் துப்பி ஏரியை நிரப்ப முடியாதென்றே" கூறினார். கொள்கை மாறுபாடுகள் எதுவும் ஜவகர்லால் காந்தியடிகளிடம் நெருக்கமாவதைத் தடுத்து விடவில்லை. வல்லபாய் பட்டேலைப் போலவே நேருவும் அண்ணலுக்கு நெருக்கமானவராகவே விளங்கினார். தாமரைமொட்டு தண்ணீருக்கு மேலே இருந்தாலும், தண்டு தண்ணீருக்குள்தானே இருக்கும் அவ்வாறே ஜவகர்லாலின் அன்புமனம் அண்ணலிடந்தான் அடைக்கலப்பட்டிருந்தது.

காந்தியடிகள் சமயத்தை அரசியலோடு கலந்தது தந்தைக்கும், தனயனுக்கும் உடன்பாடானதல்ல. "அரசியலில் இந்து, இசுலாமிய சமயங்கள் புகுந்து வளர்ந்து வந்ததைக் கண்டு சில சமயங்களில் வருந்தினேன். காந்தியடிகள் பேசிவந்த சில சொற்றொடர்கள் கூட, 'ராம ராஜ்யம்' என்ற பொற்காலம் மீள வேண்டும் என்பன போன்றவை என் காதுகளைத் துளைத்தன" என்று பேசுமளவுக்கு அவருக்குச் சமயப் புறக்கணிப்பு உணர்வு மேலோங்கியிருந்தது.

அரசியலில் அண்ணல் பெற்றிட்ட வெற்றிக்கு அடிப்படையே இந்த அசாதரண சமயக் கலப்புதான் என்பதை தெளிந்த சிந்தனையாளர்கள் ஏற்கத் தயங்க மாட்டார்கள். சைவம் எப்படி தன் வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் தமிழை ஏற்றுக் கொண்டு தானும் வளர்ந்து, தமிழையும் வளர்த்ததோ அப்படி, அண்ணலும் அரசியல்–சமயக்கலப்பின் மூலம் மக்களை ஈர்த்தார். வெற்றியும் பெற்றார். இந்தச் சமயக் கலப்புக்கு 'அலி' உடன் பிறப்புக்களின் ஆதரவும் இருந்தது.

காந்தியடிகளுக்கு மக்களைத் தன்வயப்படுத்த உதவிய சமயத்தால் நேருவை மட்டில் மாற்றிக்

கொண்டுவர முடியவில்லை. "சிந்திக்க வல்லவர்களா லும் ஒப்புக்கொள்ளப்பட்டு, கைக்கொள்ளப்பட்ட மதம் அது இந்து மதமாயினும் சரி, இசுலாமாக இருந்தாலும் சரி, பௌத்தமோ அல்லது கிறித்துவமோ எதுவுமே என்னை ஈர்க்கவில்லை" என்று ஜவகர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளது சிந்திக்கத் தக்கது.

"Religion, as I saw, is practised and accepted even by Thinking minds. Whether it was Hinduism, or Islam, or Buddhism or Christianity, did not attract me' [Discovery of India] இப்படி கருப்பும் சிவப்புமாக, எதிரெதிர் எண்ணங் கொண்ட அண்ணலும், ஜவகரும் அணுக்கமாக ஆகமுடிந்ததுதான் எப்படி?

"சமயப்பற்றுள்ள ஞானியும் சமயப் பற்றற்ற கொள்கை வாதியும் இரு துருவங்களிலிருந்து புறப்பட்டு தத்தம் வழிகளில் சென்ற போதும், எவ்வாறோ அவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு நெருங்குகின் றார்கள்" என்னும் வால்டர் பேட்டரின் கருத்துக்குக் காந்தியடிகளும் ஜவகர்லாலும் பொருத்தமான எடுத்துக் காட்டானார்கள். ஒத்த கருத்தில்லாவிடினும், நோக்கம் ஒன்றாக இருந்ததால் நேருவால் அண்ணலின் இதயத்தில் இடம் பிடிக்கவும், அண்ணலால் ஜவகரை தன் அன்புக் குரிய சீடராக ஏற்றுக் கொள்ளவும் முடிந்தது. ஒரு பெண், தன் காதலனிடம் எப்படித் தன்னை இழந்து விடுகிறாளோ, அப்படி ஜவகர்லால் நேரு அண்ணல் காந்தியிடம் தன்னை இழந்திருந்தாரென்றால் அதுவே பொருத்தமான கருத்தாக இருக்க முடியும். யாரை நாம் உள்ளன்போடு ஏற்றுக் கொள்கிறோமோ, அவர் களுடைய குறைகள் நம்முள் வேறுபாட்டை ஏற்படுத்தி விடுவதில்லை.

கால ஓட்டத்தில் ஜவகர்லால், அண்ணலின் கொள்கைக் கோட்பாடுகளே இந்திய அரசியலுக்கு

ஏற்றவை என்ற முடிவுக்கு வரவேண்டியவரானார். அவருக்கும் சமயத்தின் சக்தி புரியத் தொடங்கியது. மக்களை ஒன்று திரட்ட அதுதான் சிறந்த ஆதாரவழி என்று தோன்றியது. கிலாபத் இயக்கத்துக்கும், முசுலிம் மௌலானாக்களுக்கும் அண்ணல் காட்டிய ஆதரவால், கொடுத்த மதிப்பால் அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத் திற்குத் தங்கள் ஆதரவைக் கொடுத்தனர். இந்து முசுலிம் ஒற்றுமை வெறும் முழக்கமாக இல்லாமல், நெஞ்ச முயக்க மாகவே இருந்தது. ஆனால் இந்த முயக்கம், மயக்க மடைந்தது, ஒற்றுமை நெடுங்காலம் நீடிக்க வில்லை சண்டை போட்டுக்கொள்ள சரியான வேளைக்காக அவை காத்திருப்பதால் தான் 'சமயம்' என்ற பெயர் பெற்றன போலும்!

1920-ஆம் ஆண்டு, டிசம்பரில் லாலா லஜபதிராய் அமெரிக்காவிலிருந்து திரும்பியிருந்தார். அவர் தலைமை யில் கல்கத்தாவில் பேராயத்தின் சிறப்புக் கூட்டம் நடை பெற்றது. காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கக் கொள்கை அவருக்கு உடன்பாடாக இல்லை. சட்டசபை புறக்கணிப்புத் திட்டத்தையும் அவர் எதிர்த்தார். ஆனால், காந்தியடிகளின் கொள்கையையும், வழிகாட்டுதலையும் பேராயம் முன்னரே ஏற்றுக் கொண்டு விட்டதால் எவர் எதிர்ப்பும் அடிப்படை மாற்றமெதையும் ஏற்படுத்தும் வலிமையை பெற்றிருக்கவில்லை.

கல்கத்தா கூட்டத்திற்குப் பிறகு பல மிதவாதிகள் பேராயத்தை விட்டு விலகத்துவங்கினார்கள். இந்து முசுலிம் ஒற்றுமைப் பாலத்தைக் கட்ட உதவியாக இருந்த முகமதலி ஜின்னாவும் காங்கிரசை விட்டு வெளி யேறினார். அவரது வெளியேற்றத்திற்கு அரசியல் காரணத்தை விட, இயக்கத்தோடு அவரால் இசைந்தும், இணைந்தும் போகமுடியாத சொந்தக் காரணங்களே தலைமை தாங்கின.

காங்கிரஸ் (பேராயம்) காந்தியடிகளின் தலைமையை ஏற்றுக்கொண்ட காலந்தொட்டு, அவ்வியக்கம் அடித்தள மக்களை ஈர்க்கத் தொடங்கியது. அறவழியில், அமைதிப் பாதையில் அன்னியராதிக்கத்தை எதிர்ப்பதில் தீவிரம் தென்பட்டது. இதனால் ஆளவந்தோரின் அடக்கு முறையும் அதிக முனைப்போடு வெளிப்படுத்தப் பட்டது.

"அருங்கலை வாணர் மெய்த் தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ யறிந்தாய்;
நெருங்கிய பயன்சேர் ஒத்துழை யாமை
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத் தொழில் மறந்து
வையகம் வாழ்கநல் லறத்தே"

என்ற பாரதியின் பாடல் கொள்கைக் குறிப்புதானே!

# சிறைச் சாலை என்ன செய்யும்?

ஆயிரக்கணக்கான தேனீக்கள் உழைத்துக் கட்டும் கூட்டை ஒரு போக்கிரியின் கை, அல்லது வேடனின் கரமே கலைத்து விடுவதைப் போல், காந்தியடிகளும் சில நல்ல நெஞ்சங்களும் உழைத்து உருவாக்கிய இந்து-முசுலிம் ஒற்றுமைக்குச் சோதனை ஏற்பட்டது.

"தன்னை வென்றாளும் திறமை பெறாதிங்கு
தாழ்வுற்று நிற்போமோ'' என்றேங்கிய பாரதியின் அச்சமும், ஐயமும் மெய்ப்பிக்கப்படும் காலம் நெருங்கி வந்து நின்றது.

1921-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கேரளத்தின் மேற்குக் கரையோரமாக வாழ்ந்து வந்த 'மாப்ளா' என்னும் முசுலிம்கள் கிலாபத் இயக்கத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இந்தக் கிளர்ச்சி, அரசு எதிர்ப்பு என்ற நிலையிலிருந்து தடம் பிறழ்ந்து, இந்து எதிர்ப்பு என்ற நிலையை எட்டியது. ஒற்றுமைக்கு ஊறு ஏற்படுத்தப்பட்டது. அது ஓட்டைப் படகாயிற்று. இது காங்கிரஸ் இயக்கத்தையே கூடப் பாதித்தது. ஒரு சிலருடைய உணர்ச்சி வேகத்தால், அறியாமை ஆவேசத்தால், மோசமான விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்பதற்கு மாப்ளாக்களின் முரட்டுச் செயல் ஓர் எடுத்துக்காட்டாயிற்று.

தேசீய இயக்கங்களைத்தடை செய்தும், அடக்கு முறைச் சட்டங்களை அரசு அறிமுகம் செய்ததையும் எதிர்த்து இயக்கம் தொடங்கப்பட்டது.

"மாங்குயில் கூவிடும்சோலை-எமை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை''

என்னும் எண்ண எழுச்சியை இந்தியத் துணைக்கண்டத்துத் தொண்டர்கள் வாய் மொழியாக அல்லாமல்

செயல் வழியே ஆட்சியாளர்களுக்கு உணர்த்திய காலந் தான் ஒத்துழையாமையின் பிறப்புக்காலம்.

ஊர்வலங்களுக்கு அழைக்கப்படாமலேயே ஆட்கள் வந்த காலம். ஆங்கில ஆட்சியின் துப்பாக்கிக் குண்டு களை ஏந்துவதற்காகவே அன்றைய ஆண்களின் மார்பு அகன்றிருந்தது. குடும்ப பாசத்தைத் தொட்டில் கட்டிப் போட்டு விட்டு, அண்ணலின் அறப் போராட்டத்தில் எங்களுக்கு விதி விலக்கே வேண்டாமெனப் பெண்களும் திரண்டு புரட்சி மலர்களாகப் பூத்துக் குலுங்கியகாலமது. 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்று வெள்ளை யர்களே விழிபிதுக்கிய நேரம். என் நாட்டுக்கு என்பங்கு இதோ எனத் தன்னைத்தானே இழக்க எழுந்து வந்து வீரம் வெளிப்படுத்திய கால கட்டம். எழுச்சி! உணர்ச்சி! இரண்டும் வெள்ளமாக!

இந்தியர்களுக்குத் தாங்கள் தான் கதி, காப்பென்று காட்டிக் கொள்ள வெள்ளையர்கள் விரும்பினார்கள். வேல்ஸ் இளவரசர் இந்தியாவுக்குப் பயணப்பட்டார். முடி வருகிறதென்றால் கொடிப்பறக்கத்தானே செய்யும்! இளவரசரின் பயணத்தை மாபெரும் வெற்றியாக்கிக் காட்ட வேண்டுமென்ற பேராசையின் பிடிக்குள்ளே ஆட்சியாளர்கள் அகப்பட்டுக் கொண்டிருந்தனர்.

உரிமை வேட்கை கொண்ட விடுதலைப் போராட்ட வீரர்கள் இளவரசர் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கத் தங்களைத் தயார் செய்து கொண்டிருந்தனர். ஆங்கில ஆட்சிக்கு அங்கீகார மில்லை. அதன் அடையாளமாக வரும் வேல்ஸ் இளவரசர் வேற்றாளேயன்றி விருந்தின ரல்ல. எங்களை அடிமைப்படுத்தி, எங்கள் நாட்டின் இயற்கை வளங்களையும், மக்கள் உழைப்பையும் சுரண்டும் கருவிக்கு நாங்கள் ஆராதனை செய்ய மாட் டோம். ஆட்சியே உனக்கு எங்கள் ஒத்துழைப்பில்லை

என ஆர்த்தெழுந்தனர் தொண்டர்கள். எதிர்ப்பின் சின்னமாக எங்கெங்கு காணினும் கருப்புக் கொடி. நெருப்பு நெஞ்சங்கள்! முப்பதாயிரம் தொண்டர்கள் சிறையை நிரப்பிய புரட்சி வரலாறு படைக்கப் பட்டது.

'முப்பதாயிரம்' என்ற எண்ணிக்கை, அறியாமையை அடிப்படையாக்கி அப்பாவி மக்களை அணி திரட்டிக் காட்டியதல்ல. வெறும் உணர்ச்சி உந்துதலால், விளைவை எண்ணிப் பார்க்காமல் போராட்டத்தில் குதித்தவர்களின் கணக்கல்ல இது. அரசியல் ஆதாயத்திற்காக அவசர கோலமாகப் போராட்டங்கள் அரங்கேற்றப் படாத காலத்தில், மக்களுக்கு விளைவுகளை முழுமையாக விளக்கி, பண்படுத்தப்பட்ட பின் தொடங்கிய போராட்டத்தின் அறுவடை கணக்குத்தான் முப்பதாயிரம்! சிந்திக்க நினைவூட்டி, நேரங்கொடுத்து செயலுக்கு அழைத்த அறிக்கையின் நோக்கமிதோ:-

''1921, நவம்பர் இருபத்திரண்டாம் நாள் வெளியிடப் பட்ட அரசின் அறிக்கைதனை தெளிவாகப் படித்தறிந்தோம். அரசின் ஆணைக்குக்கட்டுப் படாவிடில் ஏற்படக் கூடிய விளைவு என்னவாக, எப்படிப்பட்டதாக, எதுவாக இருக்குமென்பதையும் உணர்ந்துள்ளோம். தெளிந்த சிந்தனையோடும், தன்னுணர்வோடும் பேராயத்தின் தொண்டரணியில் அங்கம் வகிக்க முன் வருகின்றோம். எங்களை இந்த இயக்கத்தில் ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம், பேராயக்குழு, அல்லது அதனால் அமைக்கப் படும் அமைப்பின் முடிவுகளை ஏற்று, அதனழைப்புக்கு எவ்வித மறுப்புமின்றி இயக்கத்தின் கட்டளைகளை நிறைவேற்றுவோம் என்று உறுதி கூறுகின்றோம். தொண்டரணித் தலைவர்களின் ஆணைகளைத் தலைமேல் தாங்கி கட்டளைகளை நிறைவேற்றுவோமென்றும், இதன் மூலம் உறுதி கூறுகின்றோம். சொல்லிலும், செயலிலும் பற்றுடனும், உறுதியுடனும், மற்றவருக்குத் துன்ப மிழையாமை என்ற கொள்கையைக் கடைப்பிடிப்போம்

மற்றவர்களுக்கும் இந்த உணர்வுகளை ஏற்படுத்த உழைப்போம். பிறர்க்கின்னல் விழையா கொள்கையை இந்தியா பின்பற்றுமவரை எங்களது இந்த உறுதிமொழி எங்களைக் கட்டுப் படுத்தட்டும். எமது கொள்கைப் பயணத்தில் எத்தனை இடையூறுகள், இன்னல்கள் குறுக்கிட்டாலும் ஏற்கவும், கடக்கவும் ஆயத்தமாக உள்ளோம்.''

''நாங்கள் கைது செய்யப்படும்போதும், சிறைப் படுத்தப்படும் போதும், அல்லது அரசு வேறு நடவடிக் கைகளுக்கு எங்களை ஆளாக்க நேரும் போதும், பேராயத் திடமிருந்தோ அல்லது வேறெந்த பொது நிதியிலிருந்தோ எங்களுக்கோ அல்லது எங்கள் உறவினருக்கோ எவ் விதப் பொருளுதவியையும் எதிர்பார்க்க மாட்டோமென்று உறுதி கூறுகின்றோம்.'' இந்தத் தெளிவான, திட்டவட்ட மான அறிக்கையில் ஒப்பம் பெற்ற பின்னரே தொண்ட ரணியில் எவரும் சேர்க்கப்பட்டனர். அப்படித்தெளிந்து தேர்ந்த தொண்டர்களால்தான் அன்று சிறைகள் நிரப் பப்பட்டன. எவ்வளவு சிறப்பான சாதனை இது? தொண்டர்களை எல்லாராலும் எல்லாக்காலத்திலும் இப்படிப் பண்படுத்திப் பயன் படுத்த முடியுமா? அண்ண லின் ஆற்றலே தனிச் சிறப்புடையது தான்.

நாடெங்கும் போராட்டம் களைகட்டியது. அரசு தனது இயல்புக்கேற்ப அடக்குமுறை ஆயுதத்தை கையிலெடுத்துக் கொண்டது. உத்தரப்பிரதேசத்தில் கோரக் பூர் அருகே சௌரி சௌராவில் ஊர்வலம் சென்ற வர்கள் மீது காவலர்கள் கையாண்ட வன் செயலால் ஆத்திரமடைந்து, ஊர்வலம் சென்றவர்கள் காவல் நிலையத்தைத் தாக்கி தீவைத்து விட்டனர். காவலர்கள் இருபத்திரண்டுபேர் தீயின் நாக்கால் தீண்டப்பட்டு உயிரிழந்தனர். இந்த வன்முறைத் திருப்பத்தால் மனம் நொந்தார் காந்தியடிகள். அறப் போராட்டத்திற்கு

மக்கள் மனம் பண்படாததால் திசை மாறி விட்டதை அவர் தீவிரமானதாகக் கருதினார். இந்த நிலைமையில் போராட்ட இயக்கத்தைத் தொடர்வது மேலும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி விடுமென அவர் அஞ்சினார். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகப் போராட்டத்தைத் திரும்பப் பெற்றார் காந்தியடிகள். இந்த நிகழ்ச்சிகளுக்கு முன்னரே நேரு உட்பட முன்னணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தனர்.

மென்மையும், மெருகும் கொண்ட எழில் ரோஜா கிள்ளப்பட்டு, சிறையெனும் கூடையில் போடப்பட்டது. பெற்றோர்களிடமும், மனைவி மக்களிடமும் அளவற்ற பற்றும் பாசமும் வைத்திருந்த பாசமலர் செடியிலிருந்து பிரிக்கப்பட்டது. வேல்ஸ் இளவரசர் கலந்து கொள்ளும் விழாக்களைப் புறக்கணிக்க மக்களை ஆயத்தப்படுத்த உழைத்த போராட்டத்தளபதி முதன் முறையாக சிறை அனுபவம் பெற தன்னைத் தானே தயார் படுத்திக் கொண்டார்.

ஜவகர்லால் அலகாபாத் பேராய அலுவலகத்தில் அமர்ந்து பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். காவல் துறை அலுவலர்கள், அலுவலகத்தை ஆய்வு செய்ய கட்டளையுடன் நுழைந்தார்கள் [Entered with search warrent] நேருமகள் கொண்டு வந்த நெருக்கடி நிலை காலத்தில் கலைஞரின் இல்லமும், முரசொலி அலுவலகமும் சோதனையிடப்பட்டதே அதைப் போன்றது தான் அன்று நடந்த சோதனை. ஆய்வின்போது கலைஞர் எப்படி அந்த நிகழ்ச்சி கண்டு பதட்டப்படாமல் தன் பணியில் முனைப்பாக இருந்தாரோ, அவ்வாறே அன்று ஜவகர்லால் ஆய்வு நடவடிக்கையை அலட்சியப்படுத்தி விட்டுத் தன் பணியைத் தொடர்ந்தார்.

அலுவலக சோதனை முடிந்தது. தனது இல்லத்தில் நடப்பதையறிய ஜவகர்லால் வீட்டுக்குச் சென்றார். சாதனையாளரின் இல்லத்திலும் சோதனை முடிந் திருந்தது. தந்தை மோதிலால் நேருவையும், தனயன் ஜவகர்லால் நேருவையும் கைதுசெய்யக் கட்டளையுடன் காத்திருந்தனர் காவல்துறை அலுவலர்கள். தொடர்நிலைச் செய்யுளின் துவக்கப் பாடல் எழுதப்பட்டது. அரசியல் போராட்டத் தியாகத் தழும்புக் கணக்குப் பேரேட்டில் எழுதப்பட்டது. காந்தியின் மாணவர் கைதி ஆனார்.

ஜவகர்லால் சிறைப் படுத்தப்பட்டிருந்த காலத்தில், மனைவி கமலாவின் உடல் நலன் பாதிக்கப்பட்டிருந்தது. புல்நுனியில் நிற்கும் பனித்துளியைப் போன்ற தூய அன்பால் ஜவகர்லாலின் இதயத்தை நிரப்பியிருந்தவர் அவர். சொந்த பந்தங்களை முற்றாகத் துறந்தவரல்லர் ஜவகர்லால். ஆனால் வீடா? நாடாவென்ற வினா நிமிர்ந்து நின்றபோது, நாடே, என்ற விடையைத் தந்தவர் அவர். இந்த மனப் பாங்கால்தான் 'சாதாரணர்கள்' சரித்திர நாயகராக மாறுகிறார்கள்.

பிறந்தநாள் என்றாலே ஆடம்பரம்; ஆரவாரம், கூட்டம், கோலாகலம், விருந்து என்ற மரபை இங்கே தோற்றுவித்த ஜவகர்லால் தனது முப்பத்து மூன்றாவது பிறந்த நாளை, விருந்து; விழா ஏதுமின்றி சிறையில் கொண்டாடினார்.

ஜவகர்லால் மீதான முதல் வழக்கு, அரசியல் களத்தில் அவர் பெற்ற விழுப்புண்; முதல் சிறைவாசம் 1921, டிசம்பர் பதினேழாம் நாள் விசாரணை முடிவில் கிடைத்தது. பேராயக் கொள்கை முடிவுப்படி, அரசு தொடுக்கும் எந்த வழக்கு மீதும் அதன் உறுப்பினர்கள் எதிர் வழக்காடக் கூடாது. ஜவகர்லால் எதிர் வழக்காட வில்லை. ''பிரிட்டிஷ் அரசாங்கத்தையும், அதன் நீதி

மன்றங்களையும் என்னால் அங்கீகரிக்க முடியாது. இந்த விசாரணையே ஒரு நாடகம்" என்று மட்டுமே அவர் நீதி மன்றத்தில் மறு மொழியளித்தார். தந்தை மோதிலால் மீது வேறு நீதி மன்றத்தில் தனியே விசாரணை நடந்தது.

தடை செய்யப்பட்ட கிலாபத் இயக்கத்தை நடத்திய தாகவும்; அதற்கு உதவியதாகவும் துண்டறிக்கைகளை வழங்கியதாகவும் ஜவகர்லால் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டின் மீது *1908*-ஆம் ஆண்டு பதினான்காவது சட்டம் *17(2)* பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்தப் புகழ் மிகு வழக்கை முகமது ஷபி என்ற குற்றவியல் நீதி மன்ற நடுவர் விசாரித்தார். முடிவில் ஆறு மாத வெறுங் காவல் தண்டனையும், நூறு ரூபாய் தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தார். தண்டத் தொகையைக் கட்டத் தவறினால் மேலும் ஒரு மாதம் வெறுங்காவல் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். ஜவகர்லால் தண்டத் தொகையை செலுத்த மறுத்து, ஏழு மாத சிறை வாழ்க்கையை ஏற்றுக் கொண்டார்.

உயர்ந்த எண்ணமும், பரந்த நோக்குங் கொண்ட ஜவகர்லால், உயர்ந்த மதிற் சுவர் கொண்ட சிறைக்குள் ஓர் புதிய உலகத்தைக் கண்டார். உள்ளே இருந்த ஜவகர்லாலுக்கு சௌரி சௌரா நிகழ்ச்சியும், அதன் காரணமாக காந்தியடிகள் போராட்டத்தை நிறுத்தி வைத்ததும், வருத்தத்தை தந்தன. அண்ணலின் முடிவு அவருக்கு ஏமாற்றத்தைத் தந்தது. எழுச்சிக்கு முற்றுப் புள்ளியா? அரைப்புள்ளியைக் கூட அனுமதிக்கக் கூடாதே என்று கவலைப்பட்டார் அவர்.

ஜவகர்லாலின் முதல் சிறை வாழ்க்கை பின்னமாகி விட்டது. விதிக்கப்பட்ட தண்டனைக் காலத்திற்கு முன்னரே விடுதலை என்றறிவிக்கப்பட்டது. விசாரணை ஆவணங்களை ஆய்வு செய்த உயர் அதிகாரிகள் தண்டனை தவறாக வழங்கப் பட்டிருப்பதாகக்

கண்டறிந்தார்களாம். அதனால் தீர்ப்பு திருத்தப் பட்டதாம். வெள்ளையர்களின் நீதி நாடகத்தில் இப்படிப் பட்ட எதிர்பாராத திருப்பங்களும் நிகழ்வதுண்டு. எனவே என்பத்தேழு நாட்களுக்குப் பின் **1922**, மார்ச் மூன்றாம் நாள் ஜவகர்லால் விடுதலை செய்யப்பட்டார். இலட்சுமணபுரி சிறையிலிருந்து விடுதலையாகி வந்த ஜவகர்லால், அலகாபாத் வந்து, சோர்ந்து கிடந்த கட்சிப் பணிக்குச் சுறுசுறுப் பேற்றலானார்.

முதல் கட்ட சிறை வாசத்திற்குப் பின் வெளியே வந்த ஜவகர்லால் அதிக நாள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வில்லை. அன்னிய துணி விலக்கல் (பகிஷ்காரம்) இயக் கத்தில் தீவிரம் காட்டி உழைத்தார். மக்களை இயக் கத்தின்பால் ஈர்க்க அயராது பாடு பட்டார். 4-3-1922 முதல் 10-5-1922 வரை மட்டுமே அவர் செயல்பட அரசு அவரை விட்டு வைத்திருந்தது. இவர் வெளியிலிருந்தால் இயக்கம் வலுப்பட்டு விடுமென ஆட்சி கருதியது. எனவே 11-5-1922-ல் ஜவகர்லால் மீண்டும் கைது செய் யப்பட்டார்.

வெள்ளையராட்சிக்கெதிராகவும், அநீதிகளுக்கெதி ராகவும் மக்கள் சக்தியைத் திரட்டுவதையே இலட்சிய மாகக் கருதி செயல் பட்டார் ஜவகர்லால். அவர் வெளியில் உலவும் நாள் ஒவ்வொன்றும், ஆளும் வர்க்கத்தின் அடிப் படையிலிருந்து கற்களை ஒவ்வொன்றாக உருவப் படும் நாளாக ஆட்சியாளர்கள் எண்ணத் தலைப்பட்டார்கள். அவரது செயல் முனைப்பை முடக்குவதும், நடமாட்டத்தைத் தடை செய்வதும்தான் தற்காப்பென ஆட்சி முடிவெடுத்துச் செயல் பட்டது.

இந்திய குற்றவியல் சட்டப் பிரிவு 506; 385; 117; மற்றும் 118-ன் கீழ் ஜவகர்லால் மீது குற்றம் சுமத்தப் பட்டது. 506-வது பிரிவு; இது அச்சுறுத்தல் குற்றம் தொடர்பானது. 385-வது பிரிவு பயமுறுத்திப் பணம்

பறிக்கும் குற்றத்திற்குரியது. 117-வது பிரிவு பொது மக்களைக் குற்றம் செய்யத் தூண்டுதல் அல்லது உதவுதல் தொடர்பானது. 116-வது பிரிவோ சிறைத் தண்டனைக்குரிய குற்றத்திற்கு உடந்தையாக இருப்பது. இந்த நான்கு பிரிவின் கீழும் விசாரணை தொடங்கப் பட்டது.

அலகாபாத் மாவட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர் திரு கே. என். நாக்ஸ் முன், 15-5-1922ல் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. ஜவகர்லால் வழக்கு நடவடிக்கை களில் பங்கேற்க மறுத்து விட்டார். ஆனால் தனது நிலையை விளக்கி அறிக்கை தருவதற்கு மட்டில் ஒப்புக் கொண்டார். ஜவகர்லாலின் விருப்பப்படி அறிக்கை தர ஏதுவாக வழக்கு மே மாதம் பதினேழாம் தேதிக்குத் தள்ளி வைக்கப்பட்டது. தனது நோக்கத்தையும் செயற் பாட்டையும் தெளிவு படுத்தி ஜவகர்லால் கொடுத்த அறிக்கை இது:-

"எனக்கெதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டு களுக்குச் சமாதானம் கூறவோ, அல்லது என்னைத் தண்டனையிலிருந்து காத்துக் கொள்ளவோ, நான் இந்த அறிக்கையைத் தரவில்லை. குற்றச் சாட்டை ஒப்புக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ நான் இசைய வில்லை. சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யவும் நான் மறுத்துள்ளேன். இதற்கெல்லாம் காரணம், இதனை நான் ஒரு நீதி மன்றமாகவே அங்கீகரிக்க வில்லை என்பது தான். அரசியல் வழக்குகளைப் பொறுத்தவரை, இந்தியாவிலுள்ள நீதி மன்றங்கள் ஆட்சியாளர்களின் கட்டளைகளையே செயற்படுத்துகின்றன. அரசின் முடிவுகளையே தீர்ப்பாகத் தருகின்றன. நான் நடுவரை அவமதிக்க வில்லை. ஆனால் முறை கேடான, மாண்பு களை இழந்து விட்ட ஒரு ஆட்சியைத் தாங்கி நிற்கும் கருவியாக, நீதி மன்றங்கள் பயன் படுத்தப் படுவதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது."

"எத்தனை பிரிவின் கீழ் குற்றம் சுமத்தினாலும் சரி, என் செயல்களுக்கு ஒரே நோக்கந் தான் உண்டு. அந்த நோக்கத்தை அடைய, எனது அறிவாற்றலை முழுமையாகப் பயன் படுத்தவே நான் முயல்கின்றேன். இன்றைய அரசுக்கெதிராக வெறுப்பை வெளிப்படுத்துவது இந்திய மக்களின் வாழ்க்கைக் குறிக்கோளாகி விட்டது. அரசு எந்தத் தீமையின் சின்னமாக விளங்குகிறதோ, அந்த சின்னத்திற்கெதிராகக் கிளர்வதும், வெறுப்பை மக்களிடையே வளர்ப்பதுமே முழு முதல் தொழிலாகி விட்டது."

"எமது வலிமை, எங்கள் மக்களின் ஆதரவில், அவர்தம் நல்லெண்ணத்தில்தான் உள்ளது. வன்முறையும், அச்சுறுத்தலும் எங்கள் போராட்டக் கருவியல்ல. எமது மாபெரும் தலைவர் எங்களிடம் கொடுத்துள்ள ஆயுதமே அன்பும், தன்னல மறுப்புந் தான். நாங்கள் எங்களைத் தியாகத் தீயிடம் ஒப்படைத்துக் கொள்கிறோம். இழப்பை ஏற்றுக் கொள்வதன் மூலம் எதிரிகளிடம் மன மாற்றத்தை ஏற்படுத்தவே முயல்கின்றோம்."

"எங்கள் மறியலில் ஒரு கடுஞ்சொல்லையோ யாருக்கும் சிறு இன்னலையோ விளைவிக்காமல், ஓரெடுத்துக் காட்டாக விளங்கச் செய்துள்ளோம். கண்ணியம் தவறாமல் முறையிட்டுக் கெஞ்சியும் நாங்கள் எங்கள் கடமையைச் செய்துள்ளோம். வன்முறை, மற்றும் அச்சுறுத்தல் என்ற விரும்பத்தகாத நடவடிக்கையின் நினைவு வராமல் செயல்பட்டுள்ளோம் என்பதை என்னால் அறுதியிட்டுக் கூற முடியும்."

"ஒரு குறிப்பிட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மற்றவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்வது ஓர் உரிமை. அரசு என்ன செய்தாலும், நாங்கள் அந்த உரிமையை விட்டுக் கொடுக்க

மாட்டோம். இந்த நாட்டில் எங்களிடம் எஞ்சியுள்ள உரிமைகள், வாய்ப்புகள் சிலவே. அவற்றையும் பறித்திட முயற்சி மேற் கொள்ளப்பட்டிருப்பது உண்மை நிலை. சங்கமாகச் சேரும் உரிமையை நாங்கள் எவ்வளவு உயர் வாக மதிக்கின்றோம் என்பதை உலகம் உணரச் செய் துள்ளோம்."

"எங்கள் பேச்சுரிமைக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடு களுக்கு எங்களால் பணிய முடியாது. மறியல் முயற்சிக் காக நான் விசாரிக்கப்படுவது குறித்து மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். இந்த விசாரணையின் மூலம் எமது குறிக் கோள் மக்களைச் சென்றடைய வாய்ப்பு ஏற்பட்டிருக் கிறது. அன்னிய துணிகளை விலக்க வேண்டுமென்றத வேட்கை அவர்களுக்கும் ஏற்பட ஒரு தூண்டுதலாக இவ் வழக்கு அமைந்து விட்டது."

"அரசு மக்களைத் தன்பால் பற்றுள்ளவர்களாக மாற்ற முயற்சிக்கிறது. நேசமும், மன ஈடுபாடும், உயர் வான உணர்வுகளாகும். அவற்றை யாரும் எங்கிருந்தும் வாங்கி விடவோ, நுழைத்து விடவோ முடியாது. துப்பாக்கியைக் காட்டி அந்த உணர்வுகளை ஊற்றெடுக்கச் செய்ய முடியாது. விசுவாசம் ஒரு நல்ல உணர்ச்சிதான். ஆனால் இந்தியாவில் சில சொற்கள் உரிய பொருளிழந்து (புரட்சி என்ற சொல்லைப் போல்) புழங்குகின்றன.

"எமது நாட்டின் விடுதலைக்காகவும், உண்மைகளுக் காகவும் நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். எந்த நாட்டையும், எந்த மக்களையும் துன்புறுத்த நாங்கள் விரும்பவில்லை. யார் மீதும் ஆதிக்கம் செலுத் தும் நோக்கமும் இல்லை. ஆனால், எங்கள் நாட்டில் நாங்கள் முழு சுதந்திரத்துடன் வாழ வேண்டும். கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இங்கிலாந்து கொடுமையான தவறுகளைச் செய்து வந்துள்ளது. அதற்

காக நாளிதுவரை அது வருந்தவில்லை. தனது தவறு களைத் திருத்திக் கொள்ளவுமில்லை.''

"படைபல திமிரோடு நீடந்துக் கொள்ளும் ஆட்சிக் கெதிராக மக்கள் மன்றம் நல்ல தீர்ப்பு வழங்கி விட்டது. அந்தத் தீர்ப்பை செயற்படுத்தத் தவறப்போவதில்லை. இந்தியா விடுதலை பெற்றே தீரும். இதில் ஐயத்திற் கிடமே இல்லை. சிறைக்குள் செல்ல இருக்கும் நான். எங்கள் ஆட்சியை வரவேற்க வெளியில் வருவேன் என்ற நம்பிக்கை எனக்குண்டு.''

வீரமும் விவேகமும் செறிந்த இந்த அறிக்கைக்குப் பின்; நீதிமன்றம் தன் சடங்குகளை முடித்துக் கொண்டு சட்டப்பிரிவு 506-ன் கீழ் பதினெட்டு மாத கடுங்காவலும்; பிரிவு 117-ன் கீழ் பதினெட்டு மாத கடுங்காவல் தண்டனையும்; பிரிவுகள் 116 மற்றும் 385-ன் கீழ் ஆறு மாத கடுங்காவல் சிறையும், பிரிவு 117-ன் கீழ் ரூபாய் நூறு தண்டமும், தொகையைக் கட்டத் தவறினால்; மேலும் மூன்று மாத கடுங்காவல் சிறைத் தண்டனையும் வழங்கி எல்லாவற்றையும் ஒரே காலத்தில் அனுபவிக்க வேண்டு மெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

சிறையில் ஜவகர்லாலும், வேறு ஐம்பது தொண்டர் களும் ஒரே சிறையில், ஒரே கொட்டடியில் அடைக்கப் பட்டிருந்தனர். எப்பொழுதும் கூட்டத்தின் நடுவே இருப் பதை ஜவகர்லால் வசதிக் குறைவாகக் கருதினார். அவர் மனம் தனிமையை விரும்பியது. ''எந்த வேளையும் தனித்திருக்க முடியாமை பொறுக்க முடியாததாக இருந்தது.'' என்று அவரே தன் வாழ்க்கை வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால்; சிறிது காலத்திற்குப் பிறகு அவர் விரும்பிய தனிமை கிடைத்தது. சிறை அலுவலர்களைத் தவிர வேறு யாரையுமே காண முடியாத தனிமை நிலை அவருக்குக் கிடைத்தது. அனுபவிக்கும் போது தான் தனிமையின் தாக்குதலை அவரால் உணர

முடிந்தது. அந்தத் தனிமையையும் அவரால் தாங்க முடியவில்லை. எனினும் தனிமை ஒரு வகையில் உபயோகமானதாகவும், உவப்பானதாகவு மிருந்தது. படிக்கவும், எழுதவும் வசதி கிடைத்து விட்டால் தனிமையே சிறந்ததென்பது அவர் அனுபவம்.

"சந்ததி நிறைந்துள்ள சமூக வாழ்க்கை, அமைதியான ஏகாந்த வாழ்க்கை இரண்டிலும் பண்பட்டிருக்க வேண்டும். ஒரு சார்பாகப் பண்பட்ட மனம் அரைகுறையானது. இருவித இயல்பிலும் பயிற்சி பெற்றவரே நிறை மனிதர் ஆகின்றனர்.'' என்னும் சுவாமி விவேகானந்தரின் கூற்றுக்கொப்ப ஜவகர்லால் நேரு, பின்னாளில் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டார்.

சிறையில் நாளுக்கு நாள் கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டு வந்தது. வழிக்கு வராதவர்களைப் பழி வாங்குவதென்ற முடிவுக்கு அரசு வந்துவிட்டதன் அறிகுறியை அது வெளிப்படுத்தியது, புதுப்புது சிறை விதிகளைப் புகுத்தி, நாட்டுத் தொண்டர்களின் நலனைக் குலைப்பதில் அரசு ஆர்வத்தோடு செயல்பட்டது. இதனால் சிறை அதிகாரிகளுக்கும், கைதிகளுக்கும் தகராறு ஏற்பட்ட சூழ்நிலையும் உண்டு, கைதிகள், சிறை அலுவலர்கள் மோதல் காரணமாக, ஜவகர்லால் புருஷோத்தும தாஸ் தாண்டன், மகாதேவ தேசாய், ஜார்ஜ் ஜோசப், பாலகிருஷ்ண சர்மா, தேவதாஸ் காந்தி ஆகியோரை அதே சிறைக்குள் வெகு தொலைவில் உள்ள வேறு கொட்டடிக்கு மாற்றி விட்டனர். இந்தச் சிறிய இடத்தில் வசதிக் குறைவு இருந்தாலும் தனித்திருந்தது ஜவகர்லாலுக்கு படிக்க வாய்ப்பளித்த வகையில் மன நிறை வளிப்பதாக இருந்தது.

முறையான உடற்பயிற்சி, ஓடுவது தண்ணீர் இறைப்பது ஆகியவற்றை ஜவகர்லால் விடாமல் செய்து வந்தார். மற்ற நேரங்களில் அவரைப் புத்தகத்தோடுதான்

பார்க்க முடியும். உடைக்கு அடுத்தபடியாக அவரோடு ஒட்டிக் கொண்டிருந்தது புத்தகங்கள் தான். சிறைக் கண் காணிப்பாளருக்கே ஜவகர்லால் எந்த நேரமும் படித்துக் கொண்டிருப்பதைக் காண பொறாமை மேலிட்டது. அவரது படிப்பார்வமும், அதற்காக அவர் நேரத்தைப் பயன்படுத்திக் கொண்ட விதமும், புத்தி குறைந்த, அதிகாரச் செருக்குடையவரைப் பொறாமை படத்தானே செய்யும்! உயர்ந்த மனிதர்களை உருவாக்குவதில் சிறைச் சாலைகளின் பங்கும் உண்டென்பதில் ஐய மில்லை.

"You do not learn that you may live;
You live that you may learn" (Ruskin)

"உன் வாழ்க்கையை நடத்தலாமென்றுநீ படிக்கக் கூடாது; படிக்க வேண்டுமென்றே நீ உயிர் வாழ வேண்டும்" என்ற ரஸ்கின் மொழி நேருவுக்கே பொருந்தியது.

நீல வானமும், நீந்திச் செல்லும் மேகக் கூட்டமும் இரவில் விண்ணில் பரப்பிய உடுக்கள் என்னும் உதிரிப் பூக்களுந்தான்; நேருவுக்கும்; அவரது தோழர்களுக்கும் வெளியுலகத் தொடர்பும், தோற்றமும். அவற்றைக் காண்பதில்தான் ஜவகருக்கு எத்தனை மகிழ்ச்சி! எவ்வளவு ஆர்வம்!! உள்ளே நிலைமை இது... வெளியே... ?

நேருவுக்கு விதிக்கப்பட்ட தண்டத் தொகைக்காக ஆனந்த பவனத்திற்கு அடிக்கடி காவலர்கள் வந்து சென்று கொண்டிருந்தனர். வீட்டிலிருந்தவர்களும் பேராயத்தின் கொள்கை அறிந்தவர்கள் மட்டுமல்ல, அந்தக் கொள்கையைப் பற்றி நின்றவர்கள். இன்று சில அரசியல்வாதிகளின் குடும்பங்கள் ஆளுக்கொரு கட்சி யில் அங்கம் வகித்து ஆபத்தைத் (!)தடுத்துக் கொள்வதற் கும், ஆதாயத்தை அறுவடை செய்வதற்கும் திட்டமிட்டு

இயங்குவதைப்போல் அன்றில்லை. மோதிலால் நேரு வின் குடும்பம் ஒரே குடும்பம். கொள்கைக்கும் இது பொருந்தும். எனவே ஜவகர்லாலுக்கு விதிக்கப்பட்ட தண்டத் தொகைக்காக ஆனந்த பவனத்தில் அடிக்கடி நுழைந்து கண்ணில் தென்படும் பொருட்களை எடுத்துச் சென்றனர் காவலர்கள். சிறுமி இந்திராதான் காவலர் களின் இந்தச் செயலுக்காக அன்று ஆத்திரப்பட்டவர்.

# கொட்டடிக்குள்ளே கொடுமை !

சிறை உணவும், அலுவலர்களின் நடத்தையும், பேச்சும் ஜவகர்லாலுக்குப் பிடிக்கவில்லை. சிறை அலுவலர்கள் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்ய முடியாத அளவுக்கு அது பளுவாகவும், அவர்கள் நேர்மை யோடு வாழ முடியாத அளவுக்கு ஊதியம் குறைவாகவும் இருந்தது. சிறை நிர்வாகமே சீர்கெட்டிருந்த தென்றாலும் பொருந்தும். ஆனால் இந்த நிலைமையை அனுபவித்த, விடுதலையாகி வெளியே சென்ற தொண்டர்கள், சிறை யின் சீர் கெட்ட நிலைமைக்கெதிராக வெளியே கிளர்ச்சி செய்தனர். இந்தக் கிளர்ச்சியால் சிறையில் உணவு, உடை ஆகியவற்றில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் அரசியல் கைதிகள் நாளுக்குநாள் கடுமையாக நடத்தப்படுவது மட்டில் மாற்றம் பெறவில்லை.

சிறை விதிகளை எந்த அரசியல் கைதியேனும் மீறி விட்டால் போதும், தண்டனை மிகக் கடுமையாக இருக் கும். சிறு தவறு ஒன்றுக்காக பதினாறே வயதான சிறுவன் **ஆ**சாத்துக்குக் கசையடி கொடுக்கப்பட்டது. ஆடைகளை அகற்றிவிட்டு; மரத்தில் கட்டி வைத்து; அவனை அடித்த போது ஒவ்வொரு கசையடிக்கும் 'மகாத்மா காந்திக்கு ஜே! என்று முழக்கமிட்டான் அச்சிறுவன். அவனுடைய நாட்டுப்பற்றும், வீர உணர்வும் இக்கால நமது இளைஞர்களுக்கு வரவேண்டும். பாவம்! அவர் களில் பெரும்பாலோர் பாடத்தையே மறந்து விட்டு படத்துக்காகத் தவங்கிடக்கின்றார்களே! இங்குதான் புரட்சி என்ற சொல்லே கொச்சைப் படுத்தப்பட்டு, கோமாளிகளின் அடை மொழியாக, அலங்கார மொழி யாகிவிட்டதே !

சமூக அநீதிகளை வெல்ல, கொடியவர்களின் கொட்டத்தை அடக்க, இப்படிப்பட்ட இளைஞர்கள்

ஒவ்வொரு கால கட்டத்திலும், ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள். "எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து போய் மறம் மேலெழுகிறதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன்'' என்று கீதையில் கண்ணன் கூறினார் (ஞான கர்ம சன்னியாச யோகம்) என்ன வேலையோ, அவர் தன்னைப் பிறப்பித்துக் கொள்ளாததால் ஆசாத்துகள் பிறந்து வந்து போராட நேர்ந்தது.

ஆசாத் என்று எல்லாராலும் சுருக்கமாகவும் அன்பாகவும் அழைக்கப்பட்ட சந்திரசேகர ஆசாத், 1921-ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்ட மறுப்புப் போராட்டத்தில் பங்கேற்க, பள்ளியை விட்டு விலகி வந்தவர். டெல்லி சட்டமன்றத்தில் வெடிகுண்டு வீசி, வெள்ளை ஏகாதிபத்தியத்தின் விழிகளில் விரலை விட்டானே மாவீரன் பகத்சிங் அவனுடைய தோழன். லாலா லஜபதிராய் அவர்களின் மரணத்திற்குக் காரணமான சாண்டர்ஸ் என்பவனைப் பழிவாங்கிய குழுவில் ஒருவன். பத்தாண்டு காலம் தலைமறைவாக வாழ்ந்து, இறுதியில் அலகாபாத் பூங்கா ஒன்றில் காவலர்களால் அடையாளம் காணப்பட்ட போது நிகழ்ந்த துப்பாக்கிப் போரில் சுட்டுக் கொல்லப்பட்ட வீரன்தான் ஆசாத்.

ஜவகர்லால் இலட்சுமணபுரி சிறையில் இருந்த போது, பெரும்பாலான பேராயக் கட்சித் தலைவர்கள் விடுதலையாகி வெளியில்தான் இருந்தார்கள் மக்களிடையே ஏற்பட்டிருந்த மன எழுச்சி, எரியும் விறகை இழுத்து விட்ட கொதி நீராகிக் கொண்டிருந்தது. திரண்டு வந்த ஆவேச சக்தி திடீரென மங்கத் துவங்கியது. குயவன், சக்கரத்தைச் சுழற்ற மறந்து, மண்மீதே கையை வைத்துக் கொண்டிருந்தால் என்ன நடக்குமோ, அதுவே நடந்தது.

பேராயத்தார் பிளவு படுவதையும், அதைப் பெரிது படுத்துவதையும் பரம்பரை நோயாகவே பெற்றிருந்தார்கள். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கவும், விளைவுகளைப் பொறுத்திருந்துப் பார்க்கவும் அவர்கள் பழக்கப்படாமல் போய் விட்டார்கள். ஒத்துழையாமை இயக்கம் குறித்து 'மிதத்திற்கும்' தீவிரத்திற்கும் கருத்து வேறுபாடு குருத்து விட்டது. இயக்கத்தை நிறுத்தி வைக்க வேண்டுமென்றனர் மிதிவாதிகள். கூடவே கூடாதென்றனர் தீவிரவாதிகள். அணி பிரிந்தது. மாற்றம் வேண்டுவோர் அணியென்றும், மாற்றம் வேண்டாதோர் அணியென்றும் 'உத்தி' பிரித்துக் கொண்டார்கள்.

ஒத்துழையாமையை விட்டுக் கொடுத்து, தேர்தலில் பங்கேற்று சட்ட மன்றங்களையும், நாடாளு மன்றத்தையும் கைப்பற்ற வேண்டுமென்றது ஓர் அணி. அதில் மோதிலால் நேரு, தேசபந்துதாஸ், விட்டல்பாய் பட்டேல் மற்றும் சத்தியமூர்த்தி ஆகியோர் இருந்தனர். ஒத்துழையாமை இயக்கத்தை விடக்கூடாது. தேர்தலில் பங்கேற்கவும் கூடாது என்றது அடுத்த அணி. அந்த அணியில் சி. இராஜகோபாலாச்சாரி, பட்டேல், இராஜேந்திரபிரசாத், ஜம்லாலால் பஜாஜ் ஆகியோர் இருந்தனர். காந்தியடிகளோ அப்போது சிறையில் இருந்தார். 1923–ஆம் ஆண்டு முடிவில் காக்கி நாடாவில் முகமது அலி தலைமையில் நடந்த பேராயத்தில்தான் சட்ட மன்றங்களுக்குள் நுழைவதற்கு அங்கீகாரமளிக்கப் பட்டது. பேராயத்துக்குள்ளிருந்த 'சுய ராஜ்ய' கட்சியினர் தேர்தலில் பங்கேற்றுச் சட்ட மன்றம் சென்றனர். "நாளை வரும் பலாப் பழத்தைவிட இன்று கிடைக்கும் களாப் பழமே மேலென்பது அவர்கள் எண்ணம் போலும்.!

விடுதலை செய்யப்பட்டு வெளியே வந்த ஜவகர் லாலுக்கு ஒரு புதிய பொறுப்பு காத்திருந்தது. போட்டிக்

குழுக்கள் இயக்கத்தில் ஏற்படுத்தி வைத்திருந்த இடைவெளியை நெருக்கமாக்க உழைத்தவர்களோடு அவரும் சேர்ந்து கொண்டார். மிகப் பழைய கந்தலை எப்படித் தைத்தாலும் மீண்டும் மீண்டும் கிழிந்து விடுவதைப் போல், எவ்வளவு முயன்றும் ஒற்றுமையை ஏற்படுத்த முடியவில்லை. இதனால் இந்த குழுக்கள் மீதே ஜவகர்லாலுக்கு எரிச்சல் ஏற்பட்டது. உலர்ந்த ஆற்று மணலைக் கொண்டு, விளையாட்டு வீடு கட்ட முயன்றதைப் போல் தோல்வியே கண்டார் ஜவகர்லால். ஒன்று படுத்தும் வேலையை விட்டொழித்து வேறு பணியில் நேரத்தைச் செலவிட்டார்.

குழுக்களின் குழப்பத்தால் கூரை பிய்ந்த வீடாகி விட்ட பேராயத்தைப் புதுப்பிக்க அவர் உழைத்தார். அன்றைய நிலைமையில், பேராயத்தில் ஆக்கப் பணி செய்வது அவ்வளவு எளிதாக இல்லை. இந்தக் காலக் கட்டத்தில்தான் சற்றும் எதிர்பாராத வகையில் ஜவகர்லால் அலகாபாத் நகராண்மைக் கழகத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வெற்றி பெறும் வாய்ப்புள்ளவர் வேறு யாருமில்லை என்பதை முடிவாகத் தெரிந்து கொண்ட பேராயக் கட்சி, கடைசி நேரத்தில் ஜவகர்லால் பெயரை முன்மொழிந்தது. எதிர்பார்த்த பலனும் கிடைத்தது.

ஜவகர்லாலைப் போலவே வேறு சில முக்கியத் தலைவர்களும் நகராண்மைக் கழகத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். கல்கத்தா நகரின் முதல் தலைவராக (Mayor) தேசபந்து தாசும்; பம்பாய் நகரத் தலைவராக விட்டல்பாய் பட்டேலும், அகமதாபாத் நகரவைத் தலைவராக சர்தார்வல்லபாய் பட்டேலும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப் பேற்றிருந்தனர்.

மக்களுக்கு நேரடியாக ஏதேனும் நன்மை செய்யக் கூடிய பணியாக நகராண்மைக் கழகத் தலைவர்

பொறுப்பு விளங்கியது. வெறும் பேச்சை விரும்பாத ஜவகர்லாலுக்குப் புதிய பொறுப்பில் பிடிப்பு ஏற்பட்டது. நகராட்சி செயல்பாட்டில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர அவர் விரும்பினார். தனது விருப்பத்தை எந்த அளவுக்கு செயற்படுத்த முடியுமென்பதைப் பட்டறிவினால் பின்னரே அவர் உணர்ந்தார். எனினும் பதவிக்குள்ள அதிகாரம், அலுவலர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றைக் கொண்டு இயன்றவரைக் கடமையை திறமையாகவும், செப்பமாகவும் நடத்தும் முயற்சியை அவர் கைவிட்டு விடவில்லை. என்னதான் மனதுக்குகந்த பணியாக இருந்த போதிலும், ஜவகர்லால் நேருவால் அப்பதவியில் நீடித்திருக்க முடியவில்லை. பதவியை விட்டுவிட முயன்றார். ஆனால் பதவியும், மற்றவர்களும் அவரை விட்டுவிட ஆயத்தமாக இல்லை. எனவே மற்றவர்களின் வேண்டுதலுக்கிணங்கி மேலும் ஓராண்டுபதவியில் நீடித்துப் பின்னர் பதவி துறந்தார்.

"ஜவகர்லால் மிகவும் உண்மையானவர். ஒப்புக் கொண்ட செயல்களையும், தன் வாக்கையும் அதிகப் பொறுப்போடு நிறைவேற்றுவார். சிறியதோ, பெரியதோ எந்த வினையிலும், யாரையும் ஏமாற்றி விட்டாரென்று எவரும், எப்பொழுதும் எண்ண இடந்தராதவர். உலகில் காணும் சாதாரண தந்திரங்களுக்கும், திறமைகளுக்கும் அப்பாற்பட்டவர். எதிலும், யாரிடத்திலும் நேர்மையாக நடந்து கொள்வார்." என்று ஸ்ரீபிரகாசா குறிப்பிட்டது புகழுரையல்ல என்று தனது சொல், செயல் மூலம் நிரூபித்துக் காட்டியவர் நேரு. இவரது தலைமையில் செயல்பட்ட நகராண்மைக் கழகத்தின் வினையாற்றல் எப்படி இருந்திருக்குமென்பதை நம்மால் ஊகித்துணர முடிகிறது.

# பொதுப் பணியும் பொருளாதாரமும்

தந்தை மோதிலாலும், தனயன் ஜவகர்லாலும் அரசியல் இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்ததால் தொழிலை முற்றாக விட்டிருந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றனர். இதனால் பொருள் வரவு இல்லாததோடு செலவும் குறையவில்லை. பணமுடை ஏற்பட்டது. இதனால் வேலையாட்கள் குறைக்கப்பட்டனர். செலவுக்காக குதிரைகளையும், வண்டிகளையும் வேறு பல வீட்டுப் பொருட்களையும் கூட விற்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. மோதிலால், ஆடம்பரமாக வாழ்ந்து பழகியவர். ஈட்டிய பொருளைத் தாராளமாகச் செலவிட்டவர். நல்ல சுற்றுப்புறச் சூழ்நிலைக்காகப் பொருளைத் தண்ணீராகப் பாய்ச்சியவர். அவரால் பண நெருக்கடியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வழக்கறிஞர் தொழிலைக் கைவிட்டிருந்தவர், கொள்கை முடிவைப் பற்றிநின்று நீதிமன்றம் செல்வதைத் தவிர்த்திருந்தவர். தற்போதைக்கு ஏற்பட்ட பண நெருக்கடியிலிருந்து மீள, வேறு வழியின்றி வீட்டிலிருந்தே வழக்காடுபவர்களுக்குச் சட்ட வழிகாட்டியாக இருந்து பொருளீட்ட முடிவு செய்தார். ஓய்வு கிடைத்த போதெல்லாம் சட்ட அறிவுரை வழங்கி பொருளீட்டினார்.

தனயன் ஜவகர்லால் வழக்கறிஞர் தொழிலை அடியோடு விட்டொழித்து, அரசியலிலேயே முழு மூச்சாக ஈடுபட்டிருந்தார். அவருக்குப் பணத் தேவையும் குறைவாகவே இருந்தது. குடும்பச் செலவு குறித்து அவர் சிந்தித்ததே இல்லை. அந்தப் பொறுப்பை தந்தை தனது தோளிலிருந்து இறக்கி வைக்கவில்லை. எனினும் ஒரு ஆண், அதிலும் மணமானவன், வருவாய் ஏதுமின்றி வாழ்வதிலுள்ள இடர் உணரக்கூடியதுதான். செலவுக்குப் பணம் தேவைப்பட்டால், ஜவகர்லால், தனது தந்தையின்

கையைப் பார்க்க வேண்டியிருந்தது. இந்த நிலையை எண்ணி ஒரு சில நேரங்களில் ஜவகர் வருந்தியதுமுண்டு. இதனை உய்த்துணர்ந்த காந்தியடிகள், அவரைப் பத்திரிகை நிருபராகச் செயல்படலாமே என்றுகூட அறிவுரை வழங்கினார். ஆனால் மோதிலால் தனது மகன் பணத்துக்காகப் பாடுபடுவதை ஏற்க மறுத்து விட்டார்.

பொருளாதாயமில்லா பேராயப் பணி, நகராண்மைக் கழகப் பணிகளையெல்லாம் ஜவகர்லால் மிகப் பொறுப்போடு செய்தார். பொருளுக்காகப் பொதுப் பணியைத் துறக்க அவருக்கு மனம் வரவில்லை. அதனால் அவரைத் தேடிவந்த பெரிய நிறுவனங்களின் பதவியைக் கூட அவர் ஏற்க மறுத்து விட்டார். மீண்டும் வழக்கறிஞர் தொழிலைத் தொடரவும் அவர் மனம் இடந்தரவில்லை. பொருளாதார வகையில் தனது தந்தைக்குத் தானொரு சுமை என்றுகூட ஜவகர் எண்ணத் தவறவில்லை. ஆனால் தந்தையோ இப்படிப்பட்ட சலனங்களுக்கெல்லாம் மனதில் இடந்தரவில்லை. ஜவகர்லாலின் உள்ளத்தில் மட்டில் ஒரு உறுத்தலிருந்தது.

பொதுத் தொண்டுக்கும், பொருளாதார நிலைக்கும் பிரித்துப் பார்க்க முடியாத ஒரு பிணைப்புண்டு. குடும்பப் பொறுப்பு குறைந்தும், பொருள்வளம் நிறைந்தும் இருந்தால்தான், ஒருவரால் பொதுத் தொண்டை முழுமையாகவும், திறமையாகவும் ஆற்ற முடியும். பொதுப் பணியில் சிறக்க வேண்டுமானால், யாருக்குமே குடும்பபாரச் சுமை ஏறாமலிருக்க வேண்டும். எனவேதான் அரசியலில் மிக உயர்ந்த முக்கிய பொறுப்புக்களில் பணவசதி படைத்தவர்களே அமர முடிகிறது.

பணம் படைத்தவர்களில் பலர் பொது நோக்கும், பயன் கருதாது உழைக்கும் பக்குவமும் பெறாதவர்

களாகவே இருந்தனர் – இருக்கின்றனர் – இருப்பார்கள். தொண்டார்வமும் தொய்விலா முயற்சியும், உழைப்பும் உள்ளவர்கள பொதுத் தொண்டுக்கு வந்து வறுமையோடு வாழவேண்டி நேரிடுகிறது. இந்த இடரைப் போக்கி, ஆற்றலாளர்களையும் ஊக்கத்தோடு உழைக்கக் கூடிய வர்களையும் இயக்கப் பணியில் ஈடுபடுத்தும் நோக்கத் தோடு 1924–ஆம் ஆண்டு கூடிய பேராய மாநாடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இத்தீர்மானத்தின்படி பேராயத்தின் பொதுச் செயலாளர்களுக்கு மாத ஊதியம் வழங்கலாம். இந்த ஏற்பாட்டை இயக்க நலன் கருதியும், இயக்கத் தொண்டர்களின் நலன் கருதியும் ஜவகர்லால் கூட வரவேற்றார்.

பொதுத் தொண்டுக்கு வந்தவர்கள் ஊதியம் பெறுவ தென்பது அப்போதைக்கு ஒரு புதுமையான ஏற்பாடாகப் பலரும் கருதும்படியாக இருந்தது. இயக்கத்திலும், பொது மக்களிடத்திலும் இந்த ஏற்பாடு வரவேற்பைப் பெற வில்லை மோதிலால் நேருவுக்கோ இது அறவே பிடிக்க வில்லை. இந்த எண்ணமே அருவருக்கத் தக்கதாக அவர் கருதினார். ஜவகர்லாலோடு கூட்டுச் செயலாளராக இருந்தவருக்குப் பொருள் நெருக்கடி இருந்த போதிலும், ஊதியம் பெறுவதை இழுக்கெனக் கருதி அவர் வாங்க மறுத்து விட்டார். இதனால் பொதுச் செயலாளரான ஜவகர்லாலும் ஊதியம் பெறுவதைத் தவிர்க்க வேண்டிய தாயிற்று.

ஜவகர்லால் பொருளீட்டும் முயற்சியைப் பற்றி சிந் திக்கத் தலைப்பட்டார். இதை மோதிலால் நேருவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பொது வாழ்க்கைக்குத் தங்களை ஒப்படைத்துக் கொண்டவர்களுக்குப் பொருள் சிந்தனையே வரக்கூடாதென்பது அவர் வாதம். பண மாரியைக் கொண்டு வரும் சக்தி பெற்ற வழக்கறிஞர் தொழிலைத் தான் கொள்கைக்காக விட்டுக்கொடுத்ததைத்

மகனுக்கு அவர் நினைவூட்டினார். இதன் பின்னர் ஜவகர்லால் பொருளைப் பற்றி சிந்திக்கவும் இல்லை-அதை ஈட்ட வழிவகை தேடவுமில்லை.

1922-ம் ஆண்டு பேராயத்தின் தலைவராக தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். அவரது 'சுயராஜ்ய' கட்சிக்கு எதிரானவர்கள் பம்பாய் செயற்குழுவில் நெருக்கடியை உண்டாக்கினார்கள். இதனால் தாஸ் தலைமை பொறுப்பிலிருந்து விலகினார். இரண்டு குழுவிலும் தீவிரப் பங்கேற்காத நடுநிலையாளர்கள் பொறுப்புக்கு வந்தார்கள். டாக்டர் அன்சாரி தலைவராகவும், ஜவகர்லால் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரண்டுங் கெட்டான் நிலை என்பார்களே, அந்த நிலையில் செயற்குழு இருந்தது. பிறவி நோயாகி விட்ட பிளவு நோய் பேராயத்தை விடுவதென்றோ?

"மத்தளத்தில் இரண்டு பக்கமும் இடி" என்றாற் போல், புதிய பொறுப்பாளர்களுக்கு மாறுதல் வேண்டுவோர், மாறுதல் வேண்டாதோர் என்ற இருதரப்பிலிருந்தும் நெருக்குதல் வந்தது. செயற்குழு செய்வதறியாது தவித்தது. உண்மையில் அது செய்வதறியா குழுவாகவே இருந்தது. குஜராத் கிளையோ தலைமையின் கட்டளையைத் தரையில் போட்டு மிதித்தது. அதன் அடங்காப் பிடாரித் தனத்தைக் கண்டிக்க முடியாத நிலைமையால் செயற்குழு பதவி விலக முடிவெடுத்தது. ஜவகர்லாலும் தன் பதவி விலகல் கடிதத்தை அனுப்பி வைத்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

ஒரு மாபெரும் இயக்கத்தில் முக்கிய பொறுப்புக்களை வகித்தவர்களில் இவ்வளவு சிறிய மனம் படைத்தவர்கள் கூட இருக்க முடியும் என்பதைப் பட்டறிந்து மனம் நொந்தார் ஜவகர்லால். காங்கிரசுக்குள் (பேராயத்துக்குள்) கத்தரிக்கோலாகப் பிரிந்து கிடந்த இரு குழுக்களும் ஒன்றையொன்று விஞ்சத் தீவிரம் காட்டிக் கொண்டிருந்

தன. 1923–ஆம் ஆண்டு டில்லியில் அபுல்கலாம் ஆசாத் தலைமையில் பேராயத்தின் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இந்த நேரத்தில் சுயராஜ்ய கட்சியினரின் கை சற்று ஓங்கியிருந்தது. ஆண்டிறுதியில் காக்கி நாடாவில் நடைபெற்ற பேராயத்தில் சட்ட மன்றத்திற்குச் செல்ல இருந்த தடையும் நீங்கியது.

"அதிகாரம் பண்ணுவதற்காகப் பதவிக்கு ஆசைப் படுவதை வெறுக்கிறவர்'' என்று ஜவகர்லாலைப் பற்றி கே. ஆர். கிருப்பளானி குறிப்பிட்டது நூற்றுக்கு நூறு உண்மை. பதவி என்பது இலட்சியத்தை அடைவதற்குதவும் கருவி என்றும், உழைக்கக் கிடைத்த வாய்ப்பு என்றும் கருதியவர் ஜவகர்லால். குழுக்களை உருவாக்கிக் கொண்டு, தலைமைக்காக இயக்கத்தில் குருசேத்திரத்தை (க்ஷேத்திரம்) உருவாக்குவது அவருக்குக் கட்டோடு பிடிக்காது. அவர் எந்தக் குழுவையும் சார்ந்திராமல் தான் தேர்ந்து தெளிந்த கொள்கைக் கோட்பாடுகளுக்காகத் தனித்து நின்றும் போராடியவர். ஒத்தக் கருத்தினரோடு அவர் சேர்ந்துழைக்கத் தயங்கியதில்லை. கருத்து மாறுபாடு கொண்டவர்களையும் அவர் மதித்தார். ஆனால் தன் கருத்தினை முன் வைக்கத் தயங்கவில்லை. வாதிடவும் அவர் அஞ்சியதில்லை. ஆனால் முடிவு தனக்குகந்ததாக இல்லாவிட்டாலும், பெரும்பான்மைக்கும் கட்டுப்பட்டு நடந்தார். விட்டுக் கொடுத்தும் செயல் பட்டார். இந்தப் பெருந்தன்மைதான் ஜவகர்லால் பெற்ற வெற்றியின் வேர்.

# நரியின் நாட்டாண்மை

எந்தவொரு போராட்டத்திலும் வெற்றி, அதை அடைந்தவரின் ஆற்றல் அடிப்படையில் மட்டும் கிட்டுவதில்லை. எதிராளியின் பலவீனமும் துணை நிற்பதுண்டு. இந்தியாவில் பிரிட்டன் காலூன்றக் காரணமாக இருந்தது வெள்ளையர்களின் தந்திரமும், பயிற்சி பெற்ற படைவலியும், வெடி மருந்துக் கருவிகளும் மட்டுமே அல்ல. இந்திய மண்ணைப் பாத்திகளாக்கிப் பங்கு போட்டுக் கொண்டு, மன்னர்களென மகுடம் தரித்துக் கொண்டிருந்தவர்களின் பண்பாட்டுக் குறைகளும் வெள்ளையரின் வெற்றிக்குப் படிகளாயின. போட்டிப் பொறாமை, காட்டிக் கொடுத்தல், கோழைத்தனம், சுயநலமெனும் பஞ்ச பாவப் பண்புகளுக்கு அடிமையானவர், ஆட்பட்டவர் அங்கீகாரமளித்தவர்களின் துணை கொண்டே ஆங்கிலேயர் இங்கே ஆட்சி பெற்றார்கள்.

ஐந்து நதிகள் நடக்கப் பாதை போட்டுக் கொடுத்து சீக்கியர்களை வாழ வைக்கும் பஞ்சாப் மாநிலம். அங்கே இரு குறுநில மன்னர்கள். ஆங்கிலேயரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்ட சிற்றரசுகள். ஒன்று நாபா, மற்றொன்று பாட்டியாலா, இந்த இரு குறுநில மன்னர்களும், மரபு பிறழாமல் பகைவர்களாயினர். முட்டிக் கொண்டனர். மோதிக் கொண்டனர். முடிவாக வெள்ளையர்களின் இலட்சியக் கனவை நினைவாக்கிட அவசரப் பட்டனர்.

பாட்டியாலா – நாபா கிடாச் சண்டையில் குருதிச் சுவையறிந்த குள்ளநரி அதுதான் அன்றைய வெள்ளை நரி தலையை நீட்டத் தவறவில்லை. இதன் விளைவு...? ஒரு கொடி இறங்கியது. ஒரு முடி பறிக்கப்பட்டது. நாபா மன்னர் (இ)ரிப்புத்துமன்சிங் பதவி நீக்கம் செய்யப்

பட்டார். கடலில் உருவாகும் புயல், மலையில் வளர்ந்த மரத்தைச் சாய்ப்பதைப் போல், ஆறாயிரம் மைல் களுக்கப்பாலிருந்து வந்தவர்கள், மண்ணுக்குரியவனை. மன்னன் நீ அல்ல என்றனர். பொறுத்துக் கொண்டது பாரத பூமி!

பறித்துக் கொண்ட நாபாவுக்கு நிர்வாகியாக ஆங்கிலேயர் அனுப்பிய ஜெ. வில்சன் ஜான்ஸ்டன் (I.C.S.) வந்து சேர்ந்தார். ஆங்கில ஆட்சியின் இந்த நடவடிக்கை சீக்கியர்களின் சினத்தைக் கிளறி விட்டது. எதிர்ப்பு எண்ணம் காலூன்றியது. ஜாதா என்றழைக்கப் பட்ட போராட்டக்காரர்களின் அணி திரண்டெழக் கண்ட ஆங்கில நிர்வாகம் காவலர்களை (Police) விட்டு அவர்களை அடித்து நொறுக்கியது. கூட்டங் கூட்டமாகப் பிடித்துச் சென்று கானகத்தில் கண்காணா இடத்தில் விட்டு வந்தனர்.

நாபா நிர்வாகத்தின் கொடூர நடவடிக்கைகளையும், சீக்கியர்களின் வீரம் மிக்க போராட்டத்தையும் விடுதலை இயக்கமான பேராயக் கட்சி கவனித்து வந்தது. நாபா போராட்ட வீரர்கள்பால் பேராயம் அனுதாபம் கொள்வதும், ஆதரவு தர நினைப்பதும் இயல்பு தானே! நாளேடுகள் தந்த செய்தி வழியே ஜவகர்லால் நேருவும் நாபா நடவடிக்கைகளைக் கவனித்து வந்தார்.

1923-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் மூன்றாம் வாரத்தில் டெல்லியில் அப்துல் கலாம் ஆசாத் தலைமையில் பேராயத்தின் சிறப்பு மாநாடு நடை பெற்றது. இந்த மாநாட்டிற்காக டெல்லி சென்றிருந்த ஜவகர்லால் அருகில் உள்ள நாபாவில் நடப்பதை நேரிற் கண்டு வர விரும்பினார். அப்போது இரண்டாவது (ஜாதா) போராட்டக் குழு செல்லப் போவதாகக் கேள்விப்பட்டார். ஒரு நாளையும் இதற்காக ஒதுக்கிக் கொண்டார். குஜராத் வித்யா பீட முதல்வராகப்

பல்லாண்டுகள் பணியாற்றிய ஏ.டி, கித்வானி, கே. சந்தானம் ஆகியோருடன் 'ஜெயிதோ' தொடர் வண்டி நிலையம் சென்றடைந்தார். அங்கிருந்து போராட்டக் குழுவைத் தொடர வேண்டுமென்பது அவர்கள் திட்டம். ஆனால் ஜெயிதோவில் காவல் துறைக் கண்காணிப் பாளர் இவர்கள் நாபாவிற்குள் நுழையக் கூடாதென்ற கட்டளையைக் காட்டினார். நாபா எல்லைக்குள் தான் அந்தத் தடை ஆணையே தரப்பட்டது.

ஜவகர்லால், தாங்கள் போராட வரவில்லை, போராட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்கமும் இல்லை என்று எடுத்துரைத்தும், அந்தக் காவல் துறை அதிகாரி கேட்க வில்லை. எனவே அடுத்த தொடர் வண்டி வரும் வரை தாங்கள் ஜெயிதோவில் தான் தங்கப் போவதாக ஜவகர்லால் கூறியதும் அவர்கள் கைது செய்யப் பட்டனர். கைது செய்த காவலர் அறிக்கையில் ஜவகர்லால் நேருவின் முகப் பொலிவில் தங்களை இழந்து, அவரது கண்களின் கவர்ச்சியைப் பற்றியும் குறிப்பெழுதியுள்ளனர். இந்த ஈர்ப்புச் சக்தி தான் நேருவை அண்ணலுக்கடுத்த மாபெரும் தலைவராக இந்திய மக்கள் ஏற்றுக் கொள்ளச் செய்தது.

கோழைகளுக்கேயுரிய கொடூர எண்ணம் வில்சன் ஜான்ஸ்டன் மூளையில் முளைவிட்டிருந்தது போலும். கோடானு கோடி மக்களின் இதயக் கோவிலில் குடியேறி ஆராதனைக்குரியவராக விளங்கிய ஜவகர்லாலையும், அவரது தோழர்களையும் கைவிலங்கிட்டு, சங்கிலியால் பிணைத்து வீதி வழி அழைத்துச் சென்றனர். நெருக்கடி காலத்தில் தமிழ் நாட்டில் சிறைக் கண்காணிப்பாளராக இருந்த ஒரு மனித மிருகம் இப்படித்தான் செயல் பட்டது.

ஜவகர்லாலின் சிறை வாழ்க்கையிலேயே மிக மோசமான அனுபவங்களை, நாபா சிறையில்தான்

அவர் பெற்றார். சிறைக்குள் வைக்கப்பட்டிருந்த நேரத்தில் கூட ஒரு நாள் முழுதும் கை விலங்கு அகற்றப்படாமல் வைக்கப்பட்டிருந்த கொடுமை அங்கு நிகழ்த்தப்பட்டது. வெற்றுத் தரையில் படுக்க வைக்கப்பட்டனர். சுகாதாரமற்ற சூழ்நிலை. எலிகளின் 'சடுகுடு' விளையாட்டு. இவை நாபா சிறையின் நிலை என்றால் விசாரணையோ வேதனையான விளையாட்டாக இருந்தது.

ஜவகர்லால் நேருவின் கைதுக்கான காரணங்களும் சட்ட விதிகளும் நகைப்பிற்கிடமளிப்பவைகளாக இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலான கொடுமை, நாபா நீதி மன்ற நடுவராக இருந்தவரின் பரிதாப நிலைதான். காவல்துறை அலுவலர்களின் மேலாதிக்கத்தின் கீழ் தான் அவர்கள் செயல்பட்டனர். சட்ட அறிவோ, சாதாரண கல்வியறிவோ கூட இல்லாதவர் நடுவராக வீற்றிருந்து ஜவகர்லால் மற்றும் அவருடைய தோழர்களை விசாரித்தார். அப்படிப்பட்ட நடுவரால் எப்படி ஜவகர்லாலின் சட்ட அறிவோடு கூடிய வினாக்களுக்கு விடை தர முடியும்? தவிப்பு தான் அவரது பதில்.

காவல் துறை அதிகாரிகளோ; அறிவிக்கப்படாத தடைச் சட்டத்தை மீறியதாகவும், பிடி ஆணை இல்லாத சதிக் குற்றத்தையும் சுமத்தியிருந்தனர். முரண்பாடுகளுக்கு முடிசூட்டுவதில் அவர்கள் அவசரம் காட்டினார்கள். தண்டனை கொடுக்க வேண்டுமென்பதற்காகவே பொய்யான குற்றச் சாட்டுக்களைப் புனைந்தனர். இதற்காக அவர்களுக்குப் பதினைந்து நாட்கள் தேவைப்பட்டது. உண்மைக்கு ஒரு நாள் போதும். பொய்களுக்கு அந்த அளவு போதுமா? இங்கும் எதிர் வழக்காட ஜவகர்லால் மறுத்து விட்டார். ஆனால், காவல்துறை மற்றும் நிர்வாகத்தின் புளுகு மூட்டைகளைப் பொது மக்களுக்கு அவிழ்த்துக் காட்ட வேண்டிய பொறுப்பு அவருக்

கிருந்தது. எனவே தான் அவர் விசாரணையின் போது சில வினாக்களைத் தொடுக்க வேண்டியிருந்தது.

விசாரணைக்கு முன்னரே தீர்ப்பு தயாரிக்கப்பட்டிருந்ததை, அது வழங்கப்பட்ட வேகத்தைக் கொண்டு உய்ந்துணர முடிந்தது. ஏனெனில் அவ்வளவு காலக் குறுக்கத்தில் நடுவரால் அவர் வழங்கிய தீர்ப்பைத் தயாரித்திருக்க முடியாது. தடை மீறல் மற்றும் சதிக் குற்றங்களுக்காக ஜவகர்லாலுக்கு இரண்டரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப் பட்டது.

நீதிமன்றம் விதித்த தண்டனையை நிர்வாகம் நிறுத்தி வைக்க ஆணை பிறப்பித்தது. அத்துடன் வேறோர் ஆணையையும் பிறப்பித்தது. ஜவகர்லால் இனி நிர்வாகத்தின் அனுமதி பெறாமல் நாபாவுக்குள் நுழையக் கூடாதென அந்த ஆணை கட்டுப்பாடு விதித்தது. இந்தக் கட்டுப்பாடு அவரோடு கைது செய்யப் பட்ட மற்றவர்களுக்கும் உண்டு. வழக்கு ஆவணங்களின் நகல் கோரினார் ஜவகர்லால். ஆனால் நேருவின் கோரிக்கையை நிர்வாகம் ஏற்க மறுத்து விட்டது. மூவரும் டில்லி திரும்பினார்கள். ஜவகர்லால் அலகாபாத் வந்து சேர்ந்தார். நாபா சிறை தந்த பரிசாக மூவரும் பித்தக்காய்ச்சலை [டைபாயிடு] கொண்டு வந்திருந்தனர், ஜவகர்லால் இந்தக் காய்ச்சலால் பல நாட்கள் படுக்கையிலிருக்க நேரிட்டது.

திரு கித்வானி மட்டில் மீண்டும் நாபா போராட்டக் குழுவோடு சென்றார். துப்பாக்கிச் சூட்டில் காய மடைந்தவர் நாபா எல்லைக்குள் விழுந்ததால் அவருக்கு உதவுவதற்காக எல்லையைத் தாண்டி கால் வைத்தார். காவலர்கள் அவரை இழுத்துச் சென்று நீண்ட நாட்கள் சிறை வைந்து விட்டனர். ஜவகர்லால் அவருக்காக மீண்டும் நாபா செல்ல விரும்பினார். ஆனால் நண்பர்கள்

தடுத்து விட்டனர். மனித நேயம் மிக்க ஜவகர்லால், தன் தோழனுக்காக மீண்டும் நாபா செல்லாதது குற்றமாகவே நெஞ்சை உறுத்தியது. ஆனால் ஜவகர்லாலின் தலையீடு எந்த விதத்திலும் திரு கித்வானிக்கு உதவியாக இருக்கப் போவதில்லை. மாறாக ஜவகர்லாலும் சிறைப்பட்டு துன்பப் பட்டிருக்க மட்டுமே அது உதவியிருக்கும்.

நாபா சிறையின் கொடுமை நினைவு ஜவகரின் நெஞ்சை விட்டகலவே இல்லை. மறக்க முடியாதவொரு அச்ச உணர்வை அந்தச் சிறை வாழ்க்கை அவர் உள்ளத்தில் ஊன்றி வைத்திருந்தது. திரு கித்வானிக்காக தான் நாபாவுக்குச் செல்லாததை அவர் ஒரு குறை யாகவே கருதினார். அறிவு சில நேரங்களில் வீரத்தை விழிக்க விடாத, தலாட்டாகி விடுவதாக அவர் நொந்து கொண்டார். "ஜவகர்லால் தனக்குத் தெரிந்தவர்கள் படும் இன்னலைக் கண்டால் பெரிதும் வருந்துவார். பிறர் துன்பம் கண்டு இரங்காதவரல்லர் அவர்" என்ற பூர்ணிமா பானர்ஜியின் கூற்று எவ்வளவு உண்மை!

வீரர்கள் நெஞ்சில்தான் ஈரம் இருக்கும். நேரு ஓர் வீரர். பிறருக்காக அவர் இதயம் கனத்து துண்டு. கால்கள் விரைந்த துண்டு. கரங்கள் நீண்ட துண்டு. ஆனால் கித்வானியைப் பொறுத்தவரை ஜவகர்லாலின் இயல்வே விதிவிலக்காகி விட்டது.

# நீர் மோதி நீர்...

நாபா சிறை வாசத்திற்குப் பின் சில ஆண்டுகள் கொள்கைச் சித்தாந்தக் குழப்பங்கள் அவரை குழப்பிக் கொண்டிருந்தன. மிதவாத, தீவிர வாதக் குழுச் சண்டையால் மனம் நொந்தலை பகுத்தறிவும்—சமயச் சித்தாந்தமும் சந்தித்துக் கொண்ட சங்கடங்கள். இவற்றுக்கிடையே உள்ளாட்சி நிர்வாகப் பொறுப்பு, இப்படி ஜவகர்லாலின் நாட்கள் கழிந்தன. 1921, 1922 மற்றும் 1923–ஆம் ஆண்டுகளில் அவர் அன்னிய ஆட்சியோடு நேரடியாக மோதும் வாய்ப்பும், நிலைமையும் ஏற்படவில்லை. ஆனால் அவர் தன் மனத்தோடும், இயக்கத்தாரோடும், கொள்கை நடை முறைகளோடும் போராடிக் கொண்டுதானிருந்தார்.

தந்தை தனயனாக ஒரே வீட்டில், தந்தையின் பராமரிப்பிலேயே வாழ்ந்த போதும், ஜவகர்லால் தந்தையின் 'சுயராஜ்ய' கட்சிக்கு எதிர்ப்பானவராகவே இருந்தார். கொள்கையின் முன் வேறெதுவும், எவரும் பெரிதாகத் தெரியவில்லை அவருக்கு. தன் மனம் ஏற்றுக் கொள்ளாத எதையும், புறக்காரணங்களுக்காக அவர் ஏற்றுக் கொண்டதே இல்லை. தனக்குச்சரி எனப்படும் கருத்தை எந்த அரங்கிலும் வெளியிடத்தயங்காதவர் அவர். ஏற்றுக் கொள்வதற்குமுன் எந்தக் கருத்தையும் அதனை வெளியிட்டவர் யார் எனப் பாராமல், விளக்கம் கோருவதில் சுணக்கம் காட்டியதில்லை. ஒரு பகுத்தறிவாளனுக்குரிய பண்புகள் அவரிடம் கூட்டல் குறைவின்றி குடிகொண்டிருந்தது.

1924–ஆம் ஆண்டு துவக்கத்தில், அண்ணல் காந்தியடிகளின் உடல் நலன் பாதிக்கப் பட்டதால் அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரைப்

பார்ப்பதாற்காகவும், ஒரு மாற்றம் வேண்டியும் பம்பாய் கடலோரத்தில் உள்ள 'ஜுகு' என்ற இடத்திற்கு மோதிலால், ஜவகர் உட்பட குடும்பத்தோடு சென்று தங்கினார். பள்ளி மாணவர்கள் எப்படி விடுமுறையை அனுபவிப்பார்களோ அப்படி ஜவகர்லால் அங்கு நாட்களை மகிழ்வோடும், மாற்றத் தோடும் கழித்தார். நீண்ட நாட்களுக்குப் பின் இதயத்திற்கு இதம் கிடைத்தது. இறுக்கத்திலிருந்து தளர்வு கிடைத்தது மனதுக்கு. நெருக்கம் இல்லாத நிம்மதியைத் துய்த்தார்.

மோதிலால் நேரு காந்தியடிகளைச் சந்தித்துத் தனது சுயராஜ்யக் கட்சியின் நிலையை விளக்கி அவருடைய அங்கீகாரத்தைப் பெற விழைந்தார். ஆனால் மோதிலாலின் முயற்சி முள்ளொடிந்த மணிப் பொறியாயிற்று. அவரது விளக்கம் எதுவும் காந்தியடிகளின் எண்ணத்தில் எள்ளளவு மாற்றத்தையும் ஏற்படுத்த வில்லை. இதயத்தைத் தொடவே இல்லை. மனமாற்றத்தை ஏற்படுத்த வல்ல மாமனிதர் காந்தியிடம், மோதிலாலின் முயற்சி படுத்து விட்டது. மோதிலால் முழுத்தோல்வியை முடிச்சுப் போட்டுக் கொண்டு திரும்பினார்.

தந்தை மோதிலாலின் முதுகில் தோல்வியைத் தூக்கி வைத்தனுப்பிய அண்ணல் காந்தியடிகள், தனயன் ஜவகர்லாலுக்கும் ஒரு பரிசைக் கொடுத்தனுப்பினார். காந்தியடிகளிடம், எதிர்காலத்திட்டம் என்ன என்பதை அறிந்து கொள்ள அவர் விரும்பினார். சில பிரச்சினைகளுக்கு அண்ணலின் தீர்வையும், தெளிவையும் அவர் எதிர்பார்த்தார். பாசனப் பயிருக்குக் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தவரும் மானாவாரிப் பயிரேற்றப் பருவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவரும் கூட்டுப் பண்ணை நடத்த முனைந்தது போலிருந்தது காந்தியடிகள்–ஜவகர்லால் இயக்க உணர்வுகள்–இது 1924–ஆம் ஆண்டின் உறவு நிலை.

பசுவுக்குக் கட்டுப்பட்ட பாயும் புலியாக இருந்தார் ஜவகர்லால். திட்டங்களையும், தெளிந்த நோக்கத்தையும் அண்ணலிடமிருந்து அறிந்துகொள்ள விரும்பிய ஜவகர் லாலுக்கு, காந்தியடிகளின் மறு மொழிகள் வெளிச்சம் வேண்டி வந்தவரை விடியும் வரை காத்திரு என்றாற் போலிருந்தது. ஏமாற்றத்தையே இதயத்திலேந்தி வந்தார் ஜவகர்லாலும்.

காந்தியடிகள் தோற்றத்தில் எளியவராகக் காணப் பட்டாலும், தனது முடிவுகளைப் பற்றி நிற்பதில் எஃகாகவே விளங்கினார். ஜவகர்லாலின் எதிர்பார்ப்பு களும், விழைவுகளும் அவரிடம் எடுபடவில்லை. காந்தி யடிகளை எவரும் தங்கள் முடிவுக்கும், முனைப்புக்கும் இணங்க வைக்கவோ, இழுத்து வரவோ முடியாதென் பதை ஏமாற்றத்துடன் எழுதி வைத்துக் கொண்டார் ஜவகர்லால்.

மத உணர்வு குறித்து மகமதலிக்கும், ஜவகர்லாலுக் கும் விவாதம் நடப்பதுண்டு. ஆனால் மத உணர்வில் மூழ்கி விட்டவர்களைச் சுண்டு விரலை நீட்டித்தூக்கிவிட முடியாதென்பதையும், வாத வழியால் திருப்பி விட, திருத் திவிட முடியாதென்பதையும் ஜவகர்லால் கண்டு கொண் டார். அதிலும் மகமதியர்களை மதஉணர்விலிருந்து யாரா லும் நகர்த்திக் காட்ட முடியாதென்பதையும் அவர் புரிந்து கொண்டார். எனவே மகமதலியோடு, மதம் குறித்து வாதிடுவதை அறவே மறந்து விட்டார். ஆனால் மகமதலியோ வலிய வந்து மதம் குறித்து ஜவகர்லால் நேருவிடம் பேசினார். "தூய உள்ளத்துடன் யார் குரானைப்படித்தாலும், அவர் அதன் உண்மையை உணர்வது திண்ணம். காந்தியடிகள் அதனைக் கருத்து டன் படித்திருக்கிறார் என்பதை நான் அறிவேன். எனவேதான் அவர் இசுலாத்தின் உண்மையை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் தற்பெருமையின் காரணமாக

அவர் அதை வெளிப்படையாகச் சொல்லாதிருக்கிறார்'' என்று அலி நேருவிடம் ஒரு முறை கூறியுள்ளார்.

அண்ணலென்றும், அடிகளார் என்றும் அடைமொழி கொடுத்து சிறப்பாகச் அழைக்கப்பட்ட காந்தியடிகளுக்கே தற்பெருமை என்ற தவிர்க்க வேண்டிய எண்ணம் இருந்ததாக அவர் காலத்தில் அவரோடு பழகியவரே கருத நேர்ந்ததும் கவனிக்கத் தக்கது. மகமதலியின் இந்தக் கூற்றை ஜவகர்லால் தனது உள்ளத்தின் ஒரு மூலையில் போட்டு வைத்தார்.

உடும்புக்கும் பிடி தளரும்என்பதற்குச் சான்று கூறும் நிகழ்ச்சிகளையும் நேரு கண்டார். அகமதாபாத்தில் நடைபெற்ற அனைத்திந்திய பேராயக் குழு கூட்டத்தில் வாக்குரிமை மற்றும் உறுப்பினர் சேர்ப்பது பற்றிய விதிகளில் சில அடிப்படை மாறுதல் செய்ய வேண்டுமெனக் காந்தியடிகள் விரும்பினார்கள். பேராயத்தின் நோக்கமான நாட்டு விடுதலையை அமைதி வழியில் அடைய வேண்டுமென்பதை உறுப்பினர்கள், ஒப்புக் கொள்ள வேண்டும். இதனை ஏற்றுக் கொண்டவர்கள் 'நான்கணா' (இருபத்தைத்து காசுகள்) செலுத்தி உறுப்பினராகலாமென்றிருந்த விதிக்கு காந்தியடிகள் திருத்தத் தீர்மானம் கொண்டு வந்தார். காசு கொடுத்து உறுப்பினராவதை மாற்ற வேண்டுமென்றார் அவர். காசுக்குப் பதிலாக, ஒரு குறிப்பிட்ட அளவு தானே நூற்ற நூலைக் கொடுக்க வேண்டுமென்றது காந்தியடிகளின் தீர்மானம்.

காந்தியடிகளின் இந்தத் தீர்மானம் பேராயத்தைப் பலவீனப்படுத்திவிடும் என்று பலர் கருதினார்கள். ஜவகர்லால் தன் இயல்புக்கேற்றபடி, அடிப்படை விதியில் மாற்றம் செய்ய செயற்குழுவுக்கு அதிகாரமில்லை என்ற கருத்துக் கொண்டவராக இருந்தார். காந்தியடிகளோ தன் நோக்கத்திற்குக் குறுக்கே நிற்கும் இயக்க விதிகளைப்

பற்றிக் கவலைப் படாதவர். இப்பொழுதும் அவர் கவலைப்படவில்லை. அண்ணலின் இந்த அணுகுமுறை ஒரு அத்து மீறலென ஜவகர்லால் கருதினார். உணர்ச்சி வயப்படுபவரும், சினங்கொள்ளும் இயல்பினருமான ஜவகர்லால் தனது செயலர் பதவியைத் துறக்க முடிவு செய்து, பதவி விலகல் கடிதத்தையும் கொடுத்து விட்டார். அண்ணலின் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. முடிவில் தனது தனித் தன்மைக்குள்ள சக்தியை வெளிப்படுத்தி விட்டு, எதிர்ப்பின் பின் விளைவு களையும் சீர் தூக்கிப் பார்த்து தனது தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். இதனை அண்ணலிடம் ஏற்பட்ட மகத்தான மனமாற்றமென ஜவகர்லால் கருதி னார். தீமானம் திரும்பத் பெறப்பட்டதால் ஜவகர்லால் தனது பதவி விலகலை வலியுறுத்தவில்லை.

இந்தக் கால கட்டத்தில்தான் காந்தியடிகளுக்கும், மோதிலால் நேருவுக்கும் அரசியல் நடவடிக்கைகளில் கருத்து வேற்றுமை முற்றிப் பழுத்திருந்தது. ஆனால் தனிப்பட்ட முறையில், ஒருவர் பாலொருவர் உள்ளத்தில் பரிவும் பாசமும் கொண்டிருந்தனர். தமிழகத்தில் கொள்கை வேறுபட்டு இரு முனைகளாக நீரும் நெருப்பு மாக தந்தை பெரியாரவர்களும், மூதறிஞர் இராஜாஜி அவர்களும் எப்படி அகவுணர்வில் அன்பர்களாகவும், நண்பர்களாகவும் விளங்கினார்களோ, அப்படி அண்ணலும் மோதிலாலும் விளங்கினார்கள். கருத்து மாறு பட்டார்களே யொழிய இருவரும் இயக்கம் மாற வில்லை.

மார்க்கமும் நோக்கமும் தெளிவில்லாததாக இருந் தால் கொள்கைப் பயணம் உவப்பானதாகவோ, ஊக்க மளிப்பதாகவோ இருக்க முடியாதே! பலனுக்காக காத் திருக்கலாம் எனபது காந்தியடிகளின் கொள்கை. திட்ட மிட்டு முன்னேறி வெற்றிக்கனியை பறிக்க வேண்டு மென்பது ஜவகர்லால் நேருவின் செயல் திட்டம்.

பேராயத்தில் பிணக்குகள் தழைத்தும், தலையெடுத்தும் விளங்கிய காலம் அது. இதனால் வெறுப்புற்ற நிலையிலிருந்தார் ஜவகர்லால்.

*1924*–ஆம் ஆண்டிறுதியில், காந்தியடிகளின் தலைமையில் பெல்காமில் பேராயம் கூடியது. காந்தியடிகளின் தலைமையுரையைக் கேட்ட ஜவகர்லால், அவரது உரையை சர்க்கரை போடாத குளம்பியாக (காபி)க் கருதினார். இந்த நிலையில் காந்தியடிகள் ஜவகர்லாலை மீண்டும் பேராயத்தின் செயலாளராகத் தேர்வு செய்ய வேண்டுமென விரும்பினார்; ஆனால் ஜவகர்லால் நேருவுக்கோ செயலாளர் பொறுப்பில் நீடிக்க விருப்பமில்லை. ஆயினும் காந்தியடிகளின் விருப்பமே நிறைவேறியது.

ஜவகர்லால் நேரு தன் நாட்டு மக்களின் துயர் நிலையை மாற்றுவதற்கு வேகமாகப் பணியாற்ற வேண்டுமென்ற மன உந்துதலோடிருந்தார். எனவே அண்ணலின் பொறுமையையும் அளந்தளந்து எடுத்து வைத்த அடியின் வேகத்தையும் அவரால் பொறுத்துக் கொள்ள முடியாமற் போனது. எனினும் அண்ணல் காந்தியடிகளின் ஆற்றலை மதிக்காதவரோ, மறுத்தவரோ அல்ல. அண்ணலின் தலைமையைக் கூட அவர் வெறுக்கவில்லை.

"ஜவகர்லால் நேரு, காந்தியடிகளிடம் கொண்டுள்ள விசுவாசம் உயர்ந்த மன எழுச்சியின் பாற்பட்டதே. ஆனால் பெரும்பாலான உணர்ச்சியாளர்களைப் போல் இல்லாமல், நேரு தன்னுடைய மன எழுச்சிகளுக்குப் பகுத்தறிவு சாணை தீட்டி விடுகிறார். இந்த இடத்தில் தான் அவர் வேறு மாதிரி மனிதராகப் போய் விடுகிறார். தன் மனத் துடிப்பின் வசப்பட்டு, தான் செய்யும் காரியங்களுக்கெல்லாம் காரணகாரிய ஒழுங்கைக் கற்பித்து விடுகிறார். அதன் பின் அவரை அசைப்பது முடியாமற் போய் விடுகிறது." என்று எப். ஆர். மொரேஸ் என்பவர் காந்தியடிகள் ஜவகர்லால் உள்ள உறவைப் பற்றிக் கருத்து தெரிவித்தது முற்றிலும் சரியானதே

# மதமாகிய மதம்

காய்கனிகளைக் கொடுக்கும் மரங்களை விட வாடிப் போகும் வண்ண மலர்களைப் பற்றியே நாம் அதிகமாக அக்கறையோடு பேசுகிறோம். உபயோகத்தையும், உள்ளீட்டையும் ஒதுக்கி வைத்து விட்டு, புறத் தோற்றத்தின் பொலிவிலேயே மனதை இழந்து நின்று விடுகின்றோம். பொதுவாக மக்களை நல்ல பண்புகளை விட, நாலாந்தரப் பண்புகளே விரைந்தேகிப் பற்றிக் கொள்கின்றன.

அன்னிய ஆட்சியை அகற்றி, விடுதலை என்னும் விளைச்சல் அறுவடைக்கே ஆயத்தப் படுத்த வேண்டிய அரிய சக்தியை - நேரத்தை, ஒற்றுமை என்னும் உரத்தை குறுகிய மன மதவாதிகள் வெறும் குப்பையாக்கி விட்டார்கள். அரசியல் அங்கிக்குள் மதப் புண்ணை மறைத்துக் கொண்டிருந்தவர்கள், உபயோகமான ஒற்றுமையை உருக்குலைக்கத் துணிந்தார்கள். இயக்கத்தைப் பல வீனப்படுத்துவதற்குப் பஞ்சமா பாதகங்களையும் செய்யத் தயங்காத வெள்ளையர்கள் ஆட்சி, மறைமுகமாக இந்து முசுலிம் ஒற்றுமையை கூறுபோட வேலை செய்தது. நெசவில் குறுக்கு நெடுக்கு நூலிழையாக விளங்கிய இந்துக்களும் முசுலிம்களும் ஒற்றுமையாக இருப்பது தங்கள் நலனுக்குகந்ததல்ல என்பதை வெள்ளையர் தெரிந்து கொண்டார்கள். போராட்ட சிந்தனையைச் சிதறடித்து, மதச் சிச்கலை ஏற்படுத்த தீவிரமாகத் திட்டமிட்டது அன்றைய ஆட்சி.

குறுகிய ஆதாயங்களைக் குறிக்கோளாகக் கொண்ட மதக் கலவரங்களுக்குப் பல்லவி பாடியவர்கள் முசுலிம்கள், அனுபல்லவியை சீக்கியர்கள் இசைக்க, சரணத்தை

இந்துக்கள் பாடி முடித்தார்கள். கலவரம் செய்யக் காரணங்களைத் தேடிச் கொண்டிருந்தார்கள் சிலர். காலத்துக்காக காத்துக் கொண்டிருந்தார்கள் பலர். முடிவில் காலங்காலமாகக் கண்டும் பழகியும் வந்த காரணங்களையே கருவியாக்கிக் கொள்ளவும் தலைப் பட்டார்கள். அன்பும் நட்புணர்வும் அகத்திலிருந்து இறக்கப்பட்டன. முரட்டுத்தனம் முடி சூட்டிக் கொண் டது. கத்தியும், கம்பும் காலாட் படைகளாயின. புரவி நடக்காமலேயே புழுதி கிளம்பியது.

தீ வைப்புத் தீபாராதனைகளும், கற்பழிப்புக் கட்டளை நிறைவேற்றங்களும், கொலைச் சடங்குகளும் தாராளமாக நடந்தேறின. ஆண்டவன் பெயரால், அல்லாவின் பெயரால், அடங்காப்பிடாரித்தனங்கள் ஆட்சி புரிந்தன. இந்தியாவின் வடபகுதியில், 1924 செப்டம்பர் திங்களில் வெடித்துப் பரவிய மதக் கலவரத் தினால்– நல்லோர் நெஞ்சம் நெகிழ்ந்தனர். பதைத்தனர். பயந்தனர், பரிதாபப் பட்டனர். காட்டுத் தீயை நாட்டுக்குள் கண்டு அணைக்க முடியாமல் அல்ல லுற்றனர்.

ஒற்றுமையை உணர்வாக வளர்க்காமல், உதட்டில் தடவிய தேனாக நினைத்தவர்கள், நாவால் தடவியே கரைத்து விட்டார்கள். எளிதாக எண்ணியவர்கள் எச்சில் துப்பியே இணக்கத்தை மூழ்கடித்து விட்டார்கள். அரசியல்வாதிகள் இந்தக் கலவரத்தைத் தங்கள் நோக்கத்திற்குத் தக்கபடி பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதை ஜவகர்லால் அறிந்து வருந்தினார். வட மேற்கு மாகாணத்திலுள்ள கோகாட் என்ற பகுதியில் மட்டில் நூற்றைம்பத்தைந்து பேர்கள் கொல்லப்பட்டிருக் கிறார்கள். இந்து மதத்தினர் அனைவருமே அச்சத்தால் இடம் பெயர்ந்த துயரம் நிகழ்ந்தது. நிலைமை நினைத்துப் பார்க்க முடியாத வேகத்தில் மோசமடைந்தது. காந்தி

யடிகள் தனது கடைசி ஆயுதத்தை எடுக்க வேண்டியதை கட்டாயமாக்கியது. மூன்று வார உண்ணா நோன்பை அண்ணல் மேற்கொண்டார்கள்.

"சாதி பேதங்கள் அற்றேனடி — இந்தச்
சாத்திர மனத்தையும் விட்டேண்டி
போத மயக்கம் தொலைந்தேண்டி — அன்பு
பொருந்தக் கும்மி அடியுங்கடி"

—என்ற கோபாலகிருஷ்ண பாரதியின் பாடல் கருத்தை மக்கள் மனம் முழுமையாக ஏற்பது என்றோ என்றேங்கினர் சான்றோர்.

ஆண்டிறுதியில் பேராயத் தலைவர் மகமது அலி டில்லியில் ஒற்றுமை மாநாட்டைக் கூட்டினார். அதில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. உருக்கமான உரைகள் நிகழ்த்தப் பட்டன. ஆனால், மத வாதத்தை மண்டையோடுகளிடையே நிகழ்த்தியவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வில்லையே !

தழையுரத்திற்காக அடி மரத்தை மட்டில் வெட்டாமல் மற்ற கிளைகளை வெட்டியது போலாயிற்று ஒற்றுமை மாநாடு. அடி மரமிருந்தால் கிளைகள் துளிர்விடாமலா போய் விடும்? மாநாட்டிற்கு வராத மதவாதிகள், ஒன்றுமைக்கு ஊறு விளைவிக்க மாட்டார்கள் என்பதற்கு உறுதி மொழி தருபவர் யார்? வேற்றுமைகளை விதைப்பவர்களும், ஒற்றுமையை அறுப்பவர்களும் வெளியிலிருக்கும் போது, ஒத்த கருத்தினரை உள்ளடக்கிய ஒற்றுமை மாநாடு உரிய பலனைக் கொடுக்குமா?

மாநாடு முடிந்து அவரவர் வீடு போய்ச் சேரும் முன்னரே கலவரங்கள் துளிர்க்கத் தொடங்கின. அலகாபாத்திலேயே மதக் கலவரம் மறு பிறப்பெடுத்தது. கலவரத் தீயின் நாக்கு துவக்க நிலையிலேயே துண்டிக்கப்பட்டதால், தொடர வில்லை. கலவரம் வரும்

முன் தடுப்பதும், வளரும் முன் ஒடுக்குவதுமே கலவரங் களைக் கட்டுப் படுத்த காவல்துறை காண வேண்டிய நடவடிக்கை முயற்சியின் நடை முறை இலக்கணமாகும்.

வெப்பத்தால் உலோகங்கள் தான் விரிவடையும். வெடி வைத்தாலும் பாறையைப் பிளக்கத்தான் முடியுமே யன்றி தளரச் செய்ய முடியாது. மதவெறிக் கலவரங் களை, மனம் பக்குவப் படாதவர்களின் மரியாதைச் சின்னத்தை, மறைக்கத் தான் முடிந்ததே தவிர மாற்ற முடியவில்லை. சாம்பலைப் போர்த்திக் கொண்ட சோம்பல் நெருப்பாகக் கலவரங்கள் கட்டுப் பட்டிருந்தன.

அலகாபாத்தின் ஆர்ப்பாட்ட விழாவான ராம்லீலா கூட, இந்துக்களின் எதிர்ப்பின் அடையாளமாக, வெறுப்பின் விளைவாக நடைபெற வில்லை. ஆம் நடத்தப்பட வில்லை. நாட்டில் ஜவகர்லாலின் நெஞ்சில் பளுவை ஏற்றிக் கொண்டிருந்தது. "மதம் என்று எதை நாம் பொதுவாக கருதுகிறோமோ, அது அவருக்குச் சிரத்தையூட்டுவதில்லை. அவர் கோயிலுக்குச் செல்பவ ரல்லர். பிரார்த்தனை செய்பவரல்லர். இராம நாமத்தை வணங்குபவரல்லர். பொது மேடையில் பேசும் போது எல்லாம்வல்ல இறைவன்; தெய்வ இச்சை; குட்டிப் படைகளான தேவதைகள் ஆகியவைகளைப் பற்றிக் குறிப்பிடுவது அவருக்குப் பிடிக்காது. சாதுத் தன்மை, பக்தி இவைகளைப் பற்றியும், சாது, பக்தர் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவரிடத்திலும் அவருக்கு அக்கறை கிடையாது.'' என்று ஜவகர்லால் நேருவை நன்கறிந்த திரு கே.என். கட்ஜு கருத்து தெரிவித்தபடிதான் ஜவகர் தன் வாழ் நாளில் நடந்து கொண்டிருக்கின்றார்.

"கோயிலாவ தேதடா? குளங்க லாவதேதடா?
கோயிலும், குளங்களும் கும்பிடும் குலாமாரே !

கோயிலும் மனத்துளே, குளங்களும் மனத்துளே!
ஆவது மழிவது மில்லை யில்லை இல்லையே''

—என்னும் சித்தர் சிவவாக்கியார் செப்பு மொழியைச் சிந்தையில் தேக்கிச் சீர்தூக்கிப் பார்த்தால் கலவரமேது? கை கலப்பு தான் ஏது?

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இராம ஜென்ம பூமி, பாபர் மசூதி பிரச்சினை இந்தியாவின் இரு பெரும் இனத்தை ஆட்டிப் படைத்து அச்சுறுத்துமா? அன்பையும், நட்பையும் மதமல்லவா மரிக்கச் செய்து விடுகிறது? இதிலிருந்து விடுதலை எப்போது?

# அமைதி எங்கே?

அரசியலை மதக்கலவர நோய்த் தாக்கிய கால கட்டம். அறவாணர், அமைதி விழைவோர், நாட்டு நலன் விரும்பிகள், பண்பாளர் மனமெலாம் காயப்பட்டுக் கிடந்த கருப்பு ஆண்டு தான் 1924. கடமை தவறாத காலம் காத்திராமல் கடந்து கொண்டிருந்தது. கமலா நேருவின் உடல் நலப் பாதிப்பை முடுக்கி விட்டவாறு இலையுதிர் காலம் எட்டிப் பார்த்தது. அவரை இலட்சுமணபுரி மருத்துவ மனையில் படுக்க வைத் திருந்தது நோய். ஜவகர்லால் கவலை, துன்பம், கடமைப் பொறுப்பெனும் அச்சு நாட்டோடு போரிட்டுக் கொண் டிருந்தார். முற்றுப் புள்ளிகளே முக்கோணப் புள்ளி களானால் ஆயுதமாகி விடுவதைப் போல், நேரு மன நோயாளியைப் போல் நடமாடிக் கொண்டிருந்தார்

நோய்ப் படுக்கையில் மனைவி, இயக்கமோ கான்பூர் மாநாட்டு ஏற்பாட்டில். இவரோ செயலாளர். மனைவியின் உடல் நிலை கருதி உடனிருந்து உதவுவதா? மாநாட்டு வேலையை முனைந்து செய்வதா? எந்த விழியையும் மூடிக் கொள்ள விரும்பவில்லை ஜவகர்லால். ஓய்வின்றி, உறக்கமின்றிக் கடமைக்கும் பாசத்திற்கும் ஈடு கொடுத்துக் கொண்டிருந்தார். பொதுத் தொண்டைப் புறக்கணிக்காத, பொறுப்பான குடும்பத்துப் பிள்ளை யல்லவா அவர்.

கமலாவின் நிலையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டு மானால், அவரை வெளிநாட்டுக்கழைத்துச் செல்ல வேண்டுமென மருத்துவர்கள் கூறி விட்டார்கள். நோய் மாற்றச் சூழலுடையது சுவிட்சர்லாந்து நாடு. அந்த நாட்டுக்கே கமலாவை அழைத்துச் செல்ல முடிவு செய் தார் ஜவகர்லால். மனைவியையும், மகளையும் அழைத்துக் கொண்டு சுவிட்சர்லாந்துக்குப் பயணமா

னார். இவர்களோடு தங்கை விஜயலட்சுமியும், அவர் கணவர் பண்டிட்டும் சேர்ந்து கொண்டனர். ஒரு மாமாங்க காலத்திற்குப் பின் மீண்டும் ஐரோப்பாவை மிதித்தது ஜவகர்லாலின் மனப் புண்ணுக்கு மருந்திட்டது போலிருந்தது.

சுவிட்சர்லாந்து, ஜெனிவா, மாண்டனா என்ற இடங்களில் மாறி மாறித் தங்கியிருந்த நேரு குடும்பத்தினர், திட்டமிட்ட காலத்தைப் போல் மும்மடங்குக் காலம் ஐரோப்பாவில் தங்கி விட்டனர். ஜவகர்லால் குடும்பம் ஜெனிவாவில் தங்கியிருந்த காலத்தில் மகள் இந்திராவை ஒரு சர்வதேச பள்ளியில் சேர்த்திருந்தார். அங்கே ஜவகர் லாலின் தலையாய பணி கமலாவை அருகிலிருந்து கவனித்துக் கொண்டதோடு, மகள் இந்திராவுக்குத் துணையாகப் பள்ளிக்குச் சென்று வருவதும், செய்தி ஏடுகளைப் படித்து உலக நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்வதுந் தான். படிப்பதிலிருந்து எந்த நிலையும் அவரைப் பிரிக்க முடிய வில்லை.

ஜவகர்லால் வெளி நாட்டில் தங்கியிருந்த போது, பல அரசியல், தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்தித்தார். அவர் சந்தித்தவர்களில் ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும், சில இந்தியர்களும் அடங்குவர். பயனுள்ள சந்திப்பாக திருவாளர்கள் வீரேந்திரநாத் சட்டோபத்தியாயா; எம்.என். ராய், ரோமெயின் ரோலண்டு, எர்னெஸ்ட்டாலர் ரோஜர் பால்டுவின் ஆகியோரின் சந்திப்பை நினைத்தார். இவர்களுடைய சந்திப்பால் ஜவகர்லாலுக்கு உலக இயக்கங்களை அறிந்து கொள்ளவும் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பு கிடைத்தது.

உலக நடவடிக்கைகளை ஊன்றிக் கவனித்தவர் ஜவகர். படிப்பார்வத்தோடு. செயல் வேட்கையும் கொண்டவர். வெறும் பேச்சு; விவாதங்களைவிட, ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையே அவர் விரும்பினார்.

வானத்துப் பறவையைப் போல், விரிந்த உலகை உயரத்திலிருந்தே பார்த்தார். அவர் பார்வை பரந்தது. நோக்கம் உயர்வானது. செயல் விரைவானது. வெளிநாட்டின் பல துறை வல்லுனர்களோடும், அரசியல் தலைவர்களோடும் அவருக்கேற்பட்டிருந்த தொடர்பு; ஐரோப்பிய வாழ்க்கை; படித்தறிந்த நூல்கள் இவையெல்லாம் ஜவகர்லாலுக்கு மற்ற இந்தியத் தலைவர்களில் பெரும் பான்மையினருக்கில்லாத தனிச்சிறப்பாக அணி சேர்த்திருந்தன.

அநீதி, உலகத்தின் எந்தப்பகுதியில் நடந்தாலும், அதையறிந்தவுடன் அவர் மனம் குமுறும். பரிகாரம் தேட நெஞ்சம் பதறும். நியாயமான போராட்டங்களை எப்போதுமே அவர் ஆதரித்து வந்தார். இந்த உணர்வால் அவர் பொதுவுடைமைச் சிந்தனையாளராகவே விளங்கினார். உண்மையில் அவர் பொதுவுடைமைக் கொள்கையை ஏற்றுக் கொண்டவரா என்றால் அதுவுமில்லை. அவர் சமநீதிச் சிந்தனையாளர். உலக நடவடிக்கைகளைக் கவிஞன் கண் கொண்டு பார்த்தவர். அவர் பெரும் எண்ணிக்கையினருக்குப் புரியாத, தெரியாத பரிமானங்களை, பிரச்சினைகளின் ஆழ அகலத்தை அவரால் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.

பெர்லினில் அவர் தங்கியிருந்த நேரம். பிரசல்சு நகரத்தில் ஒடுக்கப்பட்ட நாட்டவர்களின் மாநாடு நடக்கப் போவதாக அறிந்தார். இந்தியாவும் ஒடுக்கப்பட்ட நாடுகளில் ஒன்றுதானே? அதிலும் மிகப் பெரிய நாடாயிற்றே! இந்திய நாட்டின் விடுதலை இயக்கமான பேராயத்தின் சார்பில் மாநாட்டில் பங்கேற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்தியத் தலைவர்களுக்கு அவர் மடலெழுதினார். விளைவு, பேராயம் ஜவகர்லால் நேருவையே தனது பிரதிநிதியாக நியமனம் செய்து அறிவித்தது. அவர் அந்த மாநாட்டில் இந்தியாவின் சார்பில் கலந்து கெண்டார்.

ஏகாதிபத்திய நாடுகளின் பிடியிலகப்பட்ட உலக நாடுகளின் பிரதிநிதிகள் பலர் இந்த மாநாட்டுக்கு வந்திருந்தனர். ஆசிய ஆப்ரிக்க நாட்டின் பிரதிநிதிகள் ஏராளமானோர் இடம் பெற்றனர். விடுதலை என்ற பொது நோக்கத்தால் ஒன்று பட்டு, செயல் திட்டங்களை வகுக்கவும், போராட்ட வழி முறைகளை ஆயவும் அவர்கள் ஆர்வங் கொண்டிருந்தனர். இந்த எண்ணத்திற்கும், எழுச்சிக்கும் மாறான நடவடிக்கைகளில் இங்கிலாந்து• பிரான்சு, மற்றும் இத்தாலி நாட்டு அரசுகள் தங்கள் மூக்கை நீட்டித் தடைகளை ஏற்படுத்த முயன்றன. ஆனால் செயல் வேகம்மிக்க தீவிர வாதிகளான இடது சாரிகளின் ஒத்துழைப்போடு தடைகளை தாண்டி ஒடுக்கப்பட்ட நாட்டவரின் மாநாடு 1927–பிப்ரவரியில் கூடியது. இந்த மாநாட்டிற்கு ஆங்கிலத் தொழிலாளர் தலைவர் ஜார்ஜ் லான்ஸ்பரி தலைமை தாங்கினார். இந்த மாநாட்டில் பொதுவுடைமைத் தோழர்களின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது.

இந்த மாநாடு 'ஏகாதிபத்திய எதிர்ப்புச் சங்கம், என்ற நிரந்தர அமைப்பை உருவாக்கியது. இந்த சங்கத்தின் தொடக்க காலப் பொறுப்பாளர்களாகவும், புரவலர்களாகவும் இருந்தவர்களில் முதன்மையானவர்கள் ஜார்ஜ் லான்சுபரி, ஈன்ஸ்டீன், திருமதி சன்யட்சன்• ரோமெயின் ரோலண்டு ஆகியோர். இவர்களில் முதலிருவரும் பின்னர் இச்சங்கத்திலிருந்து கொள்கை காரணமாக விலகி விட்டனர்.

ஏகாதிபத்திய நாடுகளின் ஆணவம் நிறைந்த உள்ளத்தில், இந்த எதிர்ப்புச்சங்கம் ஒருவித அச்சத்தை உருவாக்கியது. ஜவகர்லால் இச்சங்க நடவடிக்கைகளில் இயல்புக்கேற்ப பங்கேற்றுச் சுறுசுறுப்பாகச் செயலாற்றினார். கோலோன் நகரில் நடைபெற்ற இச்சங்கக் கூட்டத்திற்கு ஜவகர்லால் சென்றிருந்தார். இவ்வளவு

ஈடுபாட்டோடு சங்கத்திலிருந்தவரை, காரணம் கேட்காம லேயே அவசரப்பட்டு நீக்கிவிட்டனர். இந்த நீக்கத்திற்கு அவர்கள் கண்டெடுத்த காரணம்...? பிரிட்டிஷ் அரசும், பேராயக் கட்சியும் செய்து கொண்ட உடன் பாட்டு நடவடிக்கையில் ஜவகர்லாலும் பங்கு கொண்டா ரென்பது தான் அவர்கள் கண்ட காரணம் - குற்றம். பேராயத்திற்குத்தான் அவர் முதன்மை தரமுடியுமே தவிர எங்கோ இருந்த இந்தச் சங்கத்திற்கா முதன்மை தர முடியும்?

மோதிலாலும் ஐரோப்பாவுக்கு வந்து சேர்ந்தார். ஜவகர்லாலை அவர் வெனிஸ் நகரத்தில் சந்தித்தார். அங்கிருந்து குடும்பத்தினர் அனைவரும் நவம்பர் மாதம் மாஸ்கோ சென்றனர். இந்தப் பயணத்தின் போதுதான் தந்தையும், தனயனும் சோவியத் குடியரசு தலைவரைச் சந்தித்தனர். அவருடைய குடியிருப்பு மிகக் சிறியதாகவும் எளிமையாகவுமிருந்தது. அவர் ஓர் சாதாரணக் குடி மகனைப் போலவே வாழ்ந்தார். அந்த எளிமை இருவர் மனத்திலும் நீங்காத நினைவைப் பதிவு செய்தது. சோவி யத் நாட்டின் முன்னேற்ற நடவடிக்கைகள். ஜவகர்லாலை மிகவும் ஈர்த்தன. மக்களின் முயற்சியையும்-உழைப் பையும் அவர் வியப்போடு நோக்கினார்-எனினும் பொது வுடைமைக் கொள்கையின்பால் தன்னை இழந்து விட்டதாகவோ, அல்லது கொள்கைக்கு இசைந்து விட்ட தாகவோ கூறிவிடமுடியாது.

1928-ஆம் ஆண்டு, இந்தியாவில் அரசியல்வாதி களிடத்தில் மட்டுமில்லாமல், தொழிலாளர்கள், விவசாயி கள், இளைஞர்கள் ஆகிய எல்லாத் தரப்பினர்களிடத்தி லும் விழிப்புணர்ச்சியையும், வேகத்தையும் தோற்று வித்திருந்தது. இதற்கு முந்திய ஆண்டில் சென்னையில் நடைபெற்ற பேராயத்திற்கு, சோவியத் நாட்டிலிருந்து புறப்பட்ட ஜவகர்லால் கொழும்பு வழியாகச்

சென்னைக்கு வந்து மாநாட்டில் கலந்து கொண்டார். ஜவர்கலாலும் அகச்சுமை குறைந்தவராகவே காணப் பட்டார். கமலாவின் உடல் நிலை தேறியிருந்தது முதற் காரணம். வெளிநாட்டில் கிடைத்த அனுபவங்கள், சோவியத் நாட்டுப் பயணத்தால் ஏற்பட்ட சமநீதிச் சிந்தனைகள் ஆகியவற்றால் அவர் தெளிவாகவும் தெம்பா கவும் இருந்தார்.

1917–ஆம் ஆண்டு, டிசம்பரில் நடைபெற்ற சென்னை மாநாட்டிற்கு, ஜவகர்லாலின் நண்பர் எம்.ஏ. அன்சாரி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். இந்த மாநாட்டில், ஜவகர்லால் கொண்டு வந்த 'முழு சுதந்திர' தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் பல முற்போக்குத் தீர்மனங்களும் இந்த மாநாட் டில் நிறைவேற்றப்பட்டன. சைமன் குழுவை வரவேற்கக் கூடாதென்ற தீர்மானமும் இந்த மாநாட்டில்தான் நிறை வேற்றப்பட்டது. இந்த நடவடிக்கைகளால் ஜவகர்லாலின் மன இறுக்கம் சற்றுத் தளர்ந்தது. ஆட்சிக்கு வந்த பின்னர் பேராயம் சமநீதி (Socialism) தீர்மானத்தை சென்னை ஆவடி பேராயததில்தான் நிறைவேற்றியது.

சென்னையில் பேராய மாநாடு நடைபெற்ற போது, காந்தியடிகள் உள்ளூரிலேயே இருந்தும் செயற்குழுவுக்கு வரவில்லை. தனது நண்பர் அன்சாரியின் விருப்பத்திற் கிணங்கி ஜவகர்லால் செயலாளர் பொறுப்பை மீண்டும் ஏற்றுக் கொண்டார். கொள்கை வழியில் காந்தியடிகளி டம் மாறுபட்டவர்களான சுயராஜ்யக் கட்சியினரின் கை ஓங்கியிருந்ததால் காந்தியடிகள் சற்று ஒதுங்கியிருந்தார். கருத்து வேறுபாடு காந்திகளையும் ஆட்டி வைக்கும் போலும்.

# குறிக்கோள் ஒன்றே ...

அன்றைய பேராயக் கட்சிக்கு அரசியல் குறிக்கோள் ஒன்று தானிருந்தது. சமூகப் பார்வையே அதற்கு அப்போது அவ்வளவு அவசியமெனப் படவில்லை. அந்த இயக்கத்தில் ஜவகர்லால் ஒருவர் தான் பல பக்கங்களிலும் பார்வையைத் திருப்பிய முதல்வர். விடுதலையை அடைந்தாலும், சமநீதி சமூக அமைப்பு ஏற்பட்டால் தான் மக்கள் வாழ்வில் மகத்தான மாறுதலையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்த முடியும் என்ற கருத்து அறிமுகத்தை முதன் முதலாகச் செய்தவரும் அவரே!

1928–ஆம் ஆண்டு பிப்ரவரியில் அனைத்துக் கட்சி மாநாடு கூட்டப்பட்டது. வகுப்பு ஒற்றுமைக்கு இதனால் வழிகாண முடியவில்லை எனவே இந்த மாநாடு பழுத்த கனியாகப் பலன்தராமல், வெம்பி விழுந்த பிஞ்சாகி விட்டது. எனவே அரசியலமைப்பை உருவாக்கவும், நாடெங்கும் காலரா நோய் போல் பரவியிருந்த வகுப்புப் பிணக்குகளுக்குத் தீர்வு காணவும் ஏதுவான வழிவகைகளை ஆய்ந்து அறிக்கைதர மோதிலால் நேரு தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டது. பேராயத்தின் செயலாளரென்ற முறையில் ஜவகர்லால் இந்தக் குழுவோடு இணைந்து செயல்பட வேண்டியதாயிற்று. ஆனால் ஜவகர்லாலுக்கோ இந்தக் குழு அமைக்கப்பட்டதன் அடிப்படை அரசியல் நோக்கமே உடன்பாடில்லாததாக இருந்தது

'முழு சுதந்திரம்' என்ற முடிவிலிருந்து வழுவி பிரிட்டனின் மேலாண்மைக் குட்பட்ட நாட்டதிகாரத்தையே (டொமினியன் அந்தஸ்து) இலட்சியமாகக் கொண்டு அரசியல் திட்டம் வகுக்க முடிவெடுத்ததை அவரால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. வகுப்பு வாதத்திற்கும்

இந்தக் குழுவால் தீர்வுகாண முடியவில்லை. எனினும் குழு கொடுத்த அறிக்கையை ஆய்வதற்காக அனைத்துக் கட்சி மாநாடு இலட்சுமண புரியில் கூட்டப் பட்டது. "டொமினியன் அந்தஸ்து" — முழுச்சுதந்திர மோதல் நிகழத் தவறவில்லை. முடிவாக 'முழுச் சுதந்திரம்' மாநாட்டைப் புறக்கணிக்கும் ஆயுதத்தைத் தூக்கிக் காட்டியது.

கொள்கை வழியில் தந்தையும் — தமையனும் எதிரெதிர் அணியிலிருந்தனர். ஜவகர்லால், சுபாஷ்சந்திர போஸ் போன்றவர்கள் ஒன்று சேர்ந்து அன்றே இந்திய சுதந்திரச் சங்கத்தை நிறுவினார்கள். இந்த நிலையில் பேராயத்தின் செயலாளராக நீடித்திருப்பதை முறையற்ற தாக ஜவகர்லால் கருதினார். எனவே சுதந்திரச் சங்கத் தைக் காரணம் காட்டி, தனது செயலர் பதவி விலகல் கடிதத்தை அனுப்பி வைத்தார். ஆனால் குழுவோ, பதவி விலகலை ஏற்க மறுத்து விட்டது. மாறாக ஜவகர்லாலும், சுபாஷ்சந்திரபோசும் சுதந்திர சங்கத்திலிருந்து கொண்டே செயல்பட அனுமதியும் வழங்கிவிட்டது.

தந்தை, தனயன் கொள்கை முரண்பாடு குடும்ப ஒற்றுமையைக் குலைத்து விடுமோ என்ற அச்ச உணர்வை அரும்பச் செய்வது. தவிர்க்க முடியாதது தான். கமலா இரண்டு நேருகளுக்கிடையே வெற்றிடம் ஏற்படாமலிருக்க விழிப்போடு செயல்பட்டார் உயர்ந்த பண்பாட்டோடு வளர்க்கப்பட்டவர்கள், வாழ்ந்தவர்கள். உலகியலறிவு முதிர்ச்சியும், பெருந்தன்மையும் கொண்ட நேரு குடும்பத்தின் பந்த பாசத்தை, கொள்கை மோதல் கள் கோடு போட்டுப் பிரித்து விடவில்லை. நீர் மோதி நீர் விலகாது என்பதைப் போல், கருத்து மோதல்களால் தந்தை தனயன் உறவு தளரவே இல்லை.

ஆண்டிறுதியில், பேராயத்தின் மாநாடு, மோதிலால் நேரு தலைமையில் கல்கத்தாவில் கூடியது. அவர்

தயாரித்த குடியேற்ற நாட்டுத் தகுதித் திட்டத்தை ஜவகர் லாலும், சுபாஷ் சந்திர போசும் எதிர்த்தனர். அண்ணல் காந்தியடிகள்தான் பொருளாய்வுக் குழுவில், இந்தத் தீர் மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி, மாநாட்டில் முன் மொழிந்தவர். ஆனால் இளைஞர்களான ஜவகர் லாலும், சுபாஷும், காந்தியடிகளின் தீர்மானத்திற்குத் திருத்தங்களைக் கொண்டு வந்தார்கள். இச்செயல் அண்ணலுக்கும், மற்றவர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. யார் எதிர்த்தென்ன ? அண்ணல் ஆதரித் தார், தீர்மானம் நிறைவேறிவிட்டது.

பேறு காலத்தில் பெண்களிடம் பரிவு காட்டுவது போல, தேர்தல் காலத்தில் ஆட்சிக்கு மக்களிடம் அதிக அக்கறை ஏற்பட்டுவிடும். இது எல்லா ஆட்சிக்கும் எல்லாக் காலத்திற்கும் பொதுவான நடைமுறை. 1929-ஆம் ஆண்டு, பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டு, பிரிட்டிஷ் அரசு ஒரு நடவடிக்கையை மேற் கொண்டது. இந்தியாவுக்கு எப்படிப்பட்ட ஆட்சியை வழங்கலாம் என்பது குறித்து விசாரித்தறிந்து அறிக்கை தர சைமன் என்பவர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அதை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. இந்தக் குழுவில் இந்தியர் எவருமில்லை. இந்தியமக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற பேராயத்தின் கருத்தும் கேட்டறியப்படவில்லை. எனவே சைமன் குழுவைப் புறக்கணிப்பதென்ற, சென்னை மாநாட்டின் தீர்மானத் தைச் செயற்படுத்திக் காட்ட பேராயம் மக்களை ஆயத்தப்படுத்தியது. மக்களும் சைமன் குழுவைப் புறக் கணிக்க ஆர்வத்தோடு உரிய நாளுக்காகக் காத்திருந் தனர். "சைமனே திரும்பிப் போ" என்ற ஒலி முழக்கம் காற்றின் பிரிக்க முடியாத பகுதியாகி விட்டது.

சேற்றைப் பூசிக் கொண்டு போக, சைமன் கமிஷன் வந்தது. பம்பாய் மண்ணில்தான், முதன் முதலாக

அதன் திருப்பாதம் பட்டது. பம்பாய் நகரில், பிரிட்டிஷ் அரசு வழங்கிய 'சர்' பட்டத்தைச் சுமந்து கொண்டிருந்த வர்கள் இருபத்திரண்டு பேர். வெள்ளையராட்சி தனது ஆதரவாளர்க்கு கொடுத்த அடையாளச் சீட்டு தான் சர் பட்டம். அன்று பம்பாயிலிருந்த இருபத்திரண்டு 'சர்' களில் ஒருவர் கூட சைமனை வரவேற்க வரவில்லை. ஆதரவாளர்களின் நிலையே அதுவானால், எதிர்ப்பாளர் கள் எப்படிச் செயல்பட்டிருப்பார்கள் என்பதைக் கணக் கிட்டுப் பார்த்துக் கொள்ளலாமே !

பிரிட்டிஷ் அரசு இந்த அளவு எதிர்ப்பை எதிர்பார்க்க வில்லை. ஏமாற்றம் எரிச்சலாகி, எரிச்சல் அடக்குமுறை யாகப் பரிணாம வளர்ச்சி பெற்றது, ஆற்று வெள்ளம் கடலில் கலக்க, அகன்ற வழியை நாம் முயன்று ஏற்படுத்தித் தர வேண்டியதில்லை, ஓரடி அகலம் வழி கோலிக் கொடுத்தாலே போதும். தேவையான பரந்த பாதையை அதுவே ஏற்படுத்திக் கொள்ளும். இவ்வாறே மக்கள் உள்ளத்தில் தேங்கிக் கிடந்த எதிர்ப்புணர்ச்சிக்கு சைமன் குழு புறக்கணிப்புத் திட்டம் சிறு வடிகால் வழி யாக அறிமுகப்படித்தப்பட்டது, ஆனால் அதுவே பேரியக்கமாகி, ஆட்சியாளர்களின் ஆணவத்தை அடித் துச் செல்லத் துவங்கி விட்டது. தூசு படிந்த துப்பாக்கி களுக்குத் தீபாவளிக் கொண்டாட்டம். தடிகள் கூட தலை தீபாவளி கொண்டாடின.

விடுதலைப் போராட்ட காலத்தில், களத்தில் கால் வைத்தவர்களிடையே தலைவர், தொண்டரென்ற பாகு பாடு இருதரப்பிலுமே இருந்ததில்லை. அரசு சமநீதிக் கொள்கையை அடக்குமுறையின் வழியில்தான் அறி முகப்படுத்தியது. தடியடியில் தலைவர், தொண்டரென்ற வேறுபாடின்றி சமமாகவே நடத்தியது. அடிப்பட்ட அனு பவம் அன்றைய அரசியல் தலைவர்கள் அனைவருக்கு முண்டு. ஜவகர்லாலும், தடியடியில் தனக்குரிய பங்கைப்

பெற்றுக் கொண்டார். அரசியல் நாகரிகத்தை அடிக்கடி கைது செய்து விடும் ஆட்சியாளர்கள், பஞ்சாபில் லாலா லஜபதி ராயை அடித்ததைப் போல், இலட்சுமண புரியில் ஜவகர்லாலை குண்டாந்தடிகளால் தட்டி(!)க் கொடுத் தார்கள். பொற் கொல்லரைப் போல் அடித்துப் பொலி வேற்றினார்கள்.

இலட்சுமணபுரிக்கு வரும் சைமன் குழுவுக்கு எதிர்ப்பைத் திரட்ட ஜவகர்லால் அங்கு வந்து சேர்ந்தார். பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தப் பட்டன. உணர்ச்சி ஒருமுகப் படுத்தப்பட்டது. எதிர்ப்பு உருவாக்கப் படுவதை எந்த அரசு தான் பொறுத்துக் கொள்ளும்? ஊர்வலங்களுக்குத் தடை விதித்தது. ஆனால் களங்காண வந்தவர்கள் உளம் தளர்ந்து விட வில்லை. தடை கண்டஞ்சிப் போராட்டத்தைக் கை விட்டு விடவில்லை. சிறு சிறு குழுவாகப் பிரித்து அணி வகுத்தனர். ஒரு குழுவுக்குத் தலைமை ஏற்று நடத்திச் சென்ற ஜவகர்லால் தமது தொண்டர்களோடு குதிரைப் படைக் காவலர்களால் தாக்கப் பட்டார்.

தொண்டர்கள் சிதறி ஓடினார்கள், குண்டாந்தடியும், குதிரைக் குளம்பும் மயிலிறகா? அன்னத்தின் தூவியா? ஓடத்தானே தோன்றும்! ஆனால் தலைமை வகித்த ஜவகர்லால் அஞ்சியோடாமல் நின்று அடிகளை வாங்கிக் கொண்டார். இதனைக் கண்ட தொண்டர்களும், பொது மக்களும் உணர்ச்சியால் உந்தப்பட்டு, மீண்டும் வந்து சேர்ந்தார்கள். நிலைமையைக் கருத்தில் கொண்டு, அதிகாரிகளும், காவலர்களும் வழிக்கு வந்தனர். இனி அடிதடியை நம்பிப் பயனில்லை என்று முடிவெடுத்தனர். ஊர்வலத்தை நடத்த அனுமதி வழங்கி விட்டார்கள். காவலர்கள் முன்னே செல்ல, தொண்டர்கள் ஊர்வலம் வெற்றி நடை போட்டது. ஓத்திகை வெற்றி! ஜவகர்லால் நேருவுக்குப் புதிய அனுபவம். அடிதடி முத்திரையோடு, தனது நெஞ்சுரத்தை நிரூபித்துக் காட்டி விட்டார் அவர்.

தொடர் வண்டி மூலந்தான் சைமன் குழு இலட்சுமண புரிக்கு வருவதாயிருந்தது. ஜவகர்லாலும், கோவிந்த வல்லப பந்துவும் தொண்டர்களை வழி நடத்திச் செல்வ தற்கான ஏற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர். தொண்டர்கள் நால்வர், நால்வராக ஒழுங்கு படுத்தப்பட்டனர். நகரத்தின் நான்கு பக்கங்களிலிருந்தும் மக்கள் திரண்டு வந்தார்கள். சிற்றாறுசள் பல திக்குகளிலுமிருந்து வந்து பேறாறாக உருமாறிக் கடலில் கலக்க ஓடுவது போலிருந்தது, இலட்சுமணபுரியில் மக்கள் திரண்ட காட்சி. பேராயக் கட்சி அலுவலகத்திலிருந்தே ஊர்வலம் புறப்பட்டது. தொடர் வண்டி நிலையத்தை நெருங்கும் நேரம். காவலர்கள் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்தி னார்கள். கட்டுப்பாடு மிக்க தலைமையில் திரண்ட மக்கள் அமைதியாக நின்றார்கள். குதிரைகள் கனைத்தன. தடிகள் சுழன்றன. கொட்டிய குருதியால் மண் வீரத்திலகமிட்டுக் கொண்டது.

போராட்டத் தொண்டர்களோடு, வேடிக்கை பார்க்கும் மக்கள் கூட்டமும் திரண்டிருந்தது. காவலர்கள் களம் காண்போரை மட்டில் தேடிப் பார்த்து அடிக்க வில்லை. அடையாளம் பார்க்கும் நிலைமையிலா அவர்களிருந்தார்கள்? உண்மையில் போராட வந்தவர் களை விட, பொது மக்களே அடிதடிக்கு ஆளாவது அன்றும், இன்றும், ஏன் என்றுமே அதுதான் வழக்கம். கூட்டத்தில் குண்டடிப்பட்டு, வேடிக்கை பார்க்க வந்த வர்கள் தானே அதிகமாக இறந்திருக்கிறார்கள்!

பொது மக்கள் காவற் படை குதிரைகளால் மிதிபடு வதையும், அடிபடுவதையும் கண்ட நேரு, பதைத்துப் போனார். இரக்கப்படும் உங்களுக்கும் இருக்கிறது என்றாற் போல் தடியடி தாராளமாக்கப்பட்டது. காவலர்கள் நீண்டதடிகளைப் போராட்ட வீரர்களின்

தலை, முதுகு என்று பாராமல் விளையாட விட்டனர். இந்தச் சமபந்தியில் ஜவகர்லாலுக்கும், வல்லப பந்துக்கும் சரியான சாப்பாடு போடப்பட்டது. ஜவகர் லால் அடிகளைத் தாங்கிக் கொண்டு நகராமல் நின்றார். காவலர்கள் பந்த் அவர்களின் தலை வாழ்நாள் முழுதும் நடுங்கிக் கொண்டிருக்கும்படிச் செய்த அடியை அந்தக் களத்தில் தான்கொடுத்தார்கள். காவலர்கள் சற்று நகர்ந்த நேரம் பார்த்து, தொண்டர்கள் இவ்விருவரையும் வலுக்கட்டாயமாக தூக்கிச் சென்று காப்பாற்றி னார்கள். இல்லையெனில், இவ்விருவர் அங்கங்களில் எது எது பழுதுபட்டிருக்குமோ!

சைமன் குழுவுக்குக் கிராம அதிகாரிகளின் பெயரால், நகரப்பூங்காவில் விருந்து கொடுக்கப்பட்டது. இது நீரோவை நினைவூட்டியது. மக்களை அடக்கு முறை வளையத்துக்குள்ளடைத்து விட்டு, சைமன் குழு சந்தடி யின்றி நகரத்தை விட்டு நழுவியது. எவ்வளவு தான் பாது காப்பு, எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருந்த போதும் கருப்புக் கொடியை காணாமல் சைமனால் போக முடிய வில்லை.

புயல் அடங்கியது. ஊர்வலம் பேராய அலுவலகத் திற்குத் திரும்பி வந்தது, பின் கலைந்தது. சைமன் குழு சென்ற இடமெல்லாம் புறக்கணிப்புதான். அடக்கு முறை களால் மக்கள் மனதை மாற்றிவிட முடியுமா என்ன? பாட்னாவில் கட்டாயமாக ஆட்களைக் கொண்டு வந்து வரவேற்பு விழா நடத்த முயன்ற அதிகாரிகள், மக்கள் சக்திக்கு முன் மங்கிப் போனார்கள், முகம் தொங்கிப் போனார்கள்.

# திருப்புமுனை

''வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?'' —பாரதி.

இளைஞர்களின் வேகமும், முதியவர்களின் நிதானமும் முரண்பட்டவை போல் தோன்றினாலும் இரண்டுமே விடுதலைப் பயணத்தில் காலெடுத்து வைத்தவைதானே? விரைவாகப் போய்ச் சேர வேண்டுமென்பதும், விபத்தின்றி போய்ச் சேர வேண்டுமென்பதுந் தானே வேற்றுமை! விபத்தில்லாத, விரைவான பயணமே விழைவு என்பதே பொது நிலை.

உடன்பாட்டுத் தீர்மானத்தின்படி, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குச் கல்கத்தாவில் கொடுக்கப்பட்ட குடியேற்ற நாட்டு அதிகாரப் பகிர்வுக்கான காலக்கெடு, 1929 ஆம் ஆண்டு, டிசம்பர் முப்பத்தொன்றாம் நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு முடிந்தது. வெள்ளையர்களின் நரிக்குணம் நம்மவர்கள் அறியாததல்ல. ஒவ்வொரு நெருக்கடியையும், கோரிக்கையையும், ஆட்சியாளர்கள் ஏதேனுமொரு திட்டத்தை முன் வைத்தும், பேச்சு வார்த்தைத்தகழைத்தும், வேகத்தைத் தடுத்து கொந்தளிப்பை ஆறப் போட்டும் கரை ஏறுவது அதன் வழக்கம்.

உடன்பாட்டுத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்ட குடியேற்ற நாட்டுத் தகுதியுடனான ஆட்சியமைக்க, பிரிட்டன் கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றத் தவறி விட்டது. இனி முழு சுதந்திரம் என்பதுதான் முழக்கம், நோக்கம் என்பதை அறிவிக்க வேண்டிய காலம் வந்து விட்டது. மோதிலால் நேருவின் தலைமைப் பதவிக் காலமும் முடிவை எட்டிக் கொண்டிருந்தது. காந்தியடிகளோ பேராயத்தின் அரசியல் பணிகளில் தீவிர பங்கேற்காமல், கதர் இயக்கப் பணியில் முழு மூச்சோடு ஈடுபட்டிருந்தார். பேராயத்தின்

உறுப்பினர்களோ லாகூர் பேராயத்திற்குக் காந்தியடி களை தலைவராக்கிட ஆர்வத்தோடிருந்தனர். தலைவர் களெல்லாம்— காந்தியடிகளே தலைவரென்ற முடிவோ டிருந்தனர். ஆனால் எல்லாருடைய விழைவுக்கும் எதிர் பார்ப்புக்கும் மாறாக காந்தியடிகள் தலைவர் பொறுப்பை ஏற்க மறுத்து விட்டார்.

வேறு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பது? ஏழுமலையில் பார்த்த முகத்திலெல்லாம் நாமம் தென் படுவது போல், பேராயத்தார் முகத்திலெல்லாம் வினாக் குறியே தென்பட்டது. மாலை மாற்றிக் கொள்ள வேண் டிய நேரத்தில் மணமகனையே மாற்ற வேண்டிய நிலைமையில் ஒரு மணவிழா மண்டபம் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது, இலட்சுமணபுரியில் கூடிய பேராயக் குழு. இந்த இக்கட்டான நேரத்தில், நெருக்கடியை உருவாக்கிய காந்தியடிகளே தீர்வைத் தந்தார். ஜவகர்லாலின் பெயரைக் காந்தியடிகளே தலைமைப் பொறுப்புக்கு முன் மொழிந்தார். மணவிழா வுக்கு வந்தவர் மாப்பிள்ளையானார். ஆம் அண்ணலின் விருப்பப்படி ஜவகர்லால் தலைவரானார். தந்தையிட மிருந்த தலைமைப் பதவி, தனயனிடம் தாவி வந்தது.

''தந்தை மகற்காற்றும் நன்றி, அவையத்து
முந்தி இருப்பச் செயல்'' என்றும்

''மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்''

—என்ற குறள் இலக்கணத்திற்கு, மோதிலாலும், ஜவகர் லாலும் இலக்கியமானார்கள். அன்றைய அரசியல் இயக்க வரலாற்றில் புதிய சாதனையை நிகழ்த்தி விட்டார் ஜவகர்லால்.

பரம்பரை உரிமையால், தந்தையைத் தொடர்ந்து தனயன் பதவிக்கு வருவது முடியாட்சி முறை. ஆனால் மக்கள் மன்றம், ஒரு பெரிய இயக்கம், அதனை நடத்திச்

செல்ல; வழிகாட்ட, தலைமை தாங்க தகுதியானவர் எனத் தந்தைக்கடுத்துத் தனயனைத் தேர்ந்தெடுப்பது அரிய நிகழ்ச்சிதான். இயக்க வரலாற்றில் இதுவே முதலாவதாகும். அதுமட்டுமல்ல, பட்டறிவும், மனப் பக்குவமும் பெற்ற மூத்தோர் ஏற்றுச் செயல்பட்ட பெரிய பதவியை ஜவகர்லால் தமது நாற்பதாவது வயதிலேயே பெற்றார். இந்த பெருமையைக் கோபாலா கிருஷ்ண கோகலே அவர்களும், மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்களும் பகிர்ந்து கொண்டார்கள். இந்தத் தேர்வால் ஜவகர்லால் உள்ளம் பூரிப்பதற்குப் பதிலாகப் புழுங்கினார். காரணம் தான் பெற்ற வெற்றி தனக்காகக் கிடைத்ததல்ல என்பதுதான். தான் தேர்ந்தெடுக்கப் பட்டதாகக் கருதாமல் திணிக்கப் பட்டதாகவே அவர் கருதினார். ஆனால். தந்தை மோதிலால், மகனுக்குக் கிடைத்த பதவிக்காக மனம் மகிழ்ந்தார்.

ஜவகர்லாலைப் பேராயத்தின் தலைவராகத் தேர்ந் தெடுக்கச் செய்ததன் மூலம் காந்தியடிகள் ஒரு தத்துவத் தையும், இணக்கத்தையும் உணர்த்திக் காட்டினார். மிதவாதமும், தீவிரவாதமும் தந்தை மகன் போன்றவை தான் என்றும், ஒன்றை ஒன்று தொடரவும், துவக்கவும் கூடியவைதான் என்பதை உலகரிய உணர்த்தினார். மிதவாதமும், தீவிரவாதமும் உறவாகி உழைக்க வேண் யவையே தவிர, பகைத்து விலக வேண்டியவை அல்ல என்ற தத்துவத்தை ஏற்று 'டொமினியன் தகுதி' விடைபெற, முழு சுதந்திரம் அரியணை ஏரியது.

வேகத்தடைகளை ஆங்காங்கே நேரந்திற் கேற்றபடி ஏற்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக விளங்கிய ஆங்கில ஆட்சி மீண்டுமொரு சுதந்திரச் சூறாவளி உறுப்பெறுவதைக் கவனிக்கத் தவறவில்லை. வைசிராய் (அரச பிரதிநிதி) இர்வின் பிரபு வட்ட மேஜை (Round Table Conference) மாநாட்டைப் பற்றி அறிவித்தார்.

இந்த அறிவிப்பை அனைவரும் வரவேற்றனர். முன்னேற்பாடாக அனைத்துக் கட்சியினரும் கூடி டில்லியில் ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள். அதில் கோரிக்கைகளையும், நிபந்தனைகளையும் வரைந்தார்கள். கிழக்கும் மேற்குமாக இருந்தவர்களெல்லாம் இம்மாநாட்டில் ஒன்று சேர்ந்தே முடிவெடுத்தனர். அவசியத்தையும், அமைப்பின் நலனையும் கருதி முழுமனதோடு சிலராலும், குறை மனதோடு பலராலும் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

முழு சுதந்திரம் என்ற முந்திய முடிவுக்கு மாறாக இருந்தது கூட்டத்தின் முடிவு. அரசோடு ஒத்துழைக்க அது விதித்த நிபந்தனைகள் நான்கு.

முதல் நிபந்தனை : வட்டமேஜை மாநாட்டுப் பேச்சு வார்த்தையே குடியேற்ற நாட்டு ஆட்சித் தகுதி (டொமினியன் அந்தஸ்து) வழங்குவதை அடிப் படையாகக் கொண்டு நடைபெற வேண்டும்.

இண்டாவது : மாநாட்டில் பேராயத்திற்குப் பெரும் பான்மை பிரதிநித்துவம் வழங்க வேண்டும்.

மூன்றாவது : அரசு அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

நான்காவது : தற்போதுள்ள அரசாங்கமே குடியேற்ற நாட்டுத் தகுதியுடன் நடைபெறுவதாக அங்கீகரிக்க வேண்டும்.

மேற்குறித்த தீர்மானத்தைக் கூட்டம் ஏற்றுக்கொண்டதென்றாலும், ஜவகர்லால் ஏற்க மறுத்தார், ஆனால் பலரும் வற்புறுத்தவே இணங்கி ஒப்பமிட்டார். சுபாஷ் சந்திரபோசு மட்டில் நறுக்குத் தெறித்தாற்போல் தீர் மானத்தை ஏற்க ம்றுத்து விட்டார். ஜவகர்லாலிடம்

உள்ள விட்டுக் கொடுக்கும் பண்பை அறிந்திருந்த காரணத்தால் தான், கருத்து மாறுபாடுடையவரென ஜவகர்லாலை அறிந்திருந்தும் அவர் பெயரைத் தலைவர் பொறுப்புக்கு முன் மொழிந்தார். காந்தியடிகள் கட்டுப்படு பவராக இருந்துவிட்டால், கருத்து மாறுபாடு என்ன செய்து விடப் போகிறது.

அனைத்துக் கட்சிக் கூட்டத் தீர்மானத்தை சுபாஷ் சந்திரபோசைப் போலவே அரசும் ஏற்க மறுத்து விட்டது. காந்தியடிகளும், வேறு சில தலைவர்களும் இர்வின் பிரபுவை சந்தித்து உடன்பாடு காண பேசிப் பார்த்தனர். அரசு தரப்பில் இணக்கத்துக்குரிய பதில் தரப்படவில்லை. ஆதிக்க நோக்கமும், அதிகார ஆணவமும் அரசை அண்ணல் காந்தியடிகளின் கோரிக்கையை அலட்சியப் படுத்தச் செய்து விட்டன. ஒரு வகையில் இந்த போக்கு பேராயத்திற்கு நன்மை தருவதாகவே அமைந்துவிட்டது. இல்லையெனில் முழு விடுதலை என்ற இலக்கை நோக்கி, பேராயத்தின் இரு பிரிவினரும் இணைந்தடி வைத்திருப் பார்களா?

டிசம்பர் முப்பத் தொன்றாம் நாள், நள்ளிரவு நேரம். லாகூர் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. தூங்கிய நேரத்தில் நுழைந்துவிட்ட வெள்ளையர்களை, 'விழித்துக் கொண்டோம். வெளியேறுங்கள்' என்று கூறும் வகையில் 'சுதந்திரத்' தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. போராட்டத் திற்கு மக்களை ஆயத்தப்படுத்த வேண்டுமெனவும் முடி வெடுத்தனர். மாநாட்டின் முடிவுக்கொப்ப, சட்ட மன்றங் களிலும், மாகாணக் குழுக்களிலும் உறுப்பினராக இருந்தவர்களைப் பதவி விலகக் கோரி மோதிலால் அறிக்கை விட்டார். பெரும்பாலோர் பதவிகளைத் தூக்கி யெறிந்துவிட்டு வெளியே வந்து விட்டனர். பதவிச் சுவைப் பசையில் சிலர் மட்டும் ஒட்டிக் கொண்டிருக்கவும் தவறவில்லை.

போராட்ட முனைப்புப் பணிகள் முடுக்கிவிடப் பட்டன. எண்ணத்தையும், எழுச்சியையும் அளவிட ஆயத்தங்கள் செய்யப்பட்டன. கிரியா ஊக்கிகள் கையாளப்பட்டன. 1930-ஆம் ஆண்டு, ஜனவரி இருபத் தாறாம் நாளை முழுச் சுதந்திர நாளாக கொண்டாட மக்கள் கேட்டுக் கொள்ளப் பட்டனர்.

''ஆடுவோமே பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோ மென்று''

பாடிய பாரதியின் பாட்டுக்கு மக்கள் இசையமைந்துக் கொண்டனர். அந்த நாளில் ஒவ்வொருவரும் தங்களைத் திலகராக நினைத்துக் கொண்டு, சுதந்திர இலட்சியத்தை அடைய உறுதியெடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கோரப்பட்டது.

மக்கள் சுதந்திரநாள் உறுதிமொழியை எடுத்துக் கொண்டனர். விடுதலை உணர்வு தன்னூற்றாகப் பெருக் கெடுத்தது. ஆர்வம் பொங்கியது. போராட்டத்திற்கு மக்கள் தங்களைத் தாங்களே தயார் படுத்திக் கொண் டார்கள். பாயத் தயாராக இருக்கும் பந்தயக் குதிரையைப் போல், துடித்துக் கொண்டிருந்தார்கள் அவர்கள்.

# கரையும் உப்பே கருவி!

அறப்போராட்டத்திற்கு மக்கள் பக்குவப்பட்டு விட்டதாகவும், களங்காணும் தகுதியை அவர்கள் பெற்றிருப்பதாகவும் காந்தியடிகள் நம்பத் தயாரானார். எதிர் காலத்தில் சௌரி சௌராக்கள் ஏற்படாதென்ற நம்பிக்கை துளிர்விட்டது. எதிர்பாரா வகையில் மக்கள் பொறுமையிழக்க நேரிட்டாலுங் கூட, போராட்டத்தைக் கைவிட வேண்டிய நிலை இனி ஏற்படாதென்றும் காந்தியடிகள் கருதினார்.

காலம் கனிந்து வந்தது. மக்கள் மனம் பண்பட்டிருந்தது. விதையூன்ற ஏற்ற ஆடிப் பட்டம் போல், போராட்டத்தை விதைப்பதற்கான கால கட்டம் வந்து விட்டது. இனியும் போராட்டத்தைத் தள்ளிப் போட வேண்டியதில்லை என்ற நிலை தெளிவாயிற்று. ஆனால் போராட்டத்தை எப்படித் தொடங்குவது? எந்த அடிப்படையில் தொடங்குவதென்று முடிவெடுக்க முடியாதவர்களாகத் தலைவர்கள் இருந்தார்கள். அண்ணல்தான் வெள்ளைப் பூனைக்குப் போராட்ட மணியைக் கட்டினார். ஆம். உப்புச் சட்டத்தை மீறுவதென முடிவெடுத்துக் களத்திலிறங்கிவிட்டார்.

சபர்மதி ஆசிரமம் பாடி வீடாயிற்று. தண்டியைப் போர்க்களமாகத் தேர்ந்தெடுத்துக்கொண்டார் அண்ணல். மகத்தான இந்த அமர்க்களத்திற்கு அணிவகுத்து வந்தனர் மக்கள். அகமதாபாத்தில் கூடியது ஆயத்த மாநாடு. போராட்டத்தலைவர் காந்தியடிகள் இல்லாமலேயே அந்த மாநாடு நடைபெற்றது. போராட்ட முறைகள், தலைமை யாவும் முடிவு செய்யப்பட்டன. போராட்ட காலத்தில் சட்ட திட்டங்களையோ, சம்பிரதாயங்களையோ கடைப்பிடிக்க முடியாதென்பதால், போராட்ட தளபதிகளுக்குச்

சிறப்பதிகாரங்கள் வழங்கப்பட்டது. சர்வாதிகாரிகளைப் பேராயம் அதிகாரப் பூர்வமாக அறிவித்தது.

உப்பெடுக்க மக்கள் உவப்போடு திரண்டு வந்தார்கள். ஒப்புவமை இல்லாத ஒரு போராக உப்புப் போர் உருவாயிற்று. காந்தியடிகள் முன் செல்ல, மக்கள் அவரைத் தொடர்ந்தார்கள். பேராயத்தின் மற்ற தலைவர்களும், சிறை வாழ்க்கைக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார்கள். அண்ணலின் அனுமதி கிடைத்து விட்டது. இருபத்து நான்கு நாட்கள் நடந்து ஏப்ரல் திங்களில் அவர் தண்டி கடற்கரையை நெருங்கிக் கொண்டிருந்தார். அங்கே உப்புச் சட்டம் உடைத்தெறியப்பட்டது. காந்தியடிகளை ஆளவந்தோர் மே மாதம் ஐந்தாம் நாள் கூண்டிலடைத்து விட்டார்கள். நாடெங்கும் போராட்டம் சூடுபிடித்திருந்தது. காவலர்களின் கைத்தடிகள் போராட்டத்தை ஒடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டன. தொண்டர்களின் மண்டைகள் பிளக்கப்பட்டன. எலும்புகள் முறிக்கப்பட்டன. குருதிக் குளங்கள் உருவாக்கப்பட்டன.

ஜவகர்லால் மத்திய மாகாணம், ரெய்ப்பூரில் நடக்க இருந்த மாநாட்டிற்காகப் புறப்பட்டார். அவர் ஏப்ரல் பதினான்காம் நாள், அலகாபாத்துக்கு அருகிலுள்ள சியோக்கியில் வண்டி ஏறப்போகும் வேளையில் தொடர் வண்டி நிலையத்தில் (Railway Station) கைது செய்யப்பட்டார். உப்புச் சட்டத்தின் 9 (சி) பிரிவின் கீழ் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது. ஜே.எஸ்.குரோஸ் என்பவர் ஜவகர்லாலைச் சிறையிலேயே விசாரித்தார். பிரிட்டிஷ் அரசின் விசாரணைச் சடங்கு முடிந்தது. ஜவகர்லாலுக்கு ஆறு மாதகால வெறுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

உப்புப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போதே அன்னியத் துணிக்கடைகளின் முன் மறியலும் நடை

பெற்றது. வெளிநாட்டுப் பொருட்கள் எதையுமே வாங்கிப் பயன்படுத்தக் கூடாதென்ற எண்ணம் மக்கள் மனதில் பதிந்திருந்தது. இயக்கமும் நாடெங்கிலும் நல்ல முறையில் நடந்துகொண்டிருந்தது.

அலகாபாத் நகரில் ஜவகர்லாலின் தாயார் சொரூப ராணி, மனைவி கமலா, தங்கைகள் விஜயலட்சுமி மற்றும் கிருஷ்ணா அனைவருமே மறியல் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். கமலாவின் போராட்ட உணர்வு வியக்கத் தக்கதாக இருந்தது. தனது அன்னையும், மனைவியும் களத்தில் இறங்கிப் போராடியதை, சிறையில் இருந்த ஜவகர்லால் கேள்விப்பட்டு நெகிழ்ந்து போனார். நேரு குடும்பத்துப் பெண்களைப் போலவே, நாடெங்கிலும் பெண்களும் அறப்போரில் ஈடுபட்டிருந்தனர்.

'தன்னடக்கம், மெய்யடக்கம் தக்க மனவடக்கம்
மன்னுபுலனடக்கம் மாண்புள நாவடக்கம்"

கொண்ட பெண்ணினம்

"நம்நாட்டைப் பிறர் ஆள விட்டுவிட்டு
நாமடங்கி வாழ்ந்திடுதல் அடக்கமாமோ"

—என்னும் பாட்டறிஞர் இலக்கியனின் எண்ண வரிகளை இதயத்தில் ஏற்றவர்களாகிப் போராடினார்கள். அன்று போராட்டம் சூரிய வெளிச்சமாகிவிட்டது.

பிரிட்டிஷ் அரசு வெள்ளையினக் கோழிகளைப் போல் நாள்தோறும் அவசரச் சட்ட முட்டைகளையிட்டுக் கொண்டிருந்தது. மக்களின் மனத்திண்மையைக் குறைக்க அடக்கு முறைகளை அவிழ்த்து விட்டது. வெள்ளத்தை விரல்களால் தடுத்து விட முடியுமா? ஆட்சியாளர்களுக்கே அயர்வு ஏற்பட்டு விட்டதோ என்று ஐயுறும் வண்ணம், அதன் நடவடிக்கைகளில் சிறிது நெகிழ்ச்சி தென்பட்டது. ஆனால் நின்று விடவில்லை. பொறுப்புத் தலைவராக விளங்கிய மோதிலால் நேருவை

யும், செயலாளர் செயது முகமதுவையும் அரசு ஜூன் முப்பதாம் நாள் கைது செய்தது. அவர்களுக்கு அரசு வழங்கிய பரிசு ஆறு மாதச் சிறை. போராடவந்தவர் களுக்கும், பொதுவாழ்வுக்குத் தங்களைத் தந்தவர் களுக்கும் சிறை என்பது தவிர்க்க முடியாததுதானே!

நோய்வாய்ப்பட்ட நிலையிலும், கடமையாற்றிய காரணத்தால் மோதிலால் நேருவுக்கு ஊக்கமூட்டி, உசுப்பி விடக்கருதியது போலும் அரசு. தனயன் இருந்த நைனிச் சிறையிலேயே மோதிலாலும் வைக்கப்பட்டார். தந்தை, தனயனைப் பிரிக்கக் கூடாதென்ற அருளுள்ளத் தால் அப்படிச் செய்ததா? எப்படியோ, நோய்வாய்ப் பட்டிருந்த தந்தைக்குத் தொண்டு செய்ய ஜவகருக்கு ஒரு வாய்ப்பு அரசால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

சட்ட மறுப்பும், அன்னியத் துணிக்கடை மறியலும் வண்டியின் இரு சக்கரங்களைப் போல் இணைந்தே நடந்தன. மக்களிடம் ஏற்பட்டிருந்த புத்துணர்ச்சியையும், வேகத்தையும் பொறுத்துக் கொள்ள முடியாத ஆட்சி, பேராயத்தையே சட்ட விரோத அமைப்பென அறிவித் தது. இயக்கத்தில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யக் காரணத்தையும், சட்டப் பிரிவுகளையும் தேட வேண்டிய அவசியத்தையும், அலைச்சலையும் இந்தத் தடை தேவையற்றதாக்கி விட்டது. அரசு நினைத்தால், பேராயத்தின் தலைவர்களையும், தொண்டர்களையும் இச்சைப்படி சிறையிலடைக்க இந்தத் தடை பாதை போட்டுக் கொடுத்தது.

நிலைமை கட்டு மீறாமல் பார்த்துக் கொள்ளவும், தனது குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளவும் அரசு ஒரே வழியை நம்பியிராமல், மாற்று வழியிலும் நோட்டம் பார்த்தது. பேராயத்தின் முக்கியத் தலைவர்களெல்லாம் சிறையுள்ளிருந்த வேளையில், அரசு மிதவாதிகளின் துணைகொண்டு, பேராயத்தோடு உடன்பாடு காண

முயன்றது. சட்ட மறுப்பு இயக்கத்தைக் கைவிடச் செய்ய அது ஒரு கையில் சிவப்புக் கொடியையும், மறு கரத்தில் வெள்ளைக் கொடியையும் பிடித்துக் கொண்டு செயல் பட்டது. வெந்நீரா? தண்ணீரா? வேண்டியதைப் பெற்றுக்கொள் என்பது போலிருந்தது அரசின் நடவடிக்கை.

அரசு எடுத்துக்கொண்ட உடன்பாடு காணும் முயற்சிக்கு சாப்ருவும், ஜெயகரும் உதவிக் கரம் நீட்டினார்கள். இவர்கள் ஜவகர்லாலை நைனிச் சிறையில் சந்தித்துப் பேசினார்கள். அண்ணல் காந்தியடிகளோடு கலந்து பேசாமல், தான் மட்டுமல்ல, பேராயத்தின் எந்தத் தலைவருமே, அரசோடு பேச முன்வர மாட்டார்கள் என்பதை ஜவகர்லால் தன்னோடு பேச வந்தவர்களுக்குத் தெளிவாகக் கூறிவிட்டார், இந்த முடிவை அண்ணலும் அறியும்படி செய்துவிட்டார். காந்தியடிகள் அப்போது எரவாடா சிறையில் வைக்கப்பட்டிருந்தார். காந்தியடிகளோடு பேச வேண்டுமென்ற ஜவகர்லாலின் கருத்தை அரசப் பிரதிநிதி (வைசிராய்) ஏற்றுக் கொண்டார்.

ஜவகர்லாலின் விருப்பப்படி அரசு, ஜவகர்லாலும், செயலாளர் சையது முகமதுவும், மோதிலால் நேருவும் காந்தியடிகளைச் சந்திக்க ஏற்பாடு செய்தது. மூவரும் தனி தொடர்வண்டி (Train) மூலம் நைனிச் சிறையிலிருந்து பூனாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கே இவர்களைத் தனியாக வைத்தனர். காந்தியடிகளுடன் தாங்கள் பேசும்போது, காவலர்களோ, அரசு அலுவலர்களோ, அதன் தொடர்புடைய வேறு எவருமோ உடனிருக்கக் கூடாதென்றும், தங்களுடன் வல்லபாய் பட்டேல், ஜெயராம், தாஸ் தௌலத்ராம், சரோஜினி தேவி ஆகியோரையும் தங்களது பேச்சுக்களில் கலந்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தனர். இந்தக் கோரிக்கையோடு காந்தியடிகளைச் சந்திக்க ஜவகர்லால் இசைந்தார். அன்று காலையே மூவரும் காந்தியடிகள்

இருந்த சிறைக்கு மாற்றப்பட்டார்கள். சிறை அலுவலகத்தில் சாப்ரு, ஜெயகரோடு பேசி அரசிடம் தங்கள் நிபந்தனைகளைத் தெரிவிக்கச் செய்தார் ஜவகர்லால்.

எரவாடா சிறையில் அண்ணலோடு பேசிய பின், சட்ட மறுப்பியக்கத்தைக் கைவிட அரசு என்னென்ன செய்ய வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்தினார்கள். பேச்சு நடந்து கொண்டிருக்கும்போதே மோதிலால் நேருவின் உடல்நலன் பாதிக்கப்பட்டது. பத்தொன்பதாம் நாள் மூவரும் தனித் தொடர்வண்டி மூலம் மீண்டும் நைனி சிறைக்கே கொண்டு செல்லப்பட்டார்கள். சிறையில் மோதிலாலின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து கொண்டிருந்தது. குடும்ப மருத்துவர்களும், அரசு மருத்துவர்களும் தீவிரமாகக் கண்காணித்தனர். குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. பத்துமாதச் சிறை வாசத்திற்குப் பின், மோதிலாலின் உடல்நிலையைக் கருதி, செப்டம்பர் எட்டாம் நாள், அரசு அவரை விடுதலை செய்ய ஆணையிட்டது. விடுதலையாகும் முன்னரே நோய்க் காரணங் காட்டித் தன்னை விடுதலை செய்ய வேண்டாமென்று கூட மோதிலால் அரசுக்கு தந்திச் செய்தி அனுப்பினார். ஆனால் அரசு தன்னைப் பழியிலிருந்து காத்துக் கொள்ள விடுதலை செய்து விட்டது.

தந்தையின் விடுதலைக்குப்பின், தனயனின் தண்டனைக் காலமும் முடிந்தது. அக்டோபர் பதினோராம் நாள் ஜவகர்லால் விடுதலை செய்யப்பட்டார். விவசாயப் பெருங்குடி மக்கள் விளைபொருள் விலைவாசி குறைவால் வருமானமின்றி வரிகொடுக்க முடியாத நிலையில் வாடிக் கொண்டிருந்தார்கள். வரிகொடா இயக்கத்திற்கேற்ற சூழ்நிலை. பாதிப்புக்கு ஆளாகியிருந்த விவசாயிகள், போராட்டத்திற்குத் தயாராக இருந்தார்கள். வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினால், பாதிக்கப்படுவது அரசாக மட்டுமல்லாமல், பெருநிலக்கிழார்களுந்தான் (ஜமீன்தார்

கள்) என்பதைப் பேராயம் எண்ணிடத் தவறவில்லை. பெருநிலக்கிழார்கள் பாதிப்புக்கு ஆளாகக் கூடாதென் பதற்காக, கிராமப் புறங்களில் பேராயம் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கத் தயங்கியது.

விடுதலையாகி வந்த ஜவகர்லால் புயல் வேகத்தில் பணிகளைத்தொடங்கினார். மாநிலக் காங்கிரஸ் குழுவைக் கூட்டி, மாவட்டங்களின் இசைவோடு வரிகொடா இயக் கத்தைத் தொடங்க முடிவு செய்தார். உட்குழப்பம் உரு வாகாமல் தவிர்க்க, பெருநிலக்கிழார்களும் (ஜமீன்தார் கள்), குடியானவர்களும் போராட்டத்தில் கலந்து கொள்ளலாமென அனுமதி வழங்கப்பட்டது. போராட் டத்தைத் தொடங்கும் முன் விவசாயிகள் மாநாட்டைக் கூட்டவும் முடிவு செய்யப்பட்டது. முடிவெடுத்த அன்றே ஜவகர்லால் அலகாபாத் பொதுக் கூட்டத்தில் பேசினார். கூட்டம் முடிந்ததும், மனைவியை அழைத்துக் கொண்டு தந்தையைக் காண சௌரி சௌராவுக்குப் பயணமானார். நலங்குன்றியிருந்த தந்தையைப் பார்த்தார். ஆனால் அவரோடு தங்கியிருக்க முடியாத நிலை.

முன்னரே திட்டமிட்டபடி அக்டோபர் பத்தொன் பதாம் நாள் அலகாபாத்தில் நடைபெறவிருந்த விவசாயி கள் மாநாட்டிற்காக அவசரமாக அவர் புறப்பட வேண்டி யிருந்தது. பயணத்தின்போது டோராடூனில் சட்ட விதி 144-ன் கீழ், ஆணையொன்று ஜவகர்லாலிடம் வழங்கப் பட்டது. அடுத்தடுத்து அரசு, ஆணைகளை வழங்கிக் கொண்டே வந்தது. மிகுந்த எச்சரிக்கையின் விளைவே இவ்வளவு ஆணைகள் வழங்கப்படக் காரணம்.

ஜவகர்லாலின் பேச்சு பொதுமக்களுக்கும், அமைதிக் கும் ஊறுவிளைவிக்கலாமென்றும், இரண்டு மாத காலத் திற்கு ஜவகர்லால் அலகாபாத் மாவட்ட எல்லைக்குள் உரையாற்றக் கூடாதென்றும், மாவட்டக் குற்றவியல் நடுவர் எச் பாம்ஃபோர்ட் பிறப்பித்த ஆணையை ஜவகர் லால் பொருட்படுத்தவில்லை. ஆட்சியை எதிர்க்கத்

துணிந்தவருக்கு, இந்த ஆணைகளை அலட்சியப்படுத்து வதொன்றும் அசாதாரணமல்ல. அதிலும் பிரிட்டிஷ் அரசு தனக்கு ஆணையிடுவதை அங்கீகரிக்க அவர் எப் போதுமே இசைந்ததில்லை.

மாநாட்டுப் பிரதிநிதிகள் ஆயிரத்து அறுநூறு பேர்கள் வந்திருந்தார்கள். தடைகளை மீறி வந்த கூட்டக்கணக்கு தான் இது. அவர்களிடையே ஜவகர்லால் பேசினார். உரை நிகழ்த்தி முடிந்ததும், தொடர் வண்டியில் அலகா பாத்துக்கு வரும் தனது உடல் நலங் குன்றிய தந்தையை அழைத்து வர தொடர்வண்டி நிலையத்துக்கு விரைந்தார். தந்தையை வரவேற்று வீட்டிற்கு அழைத்து வந்தார். அவரோடு உரையாடவும் நேரமில்லை. கூட்டத்தை முடித்துக் கொண்டு வந்து பேசிடலாம் என்பது அவர் எண்ணம்.

பொதுக் கூட்ட நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு, தந்தையோடு பேசும் ஆவலுடன் வேகமாக வீடு நோக்கி வந்து கொண்டிருந்தார். அன்புத் தந்தையோடு அள வளாவும் வாய்ப்புக்குக் குறுக்கே அரசு திரையாக நின்றது. வீட்டை நெருங்கும் நேரத்தில் ஜவகர்லால் கைது செய்யப்பட்டு மீண்டும் நைனிச் சிறைக்கே கொண்டு செல்லப் பட்டார்.

ஜவகர்லாலை விசாரிக்க, 1930 – ஆம் ஆண்டு அக் டோபர் பதினெட்டாம் நாள் அலகாபாத் மாவட்ட முதல் நிலைநடுவரும், உதவித் தண்டலருமான ஜே. எஸ் குரோஸ் என்பவரை விசாரணை அலுவலராக நியமனம் செய்து, ஆளுநர் ஆணை பிறப்பித்தார். தீபாவளி விழாக்கால மானதால், விசாரணை சற்றுத் தாமதப் படுத்தப்பட்டு அக்டோபர் மாதம் இருபத்து நான்காம் நாள் வழக்கு வாதத்திற்கு வந்தது.

அன்றைய ஆட்சியில் அரசியல் வழக்குகளைப் பொறுத்தவரையில், விசாரணை என்பது ஒரு

சடங்காகவே இருந்தது. பேராயத்தார் எவரும் அரசு தொடுக்கும் வழக்குகளில், எதிர் வழக்காடக் கூடா தென்பதுகொள்கை முடிவு. எனவே ஜவகர்லால் வழக்கில் பங்கேற்க மறுத்துவிட்டார். கோவில்களில் சிலையா? கள் உண்ணாவிட்டாலும், படையல் நடப்பதில்லை அப்படியே ஒருகை ஓசையாக வழக்கு விசாரணை நடந்தது. சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். எதிர்ப்பில்லை என்பதால், குற்றத்தை மெய்ப்பிக்கப் பொருந்தாத வாக்கு மூலங்களையெல்லாம் புனைந்து வந்து அரங்கேற்றினர் காவல்துறையினர்.

## நீதிமன்றத்தில்...

ஜவகர்லால் சிறந்த பேச்சாளர். குரலை மட்டுமே முதலீடாகக் கொண்டு பேச்சுத் தொழில் நடத்தும் ஒரு சில அரசியல் சில்லரைகளைப் போன்று பொருளற்ற, தரங்கெட்ட சொல்வீச்சாளரல்லர் அவர். கீழ்மையான வெறி உணர்ச்சியைத் தூண்டும் சொல்லாட்சியை அவர் கையாண்டவரல்லர். எதிர் கருத்துடையவர்களை இழித்தும், பழித்தும் பேசிக் கைதட்டல் பெறும் அற்ப ஆசையில்லாதவர்கள் அரசியல் நடத்திய காலத்தில் வாழ்ந்தவர். இலட்சிய முழக்கத்தில் இம்மியளவும் தரக்குறைவான, மலிவான, இழிவான சொற்களைக் கலக்கத் தெரியாதவர் ஜவகர்லால். செறிவான நடையும், தெளிவான கருத்தும் கொண்ட அவருடைய சொற்பொழிவை, அரசு சுருக்கெழுத்தாளர் குறிப்பெடுத்துப் படித்துக் காட்டியதைக் கேட்டதும் அவர் எரிச்சலுற்றது இயற்கைக்கு மாறானதல்லவே!

''இந்த மனிதரின் (அரசு சுருக்கெழுத்தாளரின்) குறிப்பெடுக்கும் திறனைப் பாராட்டுவதற்கில்லை. சொற்பொழிவு அவர் புரிந்து கொள்ளும் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாக இருக்கலாம். அவர் எடுத்த குறிப்பிலுள்ளதைவிட, நான் சிறந்த பேச்சாளன் என்றே கருதுகின்றேன்." என்று வழக்கு மன்றத்திலேயே ஜவகர்லால் குறிப்பிட்டார்.

ஜவகர்லாலைப் போன்ற ஒரு பெரும் படிப்பாளியின் பேச்சை, பண்பாளரின் சொல்வீச்சைக் கொச்சையாக்கிக் குறிப்பெடுப்பதும், அதை நீதிமன்றத்தில் சாட்சிக் கூற்றாக அரங்கேற்றுவதும், யாரையும் எரிச்சலூட்டத் தானே செய்யும்!

வழக்கு விசாரணையில் பங்கேற்க மறுத்த ஜவகர்லால், தனது நோக்கையும், ஆட்சியாளர்களின் போக்கை

யும் பொதுமக்களுக்கு உணர்த்தும் வகையில் அறிக்கை ஒன்றை அளிக்க முன் வந்தார். அவரளித்த அறிக்கை விடுதலை வேட்கையாளர்களுக்கு விருந்துணவாகவே இருந்தது. சொல் ஒவ்வொன்றும் ஆட்சியாளர்களின் நெஞ்சுக்கு நேராய் எய்யப்பட்ட அம்பாக வெளிப் பட்டது.

ஐந்தாவது தடவையாக நான் தண்டிக்கப்படுவேன் என்பதில் எனக்கு ஐயமில்லை. இதுவரை இந்த விசார ணையில் நான் கலந்து கொள்ளவில்லை. இனியும் கலந்து கொள்ளப் போவதில்லை. ஆனால் சில சொற்கள் மட்டில் கூற விரும்புகின்றேன். ஏனெனில் இன்று என்னை விசாரிப்பவர்களும், அளவு கடந்த அன்புடன் என்னைப் பெருமைப்படுத்தி வந்திருக்கும் எனது சொந்த மக்களும் என் நெஞ்சத்தில் இருப்பவற்றில் ஒரு சிறு பகுதி யையாவது தெரிந்து கொள்ள வேண்டுமென நான் விரும்புகின்றேன்.

கலவரத்தைத் தூண்டியதாக என்மீது குற்றம் சுமத் தப்பட்டுள்ளது. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு எதிராகத் துவேஷத்தைப் பரப்பினேன் என்றும் குற்றம் சாற்றப் பெற்றுள்ளேன். எட்டரை ஆண்டுகளுக்கு முன்பு இதே குற்றம் என்மீது சுமத்தப்பட்டது. இந்தியாவில் இன் றுள்ள அரசாங்கத்திற்கு எதிராக வெறுப்பை ஊட்டுதல் (துவேஷம்), இந்திய மக்களின் கொள்கையாகி விட்டது என்று அப்பொழுதே கூறினேன். இந்த அரசாங்கம் எந்தத் தீமைக்கு நிலைகளனாக விளங்குகின்றதோ, அந்தத் தீமைக்கெதிராக வெறுப்புணர்ச்சியைத் தூண்டப் பேசுவதும், எதிர்ப்பை வலுப்படுத்துவதும் அவர்களு டைய முதலாவது வேலையாகி விட்டது என்று கூறி னேன். ஏனெனில், இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி அகற்றப்படும் வரை, மக்களுக்குச் சுதந்திரம் இருக்க முடியாது.

இலட்சோப லட்சம் மக்களின் உயிரை நசுக்கிப் பிழிந்துவிட்ட பயங்கரச் சுரண்டல் குறையப் போவதில்லை என்பதை அவர்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். அலங்கோலப்படுத்தப்பட்டு, அச்சுறுத்தும் வடிவெடுத்துள்ள இந்த உண்மையை நான் உணர்ந்து கொண்ட நாளிலிருந்து, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை விரட்டுவதைத் தவிர எனக்கு வேறு தொழில் இருந்ததில்லை. வேறு வேலை இருந்ததுமில்லை. வேறு நோக்கமும் கிடையாது.

''நடப்பாண்டு முதல்நாளில் தேசீயகாங்கிரஸ்இந்திய சுதந்திரத்தைப் பெற்றே தீருவதென முடிவு செய்தது. ஜனவரி இருபத்தாறாம் நாளன்று, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைப்பதென இலட்சக்கணக்கான இந்திய மக்கள் உறுதி (சபதம்) எடுத்தனர். தம்மீது கொடுங்கோன்மை செலுத்தி நசுக்கும் எந்த அரசாங்கத்தையும் கவிழ்க்கும் உரிமை மக்களுக்குண்டு.

நெடுங்காலமாக இருந்துவரும் இந்த உரிமையைத்தான் இந்திய மக்கள் அன்று பிரகடனப்படுத்தினார்கள். ஈவிரக்கமின்றித் தம்மைச் சுரண்டிக் கொள்ளையடிப்பதாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீது அவர்கள் குற்றம் சாற்றினார்கள். அரசியல் முறையிலும், பொருளாதார பண்பாட்டடிப்படையிலும், ஆன்மிகத் துறையிலும் ஆற்றொணாக் கொடுமை புரிந்து விட்டதை அவர்கள் குறிப்பிட்டனர். அந்த உறுதி எடுத்த நாளிலிருந்து பிரிட்டிஷ் அதிகாரத்திற்கு எந்த இந்தியனும் மனப்பூர்வமாகப் பணியமாட்டான்.''

''சுதந்திரத்திற்கும், அடிமைத் தனத்திற்குமிடையே ஒப்புரவு இருக்க முடியாது (சமரசம் இருக்க முடியாது,) அல்லது உண்மைக்கும், பொய்மைக்கும் இடையேயும் அந்த உறவு ஏற்பட முடியாது. சுதந்திரத்தின் விலை குருதியும், தன்னலத் துறவும்தான் (தியாகம்) என்பதை

நாங்கள் உணர்ந்திருக்கின்றோம். எமது சொந்த நாட்டவரின் இரத்தமும், எமது நாட்டிலுள்ள தலைசிறந்த பெருமக்களின் தன்னலத் துறவும் வீண் போகாதென்பதிலே எங்களுக்கு முழு நம்பிக்கை உண்டு. எமது நாட்டின் விடுதலைக்கான, விலை உதிரமும், தியாகமும் தான் என்றானால், அந்த விலையை முழுமையாகச் செலுத்தியே தீருவோம்.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுமையில், பழைய ஹூணர்களைப் போன்றது என்பதையும் உலகம் கண்டிருக்கிறது. ஹூணர்களுக்கும் மேலாக, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்று தனக்கே உரிய முறையில் தனது பயங்கரப் பாதகச் செயல்களை நீதி, நேர்மை என்ற திரைகளைக் கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் மறைக்கவும் செய்கிறது. தமது முகமூடி கிழித்தெறியப் பட்டு விடுமோ என்றஞ்சும் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் ஒவ்வொரு வகையிலும் உண்மையை ஒடுக்க முனைந்துள்ளனர்.

ஆங்கிலேயே மக்களுடன் எங்களுக்கு எவ்விதப் பகையுமில்லை. ஆங்கிலத் தொழிலாளருடன் எங்களுக்குத் துளியளவும் பகை இல்லை. எங்களைப் போன்றே அவர்களும் ஏகாதிபத்தியத்தின் கோரத் தாக்குதலுக்குள்ளானவர்கள்தான். அத்தகைய ஏகாதிபத்தியத்துடன் தான் நாங்கள் போராடுகிறோம். அதனுடன் எந்த விதமான ஒப்புரவும் ஒற்றுமையும் இருக்க முடியாது. இந்த ஏகாதிபத்தியத்திற்கோ, நாங்கள் கடமைப்பட்டவர்கள் அல்லர்.

இந்தியாவில் இங்கிலாந்தின் கொடி இருப்பது ஒவ்வொரு இந்தியனுக்கும் அவமானம். இன்று பிரிட்டிஷ் அரசாங்கம் எங்களுக்குப் பகை அரசாங்கமாகும். இராணுவத்தின் உதவிகொண்டு ஆக்ரமிப்பு செய்து இந்தியாவை அடக்கி ஆண்டு கொண்டிருக்கும்

அன்னிய வல்லரசாகும். இந்திய மக்களுக்கு மட்டுமே நான் கடமைப்பட்டவன், நன்றி பாராட்ட வேண்டியவன். வேறு எந்த அரசனுக்கோ, அன்னிய அரசாங்கத்திற்கோ நான் விசுவாசம் (நம்பிக்கை) கொண்டவனல்லன், நான் இந்திய மக்களுடைய ஊழியன். வேறெந்த 'எஜமான' னையும் அங்கீகரிக்க மாட்டேன்.

"எமது போராட்டத்தின் கடைசிக் கட்டம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷ் பேரரசும், எல்லாப் பழைய பேரரசுகளும் ஒழிந்த வழியிலேயே, தானும் விரைவில் சென்றொழியும். இந்தியாவை நசுக்குவதும், அதன் சீரழிவும் நெடுங்காலமாக நடந்து கொண்டிருக்கின்றன. இனியும் அவைகளைப் பொறுத்துக் கொள்வதற்கில்லை. இங்கிலாந்தும் உலகமும் இதிலிருந்தாவது தெரிந்து கொள்வதற்காகவே இந்த அறிவிப்பைச் செய்கிறேன்.

"இந்திய மக்களைச் சரிசமமாக எண்ணி, அவர்களுடைய சுதந்திரத்தில் தலையிடாமலிருப்பவர்கள் எல்லாருடனும் அவர்கள் நண்பர்களாயிருக்கத் தயாராகவுள்ளனர். ஆனால் தங்கள் சுதந்திரங்களில் தலையிட விரும்புபவர்களுக்கும், குடியானவர் அல்லது தொழிலாளர்களைக் கொள்ளையிட விரும்புபவர்களுக்கும் அவர்கள் நண்பர்களாக இருக்க மாட்டார்கள். மேலும் இங்கிலாந்திலிருந்து கொண்டு ஆங்கிலேயர் அள்ளிக் கொடுத்து வரும், ஏமாற்று, போலிச் சீர்திருத்தங்களை இந்திய மக்கள் இனியும் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை.

"இந்த மகத்தான போராட்டத்தில் கலந்து கொண்டு இலட்சியத்திற்காக எனது சிறு பங்கை செலுத்தக் கிடைத்த வாய்ப்பு எனது வாழ்க்கையில் மாபெரும் மகிழ்ச்சிக்குரியதாகும். என் தாயகத்தின் வீரர்களும், வீராங்கனைகளும் நமது போராட்டத்தை இடைவிடாது நடத்தி வருவரென்றும், வெற்றி கிட்டும் வரை நாம் கனவு கண்டு கொண்டிருக்கும் சுதந்திர இந்தியாவை அடையும்

வரை சலிப்பின்றி போராடி வரவேண்டுமென்றும் நான் வேண்டிக் கொள்கிறேன்" என்று ஜவகர்லால் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.

நீதிபதி ஜவகர்லாலைக் குற்றவாளி என முடிவு செய்தார். இந்திய குற்றவியல் சட்டப் பிரிவு 124ஏ, 117 மற்றும் 1930-ஆம் ஆண்டு ஆறாவது அவசரச் சட்ட மூன்றாவது பிரிவின் கீழும் முறையே பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனையுடன், ஐந்நூறு ரூபாய் தண்டமும் (அபராதம்) தொகையைக் கட்டத் தவறினால் மேற்கொண்டு மூன்று மாதக் கடுங்காவலும், இரண்டாவது குற்றச்சாட்டின் மீது ஆறுமாதக் கடுங்காவல் தண்டனையும், நூறு ரூபாய் தண்டமும், தொகையைக் கட்டத் தவறினால் மேற்கொண்டு ஒரு மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனையும் விதித்து, எல்லாத் தண்டனைகளையும் ஒரே காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. ஜவகர்லால் தண்டத் தொகையைச் செலுத்த மறுத்து விட்டார். இதன் மூலம் மொத்தமாக இருபத்தெட்டு மாதக்கடுங்காவல் சிறைத் தண்டனைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொண்டார் ஜவகர்லால்.

தண்டத் தொகையான எழுநூறு ரூபாயை வசூலிக்க விதி 386(1)(ஏ) பிரிவின்கீழ் ஆணை பிறப்பிக்கப்பட்டு, அந்தத் தொகைக்கீடாகக் கைப்பற்றுவதற்கு அவருக்குரிய பொருள் ஏதுமில்லை என்றும், அவரது தந்தை மோதிலால் நேருவும் மகனுக்கு விதிக்கப்பட்ட தண்டத் தொகையைக் கட்ட மறுத்து விட்டாரென்று கூறி கைப்பற்றும் ஆணை திருப்பி அனுப்பப்பட்டது. எனவே மாற்று வழியின்றி ஜவகர்லாலுக்கு, தண்டத்திற்குப் பதில் கூடுதல் சிறை வாழ்க்கையையே கொடுக்க வேண்டியதாயிற்று.

ஜவகர்லாலின் அறிக்கையில் கையாளப்பட்ட சொற்களும், விளக்கப்பட்ட கொள்கைக் கோட்பாடுகளும்

விடுதலை வேட்கையுள்ளவர்களுக்கு ஊட்டச்சத்தாகவும் உணர்ச்சித் தூண்டுதலாகவும் அமைந்தது. கொள் கைக்குக் குந்தகமில்லாமல், வழக்கிலும் பங்கேற்காமல் மக்களுக்கும் பேராயத் தொண்டர்களுக்கும் நெஞ்சுரத் தையும், நேர்மைத் திறத்தையும் ஊட்ட வல்லதாக, அவ ருடைய அறிக்கை அமைந்தது. அவரது அறிக்கைகள், உண்மையில் ஒரு அரசியல் இலக்கியமாகவே அமைந்து விட்டதென்றால் அது மிகைமொழியாகாது.

# சிறையில் ஒரு புதுமுகம்

ஜவகர்லால் கைது செய்யப்பட்டு தண்டனை, விதிக்கப்பட்ட செய்தி; நகர, கிராம மக்களிடையே விரைவாக பரவியது. குறிப்பாக, குடியானவர்களிடையே ஜவகர்லால் கைது செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தி நெஞ்சக் கனலைக் கிளறியது. போராட்ட உணர்வு கிராமங்களில் பொங்கியது. ஆனால் நகரத்தில் நிலைமை சற்று மந்தப்பட்டிருந்தது. போராட்ட வேகம் குன்றிக் கிடந்தது. அரசும் தன் அடக்குமுறை ஆயுதத்தை ஆவேசமாகப் பயன்படுத்தத் தவறவில்லை. நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர அவசரச் சட்டங்களை அறிமுகப்படுத்தியது. பேராயத்தின் போராட்டக் குழுக்களும், இளைஞர் சங்கங்களும் சட்ட விரோத அமைப்புக்களாக அறிவிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்மூலம் மக்கள் எழுச்சியை முடமாக்கி விடலாம் என்பது அரசின் அற்ப நோக்கமாக இருந்தது. அதன் எதிர்பார்ப்புக்கு மாறாக, மக்கள் சிறைகளை நிரப்பிக் கொண்டிருந்தனர்.

சிறையில் அரசியல் கைதிகளைக் கொடுமையாக நடத்தினார்கள். சிறையை, புராணங்கள் உருவகப் படுத்திக் காட்டிய வகையில் நரகமாக உருவாக்கிக் காட்டிவிட்டால் தொண்டர்களின் வருகை குறைந்து விடும் என்பது, அரசின் பலவீனமான, தவறான கணக்கு. சிறைக்குள் இளைஞர்களும், ஏன் சிறுவர்களும்கூட கசையடிக்கு ஆளாயினர். இந்தக் கொடுமை கண்டு பொறுக்க முடியாமல், ஜவகர்லால், சையது முகமது, நருமதா பிரசாத், ரஞ்சித் எஸ். பண்டிட் ஆகியோர் மூன்று நாள் உண்ணா விரதத்தை மேற்கொண்டு கண்டனம் தெரிவித்தனர். வெளியேயும் கசையடிக்கெதிராகக் கிளர்ச்சிகள் நடைபெற்றது. இதன் விளைவாக அரசு மனிதத்

தன்மையற்ற கசையடித் தண்டனையை விலக்கிக் கொண்டது.

தனது மகன் கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டதைக் கேள்வியுற்ற மோதிலால் கொதித்தெழுந்தார். உடல்நலக் குறைவைப் பொருட்படுத்தாமல் இயக்கப் பணியில் ஈடுபட்டுக் கடுமையாக உழைத்தார். என்னதான் மனஉறுதி இருந்தாலும், உடல் ஒத்துழைக்க வேண்டுமல்லவா? மோதிலாலின் உடல்நிலை மேன் மேலும் குன்றி வந்தது. கமலாவும் தன் கணவர் விட்ட பணியை உள்ள உவகையோடு தொடர்ந்து செய்து வந்தார். அவரையும் அரசு விட்டு வைக்கவில்லை. 1931-ஆம் ஆண்டு, ஜனவரி முதல்நாள் கமலாவும் கைது செய்யப்பட்டார். மோதிலாலின் குடும்பம் போராட்டத்தின் வழியாக மேலும் ஒருவரைச் சிறைக்கு அனுப்பி வைத்தது. கமலாவை வரவேற்க சிறைக் கதவுகள் திறந்து நின்றன. நாட்டுப் பணியில் ஒரு வீட்டின் பங்கு முழுமை பெற்றது!

நாட்டிலும், ஜவகர்லால் குடும்பத்திலும், சில கடுமையான நிலைமை உருவாகிக் கொண்டிருந்தது. மோதிலாலின் உடல்நிலையும் திருப்பங்களோடு சீர்குலைந்து கொண்டிருந்தது. முதல் வட்ட மேஜை மாநாடு, பேராயத்தின் பிரதிநிதி யாருமே பங்கேற்காமலேயே, 1930-ஆம் ஆண்டு, நவம்பர் பன்னிரண்டாம் நாள், இலண்டனில் கூடியது. இந்த மாநாட்டில், பேராயக் கட்சியைத் தவிர, பலவேறு அரசியல் கட்சிகளின் சார்பில் ஐம்பத்தேழு உறுப்பினர்களும், பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளின் சார்பில் பதினாறு உறுப்பினர்களும், இந்திய (சமஸ்தானங்கள்) குறுநில மன்னர்களின் சார்பில் பதினாறு உறுப்பினர்களும், கலந்து கொண்டார்கள். மாநாட்டில் முதல் உரையை சர் தேஜ் பகதூர் தான் நிகழ்த்தினார்.

இந்த மாநாட்டு வாதங்களையும், கலந்து கொண்டவர்களையும் பற்றி ஜவகர்லால் தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். "நமது நாடு துன்பத்தின் எல்லை

யிலிருக்கும் நேரத்திலும், நமது மக்கள் ஆண், பெண் என்ற வேறுபாடின்றி வியக்கத்தக்க முறையில் போராடிக் கொண்டிருக்கும் வேளையிலும், அதனைப் பொருட்படுத் தாமல், மாற்றாருக்கு ஆதரவு காட்டவும், நமது நாட்டில் சிலர் தயாராக இருந்தனர் என்ற உண்மை புலனாயிற்று.''

''தேசீயம் என்ற போர்வையைப் போர்த்திக்கொண்டு மாறுபட்ட பொருளாதார நலன்கள் போராடிக் கொண் டிருக்கின்றன என்பதையும், முதலாளிகள் அதே தேசீயத் தின் பெயரால் தங்கள் நலனை நிலை நிறுத்திக் கொள்ள முயலுகின்றார்கள் என்பதையும் நன்கு அறிந்து கொண் டோம்" என்னும் இந்தக் கருத்தின் மூலம் ஜவகர்லாலின் மனப்புண் எவ்வளவு ஆழமானது என்பதை நம்மால் அறிய முடிகிறது. எடின்பரோ நகரத்தில் தமக்களிக்கப் பட்ட பாராட்டு விழாவில் பேசிய சீனிவாச சாஸ்திரியார் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றவர் களைக் கண்டித்துப் பேசினார். இதைக் கேள்வியுற்ற ஜவகர்லால் இதயத்தை எடுத்து எண்ணெய்க் கொப்பறை யில் போட்டது போல் துடித்துப் போனார்.

ஒருபுறம் சொந்த நலனையும், சொந்த பந்தங்களை யும் துறந்து, நாட்டுக்காகப் போராடுபவர்களும், மறுபுறம் சுயலாபக் கணக்குப் போட்டுப் பார்த்து, ஆங்கிலேயர் களின் ஆதரவாளர்களாக விளங்கிய அரசியல்வாதிகளும் இந்தியக் குமுகாயத்தில் (சமுதாயத்தில்) வெயிலும் நிழலு மாக விளங்கினார்கள். வெள்ளையர்களின் அரசியல் விளையாட்டில் பகடைக் காய்களாகப் பயன்பட்டவர் களும், சகுனியாகி உடன்பட்டவர்களுமுண்டு. நமது நாட்டின் பெயர் பாரதமல்லவா?

# முழக்கம் முனகலானது

மோதிலால் நேருவின் உடல்நிலை கவலைப்பட வேண்டிய அளவுக்குச் சீர் குலைந்து போயிற்று. மருத்துவர்கள் ஜவகர்லால், அவரது தந்தையின் அருகிலிருக்க வேண்டியது அவசியமெனக் கூறி விட்டார்கள். ஜனவரி இருபத்தாறாம் நாள், ஜவகர்லால் எதிர்பாராத நேரத்தில் விடுதலை செய்யப்பட்டார். மற்ற செயற்குழு உறுப்பினர்களும் அரசியல் காரணங்களுக்காக ஜவகர்லாலுடன் விடுதலை செய்யப் பட்டார்கள். ஜவகர்லாலும், ரஞ்சித்தும் உடனடியாக வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். ரஞ்சித் செயற்குழு உறுப்பினர் அல்லவாகையால் இரண்டு நாட்கள் விடுமுறை முடிந்ததும் மீண்டும் சிறைக்கே கொண்டு போகப்பட்டார்.

1931–ஆம் ஆண்டு, ஜனவரி இருபத்தாறாம் நாள் அண்ணல் உட்பட, விடுதலையான செயற்குழு உறுப்பினர்கள் பலரும் உடல் நலிவுற்றிருந்த மோதிலால் நேருவைப் பார்க்க அலகாபாத் வந்து சேர்ந்தார்கள். செயற்குழுவும், மோதிலால் நேருவால் பேராயத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்ட 'சுயராஜ்ய' பவனில் கூட்டப்பட்டு நடைபெற்றது. ஜவகர்லால் தறிநாடாவைப் போல் வீட்டுக்கும், சுயராஜ்ய பவனுக்குமாக மாறி மாறி நடந்து கொண்டிருந்தார். செயற்குழு நடவடிக்கைகளில் அவர் மனம் நிலை பெறவில்லை. தன் அன்புத் தந்தையாரின் உடல் நலன் குறித்தே அவர் மனம் குழம்பிக் கிடந்தார். வழக்கமான ஊக்கத்தை அவரால் காட்டிச் செயற்குழு நடவடிக்கைகளில் பங்கேற்க முடியவில்லை. மனபாரம் அவரை அழுத்திக் கொண்டிருந்தது.

போராட்டக் களத்தில் ஈடு இணையற்றவராக விளங்கிய மோதிலால் நேரு, படுத்த படுக்கையாகி விட்டார். கிழக்கே சிவந்த முகத்தோடு எழுந்த காலைக்கதிர்,

தன் கடமையைச் சோர்வின்றி முடித்துக் கொண்டு, அதே பொலிவோடு மேலைக் கடலில் குளிக்கச் சென்றதைப் போல் மோதிலால் இருந்தார். உடல் தளர்ந்தாலும், உள்ளம் தளராத அந்த போராட்ட வீரர், தனது இதயம் ஓய்வுக்காகப் போராட்டம் நடத்துவதாக உணர்ந்தார். வெள்ளையர் முகங்களைச் சுருங்க வைத்த அவரது அனல் மூச்சு, மழையில் நனைந்த துணிக்கொடியைப் போலாயிற்று. தனது இலட்சியப் பயணம் முடியு முன்னரே, தனது கால்கள் சோர்ந்து போனதை அவர் உணரத் தவறவில்லை. அந்த நிலையில் அவர் அண்ணலிடம் கூறினார்:- "மகாத்மாஜி! நான் விரைவில் சென்று விடுவேன். சுதந்திரத்தைப் பார்க்க நான் இங்கே இருக்க மாட்டேன். ஆனால் நீங்கள் வெற்றி பெற்று விட்டீர்கள். சுதந்திரம் விரைவில் கிடைத்து விடும் என்று எனக்குத் தெரியும்" என்று தன் நம்பிக்கையை அண்ண லிடம் வெளிப்படுத்தினார்.

செயற்குழுக் கூட்டம் முடிந்து, பெரும்பான்மையான வர்கள் அலகாபாத்தை விட்டுச் சென்று விட்டார்கள். நெருங்கிய உறவினர்களோடு, மோதிலால் நேரு அவர் களின் நீண்டநாள் நண்பர்களான அன்சாரி, பிதன் சந்திரராய், ஜீவராஜ் மேத்தா ஆகியோருடன் காந்தியடி களும் அங்கேயே தங்கியிருந்தார். அண்ணலும், உற்றார் உறவினர்களும் அருகிலிருந்ததால் மோதிலால் சற்றுத் தெம்பாகக் கூட இருந்தார். அந்தத் தெம்பு, மூழ்கும் கப்பலின் கொடிக் கம்பாகத்தான் தெரிந்தது. ஆம். கொடிக் கம்பமும் மூழ்கி விட்டது, **1931** ஆம் ஆண்டு பிப்ரவரி, ஆறாம் நாள் ஒரு சிங்கத்தின் முழக்கம் ஓய்ந்து விட்டது. விடுதலை வெளிச்ச வெங்கதிர் தலைசாய்த்து விட்டது. அடையாறு ஆலமரம், அடியற்று வீழ்ந்ததென ஒரு மாமனிதர் உடலைச் சாய்த்து விட்டார். போராட்டத் தின் பாடி வீடு, தன் கதவைத் தாளிட்டுக் கொண்டது.

தீயைத் தீ அணைக்குமா? அணைத்ததே! கங்கைக் கரையில் மூட்டப்பட்ட தீ, தியாகத் தீயாம் மோதிலால் நேரு என்னும் தொண்டுச் சுடரை அணைத்தது. நாட்டிற் காகத் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே வழங்கிய ஒப்புயர்வற்ற ஒரு தளபதியின் மேனியைத் தீ தடவிப்பார்த்தது. அடிமைத் தளையை அகற்றிட, அய ராதுழைத்த கொள்கைக் கோமான் தன் உடலைத் தீயின் நாக்குக்குத் தீனியாக்கிவிட்டு, புகழுருவை ஏற்றுக்கொண் டார். தனது தொண்டின் நினைவையும், விழைவையும், இந்திய மக்களின் இதயத்தில் ஏற்றி வைத்து விட்டு, அவர் ஓய்வெடுத்துக் கொண்டார். இயற்கையின் முடிவுக்கு எவரும் விதிவிலக்கல்ல. எதிர்ப்பை வெல்ல லாம். இயற்கையை...?

பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின்—இயற்கை நியதி யின் இரு பக்கங்கள். மரணம் வெல்ல முடியாதது - விலக்க முடியாதது. இறப்போ இயற்கையின் மீறமுடியாத சட்டம். ஆனால் மீற நினைக்காதவர் யார்? இறப்பைத் தள்ளிப் போட மட்டுமே, இன்றுவரை அறிவியல் அறிந்து வைத்துள்ளது. தடுத்துவிடும் தகுதியை அறிவியல் இன்னும் பெற்று விடவில்லை. அதைமட்டில் பெற்றுவிட்டால், விளைவுகள் விரும்பத் தகாதவை களாகக்கூட அமைந்து விடுமே!

ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண் டார் வருவதில்லை என்பது மாநிலம் அறிந்த உண்மை தான். ஆனால் அழுகையை வென்றவருண்டோ? நாடும், வீடும், நல்லோர் உள்ளமும் ஆற்றல் மறவரை இழந்து கண்களில் நீரையும், உள்ளத்தில் சோகத்தையும் சுமந்து தவித்தது. ஜவகர்லாலின் துயர நிலையை எழுத்தில் வடித்துக் காட்ட, சொல்லாட்சிக்குப் பெயர் பெற்ற கம்ப னால் கூட இயலாது.

நமக்கு நெருக்கமானவர்கள், அன்புக்கு இலக்கான வர்கள், உறுதுணையாக நின்றவர்கள், நிரந்தரமாகப் பிரிய நேரும்போது ஓலமிட்டழுகிறோம். பிரிவாற்றாமல் பிதற்றுகிறோம். ஆனால் கால காலத்திற்கும் எவரும் அழுது கொண்டே இருப்பதில்லை. காலம் மனக்காயத் திற்கு மருந்திட்டு விடுகிறது. புறச் சூழலும், பொறுப்பும் துயரங்களை அடி மனத்தின் அரவணைப்பில் ஆறுதல் பெற அனுப்பி வைத்து விடுகின்றன. பொதுத் தொண்டில் ஈடுபட்டவர்களை, குடும்பத் துயரங்கள் துரத்திக் கொண்டிருப்பதில்லை. அகப்புண்ணுக்குத் தனிமையைப் போன்ற தூண்டுதல் வேறில்லை. தொண்டர்களுக்கோ தனிமை என்பது கிடைக்காத ஒன்று. சிறையைத் தவிர, தனிமையைத் தரவல்லார் யார்?

# காந்தி-இர்வின் ஒப்பந்தம்

ஜவகர்லால் நேரு அன்றாடப் பணிக்குத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டார். முதல் வட்ட மேஜை மாநாட்டிற்குச் சென்றிருந்த சீனிவாச சாஸ்திரியும், தேஜ் பகதூரும் காந்தியடிகளையும் மற்ற முன்னணித் தலைவர்களையும் அலகாபாத்தில் சந்தித்து மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றி தெரிவித்தார்கள். காந்தியடிகள் வைசிராய்க்கு மடல் எழுதி நேர்கான வேண்டுமென ஒருவர் கருத்துத் தெரிவித்தார். அண்ணலுக்கு அந்தக் கருத்து ஏற்புடைத்தாகிவிட்டது. டெல்லியில் இர்வின் பிரபுவை காந்தியடிகள் சந்தித்துப் பேசினார். கருத்துப் பரிமாற்றத்திற்காகச் செயற்குழு உறுப்பினர்களும் டெல்லி சென்று தங்கியிருந்தார்கள்.

இர்வின் பிரபு சட்ட மறுப்பை அடியோடு கைவிடுமாறு கோரினார். ஆனால் சட்ட மறுப்பு ஒன்றுதான் மக்களுக்குள்ள ஒரே கருவி. எனவே அதனை தூக்கி எறிவது என்பது கணவிலும் கருத முடியாதது என்றார் அண்ணல். ஆனால் சட்ட மறுப்பைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அவர் ஒப்புக் கொண்டார். ஆனால் இர்வின் பிரபு, 'தற்காலிகம்' என்ற சொல்லை விரும்பவில்லை. அண்ணலோ தங்களுக்குள்ள உரிமையை, ஆயுதத்தை நிரந்தரமாக விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. முடிவில் 'நிறுத்தப்பட்டது' என்ற சொல்லை இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டார்கள். அன்று ஏற்பட்ட உடன்பாட்டின்படி சொந்த உபயோகத்திற்கு உப்புக் காய்ச்சும் உரிமையும், மறியல் செய்யும் உரிமையும் மக்கள் பெற்றனர்.

காந்தி-இர்வின் உடன்பாட்டின்படி போராட்டம் (சட்ட மறுப்பு) நிறுத்தி வைக்கப்பட்டதால், பேராயத்திலிருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் தேசியப்

போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு, இயக்க அரங்கை எட்டிப் பார்த்தனர். "அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகளான" இவர்களைப் பற்றி "சமய சஞ்சீவிகள், அதிகாரமும் வெற்றியும் யாரைச் சார்கின்றனவோ அவர்கள் பக்கம் சேர்ந்து கொண்டு, அவர்களைப் புன்னகையுடன் வரவேற்பார்கள். இவர்களில் பெரும் பாலோர், இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் வேர்கள் போன்றவர்கள். இந்தியாவில் வேறு எந்த ஆட்சி ஏற்பட்டாலும், அதற்கும் இவர்கள் தூண்களாக விளங்குவார்கள்" என்று அடையாளம் காட்டினார், ஜவகர்லால் நேரு. 'சமய சஞ்சீவிகள்' ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென்றில்லாமல் ஒவ்வொரு கால கட்டத்திலும் தலையெடுத்து ஆதாயம் பெற்றுக் கொண்டுதானிருக்கின்றார்கள்.

*1931*-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் ஐந்தாம் நாள் ஏற்பட்ட காந்தி-இர்வின் ஒப்பந்தம் ஜவகர்லால் நேருவுக்கு உடன் பாடாக இல்லை. போராட்டத்தை நிறுத்திவைத்ததை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு நேருவால் உவப்போடும், ஊக்கத்தோடும் செயல்பட முடியவில்லை. போராட்டத்தை நிறுத்தி விட்டதால், மக்களிடையே ஏற்பட்டிருந்த கிளர்ச்சி மனப்பாண்மை மங்கிப் போகுமென அவர் வருத்தப்பட்டார். இந்த ஒப்பந்தத்தால் அதிக நன்மையடைந்தது அரசுதான் என்பது அவர் கணிப்பு. நேருவுக்கு ஏற்பட்டிருந்த முகமாற்றத்தை அண்ணல் கவனிக்கத் தவறவில்லை. அவரது சோர்வைக் களைய எண்ணி, அண்ணல் நேருவுக்கு விளக்கம் கூற முற்பட்டார். காந்தியடிகளின் விளக்கம் ஏற்கத்தக்கதாக இல்லாவிடினும், முடிந்துபோன செயலுக்காக முரண்பட்டு நிற்பதில் பயனில்லை என்று நேரு கருதினார். எனவே காந்தியடிகளின் விளக்கத்தை ஏற்றுச் செயல் பட வேண்டியவரானார்.

காந்தியடிகளின் கொள்கைகளும், நடவடிக்கைகளும் நேருவுக்கு உடன் பாடில்லாதவைகளாக இருந்தாலும், அவரால் காந்தியடிகளிடம் இணங்கிப் போகாமலிருக்க முடியவில்லை. அண்ணலின் சொற்களை அவரால் தள்ளி நடக்க முடியவில்லை. காந்தியடிகள் காட்டிடும் வழியில் செல்வதைத் தவிர, அவரால் மீறி நடக்கவே இயலவில்லை. தனது அறிவுக் கெட்டாத ஒரு ஈர்ப்புத் திறன், தன் வயப்படுத்தும் தனியாற்றல் அண்ணல் காந்தியடிகளுக்கு இருப்பதை நேரு உணர்ந்தார். இந்த ஆற்றல்தான் நேருவைக் கட்டுப்படுத்தி காந்தியடிகளோடு இணைந்து செயல்பட வைத்தது. அறிவியல் சிந்தனையும், பகுத்தறிவுப் பார்வையுமுடைய நேருவே காந்தியடிகளின் ஈர்ப்பு சக்திக்கு இணங்க நேர்ந்ததென்றால், பாமரமக்களின் காந்தி பக்திக்குக் காரணம் தேட வேண்டுமா என்ன?

ஈர்ப்புச்சக்தி என்பது அண்ணலிடம் மட்டுமல்ல, நேருவிடமும் இருக்கத்தான் செய்தது. இதனால்தான் முரண்படும் நேருவிடம் காந்தியடிகள் தனிப்பற்று வைத்து, தந்தை பாசத்தோடு அரவணைத்து தன்னோடு அழைத்துச் செல்ல வைத்தது. முரண்படுபவர்கள் உடன்பட்டு உழைத்தது இந்த ஈர்ப்பு சக்தியால்தானோ?

உடன்பாட்டுக்கொப்ப சட்ட மறுப்புப் போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது. சட்ட மறுப்புப் போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை அரசு விடுதலை செய்தது. ஆனால் எல்லாக் கைதிகளும் விடுதலை செய்யப்படவில்லை. காந்தியடிகளோ இர்வின் பிரபுவைச் சந்தித்த போதெல்லாம் கைதிகளின் விடுதலையை வற்புறுத்தி வந்தனர். ஆனால் அரசு அண்ணலின் கோரிக்கையை ஓட்டைப் பையில் போட்டுக் கொண்டிருந்தது. எல்லாரையும் விடுதலை செய்ய வேண்டுமென்ற காந்தியடிகளின் கோரிக்கையை அரசு ஏற்க மறுத்து விட்டது.

டெல்லி சட்ட சபையில் வெடிகுண்டு வீசியதற்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பகத் சிங்குக்காகவும் காந்தியடிகள் வாதாடிப்பார்த்தார். தூக்குத்தண்டனையை மாற்ற வேண்டுமென்ற காந்தியடிகளின் கோரிக்கையை அரசு புறந்தள்ளி விட்டது. மேலும் ஒருபடி முன்னேறி கராச்சி பேராயம் (காங்கிரஸ்) கூடவிருந்த சமயத்தில், பிரிட்டிஷ் ஆட்சி அந்த மாவீரனை, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடரியைப் பற்றி உலுக்கியவனை, தீரன் பகத்சிங்கை தூக்கிலேற்றித் தனது ஆணவத்தை உலகுக்கு அறிமுகப்படுத்திக் காட்டியது.

பிரிட்டிஷ் ஆட்சியை ஒழித்துக்கட்ட 'நவஜவான் பாரத சபை' என்ற அமைப்பை ஏற்படுத்தியவர் பகத்சிங். இவர் 1907-ஆம் ஆண்டு அக்டோபர் முதல்நாள் பிறந்தவர். இவரது தந்தை கிஷன் சிங்கும் பொதுத் தொண்டில் ஈடுபட்டிருந்தவர் தான். 1928-ல் உருவான சோஷலிஸ்ட் குடியரசு சங்கத்தில் தனது அமைப்பை இணைத்து விட்டார். பாஞ்சால சிங்கம் லாலாலஜபதிராயின் மரணத்திற்குக் காரணமான சாண்டர்சை பழிவாங்கிய குழுவில் இவரும் இருந்தார் என்பதைவிட இயக்கினார் என்பதே பொருத்தம். மத்திய சட்ட சபையில் 8-4-1929-ல் குண்டு வீசி அவையின் கவனத்தை ஈர்த்தவர். புகழ்பெற்ற லாகூர் சதி வழக்கில் 7-10-1930-ஆம் ஆண்டு ராஜகுரு, சுகதேவ் ஆகிய புரட்சி வீரர்களோடு இவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. அந்தத் தண்டனைதான் கராச்சி பேராயக் கூட்டத்திற்கு முன் 23-3-1931-ல் பிரிட்டிஷ் ஆட்சியால் நிறைவேற்றப்பட்டது.

கராச்சி பேராய மாநாடு, 1932-ஆம் ஆண்டு, மார்ச் மாதம் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் கூடியது. காந்தி-இர்வின் ஒப்பந்தம் பற்றிய தீர்மானத்தை முன்மொழியும்படி காந்தியடிகள் நேருவைக் கேட்டுக் கொண்டார். செயற்குழு இந்தத் தீர்மானத்தை முன்னரே

ஏற்றுக் கொண்டு விட்டது. ஆனால் நேருவுக்கோ இந்த ஒப்பந்தமே உடன்பாடில்லாதது. அந்தத் தீர்மானத்தை எப்படி முன் மொழிவது? தீர்மானத்தை முன் மொழிவது, அல்லது நேரடியாக எதிர்ப்பது என்ற இரண்டிலொன்றைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருந்தார் நேரு. முரண் பாட்டிலும் உடன்பாடு காணும் நேரு, வழக்கம்போல் அண்ணலின் கட்டளையை ஏற்றுத் தீர்மானத்தை முன் மொழிந்தார். முரண்பட்ட, உடன்பாடில்லாத கருத்தைக் கூட முரட்டுத்தனமாக எதிர்க்கும் பழக்கம் அவருக்கு ஆரம்பத்திலிருந்தே கிடையாது. கராச்சி மாநாட்டில்தான் முதன் முதலாகப் பொருளாதாரக் கொள்கைத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. சமதர்மச் சாயல் படிந்த அந்தத் தீர்மானத்தை விளக்கிடும் பணியை உவப்போடு ஏற்றுச் செப்பமாகச் செய்தார்.

நாட்டின் அடிப்படைத் தொழில்களை நாட்டுடைமை யாக்க வேண்டும். ஏழைகளின் சுமையைக் குறைத்து அதனைச் செல்வந்தர்கள் மேலேற்ற வேண்டும் என்ற பொருளாதாரத் தீர்மானம் இரஷியப் பொதுவுடைமைக் கொள்கையின் ஊடுருவல் என அரசும், அரசின் ஆல வட்டங்களும் புலம்பின. தங்கள் ஓலத்தைப் பொது மக்கள் காதுகளில் புகுத்தவும் அவை தவறவில்லை. இந்தத் தீர்மானத்தை எம். என். ராய் தயாரித்தளித்ததாகக் கூட மறைமுகமாகக் குறிப்பிட்டெழுதினார்கள். உண்மை யில் தீர்மான வரைவைக் காந்தியடிகளின் ஒப்புதலுடன் நேரு தான் தயாரித்தார்.

ஜவகர்லால் நேரு தனது துணைவியாரின் மருத்துவத் திற்காக வெளிநாடு சென்ற போது, மாஸ்கோவில்தான் எம். என். ராயைச் சந்தித்தார். ராயின் அறிவாற்றலை அறிந்த நேரு அவர்பால் பெரு மதிப்புடையவராக இருந் தாரேயன்றி, அவருடைய சித்தாந்த சீடராக மாறி விட வில்லை. ச ம நீ தி ச் சிந்தனையாளர்களும், பொது

வுடைமைக் கொள்கையும் இந்தியருக்கும், இந்திய மண்ணுக்கும் அறிமுகமில்லாதவை, தோன்ற முடியாதவை என்று ஆட்சியாளர்கள் தவறான கணிப்பில் இருந்தார்கள். அந்தச் சிந்தனையும், செயலும் இந்தியாவில் தென்பட்டால் அதனை இறக்குமதி எண்ணமாகவே அவர்கள் கருதினார்கள். நேருவின் நெஞ்சில் சமநீதி வித்து இளமைக் காலத்திலேயே ஊன்றப்பட்டு, அவரது உலகியலறிவால் ஊட்டம் பெற்று வளர்ந்து வந்திருப்பதை அவர்களால் அறிய முடியாமற் போனது வியப்புக்குரியதல்ல.

கராச்சி மாநாட்டிற்குப் பிறகு நேரு, தனது மனைவி கமலா, மகள் இந்திராவுடன் இலங்கை சென்று நுவரேலியாவில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டார். வாழ்க்கையில் அவர் துய்த்த முழுமையான ஓய்வு, விரும்பிய தனிமை ஆகியவற்றை இலங்கையில் அவர் பெற்றார். ஓய்வுக்குப் பின்னர் அவர்கள் கன்னியாகுமரி வந்தார்கள். அங்கிருந்து தென்னகத்தில் சிற்றரசுகளான கொச்சி, மைசூர், ஐதராபாத் ஆகிய நகரங்களுக்கும் சென்று தங்கினார். ஏழுவாரப் பயணத்தின் முடிவாக நேரு, குடும்பத்தோடு பம்பாய் போய்ச் சேர்ந்தார்.

நேரு மேற்கொண்ட இந்தப் பயணத்தில் முழு ஓய்வு கிடைத்தது. மகிழ்ச்சியைக் கொடுத்தது. நாட்டின் தென்பகுதியில் நிலவிய சமூக நிலைமைகளை அறிந்து கொள்ளவும் இந்தப் பயணம் அவருக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. குறுநில மன்னர்களின் ஆட்சியில் குடிமக்கள், பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கொஞ்சமும் குறையாத அளவுக்குக் கொடுமைப்படுத்தப்பட்டு, சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதையும் அவர் நேரில் பார்த்துத் தெரிந்து கொண்டார். மக்களுக்கு உலகத் தொடர்பு கிடைத்து, அவர்கள் விழிப்புணர்வு பெற்றுவிடக் கூடாதென்பதற்காக அவர்களை அறியாமை இருளில்

அடைத்து வைத்திருந்ததை அவர் தெரிந்து கொண்டார். குறிப்பாக இந்த வகையில் ஐதராபாத் நிஜாம் மன்னர் அதிக முன்னெச்சரிக்கையோடு நடந்து கொண்டிருந்ததையும் அவர் உணர்ந்தார்.

நேருவின் வருகைக்காகப் பல பிரச்சினைகள் காத்துக் கொண்டிருந்தன. வங்கத்தின் கொந்தளிப்பு, வகுப்புக் கலவரங்கள், டெல்லி உடன்பாட்டு மீறல் குற்றச் சாட்டுக்கள் எனப் பட்டியல் நீண்டது. வங்க மக்களும் சீக்கியர்களைப் போலவே உணர்ச்சி மிக்கவர்கள். வங்கத்தில் இந்தியாவின் பிறபகுதிகளைவிட அந்தக் கால கட்டத்தில் மக்கள் கொந்தளிப்பிலிருந்தார்கள். அரசின் அடக்கு முறையும் பல அவதாரங்கள் எடுத்துத் தாண்டவமாடியது. தீரம்மிக்க வங்க மக்களின் எதிர்ப்பை ஒடுக்குவதென அரசு வெறியோடு செயல்பட்டது. அவசரச் சட்ட வேட்டை நாய்களை அவிழ்த்து விட்டது.

வங்கப் பிரச்சினையைப் பேராயத்தால் தீர்க்க முடியவில்லை. தலைவர்கள் செய்வதறியாது திகைத்துக் கிடந்தார்கள். ஐக்கிய மாகாணத்தில் நிலக்கிழார்களும், அரசும் குடியானவர்களைக் கசக்கிப் பிழிந்தனர். மிதிபட்ட புழுவாக விவசாயிகள் அங்கே நலிவுற்றுக் கிடந்தார்கள். சட்ட மறுப்பைக் கைவிட்ட ஒப்பந்தம் காரணமாக, அரசுக்கெதிராக நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பைப் பேராயம் இழந்திருந்தது.

கராச்சி மாநாட்டிலேயே இரண்டாவது வட்டமேஜை மாநாட்டிற்கு, காந்தியடிகளை மட்டில் ஒரே பிரதிநிதியாக அனுப்பி வைக்க முடிவெடுக்கப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய அமைதியற்ற சூழ்நிலை, அண்ணல் வட்ட மேஜை மாநாட்டிற்குச் செல்வதை உறுதியற்றதாக்கியிருந்தது. எனவே சிம்லாவில் அரசு அலுவலர்களோடு பேசி உள்நாட்டுப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண

அவர் முயன்றார். பேச்சு வார்த்தையில் தனக்கு உதவியாக இருப்பதற்காக நேருவையும் அண்ணல் சிம்லாவுக்கு அழைத்திருந்தார். வட்ட மேஜை மாநாட்டிற்கு செல்வதா இல்லையா என்ற மன ஊசலாட்டம் ஒரு முடிவுக்கு வந்தது. காந்தியடிகள் மாநாட்டில் கலந்து கொள்வதென்ற முடிவுக்கு வந்து விட்டார்.

சிம்லாவில் பணி நெருக்கத்தால், பம்பாய் செல்லும் வண்டியைக் காந்தியடிகள் தவற விட்டார். எனவே தனி தொடர் வண்டி மூலம் அவர் பம்பாய் வந்து சேர்ந்தார். 1931 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், இருபத்தொன்பதாம் நாள் கானல் 'ரஜபுதனா' என்னும் பயணிகள் கலத்தில் அண்ணல் இலண்டன் மாநகருக்குப் பயணமானார். காந்தியடிகளை, மகாதேவ தேசாய், பியாரிலால் தேவ தாஸ் காந்தி, மீரா பென், ஜி. டி. பிர்லா, மாளவியா, சரோஜினி தேவி, மற்றும் நேரு முதலானோர் அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள். அண்ணல் செப்டம்பர் பன்னிரண்டாம் நாள் இலண்டன் சென்றடைந்தார்.

வட்ட மேஜை மாநாடு அடை காக்கும் கோழியைப் போல், பயன் ஏதுமின்றியே மூன்று மாத காலம் உட்கார்ந்து எழுந்தது. இந்த மாநாட்டிற்கு கவிக்குயில் சரோஜினி தேவியாரும் இந்திய மகளிர் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். மாநாட்டின் பெயருக்கேற்ப விளைவும் பெரிய வட்டமாகவே இருந்தது.

காந்தியடிகள் இலண்டன் சென்றபின் இந்தியாவில் பல சிக்கல்கள் ஏற்பட்டு விட்டன. வங்க இனக்கலவரம் கட்டுப்படுத்த முடியாத நிலையை எட்டியிருந்தது. உட்கட்சிப் பூசல்களுக்கும் குறைவில்லை. குடியானவர்கள் பிரச்சினையில் நேரு தீவிரமாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். சிறையுள் பாதுகாப்புக் கைதிகள் கொடுமைக்காளாகிக் கொண்டிருந்தார்கள். குடியானவர்களோ வரி கொடா இயக்கத்தைத் துவக்கத் துடித்துக் கொண்டிருந்

தார்கள். அன்றைய நிலையில் குடியானவர்களுக்குப் போராட்டம் தள்ளிப் போட முடியாததாக இருந்தது. காந்தியடிகள் இலண்டனிலிருந்து திரும்பி வரும்வரை, போராட்டம் எதையும் துவக்கக் கூடாதென்பதுதான் தலைவர்களின் எண்ணமாக இருந்தது. அரசு மட்டில் எதற்காகவும், யாருக்காகவும் காத்திராமல் தன் வேலையைத் துவக்கியிருந்தது. அவசரச் சட்ட ஆலாபனையோடு கைதுகள் நடைபெற்றன். இதன் மூலம் அறிவிக்கப்படாத வரி கொடா இயக்கத்திற்கு வழிகோலியது அரசு.

வன்முறையைப் போல் வளர்ச்சி வேகமுடையது வையகத்தில் வேறில்லை. வங்கத்தின் நிலைமையைக் கண்டு மற்றவர்களைப் போல் நேருவால் வாளாவிருக்க முடியவில்லை. அவர் கல்கத்தா சென்று பல தரப்பினரையும் சந்தித்துப் பேசினார். பொதுக் கூட்டங்களிலும் சமூக ஒற்றுமையை வலியுறுத்திப் பேசினார். இனக் கலவரத்தில் ஈடுபட்டவர்களை அவர் வன்மையாகக் கண்டனம் செய்தார்.

நேருவின் பேச்சு, வன்முறை ஆர்வலர்களுக்குக் கசப்பாக இருந்தது. பிரச்சினையைத் தீர்க்க வன்முறை ஒன்றுதான் வழியென நம்பிச் செயல்பட்டுக் கொண்டிருந்த இளைஞர்களை, நேருவின் பேச்சு பாதிப்பதாக இருந்தது. அதனால் சினமுற்ற இரு இளைஞர்கள் நேருவைச் சந்திக்க வந்தனர். நேரு அந்த நேரம் ஊருக்குத் திரும்பும் ஆயத்தத்தில் ஈடுபட்டிருந்தார். நேருவைச் சந்தித்த இளைஞர்கள்; அவர் வன்முறைக்கெதிராகப் பேசியதற்குக் கண்டனம் தெரிவித்தார். இனியும் அதே முறையில் பேசினால், மற்றவர்களுக்கு வன்முறை என்ன பரிசளித்ததோ, அதையே நேருவுக்கும் கொடுக்கப்படுமென எச்சரித்துச் சென்றனர்.

ஒவ்வொரு கால கட்டத்திலும் இப்படிப்பட்ட இளைஞர்களை உலகம் கண்டு கொண்டுதானிருக்கிறது. தன்னலமற்ற வீர இளைஞர்களின் சிந்தனையும், செயலும் ஒழுங்கு படுத்தப்படாத தலை முடியைப் போல் அலங்கோலப்பட்டுக் கிடக்கிறது. ஒப்புயர்வற்ற சிற்பமாகச் செதுக்கக் கூடிய கருங்கற்களை, சில தீய சக்திகள் சில்லுகளாக உடைத்து, மத, இன சாலை உருளைகளால் மிதிபட வைத்து விடுகின்றன. இப்படிப்பட்ட இளைஞர்களுக்காக நேரு இரக்கப்பட்டார். குழலாக வேண்டியவர்கள் இப்படிக் குண்டாந்தடியாகி விட்டார்களே என அவர் மனம் நொந்தது. அவர்களைச் சரியான வழித் தடத்திற்குக் கொண்டு வந்து, நடை பழக்கத் தனக்கு நேரமில்லையே என அவர் வருந்தினார்.

அலகாபாத் திரும்பிய நேரு, ஆண்டிறுதியில் இரண்டாவது விவசாயிகள் மாநாட்டை முடித்துக் கொண்டு கருநாடக மாநிலச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள எண்ணியிருந்தார். தனது நண்பர் டாக்டர் ஹர்திகரின் நீண்ட நாள் வேண்டுகோளை நிறைவேற்றவே அவர் கருநாடகச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். உடல் நலங்குன்றியிருந்த கமலாவை அழைத்துக் கொண்டு ஜவகர்லால் நேரு பம்பாய் பயணமானார். பம்பாய் மருத்துவ மனையில், கமலாவைச் சேர்த்து மருத்துவத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து விட்டு அவர்மட்டில் கருநாடகம் வந்து சேர்ந்தார்.

கருநாடக மாநிலம் ஹூப்ளியில் சேவாதள நிகழ்ச்சிகள் பலவற்றில் டாக்டர் ஹர்திகருடன் நேரு கலந்து கொண்டார். தனித்தியங்கி வந்த சேவா தளத்தை, பேராயக் கட்சியின் தொண்டர் படைப் பிரிவாக்கி, அதன் நிர்வாகிகளாக நேருவும், ஹர்திகரும் பொறுப்பேற்றுச் செயல்பட்டார்கள். கருநாடகச் சுற்றுப் பயணம் முடிவுக்கு வரும் முன்னரே, வடக்கே அரசாங்கத்தின்

கெடுபிடிகள் கொடிகட்டிப் பறக்கும் செய்தி நேருவுக்கு எட்டியது. சிக்கல் நிறைந்த இந்த நேரத்தில், பிரச்சனையுள்ள இடத்தில் தான், தனது தோழர்களுக்குத் துணையாக இருக்க வேண்டியதன் அவசியத்தை டாக்டர் ஹார்திகருக்குத் தெரிவித்தார். புருஷோத்தம்தாஸ் தாண்டனும் மற்ற முன்னனியினரும் கைது செய்யப்பட்ட பின்னரும் தன்னால் கருநாடகத்தில் தங்கியிருக்க முடியாதென்பதை நண்பருக்குத் தெளிபடுத்தி, அலகாபாத் திரும்ப ஆயத்தமானார். அங்கோ காந்தியடிகளின் வருகை, எட்டாவது மாநாடு, செயற்குழுக் கூட்டம் என்று பணிகள் நேருவின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தன.

கண்ணியை விரித்து விட்டுக் காத்திருக்கும் வேடனைப் போல் அரசும் காத்திருந்தது. நேருவுக்கெதிராக, அவர் பணியாற்றுவதை முடக்கும் நோக்கத்தோடு தடை ஆணைகளைத் தயாரித்து வைத்திருந்தது அரசு. வேட்டைக்குப் போன கணவன் வீடு வரும் வேளைக்காகக் காத்திருக்கும் மனைவி நிலையில் அரசு அதிகாரிகள் இருந்தனர். சியோக்கி தொடர் வண்டி நிலையம் தொடங்கி, நேரு வீடு வந்து சேரும் வரை அரசின் ஆணைகள் ஒன்றன் பின் ஒன்றாக நேருவிடம் சேர்ப்பிக்கப் பட்டன. அரசு நேரு இயக்கப் பணிகளில் ஈடுபடுவதைத் தடுக்க எவ்வளவு முன்னெச்சரிக்கையாகச் செயல்பட்டிருக்கிறது?

"நேரு அலகாபாத் எல்லையை விட்டு நகரக்கூடாது, பொதுக் கூட்டத்திலும், விழாக்களிலும் கலந்து கொள்ளவோ, பேசவோ கூடாது. பத்திரிகைகளுக்குச் செய்தி ஏதும் தரக் கூடாது. அறிக்கை ஏதும் விடக் கூடாது." இப்படி அரசு, நேரு மீது கட்டுப்பாடுகளை அடுக்கி வைத்தது. இப்படிப்பட்ட தடைகளை நேருவோடு நிறுத்திக் கொள்ளாமல், வேறு சில தலைவர்களுக்

கும் விதித்திருந்தது. தடை ஆணையைப் பிறப்பித்த நடுவருக்கு (மாஜிஸ்டிரேட்) நேரு மடல் ஒன்றை எழுதினார்.

"நான் எதைச் செய்யலாம், எதைச் செய்யக் கூடாதென்பது குறித்து குற்றவியல் நடுவரிடமிருந்து ஆணையைப பெற விரும்பவில்லை. நான் சார்ந்திருக்கும் மகத்தான இயக்கத்தின் ஆணைக்கு மட்டுமே கட்டுப் பட்டவன். வேறு எவர் அதிகாரத்தையும் நான் அங்கீகரிக்க மாட்டேன். என் கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதிலிருந்து நான் விலகப் போவதில்லை. திட்டமிட்டப்படி என் பணிகளைத் தொடரத்தான் போகி றேன். நடப்புக் கிழமையில் காந்தியடிகளைச் சந்திக்க வும், செயற்குழுவில் பங்கேற்கவும் நான் பம்பாய் செல்வதைத் தவிர்க்கப் போவதில்லை" என்று அந்த மடலில் நேரு குறிப்பிட்டிருந்தார்.

காந்தியடிகள் வரும் வரை அரசாங்கத்துடன் எவ்வித மோதலிலும் ஈடுபடக் கூடாதென்ற காரணத்தைக் கருத் தில் கொண்டு முன்னரே திட்டமிட்ட எட்டாவா விவசாயிகள் மாநாடும் தள்ளி வைக்கப்பட்டது. ஷர்வானியுடன் ஜவகர் அண்ணலை வரவேற்கவும், செயற்குழுவில் கலந்துக் கொள்ளவுமாக டிசம்பர் இருபத்தாறாம் நாள் காலையில் பம்பாய் புறப்பட்டார். இரதக் கஞ்ச் தொடர் வண்டி நிலையத்தில் வண்டியை நிறுத்தி நேருவைக் கைது செய்து நைனிச் சிறைக்குக் கொண்டு சென்றார்கள்.

ஜவகர்லால் நேரு, 1932–ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் நான்காம் நாள் நடுவர் சோகன்லால் ஸ்ரீவஸ்தவா வால் விசாரிக்கப்பட்டார். ஐக்கிய மாகாண அவசர கால அதிகாரங்கள் பற்றிய அவசரச் சட்டவிதி 13–ன் கீழ் குற்றம் சுமத்தப் பட்டிருந்தது. நேரு வழக்கு நடவடிக்கை களில் அக்கரைக் காட்டவில்லை. அரசின் நோக்கமும்,

செயல்பாடுகளும் உலகறிந்த ஒன்று. எனவே தன்னிலை விளக்கமாக சிறு அறிக்கையை மட்டில் ஜவகர் கொடுக்க முன் வந்தார். அதில் "எனது மாகாண கிசான் (விவசாயிகள்) உடன் பிறப்புக்கள் பற்றியும், குறிப்பாக எனது மாவட்டமான அலகாபாத் மாவட்ட பெருங்குடி மக்கள் பற்றியும் நான் அடையும் பெருமிதம் குறித்து இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகின்றேன்."

"வேளான்குடி பெருமக்கள் மூட்டியுள்ள புரட்சித் தீ இந்த நாட்டில் வெள்ளையர் ஆதிக்கமும், கொள்ளையும் சாம்பலாகும் வரை அணையப் போவதில்லை. இந்த நாட்டு மக்களின் குருதியைக் குடித்துக் கொழுத்திருக்கும் ஆதிக்கத்தை, நாட்டுக்குரியவரை நசுக்கி ஒடுக்கியுள்ள ஆட்சியாளர்களின் நடைமுறைகளை, மக்களின் உழைப்பைப் பறித்துக் கொண்டு, அவர்களை மாக்களாக நடத்தி வரும் இந்த ஆட்சியைப் புரட்சித் தீ சுட்டுப் பொசுக்கிவிடும். இதே இலட்சியத்திற்காக நானும் பல்லாண்டுக் காலமாக பாடுபட்டு வருகிறேன். என் உடலில் சொட்டு ரத்தம் இருக்கும் வரை எனது இலட்சியப் பயணம் தொடரும்."

சிறைக்குள் என்னைப் பூட்டி வைத்தாலும், என் மனம் கிராமங்களிலும், வயல் வெளிகளிலும் சுற்றிக் கொண்டிருக்கும். அங்கேதான் என் பாசத்துக்குரிய வேளாண் குடிமக்கள் வாழ்வும், உழைப்பும் நிலை கொண்டிருக்கிறது. அவர்களது இந்தப் போராட்டம் வெற்றி பெறும் வரை உடன்பாடோ, அமைதியோ ஏற்படப் போவதில்லை; என்றார்.

விசாரணைச் சடங்கை முடித்துக் கொண்டு, நேருவுக்கு இரண்டாண்டு கடுங்காவல் தண்டனையும், ரூபா ஐந்நூறு தண்டமும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. வழக்கம்போல் தண்டத் தொகையைச் செலுத்த நேரு மறுத்து, மேலும் ஆறு மாதக் கடுங்காவல் சிறைத் தண்

டனைக்குத் தன்னை இலக்காக்கிக் கொண்டார். அரசோ, தண்டத் தொகைக்காக நேருவின் உடைமைகளைக் கைப்பற்றி, ஏலத்தில் விற்றுத் தொகையை ஈடுகட்டிக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டது. 'பயோனீர்' 'லீடர்' ஆகிய ஏடுகளில் விளம்பரங்கூட செய்யப்பட்டது. நேருவின் மகிழுந்தை [Pleasure Car] டாக்டர் எல். சிங் என்பவர் ரூபா 1150/-க்கு ஏலம் எடுத்தார். ஏலத்தொகை முழுவதையுமே தண்டத்தொகை ரூ. 500/-க்கும் பிற செலவுகளுக்குமென எடுத்துக் கொண்டது அரசு.

1932-ஆம் ஆண்டு ஜனவரி நான்காம் நாள் இந்திய அரசியலில் புரட்சிப் புயலும், அடக்கு முறைச் சூறாவளி யும் வீசியது. ஆளவந்தோர் மக்களை ஆடு மாடுகளைப் பிடித்து பட்டியிலடைப்பதுபோல், சிறையில் அடைத்தார் கள். சிறை நிரம்பியது. தற்காலிகச் சிறைகளை ஏற்படுத்த வேண்டிய நிலைமை கூட ஆட்சிக்கு ஏற்பட்டது. அண் ணல் காந்தியடிகளும், பேராயத்தின் தலைவர் வல்லபாய் பட்டேலும் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப் பட்டனர். பலர் மாண்டனர்.

காந்தியடிகள் இந்தியா திரும்புவதற்கு இரண்டு நாட் களுக்கு முன்னரே நேருவும், வேறு சில தலைவர்களும் கைது செய்யப்பட்டு விட்டனர். அண்ணல் காந்தியடிகள் வைசிராயுடன் பேச்சு நடத்த விரும்பி வேண்டியும், அவர் பேச்சு வார்த்தைக் கிணங்காமல் தவிர்க்க முறையற்ற முன் நிபந்தனைகளை விதித்துக் காந்தியடிகளின் நல் லெண்ணத்தை, நசுக்கி விட்டார். அத்துடன் நிற்காமல் காந்தியடிகளைக் கைதும் செய்து சிறையிலடைத்தனர்.

பேராயத்தோடு தொடர்புடைய சார்பு மன்றங்கள் நிறுவனங்கள் அவை மருத்துவமனைகளாயினும் சரி, பள்ளிகளாயினும் சரி அவையெல்லாமே பட்டியலிடப் பட்டுச் சட்ட விரோத அமைப்புக்களாக அறிவிக்கப் பட்டன. இந்த நடவடிக்கை மூலம் பல்லாயிரக்கணக்

கான அமைப்புக்களைச் சட்ட விரோத அமைப்புக் களென அறிவித்து, அரசு தனது சில்லரைப் புத்தியையும் சினத்தின் அளவையும் விளம்பரப்படுத்தியது. அந்த அளவோடும் அரசு நின்று விடவில்லை. உடைமை களையும், பணத்தையுங்கூட சட்டக் கரங்களால் பறித்துக் கொண்டது.

நேருவின் தங்கைகள் விஜயலட்சுமி, மற்றும் கிருஷ்ணா இருவரும் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைத் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டனர். கமலா நேரு மட்டில் உடல்நலங்குன்றியவராகப் படுக்கையில் இருந் தார். அதனால் பிரிட்டிஷ் அரசின் சிறை விருந்தாளி யாகும் சிறப்பு அவருக்குக் கொடுக்கப்படவில்லை.

முழக்கமிடும் மேகத்தை, சாட்டையைக் காட்டி அடக்க முயன்றதைப் போலிருந்தது ஆட்சியாளர்களின் நடவடிக்கை. அடிதடிக்கோ, துப்பாக்கிக் குண்டு களுக்கோ சிறைவாசத்திற்கோ அஞ்சியடங்கக் கூடியவர் களா? களங் காணத் துடித்தார்கள். விழிகளுக்கு நேராக விரலை நீட்டிக்கொண்டு, கதிரை மறைத்து விட்டதாகக் கற்பனை செய்துகொள்ளும் குழந்தைத் தனத்திற்கு நிக ராகவே அரசின் அநாகரிக நடவடிக்கைகள் இருந்தன.

பேராயத்தின் பெருமையைச் சீர்குலைக்க, அரசு கீழ்த் தரமான செயல்களில் ஈடுபடவும் தயங்கவில்லை. நாட் டில் நடைபெற்ற விரும்பத்தகாத செயல்களுக்கும் விளை வுகளுக்கும் பேராயமே பொறுப்பு என்பதுபோல் பொய்ச் செய்திகளைப் பரப்ப முற்பட்டது. அது மட்டுமல்ல விவ சாயிகளுக்குப் பேராயத்துடன் ஏற்பட்டிருந்த சார்புத் தன்மையையும், பற்றுதலையும் அழிப்பதற்காக, இயக் கத்தைத் தடை செய்து, தலைவர்களைச் சிறையிலடைத்த பின்னர், அரசே தன்னிச்சையாக, பேராயத்தின் தலை யீடோ, அதன் தலைவர்களின் முன் முயற்சியோ இல்லா மலேயே சில ஆதாயங்களை விவசாயிகள் பெற முடியு

மென எண்ண வேண்டுமென்பதற்காகத் திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொண்டது. அரசே முன்வந்து வரி தள்ளுபடிகளைச் செய்தது.

பெண்களைக் கைது செய்து நீண்ட நாள் சிறைத் தண்டனை விதித்து அச்சுறுத்திப் பார்த்தது. இதன்மூலம் பெண்கள் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தடுத்து விடலாம் என்பது அரசின் எண்ணமாக இருந்தது. இதில் வயது வேற்றுமை பாராட்டவில்லை அரசு. பெண்கள் சிறைக்குள்ளும் மிகக் கடுமையாக நடத்தப்பட்டனர். சிறைக் கொடுமைக்கஞ்சிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பின்வாங்கி விடவேண்டும். இந்தக் கொடுமைகளைக் கேள்விப்பட்டு, பொது மக்கள் போராட்ட திசையையே மறந்து விடவேண்டும் என்ற அடிப்படையில் அரசின் செயல்கள் அமைந்திருந்தன. நீருக்குள் இருக்கும் நாணயத்தை நேராக விரலை நீட்டித் தொடப் பார்க்கும் அறியாமை அரசிடம் தென்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், போராட்டத்திற்கு உதவி செய்தவர்களின் சொத்துக்களைப் பறித்துக் கொள்ளும் சட்ட முறையிலான கொள்ளையை அரசு அறிமுகம் செய்தது. இந்தக் கொள்ளைத் திட்டத்தின் கீழ் மோதிலால் நேரு பேராயத்துக்கு நன்கொடையாகக் கொடுத்திருந்த 'சுயராஜ்ய பவனைக்' கைப்பற்றிக் கொண்டது. தொடர்வண்டி நிறுவனத்தில் (Railway Company) ஜவகர்லாலுக்கு இருந்த பங்குகளையும், அவருடைய மகிழுந்துவையும் கூடக் கைப்பற்றி அரசு விற்று விட்டது.

அலகாபாத்தில் ஏப்ரல் ஆறாம் நாள் தொட்டு, பதிமூன்றாம்நாள் வரை தேசீய வாரம் கொண்டாடப்பட்டது. அப்போது நடைபெற்ற ஊர்வலத்தில் நேருவின் தாயார் சொரூப ராணியும் கலந்து கொண்டார்கள். ஊர்வலம் தடை செய்யப்பட்டது. அதில் கலந்து கொண்டவர்களைக் காவலர்கள் மிருக பலத்தோடு தாக்கினார்கள்.

இந்தத் தாக்குதலுக்கு நேருவின் அன்னையாரும் இலக்கானார்கள். அம்மையாரின் தலையில் பலமான அடி விழுந்தது. குருதி கொட்டியது. அவர் மயக்கமுற்று வீழ்ந்து விட்டார். காவலர்களின் வெறியாட்டம் முடிந்த பின்னர், அவர்களுள் ஒருவரே அந்த அம்மையாரைத் தனது வண்டியில் கொண்டுவந்து ஆனந்த பவனத்தில் சேர்த்துச் சென்றார்.

அம்மையார், மயக்கமுற்ற செய்தி தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, மக்களிடையே வதந்தியாகப் பரவியது. மக்கள் சினமுற்றனர். காவலர்களைத் தாக்க முற்பட்டனர். இதனால் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டால் சிலர் உயிர் துறக்கவும் நேர்ந்தது. தனது தாயார் தாக்கப்பட்ட செய்தி கேட்ட நேரு துடித்துப் போனார். நேரு மட்டில் அன்னையார் அடிக்கப்பட்ட நேரத்தில், அந்த இடத்திலிருந்திருந்தால், நிச்சயமாக அந்த நேரம் காந்தியடிகளின் கொள்கையை மறந்து விட்டிருப்பார். அடித்தவனும் அவனுடைய வீட்டுக்கு வண்டியில்தான் கொண்டு போகப் பட்டிருப்பான். இந்த மனநிலையை நேருவே தனது வரலாற்றில் தெளிவு படுத்தியுள்ளார்.

தன்னைவிட, தனது மதிப்புக்கும், பாசத்திற்குமுரியவர்களைத் தாக்குவதைப் பொறுத்துக்கொள்ள முடியாமற் போய்விடுவதை நேருவின் மனநிலை நன்கு புலப்படுத்துகிறது. நேருவின் அன்னையார் ஒரு மாதத்திற்குப் பின் பெரிய மண்டைக் கட்டோடு தன் மகனைப் பார்க்க சிறைக்கு வந்தார். அப்போது அவரது முகத்தில் தன் நாட்டுக்காகத் தன் பங்குக் கடமையை செய்த பெருமிதம் ஒளிர்ந்ததைப் பார்த்துப் பெருமிதம் கொண்டார் நேரு.

ஜவகர்லால் நேரு தமது ஆறாம் முறை சிறை வாழ்க்கையை ஒரே சிறையில் கழித்து விடவில்லை. நைனிச் சிறையில் நரற்பத்திரண்டு நாட்களைக் கடத்திய பின் நான்கு மாத காலம் பிரெய்லி மாவட்டச் சிறைக்கு

அவரை மாற்றினார்கள். அதன்பின் மலையடிவாரத்தி லுள்ள டோராடூன் சிறையில் தண்டனைக் காலம் முடியும் வரை வைத்திருந்தனர்.

வெள்ளையராட்சியின் மிகக் கொடிய ஆட்சிக் காலங் களில் குறிப்பிடத்தக்கதாக 1932—33-ஆம் ஆண்டைக் குறித்துக்கொள்ளலாம். மக்களின் இன்னலுக்கும், பாதுகாப்பின்மைக்கும் இந்தக் காலந்தான் உச்சக் கட்ட மாக வினங்கியது. இந்தக் காலத்தை இந்திய வரலாற்றின் இருண்ட காலமென்று கூறினாலும் பொருந்தும்.

அரசின் எதிர்ப்பும், தடுப்பும் கடுமையாக இருந்த போதும் சட்ட மறுப்பு இயக்கம் அடியோடு நின்று விட வில்லை. மழை நின்ற பின்னும் மரத்திலிருந்து சொட்டும் நீரைப் போல் இயக்கம் நடைபெற்றுக் கொண்டுதானி ருந்தது. ஆனால் பனியில் நனைந்த பறையைப் போல், சுருதி குறைந்திருந்ததென்பதையும் ஒப்புக்கொண்டேயாக வேண்டும். வழி நடத்தும் தலைவர்களில்லாமல் எந்தப் போராட்டமும், ஏன் போரும்கூட நீண்ட நாட்கள் நீடிக்க முடியாது. தகுதிமிக்க தலைமையும் தெளிவுமிக்க அறிவார்ந்த வழி காட்டுதலும் எந்தப் பொது வினைக்கும் இன்றியமையாதவைகளாகும்.

ஆதி திராவிடர்களுக்குத் தனித் தொகுதிகளைத் தேர்தலுக்காக அரசு ஒதுக்கத் தீர்மானித்திருந்தது: அந்த வேளையில் காந்தியடிகள் எரவாடா சிறையில் இருந்தார். அரசியல் சீர்திருத்தம் என்ற பெயரில் சமூக ஒற்றுமைக்கு வெடி வைக்கும் அரசின் திட்டம் அவர் கவனத்திற்கு வந்தது. இதை எதிர்த்து அண்ணல் சர். சாமுவேல் ஹோருக்கு மடல் எழுதினார். தனித் தொகுதி முடிவை அரசு கைவிடாவிட்டால் தான் சாகும் வரை உண்ணா விரதமிருந்து எதிர்க்கப் போவதாக அம் மடலில் குறிப் பிட்டார்.

காந்தியடிகளின் எச்சரிக்கையை அரசு பொருட் படுத்தத் தவறிவிட்டது. அதனால் 1932-ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதம் காலவரையறையற்ற உண்ணா நோன்பை மேற்கொண்டார். இதையறிந்த நேரு மிகவும் வருத்தமுற்றார், காந்தியடிகள் அதிக முக்கியமல்லாத நோக்கத்திற்காக உயிரைப் பணயம் வைக்கும் உண்ணா நோன்பை மேற்கொண்டு விட்டாரே என்று நொந்தார். புலிவேட்டைக்குப் புறப்பட்டவர்கள், முயலைத் துரத்திச் செல்லக்கூடாதென்பது நேருவின் எண்ணம். விடுதலைப் போராட்டம் மருகுவமையோ, மங்குவதையோ நேருவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ஆதங்கப்படலாமே யொழிய, தான் தலையிட்டுக் காந்தியடிகளின் முடிவை மாற்றிவிட முடியாதென்பதையும் நேரு அறிந்தே இருந்தார்.

அடிக்கும்போதும் அன்னையின் கால்களையே பற்றி யழும் குழந்தையைப் போல், அண்ணலின் முடிவும் கொள்கையும் உடன்பாடில்லாத நிலையிலும், நேரு காந்தியடிகளின் மாணவராகத்தான் விளங்கினார். என்ன தான் கருத்து வேறுபட்டிருந்தாலும், அண்ணலை மீறி நடக்க நேருவால் என்றுமே இயல்ாமற் போய்விட்டது.

தனது உண்ணா நோன்பு குறித்து நேருவின் கருத்தைக் கேட்டுக் காந்தியடிகள் 'தந்தி" அனுப்பி யிருந்தார். அதற்கு மறுமொழி விடுத்த ஜவகர்லால் "உண்ணா நோன்பிருக்கத் தாங்கள் முடிவு செய்ததைக் கேள்விப்பட்டதும் மனம் வருந்தினேன். ஒரே குழப்ப மாக இருந்தது. ஆனால் எல்லாம் நன்மையாக முடியும் என்ற நம்பிக்கையால் மீண்டும் அமைதி அடைந்தேன். மற்ற பிரச்சினைகள் விடுதலை இலட்சியத்தை மறைத்து விடுமோ என்றஞ்சுகின்றேன். சமய நோக்கோடு பார்க்க என்னால் முடியாது. தங்கள் முறைகளை மற்றவர்கள் சொந்த நலத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடும்

என்ற ஆபத்தும் இருக்கிறது. ஆனால் மந்திரவாதிக்கு அறிவுரை கூற நான் யார்?'' என்று குறிப்பிட்டிருந்தார்.

நேருவின் கொள்கைக் கோட்பாட்டின் மின்னல் கோடு போன்ற இந்தச் தந்திச் செய்தியில் நம்மால் நேருவின் முழு உருவத்தை நொடியில் கண்டுகொள்ள முடிகிறது. காந்தியடிகளின் உண்ணாநோன்பின் நோக்கம் நிறைவேறியது. பூனா உடன்படிக்கையால் காந்தியடிகளின் நோன்பு முடிவுக்கு வந்தது.

ஜவகர்லாலின் அன்னையார் கல்கத்தா மாநாட்டிற்குச் செல்லும் வழியில் கைது செய்யப்பட்டு அசன்சால் சிறையில் சில நாட்கள் வைக்கப்பட்டிருந்தார். நேருவின் தங்கைகள் முன்னரே போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றிருந்தனர். அன்னையார் அரசின் வன்முறைச் செயல்களுக்கெல்லாம் அஞ்சாமல், இயக்கப் ப்ணியில் தானும் ஈடுபட்டு, நாட்டுரிமைப் போராட்டத்திற்குத் தன் கடமையைச் செய்யத் துணிந்ததை கேள்வியுற்ற நேரு. "ஈன்றபொழுதில் பெரிதுவக்கும்'' தாய் நிலையைத் தானுற்றார்.

பாரத காவியத்தில் மூக்கிய நாயகனான பார்த்தன், வில்வித்தை பயின்ற காலத்தில், அம்பெய்தும் போது குருயிவின் தலையை மட்டில் பார்த்ததுபோல், நேருவும் நாட்டின் விடுதலை ஒன்றையே தலையாய குறிக்கோளாகக் கொண்டிருந்தார். அந்த நோக்கத்திற்கு மாறான, உதவாத அல்லது இலட்சியத்தைப் பலவீனப் படுத்தும் வேறு எந்த முயற்சியையும் எவர் மேற்கொண்டாலும், அதனைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் துன்புற்றார். இந்த மன உணர்வு இலட்சியவாதிகளுக்கு, அதிலும் வேகப்படக்கூடிய இளைஞர்களுக்கு ஏற்படுவது இயற்கைதானே !

ஆதிதிராவிடர் (தாழ்த்தப்பட்ட மக்கள்) குறித்த காந்தியடிகளின் நடவடிக்கைகள், சட்ட மறுப்புப்

போராட்டத்தையே ஓரங்கட்டி விட்டது; அண்ணலின் பார்வையும், பாதையும் வேறாக இருந்தது. ஒரு கோணத்தில் காந்தியடிகளின் நடவடிக்கைகள் அவசியமானதாகவும், அவசரமானதாகவும் கூடத் தெரிந்தன. பயணப் பாதையில் முள்ளிருந்தால் அதனை அகற்றித் தொடர வேண்டியது. அவசியந்தான். தொடர்ந்து வருபவர்களுக்குத் தொல்லை நேராதிருக்கும். அதற்காகப் பாதையில தென்படும் பரல் கற்களையெல்லாம் பொறுக்கியெறிந்து பாதையைச் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கலாமா? என்பது நேருவின் மனம் எழுப்பிய வினா.

மிதவாதிகள் என்னும் பொறுமைசாலிகள், இந்த நேரத்தில் அரசுக்கு ஆதரவான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அவர்களுள் மதிப்பு மிக்கவராகக் கருதப் பட்டவரும், மிகச் சிறந்த பேச்சாளியுமான சீனிவாச சாஸ்திரியார், ஆங்கில அரசின் அங்கீகாரம் பெற்ற பேச்சாளராகவே மாறி விட்டிருந்தார்.

இந்தியாவில் வெள்ளையராட்சி கையாண்ட கெடு பிடிகள், சிறையில் அது அரசியல் கைதிகளுக்குக் கொடுத்த கசையடிகள், அன்றாடம் பிறப்பித்த வாய்ப் பூட்டுச் சட்டங்கள் "இம்மென்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம்" என்னும் நிலைமைகள் ஏதும் அவர் கண்களில் படவில்லை. காதுகளில் விழவில்லை. இந்தியத் துணைக் கண்டத்திற்கப்பால் நடைபெற்ற அநீதிகளுக்காக அவர் உரக்க குரல் கொடுத்தார். "கூரையேறி கோழி பிடிக்க முடியாதவர், வானமேறி வைகுந்தம் செல்லப்பயணப்பட்டுக் கொண்டிருந்தார்.' உண்மையில் அவரது செயல், மக்கள் கவனத்தைத் திசை திருப்பும் முயற்சியாகவே இருந்தது. அவரது பேச்சையும், செயலையும் கண்டு நேரு வியப்புற்றார், வேதனைப்பட்டார்.

மூன்றாவது வட்ட மேஜை மாநாடும் வழக்கம் போல் ஒரு சடங்காக நடந்து முடிந்தது. ஆட்டமிழக்காமலும்,

ஓட்டமெடுக்காமலும் களத்தில் நீண்ட நேரம் நிற்கும் மட்டையாளர்களை (Batsman) இந்த மாநாடு நினைப் பூட்டுவதாக இருந்தது. அரசியல் அரங்கு எப்படி நோயாளியைப் போல் உணர்வு குன்றி, செயல்குன்றிக் கிடந்ததோ அப்படியே நேருவின் குடும்பமும் இருந்தது. நேருவின் அன்னையும், மனைவியும் உடல் நலன் பாதிக் கப்பட்டிருந்தனர்.

# குடும்பத்திற்காகக் கொஞ்சநேரம்

நேரு தனது ஒரே மகள் இந்திராவின் கல்வி முன்னேற்றத்திற்குத் தான் ஏதும் செய்யவில்லையே என்ற எண்ணம் அவரைக் கிள்ளியது. அன்னை சொரூபராணியும் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இதனால் அவரது தண்டனைக் காலம் முடியப் பதின்மூன்று நாட்களிருக்கும் போதே 1933-ஆம் ஆண்டு ஆகஸ்ட் முப்பதாம் நாள் நேரு விடுதலை செய்யப்பட்டார்.

அரசியல் களத்திலோ காட்சிகள் மாறிக் கொண்டிருந்தன. தனி மனிதர் சட்ட மறுப்பில் ஈடுபடப் பேராயம் அனுமதி வழங்கியிருந்தது. குஜராத் விவசாயத் தொழிலாளர்களுக்குச் சட்ட மறுப்புப் பயிற்சியளிக்க காந்தியடிகள் நடவடிக்கை எடுத்தார். அரசு அயர்ந்து கிடக்கவில்லை. அதன் அதிகாரக் கரங்கள் நீண்டன. சட்டங்கள் ஊக்கப்படுத்தின. சிறையோ தன் வாய் பிளந்து நின்றது. அண்ணல் மக்கள் மத்தியிலிருந்து பிரிக்கப்பட்டார். காந்தியடிகள் கைது செய்யப்பட்டுச் சிறையுள் வைக்கப்பட்டார்.

'வல்லவருக்குப் புல்லும் ஆயுதம்' காந்தியடிகள் சிறையிலிருந்தவாறே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இயக்கத்தை நடத்த விரும்பினார். அரசு அதற்கு அனுமதி தர மறுத்து விட்டது. பதிலாக அண்ணலும் தான் உண்ண மறுக்க வேண்டியவரானார். உண்ணா நோன்பால் உடல் தளர்ந்து போயிற்று. இதயத் துடிப்பின் வேகம் மிகவும் குறைந்து விட்டது. அது ஓய்வுக்காகப் போராடுவது போல இருந்தது. நிலைமை கைமீறிப் போய் விடுமோ என்றஞ்சும் நிலைகூட ஏற்பட்டது. அரசு விழித்துக் கொண்டது. சி. எப்ஃ...ஆண்ட்ரூஸ் என்பவரின் முயற்

சியால் அண்ணல் பிழைத்தார். இந்த உண்ணா நோன்பும், அதற்கான காரணமும் அவ்வளவு அவசியமானதாகவும், உடனடித் தேவையானதாகவும் நேருவுக்குத் தோன்றவில்லை. ஈ, எறும்பை எதிர்ப்பதற்கெல்லாம் ஈட்டியைத் தூக்குவது போலிருந்தது காந்தியடிகளின் செயல் என நேரு கருதினார்.

நேருவின் தாயார் இலட்சுமணபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவரை அருகிலிருந்து பார்த்துக் கொள்ளும் பணியிலீடுபட்டிருந்தார் அவர். இதே நேரத்தில் சில குடும்பக் கடமைகளையும் நிறைவேற்றிடத் திட்டமிட்டார். முன்னணித் தலைவராகவும், தீவிர அரசியல் வாதியாகவும், தடை செய்யப்பட்ட இயக்கத்தின் பொறுப்பாளராகவுமிருந்த நேருவை, சிறை எப்பொழுது வேண்டுமானாலும் தன்னிடம் அழைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பிருந்தது. எனவே குடும்பப் பணிகளை விரைந்து முடிக்க நேரு திட்டமிட்டார். தங்கை கிருஷ்ணாவின் திருமணத்தை 1933-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் மூன்றாம் வாரத்தில் நடத்திட முடிவு செய்தார்.

கலப்பு மணம் என்றாலே தாண்டிக் குதிக்கும் முற்போக்காளர்கள் இன்றும் உண்டு. ஆனால் நேரு-? கொள்கை வேறு, வாழ்க்கை வேறென்று, இருவழிப் பாதையில் பயணம் செய்தறியாதவர் அவர். தங்கை கிருஷ்ணாவின் சிறப்பு சாதிக் கலப்புதான். காஷ்மீரப் பார்ப்பனப் பெண் கிருஷ்ணாவை, பார்ப்பனரல்லாத இரஞ்சித், மிக எளிய முறையில் பதிவுத் திருமணம் செய்து கொண்டார். மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மட்டுமே திருமணத்திற்கு அழைக்கப்பட்டு கலந்து கொண்டார்கள்.

நேரு தனது தங்கையின் திருமண அழைப்பை புதுமையான முறையில் அச்சிட்டிருந்தார். இந்துஸ்தானி மொழியில், இலத்தீன் எழுத்துக்களைக் கொண்டு

அழைப்பு அச்சிடப்பட்டது. புதுமைகளை எல்லாரும் வரவேற்பார்கள் என எதிர்பார்க்க முடியாது. நேருவின் எழுத்துப் புரட்சி, பல தரப்பிலிருந்தும் எதிர்ப்பைத் திரட்டி வந்தது. இது அவருக்கு வியப்பை ஏற்படுத்தவில்லை. ஏனெனில் தனது முயற்சியின் பலாபலனை அளவிடவே அவர் விழைந்தார். தமிழில் எழுத்துச் சீர்திருத்தத்தைத் துணிவோடு அறிமுகப்படுத்திய தந்தை பெரியாரைப் போல் நேரு அன்று செயல்பட்டார்.

திருமணம் முடிந்தது. காசியில் பாரிச வாயுவால் பாதிக்கப்பட்டிருந்த தனது பழைய நண்பர் சிவப்பிரசாத் குப்தாவைப் பார்க்கச் சென்றார். காசியில் இலக்கிய மன்றத்தில் பேசிய போது, இந்தியை எளிமையான நடையில் எழுத வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இந்தியை விட, வங்காளி உட்பட வேறு சில இந்திய மொழிகள் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளதை அவர்தம் பேச்சில் குறிப்பிட்டார்.

இந்தியைவிட வங்காளி, மராட்டி, குஜராத்தி மொழிகளை(வடஇந்திய மொழியாக இருந்தபோதிலும்)உயர்வாகக் குறிப்பிட்டதை 'இந்தி'யர்களாலும், இந்தி மொழி ஏடுகளாலும் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. கண்டனக் கணைகளை அவை தொடுக்கத் தொடங்கி விட்டன. இந்தியர்களைப் பற்றியும், அவர்களது வெறியுணர்ச்சி பற்றியும் புரிந்து கொள்ள இந்த நிகழ்ச்சி நேருவுக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

காசி இந்து பல்கலைக் கழகத்திலும் மாணவர் கூட்டத்தில் நேரு பேசினார். அந்தப் பேச்சில் வகுப்பு வாதத்தை கண்டனம் செய்தார். இதன்பின் பேசுவதைக் குறைத்துக் கொண்டு, ஏடுகளுக்குக் கட்டுரைகளை எழுத அவர் நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டார். தணிக்கை முறை நடைமுறையில் இருந்த நேரம் அது. கருத்தை வலியுறுத்தத் தயங்காத போதும்,

எழுத்து முடக்கப் பட்டுவிடக் கூடாதென்ற கருத்தில் சற்று எழுத்து நடையில் வேகத்தைக் குறைத்தே எழுதி வந்தார். எந்த விளைவுக்கும் தான் அணியமாக இருந்த போதும், கட்டுரையை வெளியிடும் ஏட்டாசிரியர்களும், வெளியீட்டாளரும் விளைவுகளுக்குத் துணிந்தவர்களாக இல்லை என்பதை நேரு அறிந்திருந்ததால் அதற்கேற்பத் தன் எழுத்துப் பணியை அமைத்துக் கொண்டிருந்தார்.

நேருவின் கட்டுரைகளில் சமநீதிக் கொள்கைக் (சோசலிசம்) கருத்துகள் இடம் பெற்றதைக் கண்ட பேராயத்தார் அதிர்ச்சியுற்றனர். 'விடுதலை' என்ற கொள்கை ஒன்றில் மட்டுமே ஈடுபாடுடைய மேட்டுக் குடியினரும், நில உரிமையாளர்களும், தொழிலதிபர்களும் அடைக்கலப் பட்டிருந்த சரணாலயமல்லவா பேராயம்! அங்கே 'சமநீதி' என்ற சொல்லே இடி முழக்கமாகப் பட்டது.

பேராயக் கட்சியில் சுபாஷ் சந்திர போசு, வல்லபாய் பட்டேல், ஜவகர்லால் நேரு மூவரும் மற்ற தலைவர்களிலிருந்தும் மாறுபட்டவர்களாக, குமுகாயச் சிந்தனையும், செயலார்வமும், கொள்கைக் கோட்பாடுகளை விட்டுக் கொடுக்கக் கூடாதென்ற வேகமும், துடிப்புமுடையவர்களாக விளங்கினார்கள். சுபாஷ் சந்திரபோசு இவர்களுள் ஒருபடி உயர்ந்து நின்றார். எதற்காகவும், யாருக்காகவும் வளைந்து போகாத, நெகிழ்ந்து நிற்காத நெஞ்சுரமும், செயல்பாடும் உடையவராக இருந்தார்.

நேருவும், விடுதலைப் போராட்டத்திற்கு ஊறு விளைவிக்கும் மாற்றுப் பாதையில் செல்ல ஒருப்படாதவர். விஞ்ஞானப் பார்வையும், சமநீதி நோக்கோடு உலக அரசியலையும் அறிந்து நடந்தவர். முன்னவர் காந்தியோடு முரண்பட்டெதிர்த்தார். பின்னவர் அண்ணலோடு அடிக்கடி மாறுபட்டார். நேரு அளவுக்கு பட்டேல் காந்தியடிகளிடம் முரண்பட்டதில்லை.

விடுதலை இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் ஒப்பற்ற தலைவராக விளங்கிய காந்தியடிகள், அந்த இலக்கிலிருந்து விலகி கிளைப் போராட்டங்களில் ஈடுபடு வதையும், உண்ணா நோன்பை மேற்கொள்வதையும் எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியாமல் நேரு தவித்தாரோ, அவ்வாறே காந்தியடிகளும் நேருவின் முற் போக்குக் கருத்துக்களை ஏற்க முடியாமல் வருத்தப் பட்டார். குறிப்பாக நேருவின் சமதீதிக் கருத்து அவருக்கு உடன்பாடாக இல்லை. ஒரு நாளேட்டிற்கு (MADRAS MAIL) காந்தியடிகள் அளித்த நேர் முகத்தில் (Interview) "ஜவகரின் நேர்மையில் எனக்கு நம்பிக்கை யுண்டு. அவர் பேராயத்தைச் சமநீதி முதலிய புதுக் கொள்கை நெறியில் சிக்க வைக்கமாட்டார்". என்று ஒரு வினாவுக்கு பதில் கூறியுள்ளார்.

பேராயத்திற்குள் சமநீதிக் கொள்கையை கொண்டு வருவதையே காந்தியடிகள் நேர்மைக் குறைவான செயலாகக் கருதினார். சிக்கலென நினைத்தாரென்றால், அவரது குமுகாயப் பார்வைப் பரப்பையும், பாங்கையும் உணரலாம். பேட்டியில் காந்தியடிகள் நேருவைப் பற்றிக் கூறிய கருத்து அவருக்கு உடன்பாடாக இல்லை. காந்தியடிகள் பெருநிலக்கிழார்களையும் (ஜமீன்தார்கள்), நிலப்பிரபுக் கொள்கையையும் ஆதரித்துப் பேசியதும் நேருவுக்கு மன நெருடலைக் கொடுத்தது. நிலப்பிரபுக் களை அறங்காவலர்களாக (தர்மகர்த்தாக்கள்) நினைத் துக் கூடப் பார்க்க முடியவில்லை. எதிரெதிர் கருத்துக் களிருப்பினும் இணக்கம் என்பது இருவருக்கும் இயலக் கூடியதாகத் தானே இருந்து வந்திருக்கிறது.

பேராயத்தின் முழு நேர ஊழியரைப் போல் இயக்கப் பணியிலேயே ஈடுபட்டிருந்தார் நேரு. பொருளீட்டும் முயற்சி ஏதும் அவர் மேற்கொள்ளவில்லை. அந்த எண்ணமே அவருக்கு ஏற்படவில்லை. உண்மையில் பொருளாசை இல்லாதவராகவே இருக்க விரும்பினார்

என்றாலும் பொருத்தமே! பொருள் இருந்தால் அதனை அரசுதானே தனதாக்கிக் கொள்ள முந்தும்?

நேரு தனது தேவைகளைக் குறைத்துக் கொண்டார். ஆனால் வயதான தனது அன்னையார், 'இல்லாமை' என்ற இன்னலுக்கு ஆளாகக் கூடாதென்பதிலும், தனது மகள் இந்திரா பிரியதரிசினியின் கல்வி தடைபடக் கூடா தென்பதிலும் கவனமாக இருந்தார். தன்னைப் போலவே தனது மகளும் வெளிநாட்டில் கல்வி பயில வேண்டுமென அவர் விரும்பினார்.

கமலாவின் உடல் நிலை சீர்கெட்டு வருவதையும், நேரமின்மையால் முறையான மருத்துவம் பார்க்கா மலிருப்பதையும் எண்ணிப் பார்த்தார். மீண்டும் தான் கைதாவதற்கு முன் கமலாவின் மருத்துவ ஆய்வுக்கு ஆவன செய்ய வேண்டுமென எண்ணினார். இயக்கமோ வழிநடத்தும் தலைவர்களைச் சிறைக்கு அனுப்பிவிட்டு, திருவிழாவில் தாயைப் பிரிந்து விட்ட குழந்தையைப் போல் தவித்துக் கொண்டிருந்தது. சுதந்திர நாளான ஜனவரி 26, நெருங்கிக் கொண்டிருந்தது. (ஜனவரி 26-ஆம் நாளை ஆண்டுதோறும் சுதந்திர நாளாகப் பேராயம் கொண்டாடி வந்தது) சுதந்திர நாளை கொண் டாடுவதற்கான முன்னேற்பாடுச் செய்ய, இயக்க நண் பர்களோடு கருத்து பரிமாற்றம் செய்து கொண்டார். திட்டமிட்ட பணிகளை ஒவ்வொருவருக்கும் ஒதுக்கி விட்டு, வங்கத்திற்குச் சென்று வர நேரு முடிவு செய்தார்.

கல்கத்தாவில் பழைய நண்பர்களை நேரு சந்தித் தார். கமலாவை மருத்துவர்களிடம் காட்டினார். அவரது மருத்துவமே ஒரு தொடர்கதைதான். அங்கே நேரு மூன்றரை நாட்களே தங்கினார். இந்தக் குறுகிய காலத்தில், அவர் மூன்று பொதுக் கூட்டங்களில் பேசி னார். அங்குத் தலைவிரித்தாடிய வன்முறைகளையும், அரசு செய்த கொடுஞ் செயல்களையும் அவர் கண்டித்

துப் பேசினார். நேருவின் பேச்சை அரசு கோபத்தோடு குறித்து வைத்துக் கொண்டது மட்டுமல்ல குறியும் வைத்தது. காவல் துறை உடனடியாகச் செயலில் இறங்காததும் வியப்பாகவே இருந்தது. நேரு கல்கத்தாவிலிருந்து பாட்னா சென்று ராஜன் பாபுவைச் சந்தித்த பின் அலகாபாத் திரும்பினார்.

பீகார் பூகம்பத்தால் பாதிக்கப்பட்டு, இழப்புக்கும், இன்னலுக்கும் ஆளான மக்களுக்காக நேரு மிகவும் இரக்கப்பட்டார். உதவிக் கரம் நீட்டுமாறு மக்களுக்கு விண்ணப்பித்தார். மீட்புப் பணியில் அரசு காட்டிய அளவு கடந்த பொறுமையைக் கண்டித்தார். அலகாபாத் பூகம்பத் துயர் துடைப்புக் குழு, நேருவைப் பூகம்பம் பாதிக்கப்பட்ட பகுதிக்கு அனுப்பி வைத்தது. அங்கு அவர் இயல்புக் கேற்ப சுறுசுறுப்பாகச் செயல்பட்டார். தனது இன்னல்களைப் பொருட்படுத்தாமல், பாதிக்கப் பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். மீட்புப் பணியில் தானும் தயங்காமல் ஈடுபட்டார்.

துயரத்தை இறக்குமதி செய்த பூகம்பத்தின் பாதிப்பு வாய்விட்டுக் கூற முடியாத அளவுக்குக் கொடுமையான தாகவும், கடுமையானதாகவும் இருந்தது. ராஜன் பாபு தலைமையில் துயர் துடைப்புப் பணிக்குழு அமைக்கப் பட்டிருந்தது. வெளி மாவட்டத்திலிருந்தெல்லாம் தொண்டர்கள் வந்து ஆர்வத்தோடு பணியில் ஈடுபட் டனர். பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலுமிருந்தும் உதவிக்காக தொகை வந்து கொண்டிருந்தது.

பூகம்ப நிகழ்ச்சியைப் பற்றிக் காந்தியடிகள் வெளி யிட்ட அறிக்கையொன்றில், "பூகம்பமானது தீண்டாமை பாபத்துக்குத் தண்டனை" என்று குறிப்பிட்டதைப் படித்த நேரு' வியப்பும் வேதனையும் அடைந்தார். அறிவியல் தொடர்பில்லாத இப்படிப்பட்ட காரணங்

களை இயற்கை நிகழ்வுகளுக்கு ஏற்றிக் கூறுவதை நேரு வெறுத்தார். பகுத்தறிவுக்குப் பொருந்தி வராத காரணங் களைக் காந்தியடிகள் வெளியிட்டது, சிந்தனைத் தெளி வுடையவர்களால் வரவேற்கப்படவில்லை. அவர் கருத்து பாமரத்தனத்தைப் பயிரிட்டு, நல்ல விளைச்சலை அறுவடை செய்ய முயலும் ஏமாற்றுத்தனத்திற்கு நிக ரானதென்றே அறிவுலகம் கருதியது.

பீகாரில் பத்து நாட்கள் துயர்துடைப்புப் பணியில் ஈடுபட்டிருந்த நேரு, பிப்ரவரி பதினோராம் நாள் அலகாபாத் திரும்பினார். காத்திருந்த காவலர்கள், கல்கத்தா பேச்சுக்காகக் கைது செய்ய வாகனத்தோடு வந்து நின்று, கட்டளையைக் காட்டினார்கள். காக்கிச் சட்டைகளைக் கண்டவுடன் தனக்கு அழைப்பு வந்து விட்டதை அவர் தெரிந்துக்கொண்டார். அவரை அன்றே இரவோடிரவாக அழைத்துச்சென்று கல்கத்தா மாகாணச் சிறையில் வைத்தாகள். முற்றிலும் மாறான சூழ்நிலை யோடு விளங்கிய கல்கத்தா நீதி மன்றத்தால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. வங்க மக்களின் எழுச்சியை அடக்க அசாதரரண நடவடிக்கைகளையும், அவசரச் சட்டங்களையும் கண்ட ஆட்சி. நீதி மன்றத்தைக்கூட தனிமைப்படுதிதிக் காட்டும் வகையில் அமைந்திருந்தது.

தனது குறுகிய கால வங்கப் பயணத்தின்போது, மிதுனபுரியில் பட்டாளத்தார் அத்து மீறி நடந்துக்கொண் டதைக் கண்டித்து 1934ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதினேழாம் தேதி நிகழ்த்திய கல்கத்தா பேச்சு மறுநாள் ஆல்பர்ட் அரங்கில் பேசியது, மற்றும் மகேசுவரி பவனத் தில் பேசிய பேச்சு, ஆகியவற்றுக்காகவே நேரு கல்கத்தா நீதி மன்றத்தில் நிறுத்தப்பட்டிருந்தார். இந்த வழக்கை குற்றவியல் நீதிமன்ற நடுவர் எஸ். கே. சின்கா விசாரித் தார். நேருவை ரூபா இரண்டாயிரம் பொறுப்பில்விட அவர் முடிவு செய்து அவரிடம் கூறினார். ஆனால்

நேருவோ நீதிபதியின் அனுதாப உதவியை ஏற்க மறுத்து விட்டார்.

அரசுக்காக, அதன் வழக்கறிஞர் ராவ்பகதூர் டி. என். சாது வழக்கை நடத்தினார். இந்தியக்குற்றவியல் சட்ட விதி 124-ஏ பிரிவின்கீழ் அரசு எதிர்ப்புக் குற்றம் நேருமீது சுமத்தப்பட்டது· விசாரணையில் கலந்து கொள்ள முன் எப்போதும் கைக்கொண்டிருந்த நிலையையே இந்த வழக்கிலும் நேரு கடைப்பிடித்தார். வழக்கம் போல் இந்த வழக்குத் தொடர்பாக ஒரு அறிக்கையை மட்டில் அவர் அளித்தார். அதில் "வங்க அரசுக்கு எனது நன்றியறிதல் உரித்தாகட்டும். எனக்கெதிராக இந்த வழக்கை நடத்துவதன் மூலம், வங்க மக்களின் கடந்த கால, நிகழ் கால நடவடிக்கைகளில் சிறு அளவிலேனும் நான் தொடர்புகொள்ளும் வாய்ப்பை அரசு இந்த வழக்கின் மூலம் எனக்கு அளித்திருக்கிறது. இந்த நல்ல வாய்ப்பை என்றும் நான் நினைவில் வைத்திருப்பேன்."

"கலகத்தைத் தூண்டுவதென்பது, இந்தியாவுக்கு விடுதலைபெறும் வேட்கையே! அன்னிய ஆட்சிக்கு முடிவுகட்டும் விருப்பமென்று பொருள் கொள்ளப்படுமானால், எமது நடவடிக்கைகள் நீண்டகாலமாகக் கலகத்தைத் தூண்டும் இயல்பானவைகளாகவே இருந்து வந்துள்ளன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். கல்கத்தா பேச்சும் அத் தனமையதே எனக் கருதலாம்" என்று தெளிவாகத் தீரமாகக் குறிப்பிட்டார்.

எதிர்த்தாட வேண்டிய குழு, ஆட்டத்தில் பங்கேற்கத் தவறினாலும், மறுத்தாலும், ஆயத்தமாக இருந்த குழு வெற்றி பெற்றதாக அறிவிக்கும் விளையாட்டுத் தீர்ப்பைப் போல் இந்த வழக்கிலும் தீர்ப்புச் சடங்கு நிறைவேற்றப்பட்டது. 1934-ஆம் ஆண்டு பிப்ரவரி, பதினாறாம் நாள் அறிவிக்கப்பட்ட தீர்ப்பின்படி நேரு

வுக்கு இரண்டாண்டு வெறுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. சிறையில் நேரு முதல் பிரிவில் வைக்கப்படவேண்டுமென்றும், நீதிபதி தீர்ப்பிலேயே குறிப்பிட்டார். நேருவின் ஏழாவது முறை சிறை வாசம் இதன் மூலம் அவருக்குக் கிடைத்தது. இந்தமுறை நேருவை வரவேற்கும் சிறப்பும் வாய்ப்பும் அலிப்பூர் சிறைக்குக் கிடைத்தது.

அலிப்பூர் சிறை நேருவுக்குச் சுகாதாரக்கேடானதாகவும், வசதியற்றதாகவும் இருந்தது. இதற்கு முன்னர் இருந்த சிறைகளைக் காட்டிலும் இதில் காவலர்களும், மேற்பார்வையாளர்களும், அதிகமாக இருந்தனர், வங்கத்தை ஆங்கில அரசு 'தனிச்சிறப்போடு' கவனித்துக் கொண்டதற்குச் சிறைக்கெடுபிடிகள் சான்று கூறின. இந்தச் சிறையின் சுற்றுச் சூழலும் அலுவலர்களின் நடத்தையும், வெம்மையும், தன்மையும்கூட அவருக்கு ஒத்துக் கொள்ளவில்லை. துன்புறுத்துவதும் துயர்படுத்துவதும் தானே சிறையின் குறிக்கோள்!

# இலக்கியங்கள் பிறந்த இடம்

ஜவகர்லால் நேரு அலிப்பூர் சிறையில் தன் எடையை இழந்து வந்தார். தண்ணீருள் மூழ்கியிருக்கும்போதுதான் ஒரு பொருள் தன் எடையை இழக்கும் என்பது ஆர்க்மிட்டிசின் தத்துவம். போராட்ட வீரர்கள் சிறையில் தங்கள் எடையை இழப்பார்கள் என்பதை விஞ்ஞானிகள் அறிய மாட்டார்கள். நேரு சிறையில் தன் எடையை இழந்ததற்கு காரணம் சிறை நிலைமை மட்டுமல்ல, நாட்டு நடப்பும் ஒரு காரணந்தான். சிறைக்கு வெளியே நடைபெற்ற சில நிகழ்ச்சிகள், கட்சியில் சில பெருந்தலைவர்களின் பேச்சும், செயலுங்கூட அவருக்கு மனச்சோர்வைத் தரக்கூடியனவாக இருந்தன. காந்தியடிகளின் சில செயற்பாடுகளும் பேச்சுங்கூட நேருவின் மன உளைச்சலுக்கு முக்கிய முதற் காரணமாகும்.

காரணம் எதுவாக இருந்தாலும் நேரு நலங்குன்றுவதைக் தடுக்க வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்தே செயல்பட்டது. அவரது நலக்குறைவுக்குச் சிறையும் ஒரு காரணமாக இருந்ததென்ற உண்மையை அறிந்த அதிகாரிகள் நேருவை மே மாதம் ஏழாம் நாள் அலிப்பூர் சிறையிலிருந்து மீண்டும் டேராடூன் சிறைக்கு மாற்றிவிட்டனர். அந்தச் சிறை மலையடிவாரத்தில் அமைந்திருந்தது. முன்னர் இதே சிறையில் நேரு வைக்கப்பட்டிருந்தபோது, இயற்கைச் சூழலை அவர் நன்கு துய்த்தார். எனவே இந்தச் சிறை மாற்றம் அவருக்கு உவப்பாகக்கூட இருந்தது. ஆனால் இந்த முறை அவர் சிறையுள் வைக்கப்பட்டிருந்த இடம் முன்னர் வைக்கப்பட்டிருந்த இடத்திற்கொப்பாக இல்லை. இருந்தாலும் அலிப்பூர் சிறைக்கு டேராடூன் சிறை மேலானதுதான்.

காந்தியடிகளின் பொறுமையான, பொறுப்பான நடவடிக்கை காரணமாகவோ என்னவோ, அரசு பேராயத்

தின் மீது விதித்திருந்த தடையை விலக்கிக் கொண்டது. ஆனால் சார்பு மன்றங்கள், அமைப்புகள் மீதான தடை அப்படியே நீடித்தது. காந்தியடிகள் அரசியல் நடவடிக்கைகளில் காட்டிய ஈடுபாட்டை விட, தீண்டாமை ஒழிப்பு, இந்து-முசுலீம் இணக்கம், கதர் இயக்கம் போன்ற நடவடிக்கைகளில் அதிக ஈடுபாடு காட்டினார். எனவே அண்ணலை மீறி பேராயத்தர் ஏதும் செய்து விட மாட்டார்கள் என்ற நம்பிக்கை அரசுக்கு ஏற்பட்டதால் பேராயத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கிக்கொண்டதென்றெண்ணவும் இடமிருந்தது.

மூன்றாண்டுக் கால இடைவெளிக்குப்பின், பாட்னாவில் கூடிய பேராயக்குழுக் கூட்டம் முடியும் வரை கூட காந்தி அந்தக் கூட்டத்தில் இல்லை. வேறு பணிக்காகப் புறப்பட்டுவிட்டார். ஓட்டுநர் வேறு வேலைக்கு போய் விட்டார். இனி ஊர்தி வந்துபோகாதென்று அரசு எண்ணியது.

பேராயத்திற்குள் பழந்தின்னிகள் பறக்கத் துவங்கின. சமநீதிச் சிந்தனையில்லாதவர்கள் மட்டில் அல்ல, அந்தக் கொள்கைக்கெதிரானவர்களும் இயக்கத்தில் ஆதிக்கம் பெற நுழைந்தார்கள். காவலரில்லாத தோப்பாக இருந்த பேராயம், செல்வந்தர்களுக்குப் பயன்படக் கூடிய பதுங்குக் குழியாகப் பட்டது, பாதுகாப்பான இடமாகக் கூட இருந்தது.

தேனுக்காக அலையும் தும்பிகள் எடுத்த எடுப்பிலேயே பூவில் போய் அமர்ந்து விடுவதில்லை. தேனிருக்கிறதா என்பதை நுகர்ந்து பார்த்து, உறுதி செய்து கொண்டு பின்னரே அதில் அமரும். அவ்வாறே செல்வந்தர்கள் எந்த இயக்கத்திலும் கொள்கைக் கோட்பாட்டிற்காக, பொது நோக்கத்திற்காக போய்ச் சேர்ந்து விட மாட்டார்கள். தங்கள் சொந்த நலன்களுக்காகவும்,

சொத்து சுகங்களுக்கும் பாதுகாப்புக் கிடைக்கும். குறைந்த செலவில் நிறைந்த பலனைப் பெறலாமென்பது ஐயத்திற்கிடமின்றித் தெரிந்தால் மட்டுமே அங்கே நுழை வார்கள். அன்னிய ஆட்சியாளர்களுக்கு ஆதரவாக இருந் தவர்கள் பேராயத்திற்குள் நுழைகிறார்களென்றால், அங்கே ஆதாயம் அவர்களுக்காகக் காத்திருக்கிறதென்று பொருள்.

அரசியல் களம் புகுந்தவர்களுக்கு, அதிலும் வெள்ளையராட்சியில் விடுதலை வேண்டி நின்றவர் களுக்கு சிறை வாழ்க்கை, சொந்த வாழ்க்கையின் ஒரு பக்கந்தான். விக்கிரமாதித்தன் போல் காடாறு மாதம், நாடாறு மாதம் என்றல்ல, என்பதை எவரும் தெளிவாகக் கூற முடியாத, உறுதியற்ற வாழ்க்கை அவர்களுடையது. நாட்டுப் பணியையும், வீட்டுப் பணியையும், தொட்டதும் விட்டதுமாக எச்சமாக்கி விட்டு, கட்டுக் காவலில், நான்கு சுவர்களையே உலக எல்லையாகக் கண்டு கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்திற்குட்பட்டவர்கள். செயல் முடக்கப் பட்டிருந்தாலும் சிந்தனை சிறகடித்துக் கொண்டிருக்கும்.

இலக்கிய உணர்வுடைய அரசியல் கைதிகளுக்குச் சிறை ஒருவகையில் உதவியிருப்பதை ஒப்புக் கொண்டே ஆக வேண்டும். தனிமையைக் கூட அவர்கள் எழுத்துற வால் வென்றிருக்கின்றார்கள். தரமான நல்ல இலக்கியப் படைப்புக்கள் அங்கே பிறப்பதுண்டு. துன்பத்தையும், துயரத்தையும் எழுத்தால் அவர்கள் துரத்திய வரலாறுகள் பலவுண்டு. பாரத காவியத்தில் சிறை ஒரு கண்ணனைத் தான் பெற்றுத் தந்தது. ஆனால் நாம் வாழும் பாரதத்தி லுள்ள சிறைகள் எத்தனை வரலாறுகளை, இலக்கியங் களைப் பெற்றுத் தந்துள்ளன!

சிறை பெற்றுத் தந்த சீரிய இலக்கிய வரிசையில் நேருவின் தன்வரலாறும், உலக சரித்திரமும் மறக்க முடி

யாதவை. குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் தன்வரலாறும் (சுயசரிதை) சிறை தந்த சீதனந்தான். கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரின் 'மெய்யறிவு' 'மெய்யறம்' 'மனம் போல் வாழ்வு' ஆகிய நூல்களும் திலகரின் கீதை இரகசியமும், டாக்டர் கலைஞர் மு. கருணாநிதியின் 'மணிமகுடம்' நாடகமும் சிறைத் தோட்டத்தில் பூத்த செவ்வந்தி மலர் நூல்களே! இங்கு மட்டுமல்ல. வெளிநாடுகளிலும் சிறைகள் இலக்கியங்களின் பேறுகால அறைகளாக (Labour Room) விளங்கியுள்ளன. இனக்கொலையில் இணையற்றவராக விளங்கிய ஹிட்லரின் 'மெயின் கேம்ப்' நூலும் ஓஹென்றியின் சிறு கதைகளும் சிறையில் எழுதப்பட்டவைதான்.

நேரு தனது வரலாற்றை டேராடூன் சிறையிலிருந்த போது, 1934-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில்தான் எழுதத் துவங்கினார். இந்த நல்ல பணிக்கான நேரத்தையும், நினைப்பையும் தந்தது வெள்ளையராட்சிதான். தீமையில் விளைந்த நன்மையே இது. சிறையில் இல்லாமலிருந்தால் நேருவுக்குத் தனது வரலாற்றை எழுத வேண்டுமென்ற எண்ணம் பிறந்திருக்குமா? நேரம் கிடைத்திருக்குமா? யாருமே உறுதியான பதில் தர முடியாத வினாக்கள் இவை. நேருவின் 'தன் வரலாற்று' நூலைப் பற்றிய நமது மதிப்பீட்டை மறந்து, வெளிநாட்டவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று பார்ப்பதே சரியான எடைக் கற்களைக் கொண்டு நிறுக்கும் தராசு.

"நேருவின் சுயசரிதையைப் படிக்காதவர்கள் தற்கால இந்தியாவை அறிய முடியாது" என்று கருத்துத் தெரிவித்ததர் ஹாலி பாக்ஸ் பிரபு.

"நேருவுடைய தெளிவான நடையைப் படிக்கும் போது இயற்கையின் முழு அழகுடனும், மேலும் உயர்ந்து தூய இலக்கியமாகத் திகழும். அவருடைய நூலைப் படிக்கும் போது, தன்னுடைய அரசியல் செயல்பாடுகளுக்காக அல்லாமல் எழுத்துச் சிறப்பினால் உலகில்

அவர் நிரந்தரப் புகழை எய்துவாரென எண்ணத் தோன்று கிறது" என பேசில் மாத்யூஸ் என்பவர் கூறியுள்ளார். எழுத்தறிவு மறையாதவரை, நேருவின் படைப்புக்கள் இலக்கிய அரங்கில் உலவும். கற்றார் நெஞ்சங்களில் நிலைக்கும். நேருவைத் தனது வரலாற்றை எழுத நினைப் பூட்டிய டேராடூன் சிறையைப் படிப்பவர் மறக்க மாட் டார்கள். தரமான இலக்கியங்கள் பிறக்கக் காரணமாக இருந்த சிறைகளை நாமும் திருத்தலங்களாகவே கருது வோம்.

# பரிவும் பிரிவும்

சிறையிலிருந்த போது நேரு கவலைப்பட்டதைப் போலவே, கமலாவின் உடல் நலன் மிகவும் பாதிக்கப் பட்டிருந்தது. இப்படிப்பட்ட நிலையில் நேரு கமலாவின் அருகிலிருக்க வேண்டியதன் அவசர, அவசியத்தைக் கருதி, அரசும் நேருவை விடுவித்துக் காவலுடன் கமலாவைப் பார்க்க அனுப்பி வைத்தது. இது தற்காலிக விடுதலைதான். எத்தனை நாட்களுக்கு இந்த விடுதலை என்பதுகூட முடிவு செய்து கூறப்படாத நிலை. அரசு என்று, எப்பொழுது நினைத்தாலும் நேருவை மீண்டும் சிறைக்கு அழைத்துக் கொள்ள வாய்ப்பாகவே இந்த உறுதியற்ற விடுதலையை (விடுப்பை என்றுகூட வைத்துக் கொள்ளலாம்) அவருக்களித்திருந்தது.

கமலா உருத்தெரியாமல் மாறி இருந்தார். நோயின் ஆதிக்கம், வெள்ளையர் ஆண்ட காலத்து, இந்தியப் பொருளாதாரம் போல் அவரை உருக்குலைத்திருந்தது. பலவீனப்படுத்தியிருந்தது. நேருவின் உள்மனதை அச்சம் அரிக்கத் தொடங்கியது. நோயுடன் கமலா நடத்திக் கொண்டிருந்த போராட்டத்தில், அவர் தோற்று விடுவாரோ என்ற கவலை நேருவை நெருங்கியது– நெருக்கியது.

நேரு கமலா இல்லற வாழ்வின் இனிய காலத்தை அரசியல் போராட்டங்களும், சிறை வாழ்க்கையும், கமலாவின் நோயும் கொள்ளையிட்டுக் கூறு போட்டுக் கொண்டன. காலத்தை மட்டுமே அவற்றால் பறித்துக் கொள்ள முடிந்ததே தவிர, அவர்களுக்குள்ளிருந்த மன ஈடுபாட்டை, பாசத்தை, நேசத்தை வேறெதுவும் நெருங்கி நெக்குவிடச் செய்து விடவில்லை. ஒவ்வொரு பிரிவுக்குப் பின்னும் அவர்களின் சந்திப்பு இனிப்பையும், இதத்தை

யும் தந்ததை அவர்கள் மறந்து விடவில்லை. பிரிவே அவர்களுடைய நெஞ்சத்தை, நேசத்தை, நினைவை நிலைப்படுத்தி வைத்ததென்றாலும் பொருத்தமே! நோயுற்ற நிலையில் கணவர் அருகிலிருந்த மனத் தெம்பால், கமலா நோயின் படையெடுப்பையும், முன்னேற்றத்தையும் முறியடிக்கும் வலுவைப் பெற்றார்.

கமலாவின் உடல்நிலை முன்னேற்றத்தை நேருவைப் போலவே அரசும் அக்கறையோடு கவனித்து வந்தது. கமலா உடல்நிலை மேம்பாட்டால், நேருவை மீளச் சிறையில் அடைத்து விடலாமென்பதே அரசின் அக்கறைக்கு அடிப்படை. ''கூற்றுதான் என்று வருமோ என்றறியோம்'' என்பார்கள் மதப்பற்றாளர்கள். நாட்டுத் தொண்டருக்குச் சிறையழைப்பு என்று வருமோ என்றறியாத நிலைதான் அன்றிருந்தது. நேரு சற்றும் எதிர்பாராத வேளையில் காவலர்கள் வண்டியோடு வந்து நின்றார்கள். பதினொறு நாள் தற்காலிக விடுதலைக்கு விடை கொடுத்து விட்டு, நேரு மீண்டும் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். நைனிச் சிறை அவரை வரவேற்கக் காத்திருந்தது.

வயதான தாயார், நோயின் பிடியிலிருந்து முற்றும் விடுபடாத நிலையில் துணைவி, தாலி கட்டும் நேரத்தில் மணக் கொடைத் தொகையை (வரதட்சிணை) வைத்தால் தான் ஆயிற்றென்று அடம்பிடிக்கும் பிள்ளை வீட்டார் முன், கையில் காசில்லாத பெற்றோர் நிலைமையில் இருந்தார் நேரு. அவர் அழுது புலம்பவில்லை. ஆனால் உள்ளம்? அதற்குத்தான் குரல் கிடையாதே...! இருந்திருந்தால் நேருவின் பிரிவுத் துயரை, பரிவுத் துடிப்பை அது விளம்பரப்படுத்தி விட்டிருக்கும்.

நேரு மீண்டும் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின் கமலாவின் உடல்நிலையும் பாதிக்கப்பட்டது. நோய் கிருமிகளால் உண்டாகிறது, அது மனத் துயரால்

ஊட்டி வளர்க்கப்படுகிறது. தனது துணைவர் அருகிருந்த போது அடங்கிக் கிடந்த நோய், அவர் பிரிந்து சென்றதும் மீண்டும் வலிமை பெற்றெழுந்தது எவ்வாறு? மனந்தான் நோய்க்கு மருந்து. அதே மனம் குழம்பிக் கிடக்கும்போது நோயின் தோழனாகி விடுகிறது. கமலாவைப் பார்க்க நேரு ஒருமாத இடைவெளிக்குப் பின் மீண்டும் காவலர் களால் அழைத்து வரப்பட்டார்.

படுக்கையிலிருக்கும் துணைவிக்குக் கணவன் சேவை தேவை. எனவே நேரு அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனைக் காலம் முடியும்வரை, அரசியல் பணியில் ஈடுபடுவதில்லை என உறுதியளித்தால், அரசு நேருவை விடுதலை செய்வதாகக் கூறியது. ஆனால் எந்தக் காரணத்திற்காகவும் கொள்கை முடிவிலிருந்து பிறழ்ந்து நடக்கும் அரசியல்வாதி தானல்ல என்பதைத் தெளிவு படுத்திவிட்டார்.

அரசு கோரும் உறுதிமொழியைக் கொடுத்துத் தன் துணைவர் தன்னருகே இருக்க வேண்டுமென கமலாவே விரும்பமாட்டார் என்பதை நேரு உணர்ந்தே இருந்தார். எனவே உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தனது துணைவியாருக்காகவும் கூட, மனித நேயம் அப்படியே உறுதிமொழிக் கொடுத்தாலும் தவறாகக் கருதாதென்ற பண்பாட்டு நெறி அரண் செய்வதாக அமைந்தாலும்கூட நேரு அரசுடன் எந்தவித உடன்பாட்டுக்கும் வரவில்லை என்பதிலிருந்து அவரது கொள்கைப் பிடிப்பை நம்மால் உணர முடிகிறது.

கமலாவுக்குக் கடுமையான காய்ச்சல். நிமிர்ந்து நிற்க இமைகளுக்கே இயலாத நிலை. அக்டோபர் திங்களில் மீண்டுமொருமுறை சிறைக் கதவுகள் நேருவுக்காகத் திறக்கப்பட்டன. படுக்கையே வாழுலகாகி விட்ட கமலாவுக்காக, வெள்ளையரின் கரு மனத்தில்கூட ஒரு கருணைப் புள்ளி. நெஞ்சிலோர் இரக்க நெளிவு தென்

பட்டது. நேரு கமலாவை மருத்துவமனைக்குச் சென்று பார்த்தார். அந்த நிலைமையிலும், மெலிவிலும் வலிவை வெளிப்படுத்தும் வீரப் பெண்ணாக அவர் விளங்கினார். நேரு மீண்டும் சிறைக்குத் திரும்ப புறப்பட்ட போது, அவரைத் தன் காதருகே அழைத்தார். "நீங்கள் அரசுக்கு வாக்குறுதித் தரப் போவதாகப் பேச்சு அடிபடுகிறதே, என்ன அது? அவ்வாறெல்லாம் வாக்குறுதி தராதீர்கள்" எனக் கூறி விடை கொடுத்தார். புதிய புறம்பாட பொரு ளான கமலாவின் நெஞ்சுறுதிதான் என்னே!

உடல் நலங்கருதி, கமலா 'போவாலி' என்னும் மலை யகத்திற்கு அழைத்துச் செல்லப்பட வேண்டுமென முடி வாயிற்று. கமலாவைப் பார்க்கவும், வழியனுப்பி வைக்க வுமாக, அரசு நேருவைச் சிறையிலிருந்து அனுப்பி வைத் தது (கைதியாக, காவலுடன் தான்), போவாலி வந்த வுடன் கமலாவின் உடல்நிலையில் சிறிது முன்னேற்றம் காணப்பட்டது. நேருவை அரசு, கமலா தங்கியிருந்த இடத்திற்கருகேயுள்ள 'அல்மோரா' சிறைக்கு மாற்றியது. கமலாவைப் பார்க்க நேருவை அழைத்துச் செல்ல ஏது வாகவே இந்தச் சிறை மாற்றம் செய்யப்பட்டது.

அல்மோரா சிறையில் நேரு நூறு நாட்களுக்குச் சற்றுக் கூடுதலாக வைக்கப்பட்டிருந்தார். அந்தக் கால கட்டத்தில் ஏறத்தாழ இருபது நாட்களுக்கோர் முறை நேரு கமலாவைப் பார்க்கச் சிறையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டிருக்கின்றார். இந்த மனிதாபிமான ஏற் பாட்டைச் செய்த ஆட்சியாளர்களுக்கு, 'நன்றல்ல' செய் ததையெல்லாம் மறந்து, நன்றி கூறத்தான் வேண்டும். ஆட்சியாளர்கள், அதிகமாக உதவியதாகக் கூடக் கூறிக் கொண்டார்கள். வெறும் வாயை மெல்லாமல், சிறிது அவலைப் போட்டு மென்றார்களே அதுவே பாராட்டுக் குரியதுதான்.

**1934**-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள், இருபத்து நான்காம் நாள் பேராயத்தின் மாநாடு பம்பாயில் நடை

பெற்றது. பாபு இராஜேந்திர பிரசாத் தலைமை வகித்தார். இந்த மாநாட்டில் தான், அரசியலமைப்பை உருவாக்க, அரசியல் நிர்ணயசபை கூட வேண்டுமென்ற கருத்தை பேராயக் கட்சி ஏற்றுக்கொண்டது. சட்டப் பேரவைக்குப் போட்டியிடவும் முடிவெடுத்தது. இதற்கென டாக்டர் அன்சாரி தலைமையில் குழுவொன்றும் அமைக்கப்பட்டது. முக்கியமான முடிவுகளெடுக்கப்பட்ட இந்த மாநாட்டில் இரு பெருந்தலைவர்கள் கலந்து கொள்ளவில்லை. ஜவகர்லால் நேரு சிறையில் இருந்தார். காந்தியடிகளோ பேராயத்தில் அடிப்படை உறுப்பினராகக் கூட இல்லாமல் விலகியிருந்தார். இந்த விலகல் பேராயத்திற்கு எந்தவிதமான நெருக்கடியையும் உண்டாக்க வேண்டுமென்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முடிவல்ல. அது ஒரு உடன்பாடே.

தேர்தல் வந்தது, வெற்றி ஒன்றே நோக்கமாயிற்று. இன்று போலவே அன்றும் தேர்தல் கூட்டுக்கள் ஏற்பட்டன. பேராயமும் கூட்டுக்கு விதிவிலக்கல்ல. தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்பதற்காகப் பேராயமும் கொள்கை விரோதிகளைக்கூடக் கூட்டாளியாக்கிக் கொண்டதென நேரு வருத்தப்பட்டார். விரும்பிய வெற்றியைப் பேராயம் பெற்றது. வெற்றிவந்த வழி எப்படிப்பட்டதாக இருந்தாலும், அது மகிழ்ச்சியைக் கொடுக்கத் தவறுவதில்லையே!

கமலாவின் உடல்நிலையில் ஏற்பட்ட மோசமான மாறுதல்களால், அவர் போவாலியிலிருந்து ஐரோப்பாவுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கே ஜெர்மனியில் பேடன் வெய்லரில் மருத்துவ உதவி பெற்றார். அவரது உடல்நிலையைக் கருதி அரசு நேருவின் தண்டனைக் காலம் முடிய ஐந்தரை மாதம் இருக்கும்போதே அவரை விடுதலை செய்து விட்டது. அன்றோ பாலையில்கூட ஊற்றைக் காண முடிந்தது...இன்று? காவிரிப் படுகையே

காய்ந்து கிடக்கிறதே! 1935-ஆம் ஆண்டு செப்டம்பர், நான்காம் நாள் விடுதலை செய்யப்பட்டவுடன், நேரு தனது துணைவியாரைப் பார்க்க ஜெர்மன் போய்ச் சேர்ந் தார். சுவிட்சர்லாந்தில் படித்துக் கொண்டிருந்த மகள் இந்திராவும் அங்கு வந்து சேர்ந்தார். தந்தையும், மகளும் கமலாவின் அருகிலிருந்து கவனித்துக் கொண்டார்கள்.

மருத்துவமனையில் கமலாவின் உடல்நிலை ஒரே சீராக இல்லை. ஒரு சமயம் சற்று முன்னேற்றம் கண்டிருப்பதாகத் தோன்றும். நிம்மதிப் பெருமூச்சுவிடும் முன்னரே, நிலைமை பழுதாகிவிடும். எனவே கமலாவை லாசேன் நகரிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு போனார்கள். அங்கும் அவர் அமைதியற்றிருந்தார். யாரோ அழைப்பது போலவும், அவரது அறைக்குள் யாரோ வருவது போலவும் அவர் உணர்ந்தார் வலு விழந்த உடல், நம்பிக்கை தளர்ந்த உள்ளத்தில் தோன் றும் அச்சக் காட்சிகள் அவை. நாம் கேள்விப்பட்டு, உருவகப்படுத்தி வைத்துக்கொள்ளும் நிகழ்வுகள், தன் னிலையிழந்து, அறிவின் ஆதிக்கம் வீழ்ந்துபட்ட நிலைமைகளில் இப்படிப்பட்ட காட்சிகள் நோய்ப் படுக்கையிலிருப்பவர்களின் மனத்திரையில் காட்சிகளாகி வருவதுண்டு. நோயாளியின் எதிர்பார்ப்பின் பிரதிபலிப்பு தான் யாரோ வருவதும், அழைப்பதும்.

கமலா தனது வாழ்க்கையின் முடிவு நெருங்கி விட்டதை உணர்ந்துவிட்டார். தான் பிரியப் போகி றோம் என்பது அவருக்குப் புலப்பட்டுவிட்டது. கணவரும், மகளும் அருகிலிருக்கும்போதே அவரது கடைசி மூச்சு காற்றோடு கலந்துவிட்டது. 1936-ஆம் ஆண்டு, பிப்ரவரி இருபத்தெட்டாம் நாள், காலை. நேரு வின் உயிருக்குள் உயிராக, உணர்வுக்குள் உணர்வாக, உள்ளத்தில் உறைந்திருந்த இலட்சியப் பெண், அவருக் குத் தனிமையை நிரந்தரமாகத் தந்துவிட்டு அமைதியாக விடைபெற்றுக் கொண்டார்.

எண்ணத்தில் மின்னலிட்டுக் கொண்டிருந்த அந்த மலை முகில் மறைந்துவிட்டது. ஆறுதலை அள்ளிவரும் தென்றல் திரையிட்டுக் கொண்டது. முள்ளில்லாத ஒரு எழில் ரோஜா தன் இதழ்களை உதிர்த்துக் கொண்டு வெறுமையை விட்டு வைத்துள்ளது. மனப்புழுக்கத்திற்கு ஆறுதலளிக்க, எண்ணத் தோகையை விரித்த அந்தக் கொள்கைக் கொண்டையழகு பெற்ற கோல மயில், தனது தோகையை நெருப்புக்கு உணவாக்கி விட்டது. ஆவியை இயற்கைக்குப் பரிசளித்துவிட்டது. அன்புக்குரியவர்களின் மனத்துள் கனத்தை ஏற்றிவிட்ட பெருமைக்குரிய பெண்மை இலேசாகி விண்ணேகி விட்டது.

"விடவாளை வென்ற
 விழியாளை, பூமியின் மேலதிர
நடவாளைப் பெண்கள்தம்
 நாயக மாயொரு நாயகத்தை
மடவாளை யென்னுள்
 வதிவாளை யின்ப வடிவையென்சொற்
கடவாளை யான்றெய்வ
 மேயென்று போயினிக் காண்பதுவே"

என்று ஆரியங் காவற் பிள்ளை, தனது மனைவியை நினைந்து பாடியது நேருவின் நினைவு நிலைக்கு எழுத்துக்கு எழுத்து பொருந்துவதாக உள்ளது.

நேரு தனது துணைவியாரின் இளமை மெருகை, காலத்தாலும் கவர முடியாத அந்த எழிலை அவர் கடைசியாக அனுபவித்த சிறை வாழ்க்கையின் போது எண்ணி, எண்ணி மகிழ்ந்திருக்கிறார். விடுதலைப் போராட்டத்தில் தானும் ஈடுபட்டுச் சிறை செல்லக் கிடைத்த வாய்ப்பை எண்ணி அந்த அனிச்சமலர் மகிழ்ச்சியில் மிதந்ததை எண்ணி வியந்தாரே அந்தப் பேரெழில் பெட்டகம் காலத்தால் முற்றாக அல்லவா கொள்ளையடிக்கப்பட்டு

விட்டது. அந்த மென்மையை தணலல்லவா தழுவிக் கொண்டது. ஒரு வசந்தத்தை வாடையல்லவா வென் றெடுத்துச் சென்றுவிட்டது!

மனிதர்களுக்கே இதயமில்லாத போது, மரத்திற்கும் அதிலும் மரணமடைந்த மரத்தின் கூறுகளான விறகுக் கும் நெருப்புக்கும் இரக்கம் எப்படி இருக்க முடியும்? அதனால்தான் கமலாவின் காயத்தை அவை நீறாக்கி விட்டன. நீலமலருக்காக மேதிகள் ஒதுங்கியா நீந்துகின் றன? அன்பர்களின் துயரத்தை எண்ணி, இறப்பு திரும்பிப் போய்விடுவதுண்டோ? ஜெர்மனிக்கு வெறுங்கையோடு சென்ற நேரு மனதில் பாரத்தோடும், கையில் கமலாவின் நீறோடும் (அஸ்தி) இந்தியாவுக்குப் பயணப்பட்டார்.

"சாவே உனக் கொருநாள்
சாவுவந்து சேராதோ!
சஞ்சலமே நீயுமொரு
சஞ்சலத்தைக் காணாயோ?
தீயே உனக்கொரு நாள்
தீமூட்டிப் பாராமோ?"

— என்று கவன்றானே கவியரசு கண்ணதாசன், அப்படிப்பட்ட மன ஓலம் நேருவிடம் அலைமோதியது. அன்புதான் இரக்கத்தைக் கொடுக்கும். அதுவே பிரிவைப் பெரிது படுத்தும். அறிவுதான் ஆறுதலளிக்க வல்லது.

"கறந்தபால் முலைப்புகா, கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை யுயிர்களு முடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை யில்லையில்லை யில்லையே!"

—என்னும் சிவவாக்கியார் கருத்து நேருவுக்கும் உடன் பாடானதுதான். எனவேதான் தனது அன்பு மனையாள் ஆவி விட்டதற்காக தாடி வளர்த்துக் கொண்டு தளர் நடை போடாமல், செயல்மேல் சிந்தனையை நடக்க விட்டார்.

கமலா போவாலி மருத்துவ மனையிலிருந்த போது, அவருக்கு நேரு சிறையில் தானெழுதி வந்த தனது வரலாற்றின் ஒரு பகுதியை மனைவிக்குப் படித்துக் காட்டியதுண்டு. ஆனால், அவர் கேட்ட அந்த வரலாற்றின் முடிவைப் படிக்கக் கேட்காமலேயே, தனது வரலாற்றை முடித்துக் கொண்டார். நேருவின் 'தன் வரலாறு' (சுய சரிதை) அச்சில் தன்னை அலங்காரம் செய்து கொண்டு, முழுப் பொலிவோடு மக்களைச் சந்திக்கப் புறப்பட்டபோது, அந்தக் கோலத்தைப் பார்க்க கமலா இல்லை. அவரது இமைக் கதவுகள் நிரந்தரமாக மூடித் தாளிட்டுக் கொண்டன. நேரு நினைத்தாரா என்ன? தானெழுதும் தனது வரலாற்று நூலை தனது அன்புத் துணைவியாருக்கே காணிக்கையாக்குவோமென்று! இயற்கை அப்படிச் செய்ய அவருக்கு கட்டளையிட்டுவிட்டதே!

நூல் அச்சாகிக் கொண்டிருந்த வேளையில், நேரு ஜெர்மனியிலிருந்து இந்தியா திரும்பும் வழியில், நூல் வெளியீட்டாளருக்கு பாக்தாத்திலிருந்து ஒரு செய்தியை அனுப்பினார். அந்த நூலைக் காலஞ்சென்ற கமலாவுக்குக் காணிக்கையாக்கும் செய்தியான் அது. "To Kamala who is no more" என்ற சொற்றொடரை, சுமந்தபடிதான் நூல் வெளி வந்தது. நேருவின் வரலாறு படைப்புலகிற்கு ஒரு தரமான எழுத்தாளரை அறிமுகப் படுத்தியது. இந்த நூலைப் படித்த முனைவர் (டாக்டர்) இராதாகிருஷ்ணன் அவர்கள் ''நேரு மிகச் சிறந்த இலக்கியக் கலைஞர்'' என்று விதந்துரைத்தார்.

எழுத்தாற்றல் என்பது இயற்கையாகவே மனிதனுக்குக் கிடைப்பது. அவனுள் இருக்கும் இந்தச்சக்தியை மனக் கூட்டைத் திறந்து வெளிக் கொணர வேண்டியதே அவனுடைய முயற்சியாகும். அகழ்ந்தெடுக்கப் படும் தங்கம் அணிகலனாகும் தகுதியைப் பெற பல மாற்றங்களுக்காளாக வேண்டியிருக்கிறதல்லவா, அப்படியே ஒருவனுள்ளிருக்கும் எழுத்தாற்றல், படைப்பாற்றல் நூல் வடிவத்தில் வெளிப்பட, சில முயற்சிகளும் உழைப்பும் தேவைப்படுகிறது. நூலறிவும், சிந்தனை வளமும், தூண்டுதலும் உள்ளவனுடைய படைப்பாற்றல் வெற்றிகரமாக உலாவரத் தொடங்கிவிடும். நேருவிடம் ஒரு படைப்பாளிக்குத் தேவையான, அடிப்படையான இயற்கை பரிசளிப்போடு தன் முயற்சியும், தூண்டுதலும் நூலறிவும் குறைவின்றி இருந்தது.

உயர்ந்த நோக்கமும், இலட்சிய வெறியும் செயல் வேகமும் உடையவர்களின் எழுத்து, படிப்பவர்களை ஈர்க்காமல் போகாது. மண் வளத்திற்கேற்ப மரம், செடி, கொடிகள் தழைப்பதைப் போல, மன வளத்திற்கேற்ப தொண்டு, பேச்சு எழுத்து சிறப்புப் பெறுகின்றன.

நேரு நிறை மனிதர். அவரது எழுத்தில் உரமும், உயரமும் இருப்பதொன்றும் வியப்புக்குரியதல்ல.

# நோக்கும் போக்கும்

நேரு இந்தியாவுக்குத் திரும்பியபோது, ரோம் வழி யாகப் பயணம் செய்ய நேர்ந்தது. பயணத்தினூடே ரோமில் தங்க வேண்டிய கட்டாய நிலைமை ஏற்பட்டது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, இத்தாலியின் சர்வாதி காரி நேருவைச் சந்திக்க விரும்பி செய்தி அனுப்பினார். முசோலினி என்னதான் எதிர்ப்பில்லாத் தலைவனாக இருந்தாலும், மக்களாட்சி மாண்புக்கும், மனித நேயப் பண்பாட்டுக்கும் எதிரான சர்வாதிகாரி அவர். உலகம் வெறுத்த 'பாசிசம்' என்னும் கொடூரக் கொள்கையின் ஆணி வேரல்லவா அவர். முசோலினியைச் சந்திப்பது தனது பெருமைக்கும், தான் சார்ந்துள்ள பேராயத்தின் பெருமைக்கும், ஏன் மனித நேய, மனித உரிமைப் பண் பாட்டுக்கே அவப்பெயரை ஏற்படுத்திவிடும் என்பதை நேரு அறியாதவரல்லர். நேருவின் சந்திப்பைத் தனது அரசியல் விளம்பரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் எண்ணத்தில் தானே முசோலினி அவரைச் சந்திக்க ஆர்வப்பட்டார், ஆசைப்பட்டார்!

முசோலினியின் கண்ணியில் விழுந்துவிட நேரு என்ன கலைமானா? அதிகாரத்திற்கு அடிபணியும் ஆல வட்டமா? இத்தாலியின் சர்வாதிக்காரியைச் சந்திக்க, தனது இயலாமையைத் தெரிவித்து விட்டார் நேரு. எனினும் முசோலினியின் தூதர்கள் நேருவை விடுவதாக இல்லை. தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். நேருவின் அருமை மனைவி கமலாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கவே சந்திப்பை விரும்புவதாகவும் வேறு நோக்கமில்லை என்றும் விளக்கம் கூறினார்கள். சர்வாதிகாரி நேருவைச் சந்திக்க நேரம் ஒதுக்கிக்காத்திருப் பதாகவும், ஒரு மணி நேரமே போதுமானதென்றெல்லாம் தூது வந்தவர்கள் கூறினார்கள். பாவம். அவர்களென்ன செய்வார்கள். அவர்கள் நிலைமை அப்படி. நேருவை

அழைத்து வரத் தவறினால் அவர்கள் கதி என்ன வாகுமோ?

ரோம் நகரச் செய்தி ஏடுகள் சுவரில்லாமலேயே படம் வரையக்கூடிய ஆற்றல் பெற்றவை. பொய்ச் செய்திகளைப் புனைந்துரைப்பதில் நிகரற்றவை. அண்ணல் காந்தியடிகளையே தங்கள் பொய்மைக்குக் கருவியாக்கிக் கொண்டவை. எனவே முசோலினியைச் சந்திப்பது விரும்பத்தகாத விளைவுகளுக்கு வித்தூன்று வதாமென்பதை நேரு தெளிவாக உணர்ந்திருந்தார். எனவே முசோலினியைச் சந்திப்பதற்குத் தனது இயலா மையைத் தெளிவாகவும், திருத்தத்திற்கிடமின்றியும் கூறி விட்டார். உலகையே கலக்கிய பெரும் சக்திக்கூட்டின் ஒரு அங்கமான இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி, நேருவைச் சந்திக்கும் முயற்சியில் முழுத் தோல்வி கண்டார்.

நேரு, வேறு பல இந்தியத் தலைவர்களைப் போலல் லாமல், உலகப் பார்வை உடையவர். வெளிநாட்டு இயக்கங்கள், தொழில் முயற்சிகள், பொருளாதாரத் திட்டங்கள், சமூகப் போராட்டங்களையெல்லாம் கருத் தோடு கவனித்து வந்தவர். எந்தவொரு நாட்டின் முன்னேற்ற முயற்சியும், புரட்சியும் அவர் கவனத்தைக் கவரத் தவறியதில்லை. ஸ்பெயினில் நடைபெற்ற அரசியல் கிளர்ச்சியை அவர் அக்கறையோடு கவனித்து வந்தார். ஆனால் அந்தப்புரட்சி முயற்சி வெற்றி பெறத் தவறி விட்டது. இது நேருவுக்குப் பெருத்த ஏமாற்றத் தைக் கொடுத்தது.

பேராயத்திற்கு உலகப் பார்வை எண்ணத்தை ஊட்டியவர் நேரு என்றால், அதனை யாரும் ஆதாரங் காட்டி மறுக்க முடியாது. அவ்வாறே இந்திய விடுதலைப் போராட்டத்தை உலக நாடுகளின் பார்வைக்குக் கொண்டு சென்றதில் நேருவின் பங்கு அதிகம்.

''நேரு இந்தியாவைச் சர்வ தேசிய அரங்கத்திற்குக் கொண்டு சென்றார். அதனால் உலகத்திலுள்ள முன் னேற்ற சிந்தனையாளர்களின் ஆதரவு இந்தியாவுக்குக் கிடைக்கும்படி செய்தார். சர்வதேச நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளுமாறு காங்கிரசைத் தூண்டினார். காங்கிரசைப் பிரதிநிதியாகக் கொண்ட அதிகாரச் சார்பற்ற இந்தியாவுக்குத் தனியான வெளி நாட்டுக் கொள்கையை உண்டாக்கிக் கொடுத்தார்" என்று ஆச்சார்ய நரேந்திர தேவ் அவர்கள் குறிப்பிட்டது முற்றிலும் சரியானதே!

1935-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அரசியலமைப் பின் மூலக் கருத்தில் பெரும்பாலோர் எண்ணம் வேறுபட் டிருந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிடம் அதிகாரத்தை முழுமையாக மாற்றுவதற்குப் பதிலாக, அரசுப் பிரதிநிதி யிடமும், ஆளுநரிடமும் அதிகாரங்களை ஒதுக்கிக் கொண்டு, பெயரளவு பகிர்வோடு அரசியலமைப்பைத் திணித்தது வெள்ளையராட்சி. அதனை முழுமையாக ஏற்கப் பேராயம் முழுமையாக ஒருப்படாதபோதும் தேர்தலில் மட்டில் பங்கேற்க முடிவு செய்து களத்தி லிறங்கியது.

தேர்தலில் வெற்றியை ஈட்டித்தர, நேரு இந்தியா முழுவதும் பயணம் செய்து பொதுமக்களைச் சந்தித்தார். பெரியாரைப் போல் அன்றைய காலகட்டத்தில் நேரு செயல்பட்டார் என்பதே பொருத்தமான எடுத்துக் காட்டாகும். பெரியாரின் தன்னலமற்ற, தடுமாற்றமில் லாத, ஓய்வில்லாத பயணத்தையும், பேச்சையும் நம்மில் பலர் நன்கறிந்துள்ளோம் எனவே அவரைப் போலவே உழைத்த நேருவின் பணியை முழுமையாக அறிந்து கொள்ள தந்தை பெரியாரை நினைப்பது சரியான ஒப்பு நோக்காகும்

சொந்த வாழ்க்கையில் தனியாளாக ஆகிவிட்ட நேரு, அந்தத் தனிமைக்குத் தீனியாகி விடாமல் பொதுப் பணியில் ஈடுபட்டு மக்களைச் சந்தித்தது ஆறுதலாக இருந்தது. இலட்சியத்தை அடைய,மக்களைத் தெளிவு படுத்த, வழிகாட்ட ஊக்கப்படுத்த நேரு தனது நேரத்தை யும், உழைப்பையும் செலவிட்டார். உள்நாட்டில் மேற் கொண்ட தொண்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு, நேரு பர்மா, மலேயா ஆகிய நாடுகளில் பயணம் மேற் கொண்டார்.

தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த நம்பவர்கள், தொடக்க காலத்தில் சுறு சுறுப்பாகச் செயல் பட்டனர். அவர்களுடைய வேகத்திற்கும், விருப் பத்திற்கும் ஆளுநர்கள் கடிவாளமாக இருந்தனர். எனவே கால ஓட்டத்தில் மாகாண அரசுகளின் செயல் வேகம் மராத்தானோட்ட வீரர்களின் இறுதிக் கட்டத் திற்கு முந்திய நிலை போலிருந்தது. மக்களுக்கும், பதவி யில் இல்லாத பேராயத் தலைவர்களுக்கும் மந்தநிலை ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ஆட்சிக் கட்டில் போராட்ட உணர்வை எப்படியெல் லாம் மழுங்கச் செய்து விடுகிறது என்பதை நேருக்கு நேர் காண முடிந்தது. எவ்வளவு குறைகள் இருந்தாலும் மாகாண அரசுகள் சில முன்னேற்றப் பணிகளைத் தமக் குள்ள அதிகாரங்களுக்குட்பட்டுச் செய்ததை ஒப்புக் கொண்டேயாக வேண்டும். சென்னை மாகாணப் பிரத மராக விளங்கிய மூதறிஞர் இராஜாஜி அவர்கள் ஆதி திராவிடர்கள் கோவிலுக்குள் செல்ல வகை செய்யும் சட்டத்தைக் கொண்டு வந்தார். சேலம் மாவட்டத்தில் முதற்கட்டமாக மதுவிலக்கை சட்ட பூர்வமாகக் கொண்டு வந்ததும் இந்தக் காலகட்டத்தில்தான்.

பேராயத்திற்குள் பிற்போக்குச் சக்திகளின் ஆதிக்கம் தலையெடுப்பதை நேரு விரும்பவில்லை. அவர்களோடு

மோத வேண்டிய கட்டாயம், முற்போக்காளர்களுக்குத் தவிர்க்க முடியாததாகி விட்டது. 1937 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் நடைபெற்ற பேராயக் குழுக் கூட்டத்தில் பேராயம் இந்த மோதலை நேரடியாகவே சந்தித்தது. அப்பொழுது ஜவகர்லால் நேரு தான் தலைவர். பதவிப் பொறுப்பு அடிப்படையில் அவர் மேற்கொண்ட சில நடவடிக்கைகளுக்கெதிராக அண்ணல் காந்தியடிகளே கட்டுரை எழுதுமளவுக்கு நிலைமை முற்றியிருந்தது.

1938 ஆம் ஆண்டு ஹரிபுரா பேராயத்தில் சுபாஷ் சந்திரபோஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நேரு தலைமைப் பதவியை அவரிடம் ஒப்படைத்து விட்டு, ஜூன் மாதம் இரண்டாம் நாள் ஜெனிவா நகருக்குப் பயணப்பட்டார். பேராயத்தில் இளைஞர்களும், முற்போக்குச் சிந்தனையாளர்களும், மக்கள் மத்தியிலும், இயக்கத்தாரிடையேயும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். ஆனால் பெருந்தலைவர்கள் இவர்களிடம் முரண்பட்டிருந்தனர்.

ஜெனிவாவில் நேரு தங்கியிருந்த போது, ஸ்பெயினுக்கு வருமாறு ஸ்பானிஷ் அரசு அழைப்பு விடுத்தது. ஆனால் அந்தப் பயணத்திற்குப் பிரெஞ்சு அதிகாரிகளிடம் அனுமதி பெறுவது அவ்வளவு எளிதாக இல்லை. இன்று பாமரனை சில அரசு அலுவலகங்களில் அலைக்கழிப்பதைப் போல் அன்று நேரு அங்கே நடத்தப்பட்டார். விடா முயற்சியால் அவர் பார்சிலோனியாவுக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே இராணுவத் தலைவர் என்றிக் லிஸ்டரைச் சந்தித்தார். ஜனவரி மாதம் பிராங்கோ பார்சிலோனியாவுக்குள் நுழைந்து மாட்ரிட்டைக் கைப்பற்றி விட்டார். குடியரசுக்காகப் போரிட்டவர்கள் தோல்விக்குத் தோழர்களாகி விட்டார்கள். நேரு அங்கிருந்து இலண்டன் வந்து சேர்ந்தார்,

இலண்டனில் நேரு லின்லித்தோ பிரபுவோடு பேச்சு நடத்தினார். இந்திய மக்கள் தங்களுடைய எதிர்காலத்தைத் தாங்களே தீர்மானித்துக் கொள்வதற்கும், தங்களுக்குரிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிக் கொள்வதற்கும் முழு உரிமையுடையவர்களென்பதைப் பிரிட்டன் உணர வேண்டுமென நேரு அப்போது தெளிவு படுத்தினார். சீன, ஸ்பானிஷ் குடியரசுகளுக்கு ஆதரவாக இலண்டனில் டிரபால்கர் சதுக்கப் பொதுக் கூட்டத்தில் நேருவும் பேசினார். இலண்டன் பயணத்தை முடித்துக் கொண்டு பாரிஸ், பிராக், புடாபெஸ்ட் ஆகிய இடங்களுக்குச் சென்று ஜெனிவா வந்து சேர்ந்தார். அங்கிருந்து மகள் இந்திராவுடன் 1938 ஆம் ஆண்டு நவம்பரில் இந்தியா திரும்பினார்.

இந்தியாவில் ஆக்க வேலைகளில் அதிக ஈடுபாட்டோடு நேரு தன் பணியைத் தொடர்ந்தார். திட்டக் குழுத் தலைமைப் பொறுப்பை விருப்பத்தோடு ஏற்று ஆர்வத்தோடும், அக்கறையோடும் பணியாற்றினார். இந்திய சமூகப் பொருளாதாரத்தில் அடிப்படை மாற்றங்களை விரும்பியவர் நேரு. அதற்கானத் திட்டங்களைத் தீட்டிட, இந்தப் பொறுப்பு தனக்கு வாய்ப்பளித்திருப்பதாக நேரு கருதினார். காந்தியடிகளின் பொருளாதாரக் கொள்கைகளில் மாறுபட்டவர் நேரு. திட்டமிட்ட தொழில் முன்னேற்றத்திற்கு, சோவியத் இரஷ்யாவைப் பின்பற்றிட அவர் விழைந்தார். விவசாயக் கைத்தொழில்களால் நாட்டில் மிகப் பெரிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியாது என்பதை அவர் தெளிவுபடுத்தினார். விரைவான முன்னேற்றத்திற்குச் சரியான திட்டமிடுதலே அடிப்படை என்ற நம்பிக்கையோடு, அவர் தனது பணியைச் செய்தார்.

தேர்தல் கூட்டைப்போலவே வேடிக்கையான, வேதனையான கூட்டு, அன்றும் உலகரங்கில் நிகழ்ந்தது.

கொள்கை பிறழ்ந்த கூட்டுக்கும், உடன்பாட்டுக்கும்உலக வல்லரசுகள் முயன்றன. பிரிட்டிஷ் பிரதமர் சேம்பர்லின் மூனிச்சில் பிரெஞ்சு பிரதமர் டலரடியருடன் ஹிட்லரைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு வெட்கக் கேடானது. வேதனைக்குரியதென நேரு கருதினார். இயலாமையின் கடைசிப் புகலிடமாக 'சமாதானம்' என்ற சொல் காலங் காலமாக விளங்கி வருகிறது. இதற்கு மூனிச் சந்திப்பு சரியான சான்று. உலக அரசியலின நிலைமை இது. இந்திய அரசியல்?

1939-ஆம் ஆண்டு சுபாஷ்சந்திரபோஸ் இரண்டாம் முறையாகப் பேராயத் தலைவர், பொறுப்புக்குப் போட்டி யிட்டார். அவருக்கெதிராக காந்தியடிகள் பட்டாபி சீத்தாரமையாவை நிறுத்தினார். சுபாஷ் வெற்றி பெற்றார். காந்திய்டிகளின் வேட்பாளர் பட்டாபி சீதாராமையா தோற்றுப் போனார். போட்டி அத்துடன் முடிந்துவிட வில்லை. அண்ணல் அப்படி முடிய விட்டுவிடவில்லை. காந்தியடிகள் கண்டெடுத்த போர் ஆயுதம் பேராயத்திற் குள்ளேயே பயன்படுத்திப் பார்க்கப்பட்டது. ஒத்துழை யாமையைத் தலைவருக்கெதிராக செயற்குழு உறுப்பினர் கள் செய்து காட்டினார்கள்.

காந்தியடிகளின் ஆதரவாளர்கள் ஒற்றுமை யின்மையை அறிமுகம் செய்தார்கள். விட்டுக் கொடுக் கும் மனப்பான்மைக்கு விடை கொடுத்தனுப்பினார்கள், குழப்பத்தை கொலுவேற்றினார்கள். அகிம்சாமூர்த்தி இவற்றைத் தடுக்கவுமில்லை—கண்டிக்கவுமில்லை. முடிவு சுபாஷ் தலைமைப் பதவியை விட்டு விலகினார். அது மட்டுமல்ல பேராயத்தை விட்டே சுபாஷ் விலகி, முற்போக்குக் கட்சியை (பார்வார்டு பிளாக்) தொடங் கினார். இந்த முடிவுக்கு சுபாஷ் சந்திரபோசைத் துரத்தி யவர் காந்தியடிகளென்றால் தவறாது. காந்தியடிகள் வெள்ளையர்களை இந்தியாவைவிட்டு வெளியேற்று

வதற்கு முன்னரே சுபாஷை பேராயத்திலிருந்து வெளி யேற்றுவதில் வெற்றி பெற்றுவிட்டார். பேராயத்திலேற் பட்ட இந்த பிரளயத்தால் நேரு நிம்மதியிழந்தார்.

பாகுபாடு காட்டாதது நோயும், மரணமும்தான். நல்லவர்; கெட்டவர்; குழந்தை, முதியவரென்ற வேறு பாடோ, தொண்டர் தலைவரென்ற ஏற்றத்தாழ்வோ, வறுமை, செம்மை என்னும் வேற்றுமையோ, இறப்புக் கில்லை. ''நீதியின் முன் அனைவரும் சமம்'' என்பது கொள்கை. அது மீறப்படுவதுண்டு. ஆனால் மரணத்தின் முன் உயிர்களெல்லாம் ஒன்றே என்பது மீற முடியாத இயற்கைச் சட்டம். நேருவின் தனிமை வெப்பத்தைத் தணிக்கும் நிழலாக விளங்கிய அன்னை சொரூபராணி பாரிசவாயுவால் மூன்றாம் முறையாகத் தாக்கப்பட்ட போது எதிர்த்து நிற்க முடியாமல் வீழ்ந்துவிட்டார்.

*1938*–ஆம் ஆண்டு நேருவுக்குக் கொடுத்த துன்பங் களை, அன்னையின் மரணம் அற்பமாக்கிவிட்டது. இழப்புக்களையே எண்ணி, எண்ணி இயலாமையை வளர்த்துக்கொள்வதைவிட, மனமாற்றத்திற்காக; ஆறுத லுக்காக பொதுத் தொண்டில், முனைப்பைக் காட்டுவ தொன்றே அகக்காயங்களை ஆற்றிக்கொள்ளத்தக்க அருமருந்தாகும் என்பதை உணர்ந்தவர் நேரு,

''ஐயிரண்டு திங்களா யங்கமெலா நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் — செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை

எப்பிறப்பிற் காண்பேனினி'' என்று துயர் துலங்கப் பாடிய பட்டினத்தாரைப்போல், அன்பு அன்னைக்காக நேருவின் நெஞ்சம் அழுதாலும், அறிவு ஆறுதலுக்கு வரத் தவறவில்லை.

# மீண்டும் இதழ்ப்பணி

மக்கள் தொடர்புக்கு மகத்தான கருவி ஏடுகள்தான். எண்ணங்களையும், திட்டங்களையும் மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கும். ஏற்கச் செய்வதற்கும் இதழ்களையும், மேடையையும் விடச்சிறந்த கருவி அன்றைய கால கட்டத்தில் வேறில்லை. தலைமைக்கும் தொண்டர்களுக்குங்கூட சிறந்த தொடர்புப் பாலமாக விளங்கியவை இதழ்கள்தான். இடர்ப்பாடுகளும், இழப்பும் இருந்தாலும், ஏடு நடத்துவதிலுள்ள நன்மைகளைக் கருத்தில்கொண்டு, நேரு மீண்டும் இதழ் பணிக்குத் தன்னை இலக்காக்கி கொண்டார்.

விடுதலை (Independent) என்னும் ஏடு நடத்தி முன்னர் பெற்ற வடுக்களைத் தடவிப் பார்த்துக் கொண்டார் நேரு. பட்டறிவு பயமுறுத்தினாலும், அவசியம், தேவை என்ற நெருக்கடிக்கு இணங்கி, *1938*–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 'நேஷனல் ஹெரால்டு' (National Herald)என்ற பெயரில் இலட்சுமன புரியில் நாளேட்டைத் தொடங்கினார்.

"எதை எழுதினாலும் அச்சத்திற்கப்பாலிருந்தே எழுதுங்களென்ற அறிவுரையோடும், அனுமதியோடும் தனது நாளேட்டின் பொறுப்பாளர்களுக்கு வழிகாட்டி நடத்திச் சென்றார். அச்சத்தின் பிள்ளைகளே போரும் பூசலும், நோயும் ஆசையும் என்பதை அவர் உணர்ந்திருந்ததோடு, மற்றவர்களுக்கும் உணர்ந்தினார். நேரு அச்சத்தை வென்றவர். இல்லை. அச்சமே அற்றவர் என்பதற்கு ஆதாரங்களை அடுக்கடுக்காகக் காட்டலாம்.

நேருவின் துணிவுக்குச் சில எடுத்துக் காட்டுக்கள் :-

- *1928*–ஆம் ஆண்டு, கல்கத்தா மாநாட்டில் தனது தந்தையை எதிர்த்த ஞான பண்டிதர்தான் நேரு.

- ரேபரேலியில் நடந்த துப்பாக்கிச் சூட்டின் போது, ஓடிப் பதுங்காமல், நிமிர்ந்து நின்றவர்
- இலட்சுமணபுரியில் காவலர்கள் தடியாலடித்த போது தாங்கிக் கொண்டு, அடிபிறழாமல் நின்றவர்.
- அலகாபாத நீர் சந்திப்பில் (சங்கமம்) குளிக்கக் கூடாதென காவல் துறையினர் இவரைத் தடுத்து நின்ற போது, தாவிச் சென்று நீரிற் குதித்தவர்.

வெற்றுரையாளரல்லர் நேரு. சொல்லுக்குச் சொல், எழுத்துக்கு எழுத்து செயல் வடிவானவர். இந்த உண்மையை நேருவின் அரசியல் எதிரி வின்ஸ்டன் சர்ச்சிலே ஒப்புக் கொண்டு பாராட்டியுள்ளளார். "மாந்தனுக்குண்டான இருபெறும் இயற்கையான குறைகளைக் கூடக் கடந்து நின்றவர் ஜவகர்லால். அவருக்கு அச்சமென்பதும், பேராசை என்பதும் என்ன என்றே தெரியாது.'' என்பதே சர்ச்சிலின் மெய்யுரை. (Jawaharal has over come two of the greatest failings in human nuture; he knows neither fear nor hatred.)

இதழுலகில் நேருவின் நேஷனல் ஹெரால்டு, இந்திய விடுதலைப் போராட்டத்திற்குப் பங்குக் கடமையைத் திறம்படச் செய்தது. இந்த இதழுக்கான முதல் தலையங்கக் கட்டுரையை நேரு, தனது வெளிநாட்டுப் பயணத்தில் பிரேகு நகரத்திலிருந்த போது, அங்கிருந்தெழுதி அனுப்பினார். இதழ்களுக்கேயுரிய இலக்கணப்படி இந்த ஏடும் இழப்பில் நடந்து வந்தது. ஏட்டின் பணியை முடக்க அரசு பல தடைகளை ஏற்படுத்திப் பார்த்தது. பண நெருக்கடியால் பாதிக்கப் பட்ட நிலையில் ஏடு பன்னிரண்டாயிரம் ரூபாய் பொறுப்புப் பணம் (ஜாமீன் தொகை) கட்ட வேண்டுமென கட்டளையிட்டது. இது குறித்து ஒரு கோரிக்கையை நேரு வெளியிட்டார். மக்கள்

நாற்பத்திரண்டாயிரம் ரூபாயை அள்ளிக் கொடுத்தார்கள். (இன்றைய மதிப்பில் அத்தொகை பல லட்சங்களுக்குச் சமம்) விடுதலை பெற்ற இந்தியாவில் பேராயக் கட்சி ஆட்சியில் பெரியாரவர்களின் 'விடுதலை' ஏட்டுக்கும் இந்த நெருக்கடி ஏற்பட்டது.

நேஷனல் ஹெரால்டில் நேரு நிறைய எழுதினார். அவருடைய எழுத்தாற்றலையும், கருத்துத் திண்மையையும், வன்மையையும் உணர்ந்த ஒரு ஆங்கில ஏடு, ஒரு பத்திக்கு நூற்றைம்பது ரூபாய் தருவதாகவும், தனது ஏட்டிற்கு எழுதுமாறும் கோரியது. அன்றைய நிலையை கணக்கிட்டால் இந்தத் தொகை சாதாரணமானதல்ல. ஆனால் நேரு அந்தக் கோரிக்கையை ஏற்கவில்லை. பொருள் மதிப்பில் அந்த ஏடு தர முன் வந்த தொகை, அற்பமானதல்ல. இன்றைய மதிப்பில் பார்த்தால் பல ஆயிரங்களுக்கு ஈடானது. நேருவின் எழுத்துச் சிறப்பை, ஏடு கொடுக்க முன் வந்த தொகையைக் கொண்டும் கணக்கிடலாம்.

நேஷனல் ஹெரால்டு இதழாசிரியர் ராமாராவை ஒருவர் உரையாடலுக் கிடையே "உங்கள் பத்திரிகையின் மூலதனம் எவ்வளவு?" என்று கேட்டாராம். அதற்கு ராமாராவ் "ஜவகர்லால்தான்" எங்கள் மூலதனம்! என்று விடை பகன்றாராம். உண்மைதானே, நேரு எவ்வளவு பெரிய மூலதனம்! அவருடைய மூளை தனத்தை அறிந்த அறிவுலகம் ராமாராவின் பதிலில் அடங்கியுள்ள உண்மையையும், உயர்வையும் ஒப்புக் கொள்ளும். ஆனால் ஏடு தொடங்கி மூன்றாண்டு காலம் வரை அது இழப்பில் தான் நடந்து வந்தது. அது மட்டுமல்ல. மொத்தத்தில் நான்காண்டு காலமே நடைபோட்ட அந்த நாளேடு, 1942-ல் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால் நின்று விட்டது.

அன்று முதல் இன்று வரை இதழ் நடத்துவதென்பது, நெருஞ்சி முள் மெத்தையாகத் தானிருந்து வருகிறது. பாவேந்தரின் இலக்கிய ஏடான குயிலும், அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு இதழும் கூட, பொருளாதாரச் சூறாவளியில் அகப்பட்ட புறாக் குஞ்சுகளாகி விட்ட உண்மையை நாடறியும் விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக விளங்கிய 'சுதேச மித்திரனே' முடங்கிப்போய் விட்டதே! இதழ்கள் படுத்து விடுவதற்கு பொருளும் ஒரு காரணமென்றாலும், பொருட் காரணமே முதலும், முடிவுமல்ல என்பதையும் மறந்து விடக்கூடாது.

# உலகப் போரும் விடுதலைப் போரும்

உலகப்போர் மூண்டுவிட்டது. ஐரோப்பாவில் போர் மேகம் கவிழ்ந்திருந்தது. கோமிண்டாங் தலைவர்களின் அழைப்பை ஏற்று சீனா சென்றிருந்த நேரு, அவசரமாக தாயகம் திரும்ப வேண்டியதாயிற்று. அன்று சீனத் தலைவராக விளங்கிய சியாங்-கை-ஷேக்கோடு பேச்சு நடத்தும் வாய்ப்பு நேருவுக்குக் கிடைத்தது. இந்தப் பயணத்தால் நேரு சீனாவை நேசிக்கும் நண்பனாக மாறினார்.

பிரிட்டிஷ் பேரரசு, இந்தியத் தலைவர்களின் எண்ணங்களைக் கேட்டறியாமலும், மாகாண அரசுகளின் கருத்தை அறியாமலும், தன்னிச்சையாக முடிவெடுத்துச் செயற்படுத்திட முனைந்தது. லின்லித்தோ பிரபு இந்தியாவைப் போரில் இழுத்து விட்டார். அவசரக் கோலத்தில், 1935–ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்திற்குப் தரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் திருத்தங்களை முன்மொழிந்து, நிறைவேற்றிக் கொண்டு, அரசப் பிரதி (வைசிராய்க்கு) நிதிக்கு அதிகாரங்களை அள்ளிக் கொடுத்தது பிரிட்டன்.

போரின் நோக்கம் என்ன என்பதையும், நோக்கத்தை இந்தியாவில் செயற்படுத்துவுள்ள வழிமுறைகளைத் தெளிவுபடுத்த வேண்டுமென்றும், பேராயக்குழு பேரரசை வலியுறுத்திக் கேட்டது. இதற்கு அரசின் சார்பில் தெரிவித்த பதிலைக் கூட்டிக் கழித்தால் "போரை நடத்தும் முயற்சிக்கு ஏதுவான அனைத்துக் கட்சிகளின் சிற்றரசுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப் படுமென்பதாக இருந்தது.

அரசின் பதிலைப் பேராயக்குழு வார்தாவில்கூடி ஆய்ந்தது- துன்புறுத்தாக் கொள்கையில் (அகிம்சை)

குறியாக இருந்த காந்தியடிகள், போர் வன்முறை ஆயுதம் என்ற கருத்தை முன்வைத்து, பிரிட்டன், ஹிட்லருக்கு எதிராகப் போர் நடத்தாமல் ஆன்ம பலத்தால் எதிர்க்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். சுபாஷ் சந்திரபோசோ உடனே சட்டமறுப்புப் போராட்டத்தைத் தொடங்க வேண்டுமென்றார். இந்த இரு துருவங்களுக்கும் இடையில் இருந்து நேரு ஒரு கருத்தைத் தெரிவித்தார். இந்தியர்கள் பாசிசத்திற்கெதிராகப் போர் புரிய வேண்டுமென்றும், ஆனால் பிரிட்டிஷ் பேரரசு தங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கக் கூடாதென்றும் கருத்துத் தெரிவித்தார்.

தமிழ் மண்ணில் பிறந்த இராஜாஜி, பிரிட்டன், இந்தியாவுக்கு விடுதலை வழங்க முன்வர வேண்டுமென்றும், இடைக்கால ஏற்பாடாக மண்ணின் மைந்தர்களைக் கொண்ட அரசை உடனே அமைக்க வேண்டுமென்றும் கூறினார். இந்த அமைப்பே நடுவரசின் சட்டப் பேரவைக்கும் பொறுப்பாக இருக்கும் ஏற்பாடும் வேண்டும். இந்தத் திட்டத்தைப் பிரிட்டன் ஏற்றுக் கொண்டால், புதிதாக அமையும் இந்தியராட்சிப் பொறுப்பை ஒப்புக் கொண்டு போரில் உதவி செய்யும்.'' என்பதே ராஜாஜியின் திட்டக் கருத்து. நேருவின் கருத்தையும், இராஜாஜியின் திட்டத்தையும் உள்ளடக்கிய பதில், பேராயத்தால் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டனுக்கு நிபந்தனையற்ற ஒத்துழைப்புத் தருவதற்கில்லை என்பதையும், அப்படிச் செய்வது பேராயம் இதுநாள் வரை பற்றி நின்ற கொள்கைகளுக்கு முரணானதாகவும், நோக்கத்தை முறியடிப்பதாகவும் ஆகுமெனக் கருதியது. மேலும் ஏகாதிபத்திய கொள்கைக்குத் தோள் கொடுப்பதை யொத்த முடிவுக்கு பேராயம் இசைய முடியாது. பேராயம் எதை எதிர்க்கிறதோ, அதை, நிலை நிறுத்திக் கொள்ளத் துடிக்கும் அரசோடு ஒத்துழைக்க முடியாதென்பதையும் குழு தெளிவு படுத்திவிட்டது.

பேராயம் தெரிவித்த கருத்தையும், திட்டங்களையும் அரசு ஏற்க மறுத்துவிட்டது. மேற்கு நாடுகளில் போரின் வெற்றி தோல்விகள் விளைவை ஏற்படுத்தின. எதிர் பாராத திருப்பங்களோடும், எழுச்சி, வீழ்ச்சிகளோடும் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. போரின் புகை மூட்டத்தால் மூச்சுத் திணறும் நிலையில்கூட, பிரிட்டிஷ் பேரரசு, இந்தியாவில் தனது ஆதிக்கப்பிடியைத் தளரவிடாமல் அழுத்தமாகப் பற்றிக் கொண்டிருக்கவே ஆசைப்பட்டது.

பேராயம் தெரிவித்த ஏற்பான கருத்தை ஆணவ அரசால் ஒப்புக்கொள்ள இயலவில்லை. தனது ஆதிக்க நோக்கத்திலிருந்தும், சுரண்டல் கொள்கையிலிருந்தும் வெளியே வர விரும்பாமல், தன்னலத் தாழ்ப்பாளைப் போட்டுக் கொண்டிருந்தது அரசு. கிளிப்பிள்ளை சிந்தித்துப் பேசுவதில்லை. அதைப் போல் வெள்ளைய ராட்சியும் நிலைமையைச் சிந்திக்க மறுத்துவிட்டது. படையும், பட்டயமும் தனது கையிலென்ற ஆதிக்க அகம்பாவத்தோடு பழைய பல்லவியையே பாடி முடிவாக அறிவித்துவிட்டது.

பிரிட்டிஷ் அரசின் போர்கொள்கைக்கு எதிப்புத் தெரிவிக்கும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசுகள் அனைத்தும், 1940 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் பதவி விலகிவிட்டன. ஐக்கிய மாகாண அரசு மட்டில் முந்திக்கொண்டு, அக்டோபர் திங்களிலேயே விலகிவிட்டது. போராட்டத்திற்குப் பேராயம் ஆயத்த மாகி வந்தது. அரசும் தனது ஆயுதங்களைக் கையி லெடுக்கத் தயாராக இருந்தது.

காந்தியடிகள் அரசாங்கத்தோடு மோதலைத் தவிர்க்க வெகு முயற்சி எடுத்துக் கொண்டார். பேராயக் குழுவும் அவருக்கு முழு அதிகாரமளித்திருந்தது. சட்டமறுப்பியக் கத்தை நிறுத்த, போர் எதிர்ப்புப் பிரச்சாரம் செய்யும்

உரிமையை வழங்க வேண்டுமென, கோரிக்கை வைத்தார். ஆனால் வைசிராய், காந்தியடிகளின் கோரிக்கையை ஏற்பது போர் முயற்சியைக் குலைத்து விடுமெனக் காரணம் கூறி மறுத்துவிட்டார். அத்துடன் நிற்கவில்லை அவர், பேராயத்தின் உறுப்பினர்களுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளையும் விதித்தார்.

அரசு அவசரச் சட்டங்களை நீட்டி, பேராயத் தலைவர்களைச் சிறையிலடைக்க முற்பட்டது. மக்கள் மனதில் அழுந்திக் கிடந்த ஆவேச உணர்வு மேல்தளத்திற்கு வந்தது. ஆனால் அண்ணல் காந்தியடிகளால் பண்படுத்தப்பட்டிருந்த மக்கள், மனக்குமுறல் வெடிக்காமல் பார்த்துக் கொண்டனர். பேரரசின் போர்க் கொள்கையை எதிர்க்கும் வகையிலும், மக்களை அதற்கெதிராகத் திரும்பும் முயற்சியாகவும் தனி மனிதர் அறப் போரைப் பேராயம் தொடங்கியது.

1940–ஆம் ஆண்டு, அட்டோபர் திங்கள் பதினேழாம் நாள், வினோபாபாவே, முதல் வீரராகக் களத்தில் இறங்கினார். அவரையடுத்து, நவம்பர் ஆறாம் நாள், நேரு இரண்டாவதாகக் களத்திலிறங்க வேண்டுமெனக் காந்தியடிகள் முடிவு செய்திருந்தார். அண்ணலின் முடிவைச் செயற்படுத்தும் முன்னரே, அரசு முந்திக் கொண்டது. போர்ப் புரவிப் பாய்ச்சலில் அது செயல் பட்டது. நேரு அக்டோபர் முப்பத்தோறாம் நாளே கைது செய்யப்பட்டார்.

கைது முன்னே, காரணம் பின்னே என்பதுதான் வெள்ளையராட்சியின் நீதி நடைமுறை! இப்படிப்பட்ட செயல்கள் மூலம் மக்களுக்கு, ஓநாய் ஆட்டுக்குட்டிக் கதையை ஆட்சி அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். தற்போது நேருவைக் கைது செய்ததற்கு, அவர் கோரக்பூர் மாவட்டத்தில் 'லால் திகியில்' அக்டோபர் திங்கள் ஆறாம் நாள், மற்றும் ஏழாம் நாட்களில்

ஆற்றிய சொற்பொழிவைக் காரணமாகக் காட்டியது. இந்தக் காரணத்தைக்கூட அது காட்டாமலேயே கைது செய்யலாம். ஆனால் தனது தகாத செயல்களுக்கெல்லாம் நீதியைக் கற்பித்து விடும். அந்த வேடிக்கையை வெளிப்படுத்த, வெள்ளையராட்சி வெட்கப்பட்டதுமில்லை, தயங்கியதுமில்லை. வெட்கப்படத்தக்க செயலைச் சிலர் வீரமாகக் கருதுவதை ஒத்ததே அரசின் நீதி நடைமுறை,

இந்திய மக்களின், குறிப்பாகவும், சிறப்பாகவும். விவசாயிகளின் இதயங்களில் இடம் பிடித்திருந்த நேருவை கைது செய்த அரசு, பாதுகாப்புணர்வோடு செயல்பட்டது. நேரு நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்படவில்லை. மாறாக, மாவட்ட குற்றவியல் நீதிமன்ற நடுவர் இ.டி.வி. மோஸ் என்பவர் சிறைக்குள்ளேயே நேருவை விசாரித்தார். 'தியோரியா' மகாராஜ் கஞ்ச் மற்றும் 'லால்திகி' ஆகிய இடங்களில் நேரு நிகழ்த்திய உரைகளின் குறிப்பை அரசு வழக்குரைஞர் எடுத்துரைத்தார். அதில் "இனியும் நீடித்திருப்பதற்கு எள்ளளவும் தகுதியற்ற அரசை எதிர்த்திட மக்கள் ஆயத்தமாக வேண்டும். நாம் நமது, இசைவைப் பெறாமலேயே போரில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றோம். அரசின் போர் முயற்சிக்கு நாம் எவ்வித உதவியும் செய்யக்கூடாது, என்று நேரு பேசியதாகக் குறிப்பிட்டார். ஆட்சிக்கெதிரான கருத்தை, மக்கள் மனதில் நடவு செய்ததன் மூலம் பாதுகாப்புச் சட்டவிதி 34[6]ன்படி தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்திருப்பதாக வழக்குரைஞர் குற்றம் சுமத்தினார்.

மாதங்கள் மாறினாலும் பரிதி எழும் திசையும், விழும் திசையும் மாறுவதில்லையல்லவா? வழக்குகளும் குற்றச் சாட்டுக்களும் மாறி மாறி வந்தாலும், எதிர்வழக்காடுவதில்லை என்னும் கொள்கைச் சூரியன் என்றும் போல்

அன்றும் மறுப்பைத் தெரிவித்து, அறிக்கையொன்றை மட்டும் படித்தார்.

"கடந்த நான்கு கிழமைகளாகப் போர் குறித்த பல செய்திகளை நான் பேசவில்லை. இயல்பாக நான் அதைத் தவிர்க்கவில்லை. போர்க் கொள்கைக் குறித்துத் தான் குறிப்பிடும் ஒருவர் மட்டுமே பேசலாம் என, எங்கள் அன்புக்கும், மதிப்பிற்குமுரிய அண்ணல் காந்தியடிகள் கட்டளையிட்டிருந்தார். அவர் விருப்பத்திற்கு மாறாகச் செயல்படக் கூடாதென்பதற்காகவே அத்தகையப் பேச்சுக்களைத் தவிர்த்தேன். இங்கே குறிப்பிட்ட மூன்றிடங்களில் மட்டுமல்லாது, வேறு பல இடங்களிலும் போர் நிதி கட்டாய வசூலைப் பற்றித்தான் பேசினேன். ஏழைகளிடம் வாங்கப்படும் இந்தக் கட்டாயப் போர் நிதிக்குப் பொருள் கொடுக்கக் கூடாதென்றுதான் குறிப்பிட்டேன். ஆனால் எங்கள் தலைவர் காந்தியடிகளின் கட்டளைக் கிணங்கி இந்தப் பேச்சைக் கூட கைவிட்டு விட்டேன்".

"நானும், திரு. வினோபாவேயும் எங்கள் சொந்தக் கருத்தை வெளியிடுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இந்திய மக்களின் எண்ணங்களை எதிரொலிக்கவே "நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டோம். தனிப்பட்ட முறையில் நாங்கள் எளியவர்களேயானாலும், இந்த நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக இப்பொழுது நாங்கள் நிற்பதால், நாங்கள் முக்கியமானவர்களாகிறோம். அவர்கள் சார்பாக, அவர்களுடைய விடுதலை உரிமையை நாங்கள் வன்மையோடு வலியுறுத்தினோம். அவர்களுக்குச் சரியான வழியைக் காட்ட வேண்டிய எங்கள் கடமையைச் செய்தோம். அவர்கள் தங்களுக்கு உகந்த நெறிமுறைகளை வகுத்துக் கொண்டு, தங்கள் உரிமைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் போராடும் உரிமையை மறுத்து, அவர்கள் மீது அதிகாரச் சுமையை ஏற்றும் அமைப்புக்களையும், முயற்சிகளையும் நாங்கள் அங்கீகரிக்க மறுத்தோம்.

''எங்கள் மக்களிடமிருந்து நேரடியாகவோ, அவர்களுடைய பிரதிநிதிகளிடமோ ஆணை பெறாத எவரும், எந்த அமைப்பும் தங்கள் அதிகார பலத்தைக் கொண்டு மக்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை உலகப் போரில் ஈடுபடுத்திடக் கூடாது. விடுதலை, தன்னாட்சி உரிமை மற்றும் மக்களாட்சிக்காகவே போர் தொடங்கப் பட்டதாகக் கூறிக்கொண்டு, சொல்லப்படும் நோக்கங்களுக்குப் புறம்பாக நடப்பது நகைப்பிற்குரியது. இது குறித்து இறுதி முடிவெடுப்பதில் நாங்கள் அவசரம் காட்ட வில்லை. ஆழ்ந்து சிந்தித்து, கூடிப் பேசி, எதிர் தரப்புக்கும் இழுக்கேற்படாத ஒரு முடிவுக்காக நாங்கள் காத்திருந்து ஏமாற்றமடைந்த பின்னரே நாங்கள் சட்ட மறுப்பை மீண்டும் துவக்க நேர்ந்தது. இந்த முடிவு நாங்களாக விரும்பிச் செய்ததல்ல. ஆட்சியால் திணிக்கப் பட்டது.

''பல சமயங்களில் பாசிச ஆதரவுத் தன்மையும், பாசிசத்தை நினைவு கொள்ளச் செய்யும் தன்மையும் கொண்ட பிரிட்டிஷ் கொள்கையை நான் கடுமையாக கண்டித்து வந்திருக்கின்றேன். பாசிசத்தை அமைதிப் படுத்துவதென்ற பெயரால் மஞ்சூரியா, அபிசீனியா, மத்திய ஐரோப்பா, ஸ்பெயின், சீனம் ஆகியவற்றின் மீதான படையெடுப்புக் காலத்தில் ஒவ்வொரு நாடாக எவ்வாறு காட்டிக் கொடுக்கப்பட்டதென்பதையும், சுதந்திர விளக்கு எவ்வாறு அணைக்கப்பட்டு வந்ததென்பதையும் வருத்தத்தோடு கவனித்து வருபவன் நான். ஏகாதிபத்தியங்கள் இப்படித்தான் செயல்படுமென்பதையும் நான் உணர்ந்து கொண்டேன்.

''தொலைவு நாடுகள் தாக்கப்பட்டபோது, அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. உள்ளக் கொதிப்பு, ஏற்படவில்லை. அப்போது தலையிடாக் கொள்கை

பாதுகாப்புக் கவசமாகப் பயன்படுத்தப்பட்டது. நச்சுக் கிருமிகள் தங்களை நெருங்கிவரக் கண்டதும்தான் பிரிட்டிஷ் பேரரசுக்கு பாசிசத்தின் பயங்கரம் தெரிந்தது. எதிர்ப்பு ஏற்பட்டது, போர் மூண்டது. இந்தியாவில் ஓராண்டுக்கும் மேலாகவே போர்க்கால அரசுதான்செயல் பட்டு வருகிறது. மக்கள் அரசு அல்ல. அவை அலட்சியப் படுத்தப்பட்டு, ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டன. புவி யெங்குமில்லாத புதுமையாக, இங்கே அதிகார வர்க்கத் தின் ஆட்சியே நடைபெற்று வருகிறது. கட்டுப்படுத்தப் பட்ட சுதந்திரங்கூட இப்போது நசுக்கப்பட்டுவிட்டது. ஏடுகளின் உரிமை முடக்கப்பட்டு ஊன்று கோலையும் அரசு தன் கையில் வைத்துக் கொண்டது. இதுதான் பிரிட்டன் எங்களுக்குக் கொடுக்கப்போகும் சுதந்திரத்தின் வடிவம்; அடையாளம் என்றால் பிரிட்டனும், எதிர்கால ஜப்பான் என்பது தெளிவாகிறது. எனவேதான் இந்தப் போரில் நாங்கள் எங்களை ஈடுபடுத்திக்கொள்ள முன் வரவில்லை. எங்கள் மக்களுக்கு இந்த உண்மைகளை எடுத்துக் கூற வேண்டியது எங்கள் கடமை என்றுணர் கிறோம். அதுவே எங்கள் தலையாய கடமையாகும்.''

''என்மீது குற்றம் சுமத்தி விசாரிக்கும் நீங்கள் இந்த அரசின் சின்னம். நானும் அவ்வாறே ஒரு தனி மனிதன் அல்ல. நான் இந்திய தேசியத்தின் ஒரு சின்னம். பிரிட்டிஷ்பேரரசின் பிடியிலிருந்து விடுபட்டு, இந்தியாவை விடுதலை பெற்ற நாடாக்கி பார்க்க வேண்டுமென்ற உணர்வின் சின்னம். நீங்கள் விசாரித்துத் தீர்ப்பளிக்கப் போவது என்னையல்ல. கோடானுகோடி மக்களை'' என்று தனது அறிக்கை வாயிலாக முழங்கினார் நேரு. இறுதியில் தனது பேச்சைக் குறிப்பெடுத்தது மிகவும் அபத்தமாக உள்ளதாகவும் அக் குறிப்பு தனது கலை உணர்வையும், இலக்கிய உணர்வையும் மிகவும் கொச் சைப்படுத்தும் விதத்தில் உள்ளதாகவும் கூறி முடித்தார்.

அரசு நேரு மீது கீழ்வரும் மூன்று குற்றங்களைச் சுமத்தியிருந்தது.

1. இந்தியாவின் பாதுகாப்புக்கு ஊறு ஏற்படும் வகையில், மக்களின் பொறுப்புணர்ச்சியை எதிர்வழியில் திருப்பினார்.

2. தேசிய கடன் திட்டத்தின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கையை பாழ்படுத்தினார்.

3. அரசுக்கு எதிராக, மக்கள் மனதில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் பேசினார்.

இந்த மூன்று குற்றச்சாட்டுகளையும் மிகத் திறமையாகவும், திட்டமிட்டும் ஒப்பனை செய்து, உருப்பெருக்கம் செய்து நீதிமன்றத்தில் அரங்கேற்றினார்கள். காவல் துறையினரும், அரசு வ்ழக்குரைஞரும்.

நீதிபதி சாட்சிகளின் கூற்றை அலசி ஆராய்ந்து *(!)* நேரு மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் மெய்ப்பிக்கப்பட்டதாக முடிவு செய்தார். இந்தியப் பாதுகாப்புச் சட்டம் (5)வது பிரிவுடன் 38(1) விதியின் கீழ் சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும், ஒவ்வொன்றுக்கும் ஓராண்டு நான்குமாதங்கள் வீதம், நான்காண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். சிறை அவரை வரவேற்றது பல முறை. இப்போது அவரைத் தன்னிடமே தக்க வைத்துக்கொண்டது என்பதுதான் புதிய நிலைமை.

ஜெர்மன் சோவியத் யூனியன் மீது போர் தொடுத்தது. இந்தச் செய்தி சிறையிலிருந்த நேருவுக்குக் கவலை தந்தது. அழிவுச் சக்திகள் தங்கள் தோல்விக்கணக்கைத் துவங்கும் நேரம் நெருங்கிவிட்டதன் அடையாளம் தெரியத் தொடங்கியது. ஜெர்மன் சோவியத் மக்களைச் சீண்டத் தொடங்கியதுமே, நாஜீகளின் தோல்வி தொடங்கிவிட்டதென்று உலகம் அறிந்து கொண்டது.

நேருவைப் போலவே இந்திய மக்களும் சோவியத் யூனியன் வெற்றிபெற வேண்டுமென விழைந்தனர். வெற்றிச் செய்தியை ஆவலுடன் எதிர்பார்த்தனர்.

மறுமுனையில் ஜப்பான் பிரிட்டிஷ் பேரரசின் பெருமிதத்தையும் ஆணவத்தையும் தனது விமானப்படை மூலம் தகர்த்துக் கொண்டிருந்தது. விரைப்பாக நிமிர்ந்து நின்ற பிரிட்டனின் தோள்கள் குலுங்கின. பார்வை இறங்கியது. குரல் தாழ்ந்தது. விளைவு...! தண்டனைக் காலம் முடியும் முன்னரே 1941–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள், நான்காம் நாள் நேருவும் மற்ற இந்திய தேசியத் தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

மேலை நாட்டில் வீசிக் கொண்டிருந்த போர்ப்புயல், கீழ்த்திசையிலும் சுழன்றடிக்கத் தொடங்கியது. பர்மாவையும், தென்கிழக்காசியாவையும் ஜப்பான் கற்பனைக் கெட்டாத வேகத்தில் தாக்கித் தனதாக்கிக் கொண்டது. நிலைமையின் அவலத்தை யுணர்த்திட பிரிட்டன் தவறிவிட்டது. போரில் இந்தியா எவ்வித அக்கறையும் காட்டாமலிருந்ததையும், இந்திய மக்களின் கோரிக்கைகளையும் அமெரிக்கக் குடியரசு தலைவர் ரூஸ்வெல்ட் அறிந்திருந்தார். பிரிட்டன் இந்த நிலையை நீடிக்க அனுமதிப்பது சரியல்ல என்றவர் கருதினார். இந்தியாவை இணக்கத்திற்குக் கொண்டுவர வேண்டியதற்கானமுயற்சிகளை பிரிட்டன் மேற்கொண்டேயாக வேண்டுமென்று போர்க்கால பிரதமர் சர் வின்ஸ்டன் சர்ச்சிலை வற்புறுத்தினார் ரூஸ்வெல்ட். இதன் விளைவுதான் சர்ஸ்டாப்போர்டு கிரிப்ஸ் இந்தியத் தலைவர்களோடு பேச வந்தது.

கிரிப்ஸ் திட்டத்தை ஏற்றுக் கொள்வதனால் இந்தியா உண்பதற்கு வந்த ஒட்டு மாம்பழத்தைப் போல துண்டு போடப்பட்டிருக்கும். நாட்டைக்கூறு போட்டுப் பிரிக்கும் திட்டத்தோடு வந்த கிரிப்ஸை அண்ணல் காந்தியடிகள் அடுத்த விமானத்திலேயே திரும்பிப் போகலாமென

விடை கொடுத்ததிலிருந்தே கிரிப்சின் திட்டம் எப்படிப் பட்டதாக இருந்திருக்குமென்பதை அறிந்து கொள்ள லாம்.

இந்தியாவைக் கூறுபோட, பிரிட்டனைப் போலவே இங்கிருந்த குறுநில மன்னர்களும், முசுலிம் லீக் முகமதலி ஜின்னாவும் ஆர்வத்தோடிருந்தனர். ஜின்னாவும், சிற்றரசர்கள் சிலரும் பிரிட்டனிடம் கோரிக்கைகளையும் விடுத்திருந்தனர். பேராயத்தை இதற்கிசையச் செய்ய, லீகர்கள் நாடெங்கிலும், குறிப்பாக, வடபுலத்தில் மதக் கலவரங்களைத் தூண்டி விட்டு, ஏதுமறியா மக்களை இன்னலுக்கும், இழப்புக்கும் ஆளாக்கி வந்தார்கள். இந்து மகாசபையும், முசுலிம் லீகும் தங்கள் மத உணர்வுக்கு, இந்தியாவைக் குருசேத்திரமாக்கினார்கள். அண்ணல் காந்தியடிகளும், நேரு, அபுல் கலாம் ஆசாத் போன்றவர்களும் முயன்று பார்த்தும் முசுலிம் லீகை ஒற்றுமை வழிக்குக் கொண்டு வர முடியவில்லை.

பிரித்தாளுவதில் பெருமை பெற்ற பேரரசு, இந்தியாவைக் கூறு போடுவதிலேயே குறியாக இருந்தது. ஆனால் இந்தியாவிலிருந்த வேறு பல இயக்கங்களும்கூட பிரிவினையை ஆதரிக்கவில்லை. முசுலிம் லீக் ஒன்றுதான் விதிவிலக்காக இருந்தது. 1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள், ஏழாம் நாள் கூடிய பேராயக்குழு, பெரும்பான்மை வாக்கால் வெள்ளையரை வெளியேறக் கோரியது. இந்திய விடுதலையின் பேறு கால வலியும், முழக்கமும், இந்திய மண்ணில் தோன்றி எதிரொலிக்கத் தொடங்கி விட்டது.

# ஆகஸ்ட்டு புரட்சி

கெஞ்சிக் கேட்டு எந்த மயில் இறகு போட்டது? தானியக் குதிருள் தங்கிய எலிகள் விரட்டப்படாமல் வெளியேறுமா? இந்திய பொருளாதாரத்தை இளைக்க வைத்து, இலண்டனை மெருகேற்றியவர்கள், விடை பெறுகிறோம் என்றா விரும்பிக் கூறுவார்கள்? துரியன் மனம் பெற்றவர்கள், வெள்ளையர்கள். அவர்கள் எந்த நீதிக்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட மாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்த பேராயம் முடிவாக 'வெள்ளையனே வெளியேறு' என்று முழக்கமிட்டது. அந்த முழக்கம் காற்று மண்டலத்தில் கலந்தது.

கருக் கொண்ட மேகம், காற்று தொட, மழையாக மண்ணைத் தொடுவதைப் போல், விடுதலை வேட்கை, பேராயத்தின் அனுமதியும் "செய் அல்லது செத்து மடி" (Do or Die) என்னும் காந்தியடிகளின் கட்டளையும் கிடைத்தவுடன் கனலெனக் கொழுந்து விட்டது, புன லெனப் பொங்கியது. போராட்டம் சூடு பிடித்தது. அடக்குமுறை அரிச்சுவடியை எழுதி, அதை அகிலத் திற்கு அறிமுகப்படுத்திய பிரிட்டனுக்கு, போராட்டத்தை ஒடுக்குவதற்கு மாற்றார் எவரும் வழிகாட்ட வேண்டிய அவசியமில்லை. அவர்களும் தங்கள் 'கடமையை' சுறு சுறுப்பேற்றிக் கொண்டு செய்ய முற்பட்டனர். என்ன இருந்தாலும் 'அதிகாரத்திற்கு' வேகம் அதிகம் தான்.

1942-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் ஒன்பதாம் நாள், கதிர வனின் ஒளிக்கரம் மக்கள் மேனியில் படும் முன்னரே, ஆணைப்படி, காக்கிச் சட்டைகள், பேராயத் தலைவர் களின் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். நல்ல இலக்கியப் பேச்சுக்காகக் காத்துக் கிடக்கும் செவிகளைப் போல், போராட்ட வீரர்களின் வரவுக்காகக் காத்துக் கிடந்த அகமத் நகர்க் கோட்டைச் சிறைக் கதவுகள் வட்டிப்

பணம் வந்தால் வாய்பிளக்கும் சேட்டுகளின் பெட்டியைப் போல் திறந்து நின்றன. உடனடியாகப் பேராயத்தின் அனைத்துக் குழுக்களும் சட்ட விரோதமானதென அறிவிக்கப்பட்டது. அடக்குமுறையின் அம்புகளே இவை தானே! நேரு வாழ்க்கையின் நீண்டகால சிறை வாழ்க்கை அகமத் நகர் கோட்டைச் சிறையில் தொடங்கியது. செங்கோட்டைக்குள் நுழைய அகமத் நகர் கோட்டைதான் வழி போலும்!

மக்களை அடக்கி ஒடுக்க பிரிட்டன், இந்தியர்களுக்கெதிராக ஒரு போரையே நடத்திக் காட்டியது. ஆயிரக் கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர். பயிற்சியுமில்லை, தலைமையுமில்லை, இருந்தாலும் போர் என்பது போல் மக்கள் வெள்ளையரின் பட்டாளத்தை, உள்ள உறுதியோடு எதிர்கொண்டார்கள்.

உலகப் போரும், பிரிட்டிஷ் பேரரசின் அடக்குமுறையும், வங்கப் பஞ்சமும் இந்திய மக்களுக்கு ஆற்றொணாத் துயரத்தை அள்ளி வந்து கொடுத்தன. பட்டினிச் சாவுகள் ஆட்சியாளர்களின் அக்கறையின்மையும், இரக்கமின்மையும் உலகறியச் செய்தன. உண்மையில் அன்றைய நிலைமை, சிறையிலிருப்பதைவிட வெளியில் இருப்பதே கொடுமையானதாக இருந்தது.

ஹிட்லரின் படையெடுப்பை முறியடித்த சோவியத் நாட்டின் வெற்றிச் செய்தி சிறையிலிருந்த இந்தியத் தலைவர்களுக்கு, குறிப்பாக நேருவுக்கு மகிழ்ச்சியையும், மனத்தெம்பையும் கொடுத்தது. வீரம் மிக்க சோவியத் மக்களின் மகத்தான இந்தச் சாதனைக்காக சான்றோர் உலகம் அவர்களை வாழ்த்தியது. சோவியத் நாட்டின் நண்பர் நேருவின் வாழ்த்தும், சான்றோர் வாழ்த்துடன் சங்கமித்தது.

# சீர்திருத்த மணம்

இந்திய வரலாற்றில் நேரு குடும்பம் எப்படிப் பிரிக்க முடியாத பகுதியாகி, வியத்தகு விளைவுகளுக்குக் காரணமாக இருந்ததோ, அப்படியே சமூக சீர்திருத்த அரங்கிலும், அந்தக் குடும்பத்தின் வெற்றிக் கொடி பட்டொளி வீசிப் பறந்தது. சமயமும், மதமும் அந்தக் குடும்பத்துக்குள் நுழைந்து பார்த்து விட்டு வெளியேறி யதேயன்றி, அங்கே குடிகொண்டு ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. மூடத்தனங்களையும், மடத்தனங்களை யும் மோதிலாலும் சரி, ஜவகர்லாலும் சரி தங்கள் குடும்ப நண்பர்களாக்கிக் கொள்ளாமல் ஒதுக்கியே வைத்திருந் தார்கள். அந்தப்புர வழியாக மதச் சடங்குகள் பலமுறை நுழைந்து பார்த்ததுண்டு. பார்ப்பனர்கள் நேருவின் பகுத்தறிவு மனப்பான்மைக்கு அறை கூவல் விட்ட சூழ் நிலைகளும் ஏற்படாமலில்லை. வெளிநாட்டிலிருந்து திரும்பிய நேருவைப் புனிதப்படுத்த அவர்கள் போட் டத் திட்டத்தைப் பொடிப் பொடியாக்கியவர் அவர்.

கலப்புத் திருமணத்துக்குக் கதவைத் திறந்து வைத் தவர் நேரு. சடங்குகளைச் சாப்பிட வரும்படிக் கூறி விட்டு பதிவுத் திருமணத்தைப் பந்தலுக்கு வரவழைத்தவர் ஜவகர். செல்வச் செழிப்பை, பணத்தின் கனத்தை, ஊரார் பார்வைக்கு ஊர்வலம் விடுவதற்குத் திருமணங் களைத் தேர்தல் திருவிழாவாக்கிக் காட்டிடும் ஆடம்பரத் தின் ஆணி வேரையே அகற்றி எறிந்தவர் நேரு.

வாழ்க்கைத் துணையை, சாதிச் சனியன்கள், பேதம் பேசிப் பிரிக்கும் போக்குக்கு இணங்காதவர் நேரு. "காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்" என்னும் தமிழர் கொள்கையின் தத்துவ விளக்க மானவர் ஜவகர்லால் நேரு.

"நாடகத்தில் காவியத்தில் காத லென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோ ரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமு கின்றார்

பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய் கின்றார்"
என்று பாடினானே பாரதி, அப்படிக் காதலைக் கொல்ல படை திரட்டும் பாதகர்களின் படையெடுப்புக்கெதிராகப் பகுத்தறிவுப் பயணம் செய்தவர் நேரு.

ஊருக்கே உரைகளெல்லாம், உனக்கல்ல என்னும் போலிப் பகுத்தறிவாளர்களைப் போலல்லாமல், காதலையும், கலப்பு மணத்தையும் வீட்டுக்கழைத்து விருந்து வைத்தவர் தான் நேரு. கலப்பு மணத்தை வரவேற்றுப் பாடல் மட்டில் எழுதிவிட்டு, சொந்த வீட்டுத் திருமணத்திற்குச் சாதிச் சம்பந்தம் தேடும் போலிகளைப் போலல்லாமல் செய்து காட்டியவர். தனது மகள் இந்திராவின் காதல் மணத்தை, கலப்பு மணத்தை விரிந்த மனத்தோடு அங்கீகரித்தவர் நேரு.

பார்ப்பனப் பெண் இந்திராவுக்கும், பார்சியான பெரோஸ் காந்திக்கும், கல்லூரிப் படிப்பின் போது ஏற்பட்ட நட்பு, காலத்தால் கனிந்து, காதலாக மலர்ந்தது. இங்கிலாந்தில் அவர்கள் படித்துக் கொண்டிருந்த போது, அரசியல் நடவடிக்கைகளில் இணைந்து செயல்பட்டனர் பின்னர் வாழ்க்கையிலும் இணைய விருப்பங் கொண்டனர். அவர்கள் திட்டப்படி, கோடையில் தாயகம் திரும்பியதும் மணக்கத் தீர்மானித்திருந்தனர். ஆனால் நேரு அப்போது சிறையில் இருந்ததால், திருமணத்தைத் தள்ளிப் போட வேண்டியதாயிற்று.

உண்மையான காதலுக்குக் காலங்கூட உதவிக் கரம் நீட்டி ஓடி வந்தது. உலகரங்கில் நிகழ்ந்த திடீர்த் திருப்பங்கள், நெருக்கடிகள் காரணமாக, பிரிட்டன் சிறை வைத்திருந்த இந்தியத் தலைவர்களை விடுதலை

செய்ய வேண்டியதாயிற்று. நேருவின் விடுதலையால் பெரோஸ் – இந்திரா, திருமணத்திற்காகக் காத்திருக்க வேண்டிய காலத்தை வெகுவாகக் குறைத்து விட்டது.

காதலர்களின் முடிவை ஏற்றுக் கொண்ட நேரு, திருமணத்திற்கு நாளை உறுதி செய்தார். பெரிய இடத்துத் திருமணமாயிற்றே, விரும்பாவிட்டாலும் விளம்பரம் கிடைக்காமற் போய் விடுமா? செய்தி பரவியது. பெற்றவரும், உற்றார் உறவினர்களும் ஒப்புக் கொண்ட திருமணத்திற்குச் சனாதன சாதிக் சழக்கர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அச்சுறுத்தலும், கண்டனக் கணைகளும் காகித உருவெடுத்துக் கட்டுக் கட்டாக அஞ்சலில் வந்து குவிந்தன. மனக் கலப்பேற்றபின், மதக் கலப்பும், சாதிக் கலப்பும் நிகழ்வதைத் தடுத்துப் பார்த்தனர். இந்தியாவே தன் காதலுக்கும் திருமணத்திற்கும் எதிராகத் திரண்டிருப்பதாக எனக்குச் சில வேளைகளில் எண்ணத் தோன்றுகிறது" என இந்திராவே வேதனையை வெளியிடுமளவுக்கு எதிர்ப்பு அலை மோதியது.

ஒரு குடும்ப நிகழ்ச்சிக்கு, இவ்வளவு எதிர்ப்பு இதற்கு முன் ஏற்பட்டதில்லை. சம்பந்தமில்லாதவர்களெல்லாம் தங்களைச் சம்பந்தப் படுத்திக் கொண்டனர். சாதிக் கலப்பைப் பொறுத்துக் கொண்டவர்கள் கூட மதக் கலப்பைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பொங்கி எழுந்தனர். இந்துமத நியதிகளை (எம்மதமும் சம்மதமே என்றாலும்) ஏற்றுப் போற்றிக் கடைப்பிடித்த காந்தியடிகள், இந்தத் திருமணம் குறித்துத் தமது கருத்தை வெளியிட வேண்டுமெனக் கோரி, அவருக்கு மடல்கள் வந்து குவிந்தன. மதவெறியர்கள், காந்தியை இந்து மதத்தின் எதிரியாக உருவகப் படுத்திக் காட்ட இது குறித்த அண்ணலின் கருத்து உதவுமென அவர்கள் நினைத்ததன் விளைவே இந்த வேண்டுகோள்.

மத வேற்றுமை பாராட்டாத மாமனிதர் காந்தியடிகள். "காதலில் குறுக்கிடுவது நாகரிகமற்றது, அன்பற்ற

செயல்'' என அறிக்கை விட்டார். எதிர்ப்புச் சூறாவளி ஓய்ந்தது. ஆனந்த பவனத்தில், 1942 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், இருபத்தாறாம் நாள், இந்திரா, பெரோஸ் காந்தி யின் வாழ்க்கைத் துணைவியானார். இந்த நிகழ்ச்சியில் பகுத்தறிவும், வைதீகமும் ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்துக் கொண்டன.

# விடியலின் சாயல்

உலகப்போர், முக்கிய கட்டத்தை எய்தியது. இந்தியாவில் கொந்தளிப்பு அடங்கவில்லை. உலக நிலைமையையும், இந்திய நிலைமையையும் சீர்தூக்கிப் பார்த்த அரசு, சிறையில் வைக்கப்பட்டிருந்த தலைவர்களை விடுதலை செய்யத் தீர்மானித்தது. 1945-ஆம் ஆண்டின் முற்பகுதியில் நேரு உட்பட எல்லாத் தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். தேங்கிக் கிடந்த உணர்வு வெள்ளம் அணையுடைத்துப் புறப்பட்டதுபோல் மக்கள் வீறு கொண்டெழுந்தனர். மாற்றார் மனப்போக்கில் கூறுவதானால் ஒரு 'வெறி' காணப்பட்டது. முக்கிய நகரங்களில் பிரிட்டிஷ் அரசு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. விடுதலை வேட்கையின் வெளிப்பாடு மிகச் சூடாக இருந்தது.

ஆட்சியாளர்களை நிலைமையின் அச்சம் தொட்டுப் பார்த்தது. அரசப் பிரதிநிதி இலண்டனுக்கு அழைக்கப்பட்டு புதிய திட்டங்களோடு இந்தியாவுக்கு மீள அனுப்பப்பட்டார். பேராயக் கட்சி உட்பட எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்துச் சிம்லாவில் அவர் ஒரு மாநாட்டை நடத்தும் முயற்சியை மேற்கொண்டார். பேராயத்தின் அப்போதைய தலைவர் அப்துல் கலாம் ஆசாத்தோடு அவர் பேசினார். பிரிட்டன் ஒரு முடிவை அறிவிப்பதற்கு முன், பேராயமும் முசுலிம் லீகும் உடன்பாட்டுக்கு வரவேண்டுமென்ற கருத்தை அப்போது அவர் வெளியிட்டார். ஆனால் அது அவ்வளவு நம்பிக்கை தரும் முயற்சியல்ல என்று ஆசாத் அவருக்கு மறுமொழியளித்துவிட்டார். மகமதலி ஜின்னாவின் 'குறுக்குச்சால்' கொள்கையைப் பேராயம் ஏற்காதென்பதை அவர் தெளிவுபடுத்தினார்.

அரசப் பிரதிநிதி சிம்லாவில் கூட்டும் மாநாட்டில் கலந்து கொள்வது குறித்து, பேராயத்தின் செயற்குழு கூடி ஆய்ந்தது. மாநாட்டில் கலந்து கொள்வதென்றும், பிரிட்டனின் திட்டத்திற்குத் தெளிவான விளக்கத்தைக் கோருவதென்றும் முடிவு செய்தது. மாநாடு தொடங்கியது. பேராயத்தின் பிரதிநிதிகள் எழுப்பிய வினாக்களுக்கு வேவல் பிரபுவின் விளக்கம், குழம்பிய குட்டை நீரில் தெரியும், நிலவுக் காட்சியாக இருந்தது. அரசு, முன் மொழிந்த ஆட்சி மன்றக் குழுவில் அங்கம் வகிக்கும் முசுலிம் பேராளர்களை நியமனம் செய்யும் உரிமை முசுலிம் லீகுவுக்கே இருக்க வேண்டுமென ஜின்னா அடம் பிடித்தார். அவருடைய இந்த நிபந்தனை, முசுலிம்களின் ஒரே பிரதிநிதி முசுலிம் லிக் என்று உறுதி செய்வதற்கொப்பாகும். மேலும் பேராயத்தை முசுலிம் இனத்தவர்களிடமிருந்து பிரித்து விடும் முயற்சியுமாகுமென்பதால் காந்தி, நேரு, ஆசாத் மூவரும் ஒரே குரலில் எதிர்த்தனர். இதனால் சிம்லா மாநாடு தோல்வியைக் கையில் பிடித்துக் கொண்டு தவித்து நின்றது; தனித்து நின்றது.

பிரிட்டனில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தொழிற் கட்சி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது. தொழிற்கட்சி எதிர்வரிசையிலிருந்த போது, இந்தியாவுக்குத் தன்னாட்சி உரிமை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஆதரித்தது. ஆனால் பொறுப்புக்கு வந்த பின்னர் நின்று நிதானித்துப் பேசியது. மருமகள் மாமியாரானதும் மருமகள் நிலைமையையும், நியாயத்தையும் மறந்து விடுவது போல் தொழிற் கட்சியும் ‘இந்திய விடுதலையை’ இயல்பாக மறந்து விட்டது. பிரிட்டிஷ் ஆதிக்கம் இந்திய மண்ணில் நீடிக்க வேண்டுமென்ற ஆசை அட்லி ஆட்சிக்கு ஏற்பட்டு விட்டதோ என எண்ணும்படி அதன் நடவடிக்கை இருந்தது.

பிரிட்டனுக்கெதிராக அச்சு நாடுகளின் ஆதரவு பெற்று போரிட்ட சுபாஷ் சந்திரபோஸ் விபத்தில் இறப்

புக்கு ஆளானார். அவருடைய படைத் தலைவர்கள் மீது பிரிட்டன் போர்க் குற்றம் சுமத்தி விசாரணை செய்தது. பேராயம் சுபாஷ் சந்திர போசின் நடவடிக்கைகளில் முரண்பட்டிருந்தாலும், அவரது நோக்கத்தின் தூய்மையையும், தன்னலத் துறவையும் ஐயுற்றதில்லை. எனவே இந்திய தேசிய இராணுவத் தலைவர்களுக்கெதிரான விசாரணையில் எதிர்வழக்காடுவதென்று முடிவெடுத்தனர். நீண்ட இடைவெளிக்குப்பின் நேருவும் வழக்குரைஞர் அடையாள அங்கியை அணிந்து வாதாடினார்.

மக்களும் இந்திய தேசிய இராணுவத்தின், படைத் தலைவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். எல்லா இந்தியப்படை வீரர்களையும் விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரினார்கள். தேசிய படைத் தலைவர்களைத் தீர்த்துக் கட்டி விடலாமெனக் கருதியிருந்த பிரிட்டனை, இந்திய மக்களின் எழுச்சி மருள வைத்தது. தீர்ப்பையும் திருத்த வைத்தது. மரண தண்டனையைத் தீர்ப்பாக எழுதி வைத்துக் கொண்டிருந்த நீதிபதிகள், நிலைமை கடுமையாக இருப்பதைக் கருத்தில் கொண்டு அனைவரையும் சிறைக் குடியிருப்புக்கு அனுப்பி வைத்துத் தீர்ப்பளித்தார்கள். முடிவாக அரசப் பிரதிநிதி [வைசிராய்] எல்லாருக்குமே மன்னிப்பு வழங்கி விட்டார். ''மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு'' என்பதை மெய்ப்பிக்கும் நிகழ்ச்சி இதுவல்லவா? எதிர்ப்பு இத்தோடு முடிந்து விடவில்லை. இராயல் இந்தியக் கடற்படையினர் கலகம் செய்தனர். தலைமைக்குக் கட்டுப்பட மறுத்தனர். வெள்ளையரல்லாதார் இரண்டாந்தரமாக நடத்தப்பட்டதன் விளைவு இது. விவசாயிகளும் ஆர்த்தெழுந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். கப்பற்படை வீரர்களை அடக்க, அதிகமாக பிரிட்டிஷ் படையை அனுப்பி வைத்தது. மக்கள் போராட்டத்தை எதிர்கொள்ள முடியாத ஆட்சி, பேராயத்தோடு பேச்சு நடத்த பெதிக் லாரன்சு தலைமையில் தூதுக் குழுவொன்றையும்

நியமனம் செய்தது. சைவ உணவும், அசைவ உணவும் ஒரே விடுதியில் பரிமாறப்படுவது போலிருந்தது பிரிட்டனின் செயல்.

*1945*–ஆம் ஆண்டு, நவம்பரில் நடைபெற்ற மாகாண சட்டமன்றத் தேர்தலில் பேராயக் கட்சி வேட்பாளர்கள் பெருவெற்றி பெற்றனர். இந்த வெற்றியின் மூலம் இந்திய மக்களின் அங்கீகாரம் பெற்ற ஒரே கட்சி, மக்கள் பிரதிநிதி பேராயந்தான் என்பதைப் பிரிட்டன் உணரச் செய்தனர், உணரும் என்று நேரு நம்பினார். ஆனால் உண்மை நிலையை, ஆளும் வர்க்கம் வசதிக்கேற்றாற் போலவே கணக்கிலெடுத்துக் கொள்ளும். அவசியப்பட்டால் அலட்சியப்படுத்தவும் தயங்காது.

*1946*–ஆம் ஆண்டு, மார்ச் திங்களிறுதியில், பெதிக் லாரன்ஸ் தூதுக்குழு இந்தியாவுக்கு வந்தது. ஒன்றரை மாத காலம் பல அரசியல் தலைவர்களைத் தனித் தனியாகச் சந்தித்து, அரசியல் நிலைமையை அறிந்து கொள்ள முயன்று வந்தது. இறுதியாகத் தூதுக் குழுவினர் வைசிராய் முன்னிலையில், போராயக்கட்சி. முசுலிம்லீகு பிரதிநிதிகளோடு பேச்சு வார்த்தையைத் தொடங்கியது. அப்துல்கலாம் ஆசாத், நேரு, வல்லபாய் பட்டேல் கான் அப்துல் கபார் கான் ஆகியோர் பேராயக் கட்சியின் பிரதிநிதிகளாகவும், மகமதலி ஜின்னா,. லியாகத் அலிகான் மற்றுமிரு முசுலிம்கள் 'ஜின்னா கட்சியின்' (முசுலிம் லீக்) பிரதிநிதிகளாகவும் உரையாடலில் கலந்துக் கொண்டனர்.

'இந்துக்கள் பெரும்பான்மையாக இருக்கும் அரசை ஏற்படுத்தக்கூடிய எந்த அரசியலமைப்புச் சட்டத்தையும், முசுலிம்களால் ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், முசுலிம்கள் பெரும்பான்மையாக இருக்கும் மாகாணங்களைச் சேர்த்து ஒரு தனி அரசு அமைக்கப்பட வேண்டுமென்று ஜின்னா கோரினார். ஆனால் இந்தியாவில் கூட்டாட்சி அமைப்பே வெற்றிபெற முடியுமெனப்

பேராயத்தின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்தனர். கூட்டாட்சியில், உள்நாட்டுப் பிரச்சினைகளில் மாகாண அரசுகளுக்கு முழுச் சுதந்திரம் அளிப்பதன் மூலம் அவசியமற்ற அச்சங்களைக் களைய முடியுமென்றனர். பேராயப் பிரதிநிதிகளின் வாதங்களை ஜின்னா ஏற்க மறுத்துவிட்டார்.'' சரியான போட்டி, என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டது தூதுக்குழு வைசிராயோ, "ஊர் இரண்டுபட்டது. கொண்டாட்டம் நமக்குத்தான்." என்றெண்ணினார். பங்காளிகள் சண்டையில் பொது எதிரி ஒருவருக்கு நண்பனாகி விடுவான் என்ற கொள்கையில் நம்பிக்கைவைத்து, தூதுக்குழு பயணப்பட்டது.

பிரிட்டிஷ் அரசிடம் லாரன்ஸ் தூதுக்குழு, தன் ஆய்வறிக்கையை ஒப்படைத்தது. அந்த அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட, தன்னாட்சித் தத்துவப் பிரகடனத்தை பிரிட்டன் தனது நாடாளு மன்றத்தில் வெளியிட்டது. இற்று விழுவதற்கேற்றவாறு, கீற்றுப் போட்டு மூடிய வெள்ளரிப் பிஞ்சைப் போல், இந்தியாவைப் பிளவுபடுத்தும் திட்டமாக அது இருந்தது. உரிமை, கடமை என்ற அணியலங்காரமெல்லாம் அந்தத் திட்டத்திற்குச் செய்யப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்தைக் காந்தியடிகள் வரவேற்றார். நேருவோ அதன் உள் நோக்கம், பின் விளைவுகள் குறித்தும் ஐயப்பட்டார்.

பிரிட்டனின் இந்தத் திட்டம், விடுதலைக்குப் பாதையைத் திறந்து விட்டிருப்பதாகக் காந்தியடிகள் கருதினார். ஆனால், விடுதலை மாளிகையின் அடிப் படையைப் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி, தரைக்கு மேலேயே கட்டியிருப்பதாக நேரு கருதினார். ஜின்னா கட்சிக்காரர் களோ, திட்டத்தை 'சலாம்' போட்டு ஏற்றுக் கொண் டார்கள். திட்டத்தின் நோக்கம் அவர்களுக்கு இசைவான தாகவே இருந்ததால் அதனை ஏற்க முன்வந்தார்கள்.

கட்சிக்குப் புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டம் வந்தது. அபுல்கலாம் ஆசாத் நேருவின் பெயரை முன்மொழிந்தார். காந்தியடிகளோ, வல்லபாய் பட்டேலைத் தலைமைப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டிருந் தார். ஆசாத் முந்திக் கொண்டதால், காந்தியடிகள் தமது கருத்தை அரங்கேற்றம் செய்யவில்லை. காந்தியடிகள் எதிர்ப்போ, மாறுபட்ட கருத்தோ கூறாததால் நேரு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேர்தலுக்குப்பின், நேரு பத்திரிகையாளர்களுக் களித்த பேட்டியில் "சுதந்திரம் என்ற கருத்தைப் பிரிட்டிஷ் பேரரசும். முசுலிம்லீகும் புரிந்து கொண்டிருப்ப தற்கும், பேராயத்தின் எண்ணத்திற்கும் வேறுபாடுள்ள தெனத் தெளிவுபடுத்தினார். அரசியல் நிர்ணய சபையில் கலந்து கொள்வதற்கு மட்டுமே நாங்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றோம். பேராயத்திற்கு உடன்பாடான வகையில், பிரிட்டிஷ் அமைச்சரவை தயாரித்த திட்டத்தை மாற்றவும், திருத்தவும் தங்களுக்கு உரிமை உண்டென்றும் நேரு கூறினார். செய்தி ஏடுகளில் இதனைப் படித்த ஜின்னா, ஆட்டக்களத்தில் கால்பந்தைத் தலையால் தள்ள முயலும் ஆட்டக்காரரைப் போல் துள்ளிக் குதித்தார். முசுலிம்லீகின் குழுவை அவசரமாகக் கூட்டினார். முன்னரெடுத்த முடிவை நீக்கிடும் தீர் மானத்தை நிறைவேற்றினார்.

"நேருவின் விளக்கப்படிப் பார்த்தால் அரசியல் நிர்ணய சபையில் இந்துக்களுக்குள்ள பெரும்பான் மையைக் கொண்டு, சிறுபான்மை இனத்தின்மீது இந்துக் களின் ஆதிக்கம் சவாரி செய்யும்" என்று ஜின்னா முழங்கினார். எனவே இனி பேராயத்தோடு பேச்சுக்கே

இடமில்லை என்றார். நிலைமையைக் கடுமையாக்கிடும் வகையில் 1946-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் ஆறாம் நாளை பாகிஸ்தான் இலட்சியத்திற்கு நேரடி நடவடிக்கை நாளாக அறிவித்தார். நிலைமை சிக்கலாகிவிட்டது. வல்லபாய் பட்டேலும், நேருவை விரும்பாதவர்களும் இதுவே தக்க வேளையெனக் கருதி நேருமீது கண்டனக் கணைகளை எய்திட்டார்கள். நிலைமை மோசமானால் தலைமையைத் தாக்குவது இயக்கங்களின் இயல்பு.

பிரிட்டன், நேருவை இடைக்கால அரசு அமைக்கும் படி கேட்டுக் கொண்டது. பேராயத்தின் முடிவுப்படி கூட்டு அரசை அமைக்க ஜின்னாவை நேரு அழைத்தார். ஆனால் ஜின்னா, பிரிவினைக்காகக் கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்ததால் அழைப்பை ஏற்று வர வில்லை. வங்கத்தில் ஆகஸ்டு 16-ல் உணர்ச்சி வயப் பட்ட முசுலிம்கள் ஜின்னா விரும்பியபடி வன்முறைப் போராட்டத்திற்குக் களமமைத்தார்கள். வெள்ளைய ராட்சி தம்பூராக் கலைஞரைப் போல் எந்தவிதப் பாவமுமின்றி பின்னணி வேலையை செய்து கொண் டிருந்தது. வங்க கலவரம் தொற்று நோய்க் கிருமியைப் போல் பரவத் தொடங்கியது. பீகார் மற்றும் பம்பாய் எனக் கலவரம் பரவியது. கொலை, கொள்ளை, உடைமைச் சேதம் என்று மக்கள் விளக்கமுடியாத அளவுக்குத் துன்பப் பட்டார்கள், தொல்லைப்படுத்தப் பட்டார்கள். மனிதத் தன்மையற்ற இனக் கலவரத்தால் மக்கள் பட்ட இன்னல் கண்டு காந்தியடிகள் கலங்கி னார். இந்தக் கொடுமையை நேரு கடுமையாகக் கண்டனஞ் செய்தார்.

மகமதலி ஜின்னாவை அமைச்சரவையில் சேருமாறு மீண்டும் நேரு அவருக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் அவர் சிவப்புக் கொடியைக் கையில் பிடித்துக் கொண்டு தலையசைவால் கழித்தல் குறியைப்

போட்டுக் காட்டினார். எனவே முன்னொரு காலத்தில் தமிழ்நாட்டில் நாவலர் கலைஞர் அமைச்சரவையில் சேர மறுத்த போது, அவருக்காக அமைச்சரவையின் கதவு திறந்தே உள்ளதென்று கூறியதைப் போலவே நேருவும் அன்று ஜின்னாவுக்காகவும் முசுலிம் லீகுக்காகவும் அமைச்சரவையின் கதவு திறந்தே இருக்குமென அறிவித்தார்.

முரண்டுக் கொண்டிருந்த முசுலிம் லீகுக்காகக் காத்திராமல், 1946-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் இருபத்து நான்காம் நாள் அமைச்சர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டார். அமைச்சரவையில் எல்லா இனத்தவர்களுக்கும் இடம் கொடுக்கப்பட்டிருந்தது. இடைக்கால அரசை அமைத்தவுடன் அவராற்றிய வானொலி உரையில் ''இப்பொழுது முன் முயற்சி நம்மிடமே வந்து விட்டது. நாம் நமது வரலாற்றைப் படைப்போம்'' என்றார்.

கதவைத் திறந்தே வைத்திருந்த நேரு அமைச்சரவைக்குள் வர, ஒரு மாதத்திற்குப் பின் ஜின்னா ஒப்புக் கொண்டார். முசுலிம் லீக் அமைச்சர்கள் நேரு கூட்டும் கூட்டங்களுக்கு வர மறுத்தார்கள். ஆனால் வைசிராய் கூட்டும் கூட்டத்திற்கு மட்டில் வந்தார்கள். வெள்ளைக்காரன் முசுலிம்களுக்கு வேண்டியவனாகி விட்ட விந்தைதான் என்னே! வேற்றுமை வேர்பிடித்த வேகமா? பண்பாடு பழுது பட்டதன் விளைவா? அவர்களது நடவடிக்கைகள் இணக்கமின்மையை விளம்பரப் படுத்துவதாக இருந்தது,

இந்தியாவை ஆளும் உரிமையை இந்தியர்களிடமே முழுமையாக 1948-ஆம் ஆண்டு, ஜூன் மாத முடிவுக்குள் ஒப்படைத்து விடப் போவதாக அட்லி பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் 1947-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் நாள் அறிவித்தார். அதற்கேற்றபடி முன்னேற்பாடுகளையும் பிரிட்டன் அறிவித்தது வேவல் பிரபுவை

அழைத்துக் கொண்டு, அவரிடத்தை நிரப்ப மௌண்ட் பேட்டன் பிரபுவை அனுப்பி வைத்தது. மௌண்ட் பேட்டன் டில்லியில் மார்ச் 24-ஆம் நாள் பதவி ஏற்றுக் கொண்டார்.

ஜின்னா, நேருவின் இடைக்கால அரசில், முசுலிம் லீக் பிரதிநிதிகள் சேர அனுமதித்ததே கூட நல்லெண்ணத் தோடல்ல. நேருவின் அமைச்சரவைக்குத் தொல்லை கொடுப்பதற்கேயாகும். தொல்லை தாளாமல், இவர்கள் நம்மை விட்டுப் போய்விட்டாலும் பரவாயில்லை என்ற எண்ணத்தைப் பேராயத்திற்குத் தோற்றுவிப்பதே அவர்கள் நோக்கம் என்று கருதும்படியாக இருந்தது அவர்களுடைய செயல்பாடுகள்.

போர் முறை நியதியென யுகயுகமாகக் கடைப்பிடிக்கப் பட்டு வரும் மரபுப்படி, ஆக்ரமிப்பாளர்கள், தாங்கள் பிடித்திருந்த நாட்டை விட்டு விலகும் போது எவ்வளவு முடியுமோ அவ்வளவு கொள்ளையையும், அழிவையும் செய்து விட்டுப் போவது போல், ஆங்கில ஆட்சியும் தனது ஆதிக்கத்திலிருந்து விடுபடும் இந்தியாவை முழுமையாக விட்டுச் செல்ல விரும்பவில்லை என்பதை அதன் நடவடிக்கைகள் காட்டிக் கொடுத்தன. நாட்டைச் சிதைத்து சீரழித்துச் செல்ல அது சூழ்ச்சி வலையை நேர்த்தியாக நெய்தது. அதைப் பக்குவமாகப் பாதை பார்த்து விரித்தது. இந்தப் பணியை மௌண்ட் பாட்டன் பிரபு வியக்கத் தக்க வகையில், ஐயத்தின் நிழலே படக் கூடாதென்ற எச்சரிக்கையோடு செய்து முடித்தார்.

கிழக்கிலும், மேற்கிலும் இனக் கலவரங்கள் மூண்டிட மிகத் திறமையாகச் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்தார்கள் வெள்ளையர்கள். முசுலிம் லீகு அந்த நோக்கத்திற்கு, அவர்கள் கையில் கிடைத்த நல்ல கருவியாக இருந்தது. இந்து மகா சபையும் சும்மா

இருந்து விட்வில்லை. கூறு போடாமல் இந்தியாவை, இந்தியர்களிடம் கொடுப்பதில்லை என்ற தூய திட்டத் தோடுதான் மௌண்ட் பேட்டன் பிரபு திருப்பணிச் செல்வராக அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

வெள்ளையர்கள் தங்கள் எல்லா முறை கேடான செயல்களுக்குமே அவர்கள் நீதிக் காரணங்களை நிறுவிக் காட்டத் தவறியதில்லை. இந்தியாவை உடைக்க இரு வேறு தேசிய இனங்களை உருவாக்கிக் காட்டி விட்டார்கள். பின்னனியில் தூண்டி விடுவதும், முகத்துக்கு நேரே அமைதியை விரும்புவது போல் நடிபபதிலும். நடிகர் திலகத்தையே வெனறவர், மார்லன் பிராண்டோவையே மண்டியிடச் செய்யும் திறமையாளர் தான் மௌண்ட் பேட்டன் பிரபுவும், அவரது ஆட்களும்.

மௌண்ட் பேட்டன் பிரபு, இந்தியாவைப் பிரிக்க, ஜின்னாவிடம் ஒரு பட்டாக்கத்தியைக் கொடுத்துவிட்டு, தனது 'கோட்டுப்' பையில் தகடு கத்தியை வைத்துக் கொண்டிருந்தார். அவர் வைத்துக்கொண்டிருந்த தகடு கத்திதான் தந்திரம். பக்குவமாகப் பேசுவதிலும், மற்றவர் களைத் தனது இலக்கு திசைக்குத் திருப்புவதிலும் வல்லவர் அவர். தனது இந்த ஆற்றலை பேராயத்தின் தலைவர்களிடம் காட்ட அவர் தவறவில்னல, இந்தியா வில் சிறு சிறு பத்திகளாக விளங்கிய குறுநில மன்னர்கள் விடுதலை பெற்ற இந்தியாவில் தாங்கள் தனியரசாகவோ, அல்லது பிரிவினை செய்யப்படும் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணையும் முடிவைத்தானே எடுத்துக்கொள்ளும் உரிமையுடன் விடுதலை வழங்க லாமென பிரிட்டிஷ் அரசுக்குப் பரிந்துரை செய்து விட்டார்.

மௌண்ட் பேட்டன் பிரபு, தனது பரிந்துரையை நியாயப்படுவதற்கான காரணங்களை இனக் கலவரத்தின் மூலம் தோற்றுவித்திருந்தார். பங்காளிகள் சண்டை

யிட்டுக்கொள்ள வழி செய்துவிட்டால், பிரச்சினைத் தீர்க்கும் நடுவராகத் தான் விளங்கமுடியுமென அவர்கள் நினைத்தார்கள், சமாதானம் செய்து வைக்க, அவர்களுக்கு அறிமுகமானவர்களாக இருக்கும் தங்களிடந் தான் வருவார்கள், வரவேண்டும் என்ற எண்ணம் வெள்ளையர்களிடம் இருந்தது.

மௌண்ட்பேட்டனின் திட்டத்தை நேரு கடுமையாக எதிர்த்தார். ஆனால் வைசிராய் மிகத் திறமையாக கள்ளத்தனமாகக் காயைத் தன் வெற்றிக் கட்டங்களுக்கு நகர்த்திக் கொண்டே கவனத்தைத் திருப்பப் பேச்சுக் கொடுத்துக் கொண்டிருந்தார். பிரிவினையை ஏற்கச் செய்வதற்கு அவர் கண்ணனாகவே 'அவதாரமெடுத்து வந்திருந்தார். திட்டமிட்ட காலத்திற்குமுன்னரே, தனது நோக்கத்தை வெற்றிப் பாதையில் வேகமாக ஓட விட்டார், சமையல் முடிந்தபின், பரிமாறுவதை ஏன் தள்ளிப் போட வேண்டும்? குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே 1947-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் பதினைந் தாம் நாள் அதிகாரத்தை இந்தியர்களிடம் மாற்றித் தருவதற்கு பிரிட்டிஷ் அரசின் அனுமதியைப் பெற்றார் மௌண்ட்பேட்டன்.

பிரிவினையின் விளைவுகள் அச்சப்படும்படியாக அவலத்தைத் தோற்றுவிப்பதாக இருக்குமென இந்தியத் தலைவர்கள் எடுத்துக் கூறினார்கள். உறுதிமொழி என்னும் துணிப்பந்தால் அவர்கள் வாயை மௌண்ட் பேட்டன் அடைத்தார். அபுல்கலாம் ஆசாத் ஒருபடி முன்னேறி அதிகார மாற்றத்தைக்கூடத் தள்ளிப் போட லாமென்றார். இனக் கலவரக் கனலை, பிரிவினையின் தோளில் ஏறிவரும் அதிகார மாற்றம் கொழுந்துவிட் டெரியச் செய்துவிடுமென்றார் ஆசாத். 'சர்வ வல்லமை யோடு' கலவரத்தைக் கட்டுப்படுத்திக் காட்டுவதாகக் கையமர்த்தினார் மௌண்ட்பேட்டன். அவரது அவசரத்

திற்கு காரணமே, அவரும் ஜின்னாவும் கூட்டுச் சேர்ந்து மூட்டிய தீ, அவர்களே எதிர்பாராத அளவுக்கு அச்சப் படுமளவுக்கு வேகமாகப் பரவி விட்டது தான். வெள்ளைக்காரர்களால் கலவரத்தைக் கட்டுப்படுத்த முடியாது. எனவே பழியை தேசியம் சுமக்கட்டும் என்ற எண்ணம் உந்த, அந்தத் தோல்வியைப் பேராயத்தின் தோள்களில் சாய்த்துவிடவே அவர் அதிகார மாற்றத் திற்கு அவசரப்பட்டார்.

நேரு பாகிஸ்தான் பிரிவினையைக் கட்டோடு வெறுத் தார்; ஆனால் சூழ்நிலையைக் கருதி மற்ற தலைவர்கள் பிரிவினைக்கு இசைந்தார்கள். வேறு வழியின்றிப் பெரும் பான்மை முடிவுக்கு நேரு கட்டுப்பட நேர்ந்தது. "வித்தி யாசங்களை (வேறுபாடுகளை)ப் பொருட்படுத்தாம லிருக்க வேண்டுமென்றால் ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைத் தெரிவிக்கச் சுதந்திரம் இருக்க வேண்டும். ஆனால் முடிவு ஏற்பட்ட பிறகு, அந்த முடிவு நமக்கு ஏற்றதாக இல்லா விட்டாலும் (சந்தோஷமாக) மகிழ்ச்சி யோடு அதற்கு உட்பட்டு நடக்கவேண்டும்" என்பதே நேரு கொள்கை. அதை முன்னரும் பல நிகழ்ச்சிகளில் நிரூபித்துள்ளார். பிரிவினை கருத்துக்கு அவர் உடன் பட்டதும் இந்தக் கொள்கை வழியில்தான்.

1947 ஆகஸ்ட் திங்கள் 14ம் நாள் இரவு அரசியல் அமைப்பவையின் முதல் கூட்டம் நடைபெற்றது. இந்திய யூனியன் பிறப்புச் செய்தியை, அவைத் தலைவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத் அறிவித்தார். இந்திய விடுதலைக் காகத் தங்கள் இன்னுயிரை ஈந்து விடுதலை வேட்கை யோடு வரலாறாகிவிட்ட அந்தத் தன்னலத் துறவிகளுக்கு (தியாகிகளுக்கு) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வீர வணக்கம் தெரிவிக்கும் வகையில் சில வினாடிகள் எழுந்து நின்று அமைதி காட்டினார்கள். நன்றி மறவாத நல்லவர்கள் அவர்கள்.

தேசிய அரசின் முதல் பிரதமர் என்ற முறையில் நேரு உரை நிகழ்த்தினார். அப்போது "நள்ளிரவு மணி ஒலிக்கும்போது உலகம் உறங்கிக் கொண்டிருக்கும். இந்தியாவோ விடுதலை விழிப்பிலிருக்கும். பெருமைக்குரிய இந்த நேரத்தில் இந்திய மக்களுக்கும் மனித இனத்திற்கும் பாடுபடும் நமது மன ஈடுபாட்டை, எண்ணத்தை உறுதியளிப்பது மிகவும் பொருத்தமானதே!" என்று குறிப்பிட்டார். முழு விடுதலை (பூரண சுதந்திரம்) கோடானு கோடி மக்களின் உயிர்க்கொள்கையின் வெற்றி கைகளுக்கு வந்தது.

பாரதி பாடினானே "ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று" அந்த ஆனந்த சுதந்திர திருநாள் 1947 ஆகஸ்ட் 15. மக்கள் மனமெல்லாம் மகிழ்ச்சி நிறைந்திருந்த அந்தத் திருநாளில் டில்லி செங்கோட்டையில் பிரிடிட்ஷ் பேரரசின் கொடி பறந்துகொண்டிருந்த கம்பத்தில், இந்திய தேசிய மூவண்ணக் கொடி இடத்தைப் பிடித்து உரிமையை நிலைநாட்டிக் கொண்டு பட்டொளி வீசிப் பறந்தது. நமது உரிமையின் சின்னத்தை, வெற்றி பெருமிதத்தோடும், பிரதமரென்ற தகுதியோடும் ஏற்றி வைத்தார் நேரு.

இனிய வரலாற்று நிகழ்ச்சி, இந்திய மக்களின் கோடானு கோடி இதயங்களில் தித்திப்புணர்வைத் தேக்கியது. இந்திய வரலாறு ஒரு அத்தியாயத்தின் முடிவையும், மறு அத்தியாயத்தின் தொடக்கத்தையும் எழுதியது.

"ஊதுமினோ வெற்றி! ஒலிமினோ வாழ்த்தொலிகள்
ஓதுமினோ வேதங்கள்! ஓங்குமினோ! ஓங்குமினோ!
தீதுசிறி தும்பயிலாச் செம்மணிமா நெறிகணடோம்!
வேதனைகள் இனி வேண்டா; விடுதலையோ
திண்ணம்"

என்ற பாரதியின் எண்ணம் ஈடேறியது விரும்பிய விடுதலை அரும்பி மலர்ந்தது.

நீண்டகால வறட்சிக்குப்பின் வந்த மழையைப்போல விடுதலை பெற்றோம். அந்த மகிழ்ச்சியைத் துய்க்க மக்களை அனுமதிக்காமல், மதக்கலவர வெள்ளம் கரை புரண்டது, அன்பு; இரக்கம்; மனிதந் தன்மைகளெல்லாம் அந்த வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. அல்லாவின் பெயராலும் அரியரன் பெயராலும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு ஆராதனைகள் நடைபெற்றன. பாகிஸ்தானில் இந்துக்கள் கொல்லப்பட்டதற்கு, இங்கு முசுலிம்கள் பழி வாங்கப்பட்டனர். குற்றவாளி தொலைவிலிருந்தான் என்பதற்காக எதிரிலிருந்த ஏதுமறியாதவர்களை மத வெறியர்கள் தண்டித்தார்கள். நாற்பத்தைந்து இலட்சம் இந்துக்களும், அறுபது இலட்சம் முசுலிம்களும் இடம் பெயர்ந்த வரலாற்றுத் துயரத்தை அவர்கள் சுமந்து பிரிந்தார்கள், மதங்கள் மரித்தால்தான் மனிதர்கள் அமைதியாக வாழ முடியுமோ?

உயர்ந்த எண்ணங்களை, மக்கள் மனதில் ஏற்றிடத் தோற்றுவிக்கப்பட்ட மதங்களே மதம் பிடித்த யானைகளாகி விட்டனவே! மாந்தன் மதம் பிடித்தலையக் கூடாதென்பதுதானே அதன் அடிப்படை எண்ணம்—நோக்கம்! அன்பும் பொறுத்துக் கொள்ளும் போக்குந்தானே அவற்றின் போதனை? நடப்பதென்ன? மதமே பிடிக்கச் செய்கிறது. மதுவை விட மோசமான போதையையல்லவா ஊட்டி வளர்க்கிறது! வெட்கப்படத் தக்க வெறியுணர்ச்சியைத் தோற்றுவித்து. அன்பு அறமென்ற நல்ல பண்புகளின் குரல் வளையையே நெறித்து விட்டனவே மதங்கள். உறவை வளர்க்க வேண்டிய மதங்கள் பிரிவையல்லவா ஏற்படுத்தி விட்டன. மதங்களின் நோக்கம் பிழைபட, நாட்டின் ஆக்கமல்லவா சேதமுற்றது! வெறிகொண்டலையும் மதவாதிகளென்னும் மந்திரவாதிகளின் மண்டையோடுகளாகவா மதங்கள் மாறிவிடுவது? அந்தோ? அந்தோ!

மதங்களை மதித்தவர் காந்தியடிகள். ஆனால் அவற்றுள் வேற்றுமைக் கீற்றுக்களை விரும்பாதவர் மதத்தின் பொருள் சிதையாமல் புரிந்து கொண்டிருந்தவர் அண்ணல். குடை, மழையிலிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளத்தானே யொழிய, எதிரில் வருபவர்களைக் குத்துவதற்கல்ல என்பதைப் புரிந்து கொண்டு வாழ்ந்து காட்டியவர். நேருவுக்கோ மதமும், சமயமும் சம்பந்தமில்லாதவை, அவரைச் சந்திக்காதவை. தன்னலந்தான் இன்றைய மதமென்றாகி விட்ட நிலையில், தொண்டு மனங்கொண்ட, சமூகச் சிந்தனையாளர் நேருவை, அறிவியல் கல்வியில் ஆர்வங்கொண்ட ஜவகர்லாலை மதங்கள் அண்டப் பயந்தன.

விடுதலைக்குப் பின் இந்தியாவில் ஏற்பட்ட இனக் கலவரத்தில், இந்துக்களுககுச் சார்பாக சில 'பொறுப்பு வகித்தவர்கள்' செயல்பட்டனர் என்பதை மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. குற்றமற்ற முசுலிம் சிறுபான்மையினருக்கெதிராக இந்து மகாசபை, ஆர் எஸ். எஸ். (ரா. சு. ச.) மதப்பற்றாளர்களின் வெறித்தனமான நடவடிக்கைகளைக் காந்தியடிகளும், நேருவும் எதிர்த்தனர். பிரதமர் பொறுப்பிலிருந்த நேரு, இந்தியமண்ணில் மதம் விதைத்த நச்சுத் தன்மை, தனது காலத்தில் அறுவடையாவதைக் காண மனப் நொந்தார். பாதிப்புக்கு இலக்கான இடங்களுக்குச் சென்று அமைதியை ஏற்படுத்த முயன்றார்

அமிர்தசரசில் நேருமீது நாட்டு வெடிகுண்டுகூட வீசப்பட்டது. நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த வன்முறையில் தனக்குரிய பங்கை மத வெறியர்கள் தந்ததாகவே அந்த வெடிகுண்டு வீச்சை அவர் கருதினார். நேரு அப்படிப்பட்டவரல்லர். எனவே இப்படிப்பட்ட செயலால் அவரை முடக்கி விட முடியாது. வல்லரசான பிரிட்டனின் துப்பாக்கிக் குண்டுகளுக்கே அஞ்சாத

நேருவை, முண்டங்கள் தயாரித்த குண்டு அச்சுறுத்திவிட முடியுமா?

"வாய்ந்தபோர்க் குறிபோல் மதக்குறி இனிதா?
மனமொழி மெய்ஒன்றி மகிழுதல் இனிதா?
ஆய்ந்து பார் நெஞ்சமே அமைதிதான் சிறப்பா?
அண்டை வீட்டைப் பறிக்கும் சண்டைதான்
சிறப்பா?"

— பாவேந்தர் —

# அண்ணலின் முடிவு

கொடுமனங் கொண்ட மாமியார் பண்போடு, திட்டமிட்டுச் செயல்பட்ட பிரிட்டிஷ் பேரரசின் எதிர்பார்ப்புக்கும் எண்ணத்திற்கும் ஏற்ற வகையில், ஈரமிலா இதயத்தார் செயல்பட்டார்கள். கொண்டாட்டமும், கோலாகலமும் நிலவ வேண்டிய இந்திய மண்ணில், தீயிடலும், தெருச் சண்டையும் நடந்தது. நாட்டின் அமைதி நிலை அழிக்கப்பட்டது. வெட்கப்படத்தக்க விளைவுகளுக்கு விருந்து வைத்துக் கொண்டாடினர். குறிக்கோள் கோணலாக்கப்பட்டன. உலகை நகைக்கச் செய்யவும், திகைக்கச் செய்யவும்படியான வினை வேளாண்மை வேகமாக நடைபெற்றது. வெற்றியின் ஒற்றெழுத் தொழித்து, வெறியே கொண்டாடப்பட்டது. அன்னியர்கள் ஆண்டாண்டு காலமாகச் செய்த கொடுமைகளை, நம்மவர்கள் நாட்கணக்கிலேயே செய்து காட்டி, இந்த வகையில் தங்கள் தகுதியை, திறமையை உலகம் வியக்க உணர்த்தி விட்டார்கள்.

பிரதமரென்ற முறையில் நேருவின் பாதுகாப்புக்கு, விடுதலைக்குப் பிறகும் பொறுப்பிலிருந்த மௌண்ட் பேட்டன் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். மீண்டும் தன்னைக் காவல் கைதியாக்கி விட்டதாக இந்த ஏற்பாடு நேருவை நினைக்க வைத்தது, தன்னை மக்கள் தொண்டனாக மட்டுமே நினைத்திருந்த நேருவுக்கு, இப்படிப் பட்ட பாதுகாப்பு வளையங்கள், விலங்குகளாகவே பட்டன. இவை தேவையற்ற ஆடம்பரங்களென்று நேரு கூறியதை மௌண்ட் பேட்டன் ஒப்புக் கொள்ளவில்லை. மக்களிடமிருந்து தன்னைப் பிரித்துப் பார்க்க விரும்பாத மாமனிதரான நேருமீது மட்டுமல்ல, அண்ணல் காந்தியடிகள் மீதும் கூட இந்து மதவாதிகள் 1948–ஆம்–ஆண்டு ஜனவரி 20–ஆம் நாள் வெடிகுண்டை

வீசச் செய்தார்கள். "காந்தியைக் கொல்வோம்" என்று முழக்க மிட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கூட காந்தியடிகளும் பாதுகாப்பை ஏற்க மறுத்து விட்டார்.

இந்தியத் தலைவர்கள் தங்கள் 'பிடிக்கு' வரமாட் டார்களென முடிவு செய்து கொண்ட பிரிட்டனும், அமெரிக்காவும், ஆசியாவில் தங்களுக்கென காலூன் றிக் கொள்ள மக்கள் சக்தி கொண்ட நாடொன்று தேவையென நினைத்தார்கள். நெருக்கடியை உருவாக் குவதன் மூலம் இந்தியாவைத் தங்கள் பக்கம் சார்ந்து நிற்கச் செய்யலாமென அவர்கள் திட்டமிட்டார்கள். எனவே அவ்விரு வல்லரசுகளும் கைகோர்த்துக் கொண்டு, பாகிஸ்தானைத் தங்கள் நோக்கத்திற்கேற்ற கருவியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு செயலைத் துவக்கின.

பாகிஸ்தான் சண்டைக் கிடாவாக மாற்றப் பட்டது. காஷ்மீரில் நாடு பிடிக்கும் சண்டைக்கும், கலவரங்களை ஏற்படுத்துவதற்கும் இரு பேரரசுகளும் "சகல சௌபாக்கி யங்களையும்" அருளின. எழில் கொழிக்கும் காஷ்மீரத் தைப் பாகிஸ்தானுக்குத் தள்ளிக் கொண்டு போக பிரிட் டனும், அமெரிக்காவும் ஊக்கம் கொடுத்தன. காஷ்மீர் மன்னரும், ஷேக் அப்துல்லாவும் கொடுத்த அபயக் குர லால், காஷ்மீர் இந்தியாவோடு இணைத்துக் கொள்ளப் பட்டது. பாகிஸ்தான் படைகளின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது, 'சிற்றரசுகளின் வழி - தொல்லை' என்ற பிரிட்டிஷ் பெருங்காவியத்தின் ஒரு படலம் நேரடி நட வடிக்கை மூலம் திருத்தி எழுதப்பட்டது.

இனக் கலவரத்திற்கெதிராக, அண்ணல் காந்தியடி கள் உண்ணா நோன்பிருக்க முடிவு செய்தார். எவ்வளவு முயன்றும் யாராலும் அதைத் தடுக்க முடியவில்லை. ஜனவரி, 12 முதல் 18 வரை அவர் உண்ணா நோன் பிருந்தார். இந்து, முசுலிம் மற்றும் சீக்கியத் தலைவர்கள்

காந்தியடிகளைச் சந்தித்து ஒற்றுமைக்கு உறுதிமொழி யளித்து அமைதியை நிலை நாட்டினார். அண்ணலும் உண்ணா நோன்பை முடித்துக் கொள்ள இசைந்தார். காந்தியடிகளின் தன்வயப் படுத்தும் ஆற்றலாலன்றி இராணுவத்தால் கூட நிலைமையைக் கட்டுப் படுத்த முடியாது என்ற சூழலில், அண்ணல் உண்ணா நோன்பால் அமைதி ஏற்படச் செய்தார்

வகுப்பு ஒற்றுமையைக் காந்தியடிகள் இடை விடாமல் வலியுறுத்தி வந்தார். இறை வணக்கத்தில்கூட, அவர் இருமதக் கூட்டுணர்வைக் கொண்டுவர விரும்பி னார். தனது வழிபாட்டு நிகழ்ச்சிகளில், இராமர் பக்திப் பாடல்களோடு திருக்குரானையும் படிக்கச் செய்தார். இந்த ஏற்பாடு இந்து மத வெறியர்களைக் கோபப்பட வைத்தது. காந்தியடிகளை அவர்கள் 'இந்துமத எதிரி என்றே அறிவித்தனர். காந்தியடிகளோ, முசுலீமுக்கு எதிரியாக இருப்பவன், இந்தியாவுக்கும் எதிரியே என்று கூறினார்.

முசுலிம் எதிர்ப்பாளர்கள் காந்தி எதிர்ப்பாளர்களா னார்கள். எந்தக் காந்தியை வாழ்கவென வான்முட்ட வாழ்த்தினார்களோ, அதே காந்தியை 'ஒழிக!' என்று கூச்சலிட்டார்கள். சொன்னதைச் செய்து காட்டிட அவர்கள் 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் நாளை தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். மதவாதி ஒருவனைத் தங்கள் கருவியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அண்ணலின் வழிபாட்டரங்கம். வெள்ளிக் கிழமை, மாலை வேளை தனது பெயர்த்திகளோடு வழிபாட்டுக்கு வருகிறார் அண்ணல். ஆயிரக்கணக்கான மக்கள் அவ் வரங்கில் கூடியிருக்கின்றார்கள். கூட்டம் மேலும் வந்து கொண்டிருந்தது. கூற்றுவனாக கோட்சே என்பவனும் வந்து கொண்டிருந்தான். அண்ணலை நெருங்கி வந்து கை கூப்பினான். அடுத்தநொடி கைத் துப்பாக்கியி லிருந்து மூன்று குண்டுகள் புறப்பட்டு அண்ணலிடம்

அடைக்கலப்பட்டன. "கூப்பிய கையுள்ளும் படை யொடுங்கு' மென்பது மெய்ப்பிக்கப் பட்டது. இரக்கத் தின் ஊற்றுக் கண்ணாம் அண்ணலின் இதயத்தில் இரண்டு குண்டுகள். ஆட்டுப்பாலையும், வேர்க்கடலை யையுமே அதிகமாக அனுபவித்த வயிற்றுக்குள் ஒரு குண்டு. அண்ணல் கீழே விழுந்தார். மதம் ஒரு மா மனிதரை (மகானை) அமரராக்கி விட்டு அமைதி பெற்றது.

வகுப்பொற்றுமைக்காக அயராது பாடுபட்ட அண் ணலின் உடலிலிருந்து வெளியேறிய குருதி, ஒற்றுக்குறி யாம் புள்ளிகளை மட்டுமல்ல, வியப்புக் குறியையும், ஏன் வினாக்குறியையையும் ஆடையிலும், தரையிலும், வடி வாக்கிக் காட்டியது. அந்தப் புள்ளி மனித ஒப்புரவுக்கு வைத்த புள்ளி. அந்த வியப்புக் குறி அண்ணலுக்கோ இந்த நிலைமை என்பது. அந்த வினாக்குறி, மனித மிருகங்களே! மதவாதிகளே நீங்கள் திருந்தவே மாட்டீர் களா என்றது!

காந்தியடிகள் கொண்டுவரப் பட்டிருந்த மருத்துவ மனை மதிற்சுவர்களுக்கு வெளியே மக்கள் கூட்டம் கட்டுப்படுத்த முடியாத ஆவலோடு காத்திருந்தது. அண்ணல் பிழைத்துக் கொள்ள வேண்டுமென்ற நல் லெண்ணமும், அப்படிப்பட்ட செய்தியே வர வேண்டு மென்ற ஆர்வமும் அவர்கள் முகத்தில் குடி கொண் டிருந்தது. ஆனால்... தாங்க முடியாத துயரத்தை, காத்திருந்த மக்களோடு நேரு பகிர்ந்து கொண்டார். "அறிவுரைக்காகவும், ஆறுதலுக்காகவும் அண்டக் கிடைத்திருந்த ஆயிரங்கால் மண்டபம் மயானமாக்கப் பட்டு விட்டது" என்று முட்டி மோதிக் கொண்டிருந்த மக்களிடம் ஆற்றாமையை வெளியிட்டார் நேரு. மாகாவி யத்தை மரணம் படிக்க எடுத்துச் சென்று விட்டது.

அண்ணலின் பிரிவால் நேரு மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். உணவும், உறக்கமும் அவரோடு ஒத்துழையாமை கடைப் பிடித்தன. அரசியல் வாரிசெனத் தன்னை உலகுக்கு அறிமுகப்படுத்திய அன்புருவம் நொறுக்கப்பட்டு விட்டதே என அவர் துடித்துப் போனார். புல்லாங்குழலைப் பொல்லாதவர்கள் மத நெருப்பில் போட்டு விட்டார்களே என வருந்தினார். வெள்ளையர்களே மலராகப் போற்றியதை, மண்ணுக்குரியவர்களே மந்தியாகி பிய்த்தெறிந்து விட்டார்களே என வெட்கப்பட்டார் அண்ணலின் செயற்கைச் சாவின் பின் விளைவுகளை எண்ணிப் பார்த்து தன்னைத் தானே தேற்றிக் கொள்ள முற்பட்டார் நேரு. எதிர் கொள்ள வேண்டிய நிலைமையோ கடுமையானது. கடமை அவருடைய கவலையை ஒதுக்கித் தள்ளியது. அரசுப் பணிகளை அவர் அந்த நிலையிலும் புறக்கணிக்கவில்லை. மாற்று வழி ஏது?

பவனிவரவும், வாழ்க்கை இன்பங்களைத் துய்க்கவும், பதவியைப் பயன்படுத்தியவர்களும், பயன்படுத்துபவர்களும் உண்டு. ஆனால் அந்த 'பாரத்தை' மக்களுக்காக, மகத்தான தனது தாயகத்தின் முன்னேற்றத்திற்காக பொறுப்போடு சுமந்து நடந்தவர் நேரு. தீயைக் கூட விலக்கிக் கொண்டு தீரமாக நடந்து, அமைதிகாண உழைத்தவர் நேரு. பஞ்சாபில் வெறி கொண்டலைந்த போக்கிரிகளுக்கு முன்னால் போய் நின்று, கலகத்தையே கட்டிப் போட்டவர் அவர்.

உலக வரலாற்றில் நேருவைப் போல், கலக நிலைமை கண்டஞ்சாமல் நேரடியாக அதனைச் சந்தித்த பிரதமரை சுட்டிக் காட்ட முடியாது. பொறுப்பைக் கீழே உள்ளவர்களின் தலையில் சுமத்திவிட்டு, விசாரணை வேலை மட்டும் செய்தவரல்லர் அவர். விளைச்சலை அழித்திட்ட வேழங்களின் மத்தகத்தின் மீதேறி நின்று, அதனை

அடக்கிக் காட்டிய ஆண்மையாளர் நேரு. போக்கிரிகளுக்கு அஞ்சி நடுங்கிடும் போலி மக்கள் தலைவர்(!)கள் போலன்றி, மனிதப் பண்பற்ற செயல்களை மார்புயர்த்தி எதிர்த்தவர். தன்னலமற்ற அந்தத் தீரத்தின் முன், கொடுமைக்காரர்களே குனிந்து நடக்க நேர்ந்ததொன்றும் விந்தையல்ல.

தீரம், திட்டமிடல், உழைப்பு இந்த முப்பெரும் கருவிகளைக் கொண்டே நேரு, வெடித்துக் கிளம்பிய இனக் கலவரத்தின் இரும்புத் தலையை நொறுக்கினார். எவர்பாலும் சார்ந்து செயல்படாமல், நேர்மையோடு சட்டத்தை அவர் கையாண்டார். வேண்டியதாக அமைதியும், வேண்டாததாகக் கொடுஞ்செயலும் மட்டுமே அவருக்கிருந்ததால், அவரால் நினைத்தபடி அமைதியைக் கொண்டுவர முடிந்தது. ஒற்றுமையைக் குலைத்த வேற்றுமையை, அவர் அஞ்சாமையாலும், நடுவு நிலைமையாலும் வெற்றி கொண்டார்.

இனக்கலவரம் ஒருவாறு ஒடுங்கியது. இனி இந்தியாவை ஒன்றுபடுத்த வேண்டியதுதான் தலையாயப்பணி. துணைக் கண்டத்தில் புள்ளிகளாக விளங்கிய சிற்றரசுகளை இணைத்து ஒரே இந்தியா என்ற கோலத்தைக் கொண்டுவர வேண்டும். உள்துறைக்குப் பொறுப்பேற்றிருந்த சர்தார் வல்லபாய் பட்டேல், வானத்து உடுக்களைப் போலிருந்த 565 சிற்றரசுகளையும் இந்திய யூனியனுக்குள் கொண்டு வந்து இந்தியாவை உடுக்களற்ற வானத்து முழுநிலவாக்கினார். முழுநிலா நாளிலும் ஓரிரண்டு விண்மீன்கள் தென்படுவதேபோல், காஷ்மீரும், ஐதராபாத்தும் விளங்கின ஆங்கிலேயர்கள் ஊன்றிச் சென்ற குழப்ப வித்துக்களிவை. அவர்களின் திட்ட எச்சங்களிவை. இந்த இரு முரட்டுக்காளைகளையும்,

முரண்பட்டு நின்ற சிற்றரசுகளையும் சர்தார் பட்டேல், படை மருந்தால் பணிய வைத்தார். எனினும் வெளிச்சக்திகளின் தலையீட்டாலும், தூண்டுதலாலும் இந்தியாவைக் காஷ்மீர் சீதள நோய் பற்றிக் கொண்டது. அந்த நோய் இன்றளவும் தீர்ந்தபாடில்லை. பாகிஸ்தான் படைகளோடு மோதலென்ற தும்மல் அவ்வப்போது வந்து கொண்டு தானிருக்கிறது.

# இலக்கை நோக்கி

சோவியத் நாட்டின் பொருளாதார, சமநீதிக் கொள்கையின் தாக்கம், நேருவுக்கு ஏற்பட்டிருந்தது. பேராயத்தில் பொருளாதாரக் கொள்கையை வகுக்க வற்புறுத்தியவரல்லவா நேரு. பொறுப்புக்கு வந்தபின் வாளாவிருப்பாரா? தனது முற்போக்குத் திட்டங்களை, சமநீதி எண்ணங்களைச் செயற்படுத்த முனைந்து செயல் பட்டார். பொருளாதார முன்னேற்றத்திற்குத் தொழில்கள் வளர வேண்டுமென்பதையும், விவசாயத்துறையில் விஞ்ஞான நோக்கமும், புதிய முறையையும் புகுத்த வேண்டுமென்பதையும் அவர்கொள்கைகளாகக்கொண்டிருந்தார். நேருவின் சோசலிதத்துவத்தைத் தங்கள் தலைக்குமேல் தொங்க விடப்பட்ட வாளாக, தூக்கிப் பிடித்திருக்கும் சம்மட்டியாகக் கருதிய முதலாளி வர்க்கம், தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயங்கவில்லை. தங்கள் நோக்கத்திற்கு சர்தார் வல்லபாய் பட்டேலைப் பயன்படுத்திக் கொள்ள முயன்றது வெள்ளைத் தோலர்களும், டாலர் தம்பிகளும் கூடத் தங்கள் வியூகத்தை விரித்தார்கள். பூனையைப் பிடிக்கும் பொறியால் புலியைப் பிடிக்க முடியுமா?

' தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு''

என்னும், வள்ளுவரின் இலக்கணத்திற்குத் துல்லியமான, நயமான, வளமான இலக்கியமாகத் திகழ்ந்தவர் நேரு. அவர் மிகக் குறைந்த நேரமே உறங்கினார். அவருடைய நூலறிவு இணையற்றது. அவருடைய துணிவு, அரசியல் வாதிகளுக்குக் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டியது. அவருடைய உழைப்பு நிகரற்றது. நேருவின் உறுதிக்கும், மென்மைக்கும் நைலான் இழையைத்தான் உவமை கூற

வேண்டும். வளமான இந்தியாவை உருவாக்கிக் காட்ட தீர்க்கமாகச் சிந்தித்து, தீவிரமாகப் பாடுபட்டார்.

தனக்கு உடன்பாடில்லாத கருத்தை மற்றவர்கள் தன்பால் திணிக்க முற்படும் வேளையிலும், அதனை விலக்கி வைப்பதில் கூட, நேரு நயத்தையும், நாகரிகத்தையும் காட்டினார். இந்திய நாட்டின் தேசியக்கொடியை உருவாக்கிய போது, மௌண்ட் பேட்டன் பிரிட்டிஷ் கொடியின் சின்னமும் அதில் இடம்பெறச் செய்யத் திட்டமிட்டார். நேரு அந்தத் திட்டத்தை நயமாக நகர்த்தி ஒதுக்கிவிட்டார்.

1948-ஆம் ஆண்டு, டிசம்பர் திங்களில் ஜெய்ப்பூரில் நடைபெற்ற பேராய மாநாட்டில் இந்தியா ஒரு குடியரசு நாடென்ற கொள்கை முடிவு அறிவிக்கப்பட்டது. முழுச் சுதந்திர உரிமையோடு, பிரிட்டனுடன் உறவு வைத்துக் கொள்ளவும் நேரு இசைவு தெரிவித்தார். குனிந்து போகாத கொள்கைச் செருக்கோடு பொதுவள (Common Wealth) நாட்டமைப்பிலும் இந்தியா அங்கம் வகிக்க இசைந்தார்.

சமூக, பொருளாதார அரசியல் நீதி, எழுதப் பேச, சிந்திக்க தொழில் உரிமை வாய்ப்பும் வசதியும் அனைவருக்கும் சமம் என்னும் பொது நீதி, தனி மனித உரிமையோடு கூடிய நாட்டொருமைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட இந்திய அரசியல் சட்டம், 1949-ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 26-ஆம் நாள் பிரகடனப் படுத்தப்பட்டு, அச்சட்டம் 1950-ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 26-ஆம் நாள் செயலுக்கு வந்தது. நமது முதல் குடியரசுத் தலைவராக பாபு ராஜேந்திர பிரசாத் பொறுப் பேற்றார்.

விடுதலைக்குப்பின், 1952-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் ஜவகர்லால் தலைமையில் போட்டியிட்ட பேராயக் கட்சி, மக்களின் மகத்தான

நம்பிக்கையை, வாக்காகப் பெற்று ஆட்சிக்கு வந்தது. அவர் பொறுப்பு வகித்த காலத்தில், பேராயக் கட்சியோடு போட்டியிட்டு வெல்லக் கூடிய பெரும் சக்தி ஏதுமில்லை. நேருவிடம் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையும், அன்பும் அவ்வளவு உறுதியானதாகவும், உண்மையானதாகவும் இருந்தது. உள்நாட்டில் மக்களின் வறுமைப் பிணிக்கு மருந்தாக விளங்கியவர் நேரு.

சோவியத் நாட்டைப் போல் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றினார். அவர் காலத்தில் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டம் **1951–56**-ஆம் ஆண்டில் ரூ. **2331** கோடியில் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது திட்டம் **1956–61**-ல் **4800** கோடி ரூபாயில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டது. ஆனால் திட்டகால முடிவில் செலவு ரூ. 5300 கோடியாக உயரக் கூடுமென்றும் எதிர்பார்க்கப் பட்டது. மூன்றாவது திட்டம் *1961–66*-ல் ரூ. *12100/* கோடிக்கு வகுக்கப்பட்டது.

பாக்ரா–நங்கல், தாமோதர், ஹிராகுட், துங்கபத்திரா, சம்பல் போன்ற பெரிய அணைக்கட்டுகளும், சித்தரஞ்சன் இரயில் பொறி (என்ஜின்) தொழிற்சாலையும், சிந்திரி ரசாயன உரத் தொழிற்சாலையும், இந்துஸ்தான் இயந்திரக் கருவித் தொழிற்சாலையும், பெரம்பூர் தொடர் வண்டிப் பெட்டித் தொழிற்சாலையும், பிலாய், ரூர்கேலா, துர்க்காபூர் உருக்குத் தொழிற்சாலைகளும், போபால் கன மின்சாரத் தளவாடத் தொழிற்சாலையும் நேரு ஆட்சியின் சாதனைகளே! ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் இவை.

நேருவுக்கு விவசாயிகளிடம் பரிவும், பாசமும் உண்டு. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்திற்கே முன்னுரிமை தந்ததைப் போல், தான் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்ததும் விவசாயிகளை ஜமீன்தார்களின் பிடியி

லிருந்து விடுவிக்க, ஜமீன்தாரி, முறையையே ஒழித்தார். கிராம முன்னேற்றத்திற்காக சமுதாய வளர்ச்சித் திட்டங் களைத் தீட்டிச் செயற்படுத்தினார். ஊராட்சி முறையைக் கொண்டு வந்தவரும் அவரே!

விஞ்ஞானத்தால் தான் நாட்டை முன்னிலைக்குக் கொண்டுவர முடியுமென்று கருதியவர் நேரு. மேற்கு ஐரோப்பிய நாடுகளைப் போல் தொழில் முன்னேற்றம் காண விஞ்ஞான அறிவை வளர்க்க வேண்டுமென்பதில் அவர் குறியாக இருந்தார். முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே பதினான்கு தேசீய ஆராய்ச்சிச் சாலை களை நிறுவினார். கிராம மக்களுக்கு அறிவியல் கண் ணோட்டத்தைக் கொண்டு வர 'விஞ்ஞான மந்திர்' என்ற நிலையங்கள் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டது. அவர் கால ஆக்கப் பணிகள் அளவிடற்கரியவை. அணுசக்திக் கூடமும். வானொலி நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டன. தொலைக் காட்சியைத் துவக்கவும் அவர் திட்டமிட்டார்.

நேரு உலக நாடுகளோடு உறவை வளர்த்துக் கொண்டு, நாட்டைப் பலப்படுத்திக் கொள்ளவும் பாடு பட்டார். அன்று ஊன்றிய இந்தோ-சோவியத் நட்பு, இன்றளவும் குன்றாமல், கோணாமல் நீடித்து வருகிறது. நிலைத்து நிற்கிறது. நெருக்கமான கால கட்டங்களிலெல் லாம், இந்தியாவின் உற்ற நண்பன் தானே என்பதைச் சோவியத் நாடு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. உலக நாட்டவையில் (ஐ. நா. மன்றம்) அமெரிக்க-பிரிட்டிஷ் கூட்டெதிர்ப்பை இந்தியா கடந்துவர இரஷ்யாவின் (வீட்டோ) இரத்து அதிகாரம் பலமுறை நமக்கு உதவி இருக்கிறது.

இந்தியாவில் எப்படி இந்துக்களுக்கும், முசுலிம் களுக்கும் பொதுவானவராக நடந்து கொண்டாரோ, அப்படியே உலகரங்கிலும் தனிமையுடைமைக்கும். பொதுவுடைமைக்கும் பொதுவான கொள்கை கொண்டவ

ராகத் திகழ்ந்தார். கொள்கைக் குறைபாடில்லாமல் நட்புக்கரம் பற்றிக் கொண்டு நடந்தவர் அவர். இரு துருவங்களாக விளங்கிய இரஷிய–அமெரிக்கக் கூட்டணி எதிலும் சேராமல் தன்வழி தனி வழி என்பதை நிலை நிறுத்திக் காட்டியவர் நேரு! கெடுபிடி செய்யாத நடு நிலை நாடுகளின் நாயகனாக விளங்கி, மூன்றாவது அணியை உருவாக்கி, உலக அமைதிக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவரும் நேருதான்.

உயர்ந்த தத்துவங்களை கொள்கைகளாக அரங் கேற்றம் செய்துவிட்டு, தங்கள் நலன் பாழக்கப்படலா மென்ற ஐயம் தோன்றிய மறு நொடியே, அந்தக் கொள்கைக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்ட நாடுகளை நாமறிந்தேயுள்ளோம். மக்களாட்சி மாண்பு தனை மிக உயரமாகத் தூக்கிக் காட்டும் நாடே மாபெரும் குடியரசு நாட்டுக்கெதிராக இராணுவ ஆட்சிக்கு, சர்வாதி காரத்திற்கு முட்டுக் கொடுத்ததை நாமறிவோம், நாநில மும் அறியும். அப்படிப்பட்ட ஆட்சியினர், மக்களாட்சி நடைபெறும் மாபெரும் நாட்டைத் தாக்கமுற்பட்டபோது இந்த 'ஜனநாயக' விளக்குகளெல்லாம் மின்சார தடை பட்ட குழல் விளக்காகத்தானே இருண்டு கிடந்தன? ஆனால் நேரு? சொல் வேறு, செயல் வேறென்பது அவர றியாதது. கற்க முனையாதது.

வெளிச்சக்திகள் தங்கள் அரசியல் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், தங்களுடைய ஆதிக்க வட்டத் திற்குள் இந்தியாவை கொண்டு வரவும், அவை எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு நேரு இணங் காததால், அவை கொல்லைப்புற வழியைத் தங்கள் குறிக் கோள் பாதையாகத் தேர்ந்தெடுத்தன. சர்தார் வல்லபாய் பட்டேலை தங்கள் நோக்கத்திற்கிழுக்க அவை நோட்டம் பார்க்கவும் துணிந்தன. அந்தோ 1950 ஆம் ஆண்டு டிசம்பரில் அவர் எதிர்பாராத நிலைமையில்

நேரத்தில் உயிர்நீத்தார். படேலின் ஆதரவாளரான தாண்டன் என்பவருக்குப் பதிலாக, நேருவே கட்சித் தலைவராகவும் தேர்வு பெற்றார். சீரான ஓட்டத்திற்கும். கட்டுப்பாட்டிற்கும் தேரில் பூட்டிய இரு குதிரைகளின் கடிவாளமும் ஒருவர் கையிலேயே இருப்பது நல்லது தானே!

கொரியப் போரிலும், வியட்நாம் போரிலும் அமெரிக்க நிலைக்கு இந்தியா இணக்கமாக இல்லை. இந்தியா தனது அணியில் சேர மறுத்துவிட்டதுடன், சோவியத் நாட்டோடு நட்பை வலுப்படுத்திக் கொண்ட தால், துணைக் கண்டத்தில் பதற்ற நிலையைத் தோற்று விக்கத் திட்டமிட்ட அமெரிக்கா காஷ்மீரைப் பகடைக் காயாகப் பயன்படுத்தி இந்தியாவின் அமைதியைக் குலைப்பதற்காக மட்டுமல்ல, முன்னேற்றத்தைத் தடுக்க வும், நமக்குப் பக்கத்திலேயே பகையை உருவாக்கிப் புகையைப் ஊதிவிட்டுக் கொண்டிருந்தது. இந்தியாவின் இல்லாமையைப் பயன்படுத்தித் தங்கள் கொள்கையைத் திணிக்க வல்லரசுகளில் சில முயன்று கொண்டிருந்தன. ஆனால் நேருவின் உறுதி, அவற்றின் முயற்சி முனையை முடமாக்கிப் போட்டது.

மக்கள் சீனாவுக்கு ஐ.நா. மன்றத்தில் இடம் பெற்றுத் தர, இந்தியா எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஒப்புவமை கூற முடியாது. பேறுகால மகளுக்குத் தாய் காட்டும் பரிவை சீனாவுக்கு இந்தியா காட்டியது. இடைவெளி இல்லாமல் குரல் கொடுத்து வந்தது, இறுதியில் வெற்றி யையும் ஈட்டித் தந்தது. விடுதலைப் போராட்ட காலத் திலிருந்தே நேரு, சீனாவுக்கும், சோவியத்துக்கும் நண்பன்தான். விடுதலைக்குப் பின் இவ்விரு நாட்டு மக்களிடமும் அவர் நட்புக்கரம் நீட்டியது இயல்பானதே! சீனாவை ஜப்பான் தாக்கியது. அப்போது நேரு பிரதம ரல்ல. இந்தியாவும் பிரிட்டனின் பிடியிலிருந்து விடுபட வில்லை. அந்த நிலையிலும் பேராயக் கட்சியின் ஏற்

பாட்டால் மருத்துவ குழுவொன்று சீனாவின் உதவிக்காக அனுப்பப்பட்டது.

சீனாவின் பால் இந்தியா காட்டிய பரிவுணர்வுக்கும் நல்லெண்ணத்திற்கும், அந்தநாட்டின் நன்றி வெளிப்பாடு இந்திய எல்லையைத் தாண்டி வர காலம் பார்த்துக் கொண்டிருந்தது. அதுமட்டுமல்ல 1970 பதுகளில் உலக நாடுகள் அவையில் பாதுகாப்புக் குழுவுக்கு ஆசிய நாடுகளின் பிரதிநிதியாக ஒருவரை தேர்ந்தெடுக்க பொதுச் சபை முற்பட்டிருந்தது. இந்தியா, பாக்கிஸ்தான், பிலிப்பைன்சு நாடுகள் போட்டி போட்டபோது – சீனாவும், அல்ஜீயர்சும் பாக்கிஸ்தானைதான் ஆதரித்தன. தனி மனிதர்கள் மட்டுமல்ல, நாடுகள் கூட. நன்றி கொல்வதில் தயக்கம் காட்டவில்லையே! உள்ளன்பில்லாத போலி நட்போடு சூ-இன்-லாய் 1954 ஜூன் மாதம் இந்தியாவுக்கு வந்து போனார். அந்த ஆண்டில் திபெத் குறித்து செய்து கொண்ட ஒப்பந்தத்தின் போதுதான் நேரு அறிமுகப் படுத்திய ஐந்தொழுக்கச் கோட்பாட்டை (பஞ்சசீலக் கொள்கை) சீனா ஒப்புக்கொண்டது. நமது நாடு மட்டுமல்ல, நடுநிலை நாடுகளெல்லாம் புகழ்ந்த அந்த ஐந்தொழுக்கம் வருமாறு :-

1. ஒவ்வொரு நாடும், மற்ற நாட்டையும் அதன் ஆளுமையையும் மதித்து நடக்க வேண்டும்.
2. ஒன்றிலொன்று நாடு பற்ற முயலக் கூடாது.
3. உள் நாட்டுச் செயல்பாட்டில் தலையிடக் கூடாது.
4. ஒப்புடைமை மற்றும் ஒன்றுக்கொன்று உதவுதல்.
5. அமைதியான தோழமை வாழ்வு.

நேரு அறிமுகப்படுத்திய ஐந்தொழுக்கக் கோட்பாடு ஆசிய நாடுகளால் பெரிதும் வரவேற்கப்பட்டது. நேருவின் நேர்மைக்கும், நல்லெண்ணத்திற்கும்,

தோழமை உணர்வுக்கும் சிறந்த அடையாளமாக எடுத்துக்காட்டாக விளங்கியது. வீணையின் நரம்புகள் அழகாக இருந்தால் மட்டும் போதுமா? மீட்டுபவரின் பயிற்சியும், திறமையும் இன்றியமையாதவை யன்றோ? சீனாவுக்கு ஐந்தொழுக்க வீணையைப் பார்க்கத்தான் தெரிந்ததேயொழிய மீட்டத் தெரியவில்லை.

நேருவின் ஐந்தொழுக்கக் கோட்பாட்டில் மாறுபட்ட கருத்துக்கே இடமில்லாததால் சூ-என்-லாய் அதனை வரவேற்று அறிக்கையை விட வேண்டியதாயிற்று. இல்லையென்றால் சீனாவின் அசல் உருவம் உலகுக்குத் தெரிந்து விடுமே ! இந்தக் கொள்கையை வரவேற்றதன் மூலம், எல்லை தாண்டிகள் தங்களை நியாயவாதிகளாகக் காட்டிக் கொண்டனர். போலிச் சாமியார்களுக்கு நிகரானவர்கள் அன்றைய சீனத் தலைவர்கள். இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடவும் இசைந்தனர். ஆனால் ஒப்பந்தக் காலத்தை இருபத்தைந்து ஆண்டுகளிலிருந்து, எட்டாண்டுகளாகக் குறைத்துக் கொண்டார் சூ-என்-லாய். புனைவுகளை நீண்ட காலத்திற்குக் காப்பாற்றிக் கொண்டிருக்க முடியாதல்லவா? அவர்களது போலித்தனம், தன்னைத் தோலுரித்துக் காட்டிக் கொள்ள அவசரப்பட்டது. இந்திய சீன எல்லை வரை படத்தை சூ-என்-லாய் திருத்தி வரைந்திருந்ததை நேரு சீனா சென்றிருந்த போது காண முடிந்தது. அது குறித்து சூ. என். லாயை நேரு வினவிய போது, அது பழைய படத்தை ஆதாரமாகக் கொண்டு வரையப்பட்டதென்றும், அதனைப் பொருட்படுத்த வேண்டாமென்றும், நேர்மைக் குறைவாகப் பேசி, நேருவின் ஐயத்திற்கு அவசியமில் லாதது போல் நினைக்கச் செய்தார். சூதில் வெற்றி பெற்றார் சூ என் லாய்.

'இரவு' என்றால் என்னவென்றறியாதவர் நேரு. நேர்மை, உண்மை என்ற உயர்பண்புகளிலே வளர்ந்தும்,

வாழ்ந்தும் வந்த அவர் சூ. என். லாயின் நச்சு மனத்தை, நயவஞ்சகத் தன்மையை புரிந்து கொள்ளாமல் நட்பு பாராட்டினார். ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் ஒற்றுமைக்கும், ஆதிக்க வல்லரசுகளின் அணியில் சேராத, விடுதலை பெற்ற நாடுகளின் அரசியல், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் அவர் முனைந்து செயல்பட்டார். அண்டை நாடுகளான இலங்கை, இந்தோனேசியா, பர்மா, பாகிஸ்தான் நாட்டுத் தலைவர்களோடு அவர் நட்புறவுக்காக, சந்தித்துப் பேசினார். சிந்தனையாலும், செயல்களாலும் அவர் தன்னைத் தானே உலகத் தலைவராக உயர்த்திக் கொண்டு வந்தாரென்றால், அதை ஒப்புக் கொள்வது கடினமல்ல.

# நல்ல நண்பன் யார்?

நேருவின் கொள்கைக்கும், நேசத்திற்கும் உரியவராக, நெருங்கியவராக எகிப்து அதிபர் கமால் அப்துல் நாசர் விளங்கினார். இந்தோனேசியாவின் அதிபர் சுகர்ணோவுடனும் நேரு நட்புக் கொண்டிருந்தார். வேதனைக்குரிய முறையில் இவர்கள் நட்பில் விரிசல் ஏற்பட்டது. ஒரு விருந்தின்போது நேருவும், சுகர்ணோவும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர். அப்போது நேரு புகைப் பிடிப்பதற்காக புகைக் குழாயில் புகையிலையைத் திணித்துக் கொண்டிருந்தார். எதிரே அமர்ந்திருந்த சுகர்ணோ நேரு பற்ற வைப்பதற்காகத் தனது வெண் சுருட்டு விளக்கை ஏற்றிக் காட்டினார். நேரு அதைக் கவனிக்காதவராகக் குழாயில் புகையிலைத் தூளை நிரப்பிக் கொண்டிருந்தார். சுகர்ணோ பலமுறை தனது உதவியை நேருவுக்குத் தர முன் வந்தும், நேரு அதைப் பயன்படுத்திக் கொள்ளாமல், தனது விளக்கால் பற்ற வைத்துக் கொண்டார். இந்த நிகழ்ச்சி தன்னை அவமதிப்பதாகக் கருதினார் சுகர்ணோ. விளைவு நேரு சுகர்ணோ நட்பு விரிசல் விட்டது. பிற்காலத்தில் சுகர்ணோ நேருவுக்கும் இந்தியாவுக்கும் எதிரானவராக மாறிவிட்டார் சீனா இந்தியாவைத் தாக்கிய போது, சுகர்ணோ சூ என் லாயை ஆதரித்தார்.

ஆசிய ஆப்ரிக்க ஒற்றுமை மாநாடு, 1955–ஆம் ஆண்டு ஏப்ரல் 18-ஆம்நாள் முதல் 24–ஆம் நாள் முடிய பாண்டூங்கில் நடைபெற்றது. இந்த மாநாட்டுக்காக நேரு அரும்பாடுபட்டார். நாடுகளிடையே ஒற்றுமை ஏற்படவும், அமைதியை நிலைநாட்டவும் நேருவின் ஐந்தொழுக்கக் கோட்பாடே ஏற்றது. அதனை ஏற்க வேண்டுமென அம் மாநாட்டில் பாம் வான் டோனும், நாசரும் வற்புறுத்தினார்கள். உலக அமைதி மற்றும் ஒத்துழைப்பு அறி

விப்பு ஆவணத்தில் நேருவின் ஐந்தொழுக்கக் கோட் பாடும் இடம் பெற்றது.

பொதுவுடைமைப் பூமியாம் சோவியத் நாட்டின் வளர்ச்சி நேருவை ஈர்த்திருந்தது. தாய் நாட்டின் வளர்ச் சிக்காகத் திட்டமிட அந்நாட்டு முன்னேற்றப் பணி களைப் பார்த்து வர ஆவலுற்றார் அவர். 1955-ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் ஐந்தாம் நாள், மகள் இந்திரா வோடு மாஸ்கோ புறப்பட்டார். இந்தியாவில் தொழிற் புரட்சியைத் தோற்றுவிக்க வேண்டுமென்ற எண்ணத் திற்கு சோவியத் பயணம், நல்ல தூண்டுதலாகவும், துணையாக இருக்க வேண்டுமென்பதே அவர் நோக்கம். உழைப்பின் வெற்றியால் உலக நாடுகளை வியப்பிலாழ்த் திய சோவியத் மண்ணில் நேருவின் 'இந்திய தரிசனம்' என்னும் நூலின் ருஷ்ய மொழியாக்கத்தை வெளியிட இசைவளித்தார். விடுதலைக்கு முன் சிறையிலிருந்த போது எழுதப்பட்டது இந்த நூல். சிறையில் விட்ட நூல் மொட்டு, சமதர்மப் பூமியாம் மாஸ்கோவில் மலரும் நாள் வந்தது.

ஆதிக்கப் பேராசை கொண்ட நெப்போலியனையும், அடால்ப் ஹிட்லரையும் தோல்வியுறச் செய்த புரட்சிப் பூமியில் நேருவின் நூல் வெளியிடப்படுவதே விருதுக்குச் சமம் தானே! சோவியத் மண்ணில் வேறெந்த நாட்டுத் தலைவருக்கும் கிடைக்காத சிறப்பு, ஜவகர்லால் நேரு வுக்கு மட்டில் கிடைத்தது. திறந்த மகிழுந்தில் அவர் ஊர் வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். சாலையோரத்தில் நின்றிருந்த சோவியத் மக்கள் அவர் மீது ரோஜா மலர் மாரி பொழிந்தனர். திறந்த கார் ஊர்வலம் மாஸ்கோவில் நேருவுக்கு மட்டுமே கொடுத்து மகத்தான சிறப்பு செய்தது. அப்போதைய பிரதமர் குருஷேவ் குறிப்பிட் டார்: "நேருவைச் சிலர் பொதுவுடைமை வாதி என்கிறார். கள். அவர் பொதுவுடைமை வாதியாக இருப்பதை நான் விரும்பவில்லை. நேரு, நேருவாக இருப்பதையே நான் விரும்புகின்றேன்." நேருவின் தனிச் சிறப்புக்கு இதை விடப் புகழ்மாலை வேறு எதுவும் மேலானதாக இருக்க முடியாதன்றோ!

சோவியத் நாட்டில் அரசு முறைப் பயணங்களில் பின்பற்றப்படும் நடைமுறைப் பேச்சுக்களுக்குப் பின், அந்த நாட்டின் முன்னேற்றத்தையும், முன்னேறிய மக்க

ளையும் பார்க்க விரும்பினார் நேரு. இராணுவ, போக்கு வரத்து விமானக் கட்டுமானங்களைப் பற்றியும், அணு சக்தி மின்நிலையத்தைப் பார்த்தும், கேட்டும் தெரிந்து கொண்டார். இந்தியாவின் தொழில் துறை வளர்ச்சிக்குத் துணை நிற்கும் எனக் கருதி கனரகத் தொழில்களைப் பார்வையிட்டார். மக்னிடகோர்ஸ்க் இரும்பு மற்றும் எஃகுத் தொழிற்சாலை, யூரல் கனரகத் தொழில்நிறுவனங் களைப் பார்வையிட்டு விரிவாகவும் விளக்கமாகவும், தொழில் நுட்பங்களைக் கேட்டறிந்தார். யூரல் எஃகாலை யைப் போல் இந்தியாவிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ண விதையை மனதுள் ஊன்றிக் கொண்டார்.

சோவியத் நாடும் நேருவின் ஐந்தொழுக்கக் கோட் பாட்டை ஏற்றுக் கொண்டது. இந்தியாவுக்குப் பொரு ளாதார ஒத்துழைப்பு நல்க முன் நிபந்தனை எதையும் விதிக்கவில்லை சோவியத். இதன்மூலம் அந்தநாடு நல் லெண்ணத்தையும், நம்பிக்கையையும் இந்திய மக்கள் பால் அதற்குள்ள ஈடுபாட்டையும் வெளிப்படுத்தியது.

பயன்மிக்க ஒரு பயணத்தால் உழைப்புக்குரிய கூலி யை உடனடியாகப் பெற்ற தொழிலாளியைப் போல் மன நிறைவு பெற்றார் நேரு. சோவியத் பயணத்தைத் தொடர்ந்து போலிஷ் குடியரசு, ஆஸ்திரியா, யூகோஸ்லா வியா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும் சென்று வந்தார்.

தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கு, உலக அமைதிக் கும் நேரு ஓய்வின்றி உழைத்தார். தன்பால் நீட்டப் பட்ட நட்புத் கரங்களை நம்பிக்கையோடு அவர் பற்றிக் கொண்டார். ஆசைகாட்டும், அச்சமூட்டும் சில வல்லரசு களின் செயல்களையும், போலி நட்பையும் ஒதுக்கியும், ஒதுங்கியும் நடத்தார். அன்றே சோவியத் நாடு தனது படையில் 12,00,000 துருப்புக்களை (1956–ல்) குறைத்துக் கொண்டதன் மூலம் உலக அமைதிக்கு வழிகாட்டியது. இன்றும் இடைத் தூர ஏவுகணைகளை வேண்டாதவை களாக்க முதலடி எடுத்து வைத்ததும் சோவியத் நாடு தான். அப்படிப்பட்ட ஒரு நாட்டிடம் நேரு வைத்த நம்பிக்கையும், கொண்டிருந்த நட்பும் எவ்வளவு மேலா னது என்பதை நாம் இன்றும் உணர முடிகிறது.

நேருவின் நண்பர், எகிப்து அதிபர் நாசர் அவர்கள், 1956 - ஆம் ஆண்டு சூயஸ் கால்வாயை நாட்டுடைமையாக் கினார். அவ்வாறு செய்ய எகிப்துக்கு உரிமையும், கடமை

யும் இருந்ததாக நேரு நம்பினார். எகிப்தின் செயலை ஆதிக்க நோக்கம் கொண்ட வல்லரசுகளும், இசுரேலும் அணிசேர்ந்து எதிர்த்தன. பிரிட்டிஷ் அரசின் முதுகெலும் பாக ஒருகாலத்தில் குறிப்பிடப்பட்ட சூயஸ்கால்வாயை அரசுடைமையாக்கியதன் மூலம் பிரிட்டனின் முது கெலும்பை நாசர் முறித்தார்.

அமெரிக்கா, பிரிட்டன் பிரான்சு ஆகிய நாடுகள் சூயஸ் கால்வாயைப் பயன்படுத்தும் இருபத்திரண்டு நாடு களின் மாநாட்டை 1956 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 16 - ஆம் நாள் லண்டனில் கூட்டின. இந்தியாவின் சார்பில் வி.கே. கிருஷ்ணமேனன் அம்மாநாட்டில் கலந்து கொண் டார். அவர் சூயஸ்கால்வாய், எகிப்தின் பிரிக்க முடியாத அங்கமென்ற அடிப்படையில் தனது திட்டத்தை முன் மொழிந்தார். அமெரிக்கப் பிரதிநிதி ஜான் பாஸ்டர் டல்லஸ் சூயஸ் கால்வாயை அனைத்து நாட்டுக் கட்டுப் பாட்டில் வைக்க வேண்டுமெனத் திட்டந் தந்தார். அவரது திட்டத்தை மேற்கு நாடுகள் ஆதரித்தன. இந்த நெருக்கடியில், நேரு பிரிட்டிஷ் பிரதமர் ஈடனுக்கும், அமெரிக்க அதிபர் ஐசன் ஹோவருக்கும் ஒரு வேண்டு கோள் விடுத்தார். அதில் நாசர் தெரிவித்தபடி பேச்சு வார்த்தைக்கு குழு அமைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். நட்புக்காக மட்டுமல்ல, நியாயத்திற்காக வும் குரல் கொடுத்தவர் நமது நேரு. சுயநலத்திற்காகக் கொள்கைகளைக் கொல்லாதவர் அவர்.

சோவியத் நாடு இந்தியாவுக்கு உதவியதைப் போல் எகிப்துக்கு நெருக்கடி ஏற்பட்ட போது நேரு உதவி னார். மேற்கு நாடுகள் எகிப்தின் மீது பொருளாதார முற்றுகையிட்ட போது, அதற்கு கடனுதவியோடு, உணவும், மருந்துகளும் அனுப்பி உதவியது இந்தியா. ஒரு லட்சம் படைவீரர்களை ஈடுபடுத்தி எகிப்து மீது இசுரேல் படையெடுத்தது. பிரிட்டனும், பிரான்சும் விமானத் தாக்குதலைத் தொடுத்தன. வல்லரசுகளின் அத்து மீறிய நடவடிக்கையை நேரு வன்மையாகக் கண்டித்தார். சோவியத் நாடும் எகிப்தின் உதவிக்கு வந்தது.

# நம்பிக்கையைக் கொன்ற சீனா

இந்தியாவின் நம்பிக்கைக்குரிய நண்பனாக சோவியத் விளங்கியதற்கு மாறாக, சீனா கீழ்த்தரமாக நடந்து கொண்டது. நேருவின் நல்லெண்ணத்தையும், நட்புணர்வையும், நயவஞ்சகமாக சீனத் தலைவர்கள் பயன் படுத்திக் கொண்டார்கள். சூழ்ச்சி என்பதை, திறமையாக நினைப்பவர்களும் உண்டு. அப்படி நினைத்துச் செயல் பட்டவர்கள்தான் மாவும், சூவும்.

ஆட்சிக் குழுவிலுள்ளவர்களின் நம்பிக்கை மோசடியும், நாணயமற்ற திரிபுவாதங்களும் அந்த நாட்டு மக்களையும் பாதிக்க தவறுவதில்லை. சீன அரசு நீதி நெறி மரபு பிறழ்ந்து இந்திய எல்லையைத் தாண்டி ஊடுருவல் செய்தது. 1962–ஆம் ஆண்டு செப்டம்பர் 8–ஆம் நாள் கிழக்குப் பகுதியில் எல்லையைச் சீனப் படை தாண்டியது. அக்டோபர் 20–ஆம் நாள் நேபா விலும், லதாக்கிலும் படையெடுப்பு தொடங்கியது. தலைவர்கள் செய்த இந்தக் கொடு வினையால், இந்திய மக்கள் சீனாவை வெறுக்கத் தொடங்கினார்கள். அந்த நாட்டையே நட்பின் பகைவனாக, நம்பிக்கைத் துரோகியாக நினைத்தார்கள்.

பொதுவுடைமை என்னும் போற்றற்குரிய நல்ல கொள்கை சூ என் லாய் போன்றவர்களால் போற்றப் படுவதாகவும், ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும் இருக் கும் போது, தனி மனிதக் குறைபாடுகள் கொள்கை மீது பிரதிபலிக்கிறது. இந்தியாவில் பொதுவுடைமைக் கொள்கை பச்சை பிடிக்காமல் போனதற்குச் சீனம் செய்த துரோகம் முக்கியக் காரணம் என்பதை மறுக்க முடியாது. மத்தியில் வல்லபாய் பட்டேலும், மாநிலத்தில் இராஜாஜியும், பொதுவுடைமைக் கொள்கைக்காரர் களின் வளர்ச்சியைச் சட்டமெனும் இரும்புத் தடிகளால் தாக்கித் தகர்த்து விட்டதாகக் கூட ஒரு நம்பிக்கை யுண்டு. ஆனால் இந்திய மண்ணில் பொதுவுடைமைக் கொள்கைக்குப் 'புகையான்' நோயாக இருந்தவர்கள் மாசேதுங்கும், சூ என் லாயுந்தான்.

என்னதான் அசல் நெய் தயாரிப்பாக 'இனிப்பு' இருந்தாலும், அதை வைத்திருப்பவர் தொழு நோயாளி யாக இருந்தால், வாங்கியுண்ண அன்னை தெரசா போன்றவர்களுக்கே அருவருப்பு ஏற்படத்தானே

செய்யும்? அவசரக்காரர்கள் பொதுவுடைமையை அழைத்து வந்து சேர்க்காமல், நுழைத்து விட எடுத்துக் கொண்ட முயற்சிகளும், வன்முறையைத் துணையாக்கிக் கொண்டு வழி கேட்ட விதமும்தான் இங்கே பொது வுடைமை லட்சியம் தனக்குரிய உயர்ந்த இடத்தைப் பெற முடியாமற் போனதற்கான மற்றொரு காரணமாகும்.

சீனாவுக்கு, திபேத்தில் நமக்கிருந்த பரம்பரை அனுபவ உரிமையை விட்டுக் கொடுத்தோம். *1949*–ஆம் ஆண்டு மக்கள் சீனா உருவான போது, அதனை முதன் முதலாக முந்திக் கொண்டு அங்கீகரித்தோம். ஐ.நா.வில் அதற்கு இடம் பெற்றுத் தந்தோம். இதற்கெல்லாம் நன்றி காட்டும் வகையில் அந்த நாடு இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் பகுதியில் *36,000* சதுரமைல் பரப்பையும் வட கிழக்கு லடாக் பகுதியில் *12,000* சதுரமைல் பரப்பையும் சீனாவுக்குச் சொந்தமானவை என்று உரிமை கொண் டாடியதும், படையெடுப்புச் செய்ததும் தான். இன்றும் நமது மண் அவர்கள் பிடியிலிருக்கிறது.

சீனா படையெடுத்தபோது இந்திய நாடாளுமன்றம் எடுத்துக் கொண்ட உறுதிமொழி நமது மண்ணை மீட் பதாக எடுத்துக் கொண்ட வீர சபதம் மறந்தே போய் விட்டது, நமக்கும்-நமது அரசுக்கும். சீனர்கள் நியாயத் திற்குப் பக்கத்தில் வரக் கூட பயப்படும் போது நாம் அவர்கள் பக்கம் செல்ல ஆசைப் படுவது எந்த வகை நியாயம்? எண்ண வளமற்றவர்கள், மக்கள் எண் ணிக்கை பலத்தால் நல்லெண்ணத்தை நம்மிடமிருந்து இறக்குமதி செய்து கொள்ளப் பார்க்கின்றார்கள் போலும்.

நேருவைப் போன்ற மாண்பாளரை, உண்மையின் தோழரை, அமைதிக்கும் நட்புறவுக்கும் உழைத்தவரை உலகில் அரிதாகவே காண முடியும். அந்த நல்லவரின் இதயத்தில் இரத்தக் கசிவை ஏற்படுத்தியது சீனத் தலை வர்களின் மோசடி நடவடிக்கை. மறக்க முடியாதது, மன்னிக்க முடியாதது அச்செயல். ஆனால் இன்று எல்லாவற்றையும் மறக்கவும் மன்னிக்கவும் நாம் ஆயத் தமாக இருந்தாலும், சீனத் தலைவர்களின் மனப் போக் கில் புரட்சி ஏதும் ஏற்பட்டு விடவில்லை. சீனப் படை யெடுப்பால், அதன்பால் நம்பிக்கைக் கொண்டு,

ஆதரவாகச் செயல்பட்ட நேருவைப் பலரும் குறை கூறினார்கள்.

சீன இராணுவத்தின் முரட்டு மூடு செருப்புக்கள் திபேத் மண்ணை அழுந்த மிதித்தன. அந்த நாட்டின் தலைவர்களான மத குருக்கள் தலாய்லாமாவும், பஞ்சன் லாமாவும், தமது தொண்டர்களுடன் இந்தியாவில் தஞ்ச மடைந்தனர். மனித நேயமுடைய நேரு அவர்களை வர வேற்று, தேவையான உதவிகளைச் செய்தார். அன்று இந்தியாவுக்கு வந்த தலாய்லாமாவுக்குத்தான் 1988-ஆம் ஆண்டுக்கான, நோபல் அமைதிப் பரிசு வழங்கப்பட்டது. அந்த நல்லவர்களுக்கு அரசியல் தஞ்சமளித்ததை சீனா வின் கொடு மனம் குறையாக நினைத்தது போலும்!

'கொள்கை முரண்பாடுகள் கூட்டுச் சேர்ந்தன. ஆனால் வெளிப்படையாக அல்ல. இந்திய எல்லையில் சீனா பதற்ற நிலையைப் படிப்படியாக அதிகரித்துக் கொண்டு வந்தது. சீனாவின் வஞ்சகத்தை நேரு உணரத் தொடங்கினார். அந்த வெள்ளைப்புறா, சீன வல்லூறு களோடு மோதலைத் தவிர்க்கத் தீவிரமாக முயன்றது. மிருக பலத்தை மட்டுமே பெரிதாக நம்பிய சீனா 1,30,000 ச.கி.மீட்டர் சீன மண்ணை இந்தியா தனதாக்கிக் கொண்டதாகக் குற்றம் சுமத்தியது. திருட்டுத்தனமாக இந்திய எல்லைக்குள்ளேயே சாலை வசதியைக் கூட ஏற்படுத்திக்கொண்டது.

மறைவாகப் போர் முயற்சிகள். நேரில் நட்புறவுப் பசப்புகள். பாராட்டுக்கள். 'இந்தியாவுக்கும் சீனாவுக் கும் இடையே உள்ள நட்பில் எதுவுமே குறுக்கிட முடியாது'' என்னும் பொய்யுரைகள். சீனாவின் சதிச் செயலைப் பயன்படுத்திக்கொண்டு இந்தியாவைத்தங்கள் அணிக்கு இழுக்க மேற்கு வல்லரசுகளின் முயற்சிகளின் வெளிப்பாடாக அறிவுரைகள். தான் அபாயங்களால் சூழப்பட்டிருப்பதாக நேருவுக்குத் தோன்றியது. குற்றச் சாட்டுகளும் ஆவேசத் தூண்டுதல்களும் அரங்குகளில் எதிரொலிக்கத் தொடங்கின.

சீனா எல்லையைத் தாண்டிய அத்துமீறல் இந்தியா வுக்கு மட்டுமன்றி உலக அமைதிக்கே அறை கூவல் விடுத்தது. சீனாவின் சீண்டுதல் நடவடிக்கையின் விளைவுகளைச் சமநீதிச் சிந்தனையுள்ள நாடுகள்

எண்ணிப் பார்த்தன. உள்ளுணர்வால் உந்தப்பட்ட நாடுகள் சீனாவைக் கண்டனம் செய்யத் தவறவில்லை. உலக அமைதிக்காக உழைத்தவரின் மன அமைதியைக் குலைத்த சீனத் தலைவர்களின் தரம் தாழ்ந்த, அடாத சொல், செயல்களை நாகரிக உலகம் வெறுத்தது. உலக நாடுகளின் எண்ணத்தை புரிந்து கொண்ட சீனா ஒரு மாத கால போருக்குப் பின், நவம்பர் 22–ஆம் நாள் போரை நிறுத்தியது. படைகள் தத்தம் நிலைக்கே திரும்ப வேண்டுமென ஒரு சார்பாக அறிவித்தது. இச் செயல் மூலம் பழுதுபட்ட சீனத்தின் எண்ணச் சிதைவுகளை உலகம் ஊன்றிப் பார்க்கும் முன்னரே சரிசெய்துகொள்ள அது ஆசைப்பட்டது. நாடு பிடிக்கும் நாட்டமில்லாதது போல் உலகை நம்ப வைக்க அது முயன்று பார்த்தது. காயப்படுத்திவிட்டு கட்டுப்போடும் சீனத்தின் கருணையை உலகம் கண்டு கொண்டது.

எவ்வளவு உறுதியாக நேரு செயல்பட்டாலும் உள் மனதில் பட்ட காயத்தின் சாயலை அவரது முகமும் உடல் தளர்ச்சியும் வெளிப்படுத்தத்தான் செய்தன. பாது காப்புத்துறை அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனனும் மற்றும் அமைச்சர் கே. டி. மாளவியா இருவருக்கும் எதிராகக் கட்சியிலும், வெளியிலும் கொண்டு வரப்பட்ட நெருக்குதலால் அவர்கள் பதவி துறந்தார்கள். நாடாளு மன்றத்தில் நேருவின் அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

நேருவின் தனிப்பட்ட செல்வாக்கு, உலகரங்கில் அவர் பெற்றிருந்த உயர்ந்த இடம், மக்களிடம் அவர் திரட்டியிருந்த நல்லெண்ணம் இவை மட்டுமில்லாமலிருந் தால், சீனா இந்தியாவின் எல்லையில் மேலும் ஊடுருவி இருக்கும். உலகம் மூன்றாவது முறையாக அமைதியை இழந்திருக்கும்.

மொழிப் பிரச்சினையில் இந்தி மொழி ஆதிக்கங்களிட மிருந்து தென்னகத்தைக் காத்தவர் நேரு. மூன்று பொது தேர்தல்களிலும் தனக்குள்ள செல்வாக்கை நிருபித்த பிறகும் இந்திமொழி ஆதிக்கத்தைக் கொண்டுவர மற்றவர் கள் அவசரப்பட்டபோதிலும், பொறுமை காட்டியவர் அவர்தான். நேரு மட்டில் பிரதமராக இல்லாதிருந்தால், நாடாளுமன்றத்தில் இந்தி பேசாத மக்களின் விருப்பத்

திற்கு மாறாக, அவர்கள் மீது இந்திமொழி திணிக்கப்பட மாட்டாதென உறுதிமொழி கொடுக்காதிருந்தால் நாட்டில் பல விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டிருக்கும். தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசு கட்டிலில் அமர்த்திய பெருமையில், இந்தியும் பங்கு கேட்டால் கொடுக்க வேண்டியது நியாயமே!

நேரு தனது எழுபதாவது அகவையின் போது, இறுதி விருப்பத்தை (will) எழுதி வைத்தார். இந்தியாவை வளமும், பலமும் பொருந்திய நாடாக உருவாக்கிடப் பாடுபட்டவர், மக்களாட்சி மாண்புடைய நாடாக மிளிரச் செய்யக் கால காலமாகக் கனவு கண்டு, அதற்காகவே உழைத்து உருக்குலைந்த அந்த மாமனிதர், உலகத் தொண்டர் தனது இறுதி வேட்கையை எழுதிட வேண்டுமென்ற நிலைக்குத் தள்ளப்பட்டது ஏன்?எப்படி?யாரால்? அதற்குப் பதில் வடகிழக்கு எல்லைப்புறத்திலிருந்துதான் வரவேண்டும்.

சிந்திரியை, பக்ரா-நங்கலை. சித்தரஞ்சனை. ஹீராகுட்டை, நெய்வேலியை இந்தியப் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படைகளாக்கியவர் நேரு. அவற்றையே விடுதலைபெற்ற இந்தியாவின் தொழுகைக்குரிய கோயில்களாகக் கருதியவர். கவியரசர் தாகூர் குறிப்பிட்டாரே. "இறைவனை ஆலயத்தில் தேடாதீர்கள். அவன் உழைப்பாளர்களிடந்தான்" என்று அதைப் போல நேரு ஆலயமாக அணைக்கட்டுகளையும் தொழிற்சாலைகளையுமே கருதினார்.

கண்களால் காணமுடியாத எங்கோ, மக்கள் நலச் செழிப்பும், இன்பங்களும் இருப்பதாக எண்ணாதவர், அந்தக் கருத்தை நம்பாதவர். தான் பிறந்து வாழும் நாட்டிலேயே, அந்த வசதிகளை உருவாக்குவதற்குரிய எல்லா வளங்களும், வாய்ப்புகளும் இருப்பதாக அவர் நம்பினார். அந்த வளங்களை மக்கள் துய்க்கக்கூடிய ஏதுவினை உண்டாக்கித் தரவே அவர் உழைத்தார்.

1964ஆம் ஆண்டு நேருவின் உடல் நலக் குறைவு வெளியே தெரியத் தொடங்கியது. புவனேசுவர் பேராய மாநாட்டில் கலந்து கொண்டபோது அவரை நோய் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதில் தற்காலிக வெற்றி கண்டது. எனினும் நேரு தனது மன உறுதியால்

நோயைப் புறங்காட்டச் செய்தார். என்றாலும் முழுத் தோல்வியை முடிவான தோல்வியை நோய்க்கு அவரால் தர முடியவில்லை. நோய் கஜினி முகமதுவிடம் முயற்சிக் குப் பயிற்சி பெற்றிருந்தது போலும்.

வழக்கம்போல மாதாந்திரப் பத்திரிகையாளர் சந்திப்பு 1964ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் நாள் நடைபெற்றது. ஒருவர் கேட்டார், ' உங்களுக்குப் பிறகு யார்? (After you, who?) புன் சிரிப்போடு அவர் கூறிய பதில், அவரது மன வலிமையும், நம்பிக்கையையும் வெளிப்படுத்தும் வகை யில் இருந்தது. "எனது ஆயுள் அப்படியொன்றும் அற்ப காலத்தில் முடிந்துவிடப் போவதில்லை," இதுதான் அவர் பத்திரிகையாளரின் வினாவுக்குத் தந்த பதில். நம்பிக் கைப் பாழடிப்பு செய்வதற்கு மனிதர்களால் மட்டுந் தானா முடியும்? இயற்கைக்கும் இந்தச் சக்தி உண்டென்று காலம் மெய்ப்பிக்க முன்வந்தது. அதிலும் அவசரப்பட்டேகாலம்செயல்பட்டது. கெடுவினைக்கெப் போதும் வேகம் அதிகந்தான். ஆம். நேருவின் நம்பிக் கையை நோய் தகர்த்தே விட்டது. 1964ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் நாள், மறு படையெடுப்பில் நோய் வென்றது.

இலக்கியப் படைப்பாளியான நேருவின் மேசையில் நினைவாக்வும், நிலையாகவும் இடம் பெற்றிருந்தது கவிதை வரிகளே! மனித நேயமுடையவர்களின் உற்ற துணையாக கவிதைகளே விளங்க முடியும். இன்று ஈசல் களாகப் புறப்பட்டு, இலக்கியத் துறை, காக்கைகளின் அலகுகளால் கொத்தப்படும் கவிதைகள் கொச்சைப் படுத்தப்பட்டிருந்தாலுங்கூட, கவிதை கவிதைதான். இலக்கியத் தராசுத் தட்டில் எது வேண்டுமானாலும் ஏற்றப் படலாம்; தட்டைத் தாழ்த்தக் கூடியது கவிதை மட்டுமே! நேருவின் நினைவில் நிழலாடியது கவிதையே என்பதால் அதன் தகுதி நிரூபிக்கப்பட்டதாகக் கருத லாம். மனிதப் பண்பாட்டை உருவாக்கவும், உயர்த்த வும் கூடியது கவிதையே. ஆனால் இன்று...? கவிதை புறக்கணிக்கப்படுகிறது. அதற்கு ஏடுகள் மட்டுமல்ல, படிப்பாளிகளும், படைப்பாளிகளும் கூட காரணமாகி விட்ட உண்மையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

நேருவின் நினைவுக்குகந்த அந்தக் கவிதை வரிகள் இவை தான் :-

[ "The woods are lovely, dark and deep;
But I have promises to keep,
And miles to go before I sleep
And miles to go before I sleep" ]

"அடர்ந்து இருண்ட அழகிய கானகம்;
ஆனால் நான் எனது வாக்குறுதிகளைக் காப்பாற்ற வேண்டும்;
உறக்கம் நெருங்கும் முன் நான் நெடுந்தொலைவு போகவேண்டும்
உறங்கும் முன்னரே நெடுந்தொலைவு போக வேண்டும்;
—இராபர்ட் ஃபிராஸ்டின்—

நேருவே ஒரு அழகான, அருமையான கவிதைதான். கவிதை இலக்கணத்திற்கு, துல்லியமான, எழிலான, கருத் தாழமுள்ள கவிதை இலக்கியம் அவர். ஆனால் அந்த இலக்கியத்தை, இயற்கையல்லவா எடுத்துக் கொண்டு போய்விட்டது!

நேருவின் மறைவு உலகரங்கில் ஒரு வெற்றிடத்தை விட்டு வைத்துள்ளது. இன்றளவும் அது நிரப்பப்படாம லேயே உள்ளது. இனி நிரப்பப்படலாமென்று நினைப்ப தற்கும் ஆதாரமில்லை. அவரைப் போன்ற கல்வியாளர் கள் அருகி விட்டனர். வாழ்நாள் முழுவதும் நாட்டுக் காகவே பாடுபட்டவர்களை இன்று பார்க்க முடிகிறதா? பதவிக்காகப் போராடுபவர்களேயன்றி, நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் போராடும் வேட்கையுடையவர்களை ஆட்சி மன்றங்களில் சந்திக்க முடியாமலேயே போய் விட்டது. கொள்கை மாறாதவர்களும், கோட்பாட்டை மீறாதவர்களும் உருவாவது நேரு காலத்தோடு நிறுத்திக் கொள்ளப்பட்டதோ என்று நினைக்கத் தோன்றுகிறது. இலட்சியப் பூமியில் அருங்குணங்கள் இறந்த காலமாகிக் கொண்டு வருவதால், நேரு நேற்றைய இலக்கியமாகி விட்டார். நமது தொன்மைச் சிறப்புக்களில் நேரு தன் பெயரைப் பதிவு செய்து விட்டார். தனது இலக்கை நோக்கிய பயணத்தைப் பாதியில் நிறுத்தாமல், சென்ற டைந்தவர் அவர். இந்திய விடுதலையின் வெற்றியை

நாட்டுக்கு அறிமுகம் செய்தவர். நன்றியுள்ளவர்களின் நெஞ்சில் நிலைத்திருப்பவர் நேரு.

அவரது இறுதி வேட்கைப் பதிவைப் பிரித்துப் பார்த்த போது, அவரது கொள்கைப் பிடிப்பும், நாட்டுப் பற்றும், உழைப்புக்கு அவர் கொடுத்திருந்த உயர்ந்த மதிப்பும் புலப்பட்டது. முதிர்ந்த வயது, நெருக்கடிகளின் சந்திப்பு, உடல்நிலை பாதிப்பு, அந்த நேரங்களிலும் கடவுளை அவர் நினைக்கவில்லை. மனிதனையே நினைத்தார். ஆதிநாள் கொள்கையிலிருந்து அணுவளவும் பிறழாத பெருமை, மெருகு குலையாமலிருந்தது. பலருடைய பகுத்தறிவு, திருமண வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படுவதுண்டு. தள்ளாமையும், நோயும் சிலரது பகுத்தறிவைப் பயனற்றதாக்கி விட்டு, பக்தியைக் கொண்டு வந்து, அவர்களது நெஞ்சில் குடியேற்றிவிடும். ஆனால் நேரு? எந்த நிலைமையும் அவரது கொள்கை நெஞ்சை விட்டுக் குடி பெயரச் செய்யவில்லை. அவரது இறும் வேட்கையிலும் கொள்கைக் குடியிருப்பதைப் பார்க்க முடிகிறதே!

"நான் இறக்கும்போது, மதச் சடங்குகளையோ, சம்பிரதாயங்களையோ பின்பற்றக் கூடாது. 'கூடாது' என்ற சொற்றொடரிலுள்ள உறுதியும், கட்டளையும் அவருடைய கொள்கை இளமை குன்றாமலும், இளகாமலும் இருக்கிறது என்பதைத் தானே காட்டுகின்றன. அவரது விருப்பம் மேலும் தெரிவிப்பதென்ன?

"எனக்கு இந்தச் சடங்குகளில் நம்பிக்கை இல்லை. வெளித் தோற்றத்துக்காக, அல்லது பழக்கம் காரணமாக அவற்றைப் பின்பற்றுவது, பாசாங்கு செய்வது, தன்னையும் மற்றவர்களையும் ஏமாற்றுவது என்று நான் கருதுகிறேன். உடல் எரிக்கப்பட்ட பிறகு சாம்பலின் ஒரு பகுதியை விமானத்தில் எடுத்துச் சென்று விவசாயிகள் பாடுபடுகின்ற வயல்கள் மீது தூவ வேண்டும். அது இந்திய மண்ணோடு கலந்து, அதன் பிரிக்க முடியாத பகுதியாகி விட வேண்டும். ஒரு பிடியளவு சாம்பலைக் கங்கையில் கரைக்க வேண்டும். ஒரு துளியும் மீதப்படுத்தக் கூடாது; பகுத்தறிவு வெளிச்சத்தை மட்டில் நம்மில் பலர் பார்க்கத் தவறி விடுகின்றனர்.

விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டிருந்தவர் நேரு. எனவேதான் தனது உடற்சாம்பலும் அவனோடு

உறவு கொள்ள வேண்டும், உதவ வேண்டும் என்ற அடிப்படையில் சாம்பலை வயல்களில் தூவ வேண்டு மென்றார். வயலில் விளையும் பயிருக்குத் தன்னுடைய சாம்பல் உரமாக வேண்டும். பயிர் மணியில் அணுவள வேணும் கலக்க வேண்டும். அப்பயிர் மணி வித்தாகவும், உணவாகவும் பயன்படும். இதனூடாக. தான் கால காலத்திற்கும் இந்திய மண்ணுக்கும், இந்தியனுக்கும் உற வாகி நிலைக்க வேண்டுமென்ற விஞ்ஞானமுறை வேட் கையின் உயர்வுதான் என்னே! பழுதுபடாத பகுத்தறிவுத் தெளிவுதான் என்னே!

நேருவை அரசியல் இயக்கமும், விடுதலைப் போரும் மட்டில் தன்வயப்படுத்திக் கொண்டிராவிட்டால் இந்தி யாவுக்கு மட்டுமல்ல. உலகத்திற்கே இன்னுமொரு பெரி யார் கிடைத்திருப்பார். மிகச் சிறந்தவொரு பகுத்தறி வாளரை, அரசியல் பொறுப்புக்கள் தங்களிணைப்பிற் குள் தக்க வைத்துக் கொண்டன. அந்த அறிவுச்சுடர் அலங்காரத்திற்காக மட்டுமல்ல, அரசியலரங்கத் தேவைக் காகவும் அங்கே எடுத்துச் செல்லப்பட்டு விட்டது.

நேருவின் மறைவால், உலகம் அமைதியின் காவ லரை இழந்து விட்டதாக எண்ணி அழுதது. இந்தியாவின் இதயம் ஓய்ந்து விட்டது. இமயம் கரைந்து விட்டது. ஒரு வளர்ச்சி அத்தியாயம் பக்கமின்மையால் பாதியள வோடு முடித்துக் கொள்ளப்பட்டது "நேரு இல்லா பாரதத்தை நினைவில் யார் வைத்திருப்பார்?'' என்று கண்ணீர் விட்டானே கவியரசு கண்ணதாசன். எவ்வளவு பொருள் பொதிந்தது அச்சொற்றொடர்? எவ்வளவு பொருத்தமான புகழ் மாலை அது! நேரு எனும் 'கவிதையை' கவிஞனே ஆழ அகலத்தோடும் அழகா கவும், சுருக்கமாகவும் அடையாளம் காட்டிவிட்டான்.

எந்தத் தலைவன் காலமாகி விட்டாலும், அவரை எதிர்த்தவரும் புகழ்வது உலகியல். ஒவ்வொரு தலைவர் மறைந்த போதும், 'இழப்பு ஈடு செய்ய முடியாதது' என்றுதான் இரங்கற் செய்திகள் இறங்கி வரும். ஆனால் பல தலைவர்களின் இடங்கள் மிக விரைவிலேயே இட்டு நிரப்பப்பட்டதையும் நாமறிவோம். கல்லறையின ஈரம் காயும் முன்னரே மறக்கப்படும் தலைவர்களும் அரசிய லில் உண்டு. துணைக் கண்டத்தில் இட்டு நிரப்ப முடி

யாது, இன்றளவும் இருக்குமிடங்கள் சிலவே. அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் அண்ணல் காந்தியடிகள், பண்டிதர் நேரு. தமிழகத்தைப் பொறுத்தவரை தந்தை பெரியாரின் இடமும், அறிஞர் அண்ணாவின் இடமும் நிரப்ப முடியாதவைகளாகவே உள்ளன.

நேருவை நண்பர்களும், நாட்டுமக்களும் புகழ்வது அன்பின் அடையாளம். ஆனால் எதிர் தரப்பின் கருத்துக்களே எடையைத் துல்லியமாகக் காட்டக் கூடியவை. அப்படிப்பட்ட எடைக் கற்களையும் பார்ப்போம். "வருந்தத்தக்க வகையில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் உறவு ஒரு போதும் நல்லபடியாக இல்லை. அவை எதிர் காலத்தில் இன்னும் மோசமடையலாம். அப்படிப்பட்ட கால கட்டத்தில், பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் குவாஜா நசிமுடீன் என்பவர் நேருவைப் பற்றிக் கூறிய கருத்துக்கள், வெளியுலகு இந்தியாவின் பலமாக எதைக் கருதியதென்பதற்குத் தெளிவான ஆதாரமாகிறது. அவர் கூறினார். "இந்தியாவும், பாகிஸ்தானும் ஒரே பலத்தையும், பலவீனத்தையும் கொண்டிருப்பவைதான். (எதிரி நாடுதான் பலமானதெனக் கூற அவரென்ன அரசியல் தெரியாதவரா?) ஆனால் இந்தியாவுக்கு ஒரு கூடுதல் சக்தி நேரு. India and Pakistan had the same strength and weeknesses. But that India had one plus - Nehru) என்றார்.

நட்புக்குகந்தவர் நேரு. அரசியல் கருத்து வேறுபாடுகள் அவரது நட்புணர்வை நலியச் செய்ததில்லை. ஜெயப்பிரகாஷ் நாராயணன் பேராயத்தை (காங்கிரசை) விட்டு விலகிய போது, அவரைத் தக்க வைத்துக்கொள்ள நேரு பெரிதும் முயன்றார். ஆனால் ஜெ. பி. தனது முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. எனினும் இருவரும் நண்பர்களாகவே இருந்தனர். அவர்களுக்குள் கடித தொடர்பு நீடித்தது. ஒரு முறை ஜே.பி. நேருவுக்கு எழுதிய மடலில் ஏதோ ஆத்திரத்தில் வழக்கமாகக் குறிப்பிடும் "என தன்புள்ள பாய்" என்பதற்குப் பதிலாக "அன்பார்ந்த பிரதமர் அவர்களே" எனக் குறிப்பிட்டு விட்டார். இது நேருவை மிகவும் வருத்தப்படச் செய்தது. நேரு தனது பதிலில் "நான் நாட்டின் கோடிக்கணக்கான மக்களுக்குப் பிரதமரென்றாலும், இன்றும் நான் ஜெ. பி.யின் உடன் பிறப்புதான்" என்று குறிப்பிட்டார். அந்தத் தவற்றுக்

காக என்னை நானே மன்னிக்க முடியாதெனக் கவன்றார் ஜெ.பி.

தனது நெடுநாள் நண்பர் ஸ்ரீ பிரகாசா ஓய்வு பெற்று டேராடூனில் தங்கியிருந்தார். நேரு அப்போது அங்கும் பயணம் சென்றிருந்தார். அதுவே அவரது கடைசி பயணம்) அவ்வமயம் ஸ்ரீ பிரகாசாவைத் தான் பார்க்க வருவதாக தெரிவித்திருந்தார். உடல் நலங்குன்றியிருந்த நேரு தன்னைப் பார்க்க வருவதைத் தடுத்துத் தானே அவரைச் சந்திப்பதாக இந்திரா மூலம் தெரியப்படுத்தினார். நேரு அதனை ஏற்றுக்கொள்ளாமல் தானே சென்று ஸ்ரீ பிரகாசாவைப் பார்த்தார். அரசியலில் இப்படி பட்ட நட்பு மிகவும் அரிதே! நேருவோ பிரகாசாவை விட வயதில் குறைந்தவருமல்ல. நாட்டின் பிரதமர். இவற்றையெல்லாம் நட்புக்கும் மேலாக அவர் எண்ணவில்லை. அதிகாரம் கைக்கு வந்ததும் பழிவாங்கத் துடிக்கும் நண்பர்கள் தானே அரசியலில் இன்று அதிகம்''.

# பூத்துக் குலுங்கும புகழ் மலர்கள்

நேரு பெற்ற புகழை அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தொட்டுக் காட்டலாமேயொழிய, முற்றும் கூறி முடிக்க முடியாது. பலர் வாழ்க்கையில் தொண்டாற்றி லிருக்கலாம். ஆனால் தொண்டே வாழ்க்கையாகக் கொண்டவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். அப்படிப்பட்டவர்களுள் ஒருவரை உலகம் புகழ்வ தொன்றும் வியப்பானதல்ல. சிலர் அவரை எந்தக் கோணத்தில் பார்த்தார்கள் என்பதை நாமறியவும், பல கோணங்களைக் கண்டு, முழுமையை உய்த்துணரவும் அவை நமக்கு உதவுகின்றன. நேருவின் பண்பு நலன் களைப் பற்றி கவியரசர் கூறினார் :

''நேருவின் வாழ்வு ராஜகம்பீரமானது. அவரது உறுதி அசையாதது. அவரது தீரம் பின் வாங்காதது. அறவழி பிறழாமையும், அறிவாண்மையும் அவரைக் குன்றின் மேலிட்ட விளக்கென உயர்த்துகின்றன. அரசியல் கொந் தளிப்பு மிகுந்துள்ள காலத்தில் பிறரை மோசம் செய்வ தும் தன்னை ஏமாற்றித் கொள்வதுமாகிய காரியங்கள் பெருகி, நேர்மையை இருக்கின்ற இடந் தெரியாமல் அடித்து விடுகின்றன. அப்படிப்பட்ட கொந்தளிப்பின் மத்தியிலிருந்து கொண்டும் இவர் தூய்மையைக் கடைப் பிடித்துக் கொண்டு வருகிறார்.

''மாசற்ற நோக்கம், உண்மையினின்றும் பிறழாமை ஆகியவையே விடுதலைப் போருக்கு ஜவகர் அளித்த அணிகலன்கள்''—தாகூர்

பதவி, பலருடைய மனப்போக்கையே மாற்றிவிடக் கூடியது. அதனால்தான் தேர்ந்தெடுக்கும் முன்னர் நமக்கு நல்லவர்களாகத் தெரிந்தவர்கள் பதவி பெற்றபின் படிப் படியாக (சிலர் ஒரே தாவலில்) விரும்பத் தகாதவர்களாக மாற்றம் பெற்று விடுகிறார்கள். நேரு இந்தக் குறை களைக் கடந்து நின்றவர். ''நேருவுக்குத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி வாங்கித் தருவதில் மிக்க மகிழ்ச்சி. ஆனால் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப் பதையோ, மந்திரிப் பதவியை அடக்கியாள்வதையோ அவர் விரும்புவதில்லை."

"தன்னுடைய குணாதிசயத்தைப் பாதுகாப்பதற்கும் பிறருடைய தனிக் குணாதிசயங்களை வளர்ப்பதற்கும், ஒரு மனிதனிடத்தில் தன்னல மறுப்பு இருக்க வேண்டும்" என்றார் அசோக் மேத்தா. நேருவிடம் அவர் குறிப்பிட்ட தன்னல மறுப்பு இருந்தது.

நேருவின் தோற்றப் பொலிவும், மக்களை அவர் தன்பால் ஈர்ப்பதற்கு ஒரு காரணமாக இருந்தது. குறிப்பாக அவரது கண்களுக்கு அசாத்தியமான கவர்ச்சி இருந்தது. "நேருவுடைய தோற்றப் பொலிவு இயற்கையில் எங்கு அழகு மிகுந்து விளங்குகிறதோ அதையும் பின்னடையச் செய்யுமாறு ஒளி வீசுகிறது. அவருடைய தோற்றத்தில் கம்பீரம், பணிவுடைமை பண்பு, உலகம் முழுமையின் மீதும் பரிவு ஆகியவை யாவும் காணப்படுகின்றன." என்றார் திருமதி சிக்ரிட் பீட்டர்சன் கௌல்டு என்பவர். ஒப்பனையில்லாத உரை தானே இது?

நேருவின் பகுத்தறிவுச் சிந்தனைகளை இந்தியர்கள் அதிகமாகச் சிந்திக்கத் தவறிவிட்டார்கள். அந்தக் கொள்கை அவர்க்ளுக்கு இசைவானதாக இல்லை என்பதாலோ, அவரது அரசியல் தொண்டு வெளிச்சத்தில் அக் கொள்கை மங்கி விட்டதாலோ நம் நாட்டு மக்களை அவரது பகுத்தறிவுச் சிந்தனைகள் எட்டாமலேயே போய் விட்டன. என்றாலும் அவர் பகுத்தறிவாளரென்பதைக் கற்றவர்கள் கண்டு கொண்டிருந்தார்கள். பத்திரிகையாளர் ரெய்ஸ் அம்ரோவி 'ஜங்' உருது நாளிதழில் நேருவைப் பற்றி ஒரு கவிதை எழுதியிருந்தார். அதில் ஒரு பத்தி,

"அந்தண ரொருவரின் அருமை மகனின்
ஆயப்புகழும் அற்புத அன்பும்
இந்த தரணியில் எழுந்தது கண்டு
இதயந் திறந்து வாழ்த்தி அரபியர்
கடவுளை நம்பாதஅக் கனிவு மகனை
கண்டதும் இஸ்லாம் கவிதைப் பாடி
இடர்மிகு தீர்க்கும் இனியோய் என்றே
இருகரம் கூப்பி தொழுதது மனமே!"

— நேருவின் கடவுட் கொள்கை எங்கோ ஒருவர் மனதையேனும் தொட்டதே என்பதற்காக நாமும் மகிழலாம்.

# படிப்பினைகள்

நேருவின் வரலாறு கற்பிக்கும் பாடந்தான் என்ன? நாணயம், நம்பிக்கை, உண்மை, உழைப்பு ஆகியவை தான். நாம் பெரிதாகப் பேசும் ஜனநாயகத்தை நடைமுறையில் எப்படிக் கையாள்கிறோம்? நமது வாக்கே சட்டமாக வேண்டும், நமது சொல்லே கட்டளையாக வேண்டுமென்றெண்ணாத அரசியல்வாதிகளை நம்மால் பார்க்க முடிகிறதா? தமது கருத்து ஏற்கப்படவில்லை என்றால் அடுத்த நாளே அறிக்கை விடும் அரசியல்வாதிகள் நேருவின் கருத்தைச் சற்றுச் சிந்திப்பது நல்லது. "வித்தியாசங்களை பொருட்படுத்தாமலிருக்க வேண்டுமென்றால், ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைத் தெரிவிக்கச் சுதந்திரம் இருக்க வேண்டும். ஆனால் முடிவு ஏற்பட்ட பிறகு, அந்த முடிவு நமக்கு ஏற்றதாக இல்லாவிட்டாலும், மகிழ்ச்சியோடு அதற்கு உட்பட்டு நடக்க வேண்டும். நேருவின் இந்த ஜன நாயகக் கொள்கை எவ்வளவு உன்னதமானது! தனது கூற்றுப்படி அவர் தானே நடந்து காட்டினார்.

நேரு ஒரு அரசியல்வாதிதான். இன்று நாம் காண்கின்ற அரசியல்வாதிகளை நினைத்துக் கொண்டு, அவரை எண்ணிப் பார்க்கக் கூடாது. நாணயமே உருவானவர் அவர். இன்றைய மாந்தர்களைப் போல் நாணயத்துக்காக, நாநயத்தைப் பயன்படுத்தி நாணயத்தைப் புதைகுழிக்கு அனுப்பாதவர் நேரு. "நாணயத்தையே நான் முக்கியமாகக் கருதியிருக்கிறேன். ஒருவனின் லட்சியம் என்ன என்பதை நான் முக்கியமாகக் கருதியதுண்டு. பின்னர் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து, ஒரு மனிதன் உயர்ந்த லட்சியமுடையவனாக இருப்பதினாலேயே யோக்கியனாகவும் இருப்பான் என்று எண்ணிவிட முடியாதென்பது தெரிந்தது."

"சில பெரிய மனிதர்கள் உயர் லட்சியங்களை அற்ப ஆசைகளைப் பூர்த்தி செய்வதற்கு உபயோகிப்பதைப் பார்த்திருக்கிறோம். வேண்டுமென்றே இப்படி இலட்சியங்களைச் சுயநலத்திற்குப் பயன் படுத்தாவிட்டாலும், நம் நாட்டில் பலர் அறியாமலேயே உயர் லட்சியங்களைப் பற்றிப் பேசிவிட்டு, அவற்றுக்கு

மாறான செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆகையால் ஒரு மனிதனுடைய கொள்கையை விட, அவன் நாணயத்தையே பிரதானமாக மதித்து வந்திருக்கின்றேன். ஆனால் ஒன்று தேசிய, சர்வதேச விஷயங்களில் நாணயம் மட்டும் போதாது. நாணயத்தை அடிப்படையாகக் கொண்டே லட்சியங்கள் பிறக்க வேண்டும்." என்று கருத்துக் கூறியுள்ளார் நேரு.

நாணயமாக நடந்து கொண்டதால் சர்வதேச விஷயத்தில் (சீன ஆக்ரமிப்பே சான்று) தான் அடைந்த தோல்வியை அவர் மறைமுகமாக சுட்டிக் காட்டியதன் மூலம், உள் நாட்டிலும், உலகரங்கிலும் நாணயம் தோற்றுப் போனதை நினைவூட்டுகிறார்.

எழுத்தாளர் நேரு, தனது அமைச்சரவையில் கல்வித் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த அபுல் கலாம் ஆசாதுடன் சேர்ந்து இலக்கியத்திற்கு சாகித்ய அகடாமியையும், நுண் கலைக்கு லலித் கலா அகாடமியையும், இசை, நடனம், நாடகம் இவற்றிற்காக சங்கீத நாடக அகாடமியையும் நிறுவியதன் மூலம், தான் வெறும் அரசியல் வாதியல்ல என்பதையும் நிலை நாட்டிச் சென்றுள்ளார். இந்த அமைப்புக்கள் மூலம் பயனும், பெருமையும் பெறுபவர்கள் நேருவை நினைக்கின்றார்களோ, இல்லையோ! ''நன்றி மறப்பதே நன்று'' என்றல்லவா நாடே நினைக்கிறது.

# ரோஜாவின் நினைவாக

குமரி முதல் இமயம் முடிய இன்று இந்தியாவில் அதிகமாகப் பேசப்படுவது அறமா? இல்லை மறமா? 'கையூட்டு' குறித்தே உரத்த குரலில் பேசப்படுகிறது. உண்டோ இல்லையோ ஊழல் என்ற சங்கே அரசியல் ஆண்டிகளின் கையிலுள்ள ஆயுதம் என்றாகி விட்டது. நம்மை நாமே ஊழல் என்ற சொல்லுமிழ் நீரால் குளிப் பாட்டிக் கொண்டிருக்கின்றோம். சாதி, மதம், போதை, பொருள்களுக்காக வாக்களித்து ஊழலை அறிமுகப் படுத்தி ஊராள அனுப்பும் நாம், பின்னர் அதைப் பற்றியே புலம்பிக் கொண்டிருக்கின்றோம். உலகரங்கில் நமது பெருமையைக் குலைக்கும் பெரும் சக்தியாக நாமே விளங்குகின்றோம்.

நேரு காலத்தில் இந்தச் சொற்கள் வழக்கிழந்து கிடந் தன. மாநில மத்திய அரசுகள் மக்கள் தொண்டே முக்கிய மென்றும், நாட்டின் முன்னேற்றமே இலக்கு என்றும் செயல்பட்ட பொற்காலமாக விளங்கியது நேரு ஆண்ட காலம். அப்போதும் அரிதாகச் சிலர் மீது குற்றச்சாட்டு கள் இருந்ததென்றாலும், ஒட்டு மொத்தமாக, ஒரே குரலில் பேசப்படவில்லை.

பொது வாழ்க்கையிலும், தனி வாழ்க்கையிலும் தூய்மையும், நேர்மையும் அவர் காலத்தில் நிலவியது உண்மை. ஒழுக்கத்தையும், நேர்மையையும் அன்று ஆளும் தரப்பிலும், எதிர் தரப்பிலும் பார்க்க முடிந்தது. நேருவின் பெயரால் நூற்றாண்டு விழாவை ஆடம்பர மாகக் கொண்டாடும் வேளையில், அவருடைய வாழ்க்கை நெறிகளை எண்ணிப் பார்த்து கைக்கொண் டொழுக முனைவதே சிறந்த நன்றி, அஞ்சலி! செய் வோமா? விளம்பர வேடிக்கைக்கும் மேலானது கொள்கை வழி நடப்பது தான்.

> "இருக்கின்றார் நேரு, இங்கேதான் இங்கேதான்
> எம்முயிரில், ரத்தத்தில், இதயத்தில், நரம்புகளில்
> கண்ணில் செவியில் கைத்தலத்தில் இருக்கின்றார்"
>
> —கவியரசு கண்ணதாசன்

# துணை நின்ற நூல்கள்


1. சுய சரிதை — ஜவகர்லால் நேரு (தமிழில் ஜெயா அருணாசலம்)
2. விதி என்ன செய்யும் : திருமதி கிருஷ்ணா – ஹத்தீ சிங்
3. இந்திய சுதந்திரப் போர் : அரியலூர் எல். சபாபதி
4. அதிகார மாற்றம் : கொடுமுடி இராஜகோபாலன்)
5. நேரு வழக்கு விசாரணைகள் : ராம் கோபால் (தமிழில் ஞான வடிவேலன்)
6. ஜவகர்லால் நேரு : அ. கோரெவ் & வி. சிம்யானின்
7. நூறு பேர் : மைக்கேல எச். ஹார்ட்
8. நேரு, இந்திரா, நான் : முகம்மத் யூனுஸ் (தமிழில்: பொன்னுசாமி)
9. காந்தி மகான் கதை : கொத்தமங்கலம் சுப்பு
10. சுபாஷ் சந்திர போஸ் : எஸ். எஸ். மாரிசாமி
11. பாரத ரத்னா ராஜாஜி : தொகுப்பு : சீனி–விசுவநாதன்
12. எங்கள் நேரு : தொகுப்பு.
13. இந்திய நாட்டின் எரிமலைத் தியாகிகள் : பாரதி பித்தன்
14. வளந்தரும் திட்டங்கள் : அரசு வெளியீடு 1957
15. இந்திய சுதந்திரத்திற்கு அபாயம் : அரசு வெளியீடு 1962
16. சீனாவின் துரோகம் : அரசு வெளியீடு 1962
17. சீன ஆக்கிரமிப்பு : அரசு வெளியீடு 1963
18. அன்னை இந்திரா ஒரு வெள்ளைப் புறா : பாவலர் சு. வேல்முருகன்

i Discovery of India : Jawaharlal Nehru

ii Selected works of Jawaharlal Nehru : General Editor : S. Gopal

iii Man of Destiny : Ruskin Bond